GOVERNMENT OF INDIA
NATIONAL LIBRARY, CALCUTTA.

Class No. Ta 894·8111

Book No. ~~P459a~~ PU7566a

N. L. 38.

MGIPC—S8—37 LNL/55—14-3-56—30,000.

NATIONAL LIBRARY.

This book was taken from the Library on the date last stamped. A late fee of 1 anna will be charged for each day the book is kept beyond a month.

N. L. 44.

MGIPC—S8—39 LNL/55—3-4-56—20,000.



உ பரமபதி துணை.

புலவர் திலகராகிய

புகழேந்திப் புலவரவர்கள்

இயற்றிய

நளவெண்பா.

மூலமும்

மதுரை ஜில்லா, செம்பூர் வித்வான்

வீ. ஆறுமுகஞ்சேர்வை அவர்கள்,

மதுரை அமெரிக்கன் காலேஜ் தலைமைத் தமிழாசிரியர்

ஆ. கார்மேகக் கோனாரவர்கள்

மதுரை ஸௌராஷ்ட்ர ஹைஸ்கூல் தலைமைத் தமிழாசிரியர்

பு. சிதம்பரபுன்னைவனநாத முதலியாரவர்கள்

ஆகிய மூவரும்

புதுக்கியும், திருத்தியும், விளக்கியும் இயற்றிய

விருத்தியுரையும்

மதுரை புத்தக வியாபாரம்,

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனாரால்

வெளியிடப்பெற்றது.

விலை] 1956 [ரூ. 5-0-0

All Rights Reserved

எக்ஸெல்ஸியர் பிரஸ், மதுரை. ஸ்ரீ கோபால் மஹால்.

7 JUN 1956

National Library,
Calcutta-27

Delivery of Books Act

NATIONAL LIBRARY
No. 2038
Date 9-7-56
CALCUTTA

Te
894.8111
Pu 766 a

முகவுரை.

"நளவெண்பா" என்பது, வியாசமுனிவரால் இயற்றப்பெற்ற வடமொழி மகாபாரதத்தின் ஆரணிய பருவம், ஐம்பத்திரண்டாம் அத்தியாயமுதல் இருபத்தெட்டு அத்தியாயங்களில் பிருஹதச்வ முனிவர், தருமருக்குக் கூறியதாக எழுதப்பட்டிருக்கும் நளசரித்திரமாகிய 'நளோபாக்கியான பர்வத்தைத்' தழுவி. மகா கவிச்சிரேஷ்டராகிய புகழேந்திப்புலவரால் இனிய தமிழ் மொழியில் நேரிசை வெண்பாக்களால் அமைக்கப்பெற்ற அரிய நூலாகும். இது, 'முதல் வழி சார்பென நூல் மூன்றாகும்' என்றபடி அமைந்த மூவ்வகை நூல்களுள் வழிநூலாகும். இங்குக்கூறிய நளோபாக்கியான பர்வமே இதற்கு முதனூலாகும். பாண்டவர்கள் வனவாசஞ் செய்யுங் காலத்தில் அருச்சுனன் சிவபெருமானைச் சிந்தித்துத் தவமியற்றக் கைலாயமலைக்குச் செல்ல, அத்தருணம் தருமரும், மற்றைச் சகோதரரும், திரௌபதியும் வருத்தமுற்றிருக்கையில் வேதவியாசர் அங்கு வரத் தருமர் முறைப்படி அவருக்கு வந்தன வழிபாடுகளியற்றி, அவரை நோக்கிச் "சுவாமி! எங்களைப்போன்று, சூதாட்டத்தால் அரசுரிமை இழந்து, கானடைந்து கவலையுற்றார் வேறெவரேனு முளரோ?" என்று விசனத்தோடு வினவ, 'அம்முனிவர் நளசரித்திரத்தை எடுத்துக் கூறத்தொடங்கினார்' என்று, இந் நளவெண்பாச் சுயம்வர காண்டத்தின் முதற் பதினொரு பாடல்களில் வருதல் கொண்டு இஃதுணரப்படும். வியாச பாரதத்தில் பிருஹதச்வமுனிவர் தருமருக்கு இந்நளன் வரலாற்றைக் கூறியதாக இருக்க, நளவெண்பா ஆசிரியர் வியாசர் கூறியதாகச் சொன்னது யாதுபற்றியோ? எனின் நன்னூல் பாயிரம் ஏழாவது சூத்திரத்தில் "முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப் பின்னோன் வேண்டும் விகற்பங்கூறி அழியா மரபினது வழிநூலாகும்" என்ற வழிநூல் இலக்கணப்படி பிறநூல் மேற்கோள் கொண்டு இங்ஙனங் கூறியிருத்தல் வேண்டுமென்க. இங்ஙனமே வியாசர் தருமருக்கு நளசரித்திரத்தை எடுத்துக்கூறியதாக ஸ்ரீ வில்லிபுத்தூரார் பாரதத்திலும், "நீவிரே யல்லிர் முன்னாள் நிலமுழு

தாண்டநேமி, நாவிரிகீர்த்தியாளன் நளனெனுநாமவேந்தன், காவிரியென்னத் தப்பாக் கருணையான் சூதில்தோற்றுத் தீவிரி கானஞ்சென்ற காதைநும் செவிப்படாதோ" தோத்திர மானதெய்வச் சுருதிகள் யாவுநான்காக் கோத்தவன் பின்னுஞ் சொல்வான்" எனக் கூறினமை உணர்க. முதனூலுக்கும், வழிநூலுக்கும் விகற்பங்காணு மிடங்களிலெல்லாம் இங்ஙனமே சமாதானங் காண்க. இங்குக் கூறியவற்றைக்கொண்டு, இந்நளவெண்பாவானது பாரதத்தின் வழிநூலென்பதும், இதிற் கூறப்படும் நள சரித்திரம் பாண்டவ சரித்திரத்தின் கிளைக்கதை என்பதும் உணர்க. இதுபற்றியே இதற்கு நளோபாக்கியானம் என்னும் பெயரமைந்துள்ளது. முதற் கதைக்கு ஆக்கியானம் என்றும், கிளைக் கதைக்கு உபாக்கியானம் என்றும் பெயர். இன்னும் இந்நூல் இதிகாசத்தைத் தழுவிவந்த மகாகாவிய மெனவும்படும். இதிகாசமாவது: உபதேச பாரம்பரையில்வந்த ஒருவரின் பழங்கதை ஒன்றைப் பிரதானமாக எடுத்துக்கொண்டு, பல கிளைக்கதைகளைப் புணர்த்தி விரித்துக் கூறுவது. இராமாயணமும், பாரதமும் இதிகாசத்தைச் சேர்ந்ததே. மகாகாவியமாவது: வாழ்த்து, தெய்வவணக்கம், தலைமைப் பொருளுரைத்தல் என்னும் மூவகை மங்களங்களுள் ஒன்றினை முதலிற் பெற்று, அறம் பொருள் இன்பம் வீடு என்னும் புருஷார்த்தங்கள் நான்கையும் பயக்கும் பான்மையதாய், ஒப்புயர்வற்ற ஒரு தலைவன் மேலதாய், நாடு, நகரம், மலை, கடல், காலம், சந்திர சூரியரின் உதயாஸ்தமனம், திருமணம், மகுடாபிஷேகம், பொழில் விளையாட்டு, நீர்விளையாட்டு, மக்கட்பேறு, கலவியிற்களித்தல், புலவியிற் புலத்தல், மந்திரம், தூது, போர்ச்செலவு, போரிடல், வெற்றி முதலிய பலவித வருணனைகளை உடையதாய்ச் சருக்கம்,இலம்பகம்,பரிச்சேதம்முதலிய பிரிவுகள் பொருந்தி, வீரம் முதலிய சுவைகளும், அவற்றினை விளக்குங் கருத்துக்களும் விளங்கச் செவிக்கினிய ஒருதிறச் செய்யுட்களாலேனும், பலதிறப் பாக்களாலேனும், கட்டுரையாலேனும் கற்றோரால் இயற்றப்படுவதாம். இங்குக் கூறிய வருணனைகளிற் சில குறைந்து வரினும் இழுக்காகாது. இங்ஙனங் கூறியதனால் இது ஒரு கதையின் மேலதாகவே வருமென்றுணர்க. சிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலிய நூல்கள் பெருங்காப்பியத்தைச் சார்ந்தவைகள்.

இனி, இந் நளசரித்திரத்தைத் தமிழிற் கூறும் வேறு சில நூல்களும் உண்டு; அவை: பாண்டி நாட்டின் ஓர் பகுதியில் அரசு செலுத்திய அதிவீரராமபாண்டியன் இயற்றிய நைடதமென்னும்

பெருங் காவியமும், மற்றொருவரால் இயற்றப்பட்ட நைடதக் கவித் துறை என்னும் நூலுமாம். இவற்றுள் நைடதம் பாரதத்தின் வழி நூலன்று; ஸ்ரீஹர்ஷகவி என்பவரால் வடமொழியிற் செய்யப்பட்ட நைஷத காவியத்தின் மொழிபெயர்ப்பு. இதில், நளசரித்திரம் முதற் கதையாகக் கூறப்பட்டுள்ளது. இதற்கும், நளவெண்பாவுக்கும் மிக்க வேறுபாடுளது. இவற்றுள் நைடதம் பிந்தினது. நைடதக் கவித் துறை என்னும் நூல் பிரசித்தமானதன்று.

இந் நளவெண்பாவில் கூறப்படும் சரித்திரமானது பிறனுக்குக் கீழ்ப்படியாமல் உலக முழுவதையும் அரசாண்ட அரிச்சந்திரன், கார்த்தவீரியார்ச்சுனன், புருகுற்சன், புரூரவன், முசுகுந்தன் என்ப வர்களோடு சேர்ந்த சக்கரவர்த்தியும், வரையாது கொடுப்போராகிய காரி, சகரன், விராடன், செம்பியன், துந்துமாரி, நிருதி என்னும் முதல் வள்ளல்களோடு சேர்ந்த வள்ளலும், இப்பரதகண்டத்திலே உள்ள நிஷத தேசத்தின் மாவிந்த நகரத்தில் சந்திரகுலத்தரசனாகிய வீரசேனனது குமாரனாய்த் தோன்றி, அரசு செலுத்தியவனுமாகிய நளச் சக்கரவர்த்தியையும், விதர்ப்ப தேசத்திலே உள்ள குண்டின புரத்தில் சூரியகுலத்தரசனாகிய வீமராஜனது மகளாய்த் தோன்றி, நளனை மணந்த மகா பதிவிரதையாகிய தமயந்தியையும் பற்றியதாத லானும், பல வைதிக லௌகிக தருமங்களையும், தூதிலக்கணத்தையும், மந்திரிகளின் இயற்கைகளையும், சத்தியத்தின் சிறப்பையும், கற்பின் மகிமையையும், ஊழ்வினையின் உறுதியையும், பொருளின்பங்களின் நிலையின்மையையும், 'ஐசுவரிய மிழந்தபோதும், துன்பமுற்றபோதும் அறிஞர் கவலார்' என்பதையும், 'தீயார் விரைவில் அழிவார்' என்ப தையும், 'சூதினால் தீமைவரும்' என்பதையும், மற்றும் பல நீதிகளை யும் விரித்துக் கூறுவதாதலானும் மகா புண்ணிய கதையாம்.

இந் நள சரித்திரத்தைக் கேட்டவர்களைக் கலியுகத்திலும் கலி புருஷன் தொடரமாட்டான். நளனை நினைத்தமாத்திரத்தில் எவர்க் கும், எப்பொழுதும், எக்காரியமும் நிறைவேறும். இவை நள வெண் பாவில், "என்காலத் துன்சரிதங் கேட்டாரை யானடையேன், மின்கா லயில்வேலாய் மெய்என்றும்-நன்காவி, மட்டிறைக்குஞ் சோலை வள நாடன் முன்னின்று, கட்டுரைத்துப் போனான் கலி" என்றும் வருதலா னும், நைடதத்தில், "இன்று தொட்டுன்பேர், வழுத்தினரையும் மரு வலன் மன்ன வென்றேத்த" என்றும், "நின்னை மெய்ப்பாதனை நிகரில் பார்த்தனை முன்னினு நினைத்தவை அனைத்து முற்றுமால்" என்றும்

வருதலானும், வியாச பாரதத்தில், "கார்க்கோடகநாகம், தமயந்தி, நளன், இராஜ ரிஷியான இருதுபர்ணன் இவர்களது பெயரைச் சமய முற்றுழி நினைத்தல், சொல்லுதல், கலியை ஒழித்தற்குக் காரணமாம்" என்று கூறப்பட்டிருத்தலானும் உணரப்படும்.

இஃதித்துணைச் சிறப்பு வாய்ந்ததா யிருத்தலை நோக்கியே பல ஆசிரியர்கள் இதனைக் கிளைக்கதையாகவும், தனிக் காவியமாகவும், வழிநூலாகவும் இயற்றி, உலகத்திறகுப்பயன்படுத்தி இருக்கின்றனர். இப்புண்ணிய கதையைப்புகலும் நூற்களிலெல்லாம் இந்நளவெண்பா சிறந்த ஒன்றென்ப தொருதலை. இந் நூலின் பெருமிதமும், இந் நூற் பெயரிலக்கணமும், ஆக்கியோர் சிறப்பும், ஆக்குவித்தோர் உயர்வும், நூல் செய்தற் கேதுவும், இன்னும் இதைச் சார்ந்த பிற விஷயங்களும், இந் நூலின் முற்பகுதியாகச் சேர்க்கப்பட்டிருக்கும் புகழேந்திப் புலவர் வரலாற்றினும், இந் நூலுரைத் தொடக்கத்தி லுள்ள சிற்சில குறிப்புக்களினும் விளக்கிக்காட்டப்பட்டிருக்கின்றன.

இந் நளவெண்பா இங்ஙனம் சிறந்து நிற்றலின், நந்தமிழ் நாட்டில் செந்தமிழ் விருப்புடையார் பலரும் இதனைக் கொண்டாடி வருகின்றனர். தமிழ்க்கலை கற்றுத் தேறிய வித்வான்களுக்கும், வித்தியார்த்திகளுக்கும், மற்றைய தமிழபிமானிகட்கும் இது பெரிதும் பயன்பட்டு வருகின்றது. "எவ்வகைத் தமிழ்க் கல்வியையும் தொடர்பின்றியும், முற்றுறுமனும், முட்டுறத்தட்டோடு துண்டு துண்டாக்கி, இதுவே மாணவர்க்கு இலகுவில் கல்வி புகட்டும் சிரேட்ட மார்க்கம்" என்று துணிந்து, ஒன்றினுந் தேர்ச்சியுறுதபடி தமிழ் நாட்டு மாணவர்க்குக் கல்வி கற்பித்துவரும் ஆங்கிலக் கலாசாலைகளிலும் தயவுடன், இதில் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சிற்சில செய்யுட்களும் சிற்சில சமயங்களில் பாடமாக வைக்கப்பட்டு, அவற்றிற்குச் சிறந்த புலவர்களால் உயர்ந்த உரைகளும் எழுதி உதவப்பட்டு வருகின்றன. எல்லா வகுப்பினர்க்குமே பயன்படுமாறு சில பெரிய வித்வான்கள் முழு நூலுக்கும் சிற்சில உரைகளும் எழுதி வெளிப்படுத்தி இருக்கின்றனர். எனினும், இவைகள் சற்றுச் சுருங்கிய உரைகளாயிருத்தலானும், ஆங்கிலக்கலாசாலைப் பாடச் சில்லறைச் செய்யுட்களுக்கு விரிந்த உரைகளிருப்பினும் நூல் முழுவதுக்கும் பூர்த்தி பெறுதவைகளா யிருத்தலானும், "நளவெண்பா முழு நூலுக்கும் விரிவான உரை ஒன்றிருத்தல் மிகவும் அவசியம்" என்பது நந் தமிழ்நாட்டின்கண் பற்பல தமிழறிஞர்களின் அபிப்பிராயம்.

ஆதலின், அவ்வகை நோக்கமுடையாரில் ஒருவரும் மதுரைப் பிரபல புத்தகவர்த்தகரும், மதுரைத் தமிழ்ச்சங்கத்து அங்கத்தினருள் ஒருவருமாகிய கனம் இ. மா. கோபால கிருஷ்ணக்கோனார் அவர்கள் இவ்வுரையை எழுதுவிக்கும் முயற்சியுடையவர்களாய் இதனை முடித்துதவவேண்டுமென என்பால் வற்புறுத்திக் கூறினார்கள். புலவர்திலகராகிய புகழேந்திப் புலவரால் இயற்றப்பெற்ற பெருங்காப்பியமாகிய இவ் அரிய நூலுக்கு விரிவுரை எழுதும் முழு ஆற்றல் என்பாலில்லதேனும், கோனாரவர்களின் இன்னுரையை மறுக்க முடியாமையாலும், தமிழ்த் தொண்டு புரிதலையே உரிய தொழிலாகக் கொண்டிருக்கும் இயற்கையாலும், இயன்றவரையில் எழுதி வெளிப்படுத்தினால் அரிய பெரிய வித்வான்கள் ஆராய்ந்துரைக்கும் குறைகளைத் தெரிந்து, திருத்தி, அவர்களுடைய போதனையால் மேன்மேலும் கல்வியில் தேர்ச்சியடையலா மென்னும் அவாவினாலுமே என் சிற்றறிவிற்கெட்டியவரையில், எனது ஆசிரியரும், மதுரை அமெரிக்கன் மிஷன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதரா யிருந்தவருமாகிய ஸ்ரீமத் பாலகிருஷ்ண நாயுடு அவர்களிடம் நான் பயின்ற கல்வியின் உதவியாலும், பற்பல அறிஞர்களிடம் கேட்டுத் தெரிந்த பொருளுணர்ச்சியாலும், முந்தின உரையாசிரியர் உரைகளின் ஆராய்ச்சியினாலும் பன்னாள் முயன்று இவ் அரிய உரையை வரைந்துள்ளேன்.

இதில், புகழேந்திப்புலவர் வரலாற்றிலிருந்து 11-பாரங்கள் வரை உள்ளவை மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்துவக்கழகத் தங்கத்தினருள் ஒருவரும், மதுரை அமெரிக்கன் காலேஜ் தலைமைத் தமிழாசிரியருமாகிய ஸ்ரீமான் ஆ. கார்மேககோனார் அவர்களின் உதவியாலும், மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்வக்கழகத்தங்கத்தினருள் ஒருவரும், மதுரை சௌராஷ்டிர ஹைஸ்கூல் தலைமைத் தமிழாசிரியருமாகிய ஸ்ரீமான் சிதம்பர புன்னைவனநாத முதலியாரவர்கள் உதவியாலும் வெளியானவை; மற்றவையாவும் எனது முழுப்பிரயாசையால் எழுதப்பெற்றவை. என்றால் எழுதப்பட்ட இவ் உரையில், செய்யுட்களை அநுசரித்துக் காட்டவேண்டிய விஷயங்களும், இலக்கணக் குறிப்புக்களும், மிகவிரிவாக எழுதப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு செய்யுளினடியிலும் சரித்திரத்தொடர்ச்சி விடாமல் விளக்கிக்காட்டப்பட்டிருக்கின்றது. மூலத்தில் பொருள் முடிவுக்குத் தக்கவாறு பாட்டுக்களின் வரிசை அமைக்கப்படாதிருந்த சிற்சில இடங்களில் பொருண் முடிபுக்குத் தகச் சிற்சில செய்யுட்கள் முன்பின்னாக மாற்றிக்கொள்ளப்பட்டிருக்

இன்றன. சிற்சில செய்யுட்பாடங்கள் பொருள் கொள்வதில் இடர்ப்பாடுறுமாறுபேதப்பட்டிருந்த இடங்களில், நேர்பொருள் கொள்ளுமாறு அப்பாடபேதங்கள் தக்ககாரணத்தோடு மாற்றிக்கொள்ளப்பட்டிருக்கின்றன. முன் உரைகளில் சிற்சில விடங்களில் வித்வ பாரம்பரையின் உரைக்கிரமத்திற்கும், உலகவழக்கிற்கும், நூல் வழக்கிற்கும் மாறுபட்டுக்கிடந்த சிற்சில விஷயங்கள் பெரியோர்களின் அபிப்பிராயங்களைத் தழுவி மாற்றி எழுதப்பட்டிருக்கின்றன. முன்னுக்குப் பின் முரணாயிருந்த சில விஷயங்களும் முரண்பாடின்றி இயலுமாறு திருத்தமாக எழுதப்பெற்றிருக்கின்றன. இன்னும் இவ் உரையில் யான்மிக்க உழைப்பெடுத்தாற்றி இருக்கும் வேலைகள் பலவுள. அவையாவும் இவ் உரை முழுவதையும் நன்காராய்வார்க்குத் தெள்ளிதிற்புலனும். நான் இந்நூலுரையில் பிரயாசையுடன் எழுதியிருக்கும் சிற்சில மாறுதல்களைப்பற்றி, நடுநிலையும், தமிழபிமானமும், விசேஷ விற்பத்தியுமுடைய விவேகிகள் வெறுக்காது திருப்தியடைவார்களென்றே எண்ணுகிறேன். இந்நூல் இரண்டாம் பதிப்பில் ஆதியிலிருந்து அந்தம்வரை எனது நண்பர் மதுரைத் தமிழ் வித்வான் ஸ்ரீ. நா. கிருஷ்ணசாமி நாயுடவர்கள் சில பல அரிய விஷயங்களை நுணுகியாய்ந்து என் பொருட்டு எடுத்துக்கொண்ட உழைப்புக்காக அவருக்கு நான் என்றும் நன்றி செலுத்தக்கடப்பாடுடையேன். தமிழில் அவரது மதிநுட்பம் நான் மாத்திரமல்ல எவரும் பாராட்டத்தக்கதே.

இந்நூலுரையில் பெரிய விஷயங்களும் சாமானியர்க்கு எளிதில் விளங்குமாறு எளிய நடையில் எழுதப்பட்டிருத்தலானும், அவை எவர்க்கும் நல்விவேகத்தை உண்டாக்கக் கூடியவைகளாதலானும் இவ் இனியவுரை நூலானது தமிழர் அனைவர்க்கும் பயன் தருவதாம். ஆதலின், தமிழ் நாட்டாரனைவரும் இதனை அன்புடன் ஏற்று ஆதரித்து, எனக்கும், இதனை அச்சிட்டு வெளிப்படுத்திய ஸ்ரீமான் இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனாரவர்கட்கும் மேன்மேலும் இத்தகைய தமிழ்த்தொண்டைச் செய்து வருதற்காம் மனவெழுச்சியை மீதுறச்செய்யுமாறு மிகவும் தாழ்மையோடும் விரும்புகின்றனன்.

இந்நூலுரை வெளிப்படுதற்கேற்றவாறு உதவிசெய்த உத்தம நண்பர்க்கும், இதனை அச்சிட்டுத் தமிழுலகத்திற்குப் பயன்படுத்திய கோனாரவர்கட்கும் எல்லாம் வல்ல இறைவன் நல்லருள் புரிவானாக.

இங்ஙனம்,

வீ. ஆறுமுகன்.

உ

புகழேந்திப் புலவர் வரலாறு.

—(*)—

பிறப்பிடம்:— அமிழ்தினுமினிய நந்தமிழ் மொழியினுள் முதற் பாவாகிய "வெண்பாவிற் புகழேந்தி" என நந்தமிழகத்தார் வியந்து கொண்டாடும் இப்புலவர் பெருமான் "மாலார்களந்தைப் புகழேந்தியுந் தொண்டை மண்டலமே" எனவும், 'ஐயன் களந்தைப் புகழேந்தியாண்டான்' எனவும், 'காரார் களந்தைப் புகழேந்தி' எனவும் காணப்படும் தொண்டைமண்டல சதகத்துச் செய்யுள்களால் † தொண்டை நாட்டைச் சார்ந்த செங்கற்பட்டுக்குச் சமீபமாயுள்ள பொன் விளைந்த களத்தூரில் பிறந்தவரெனத் தெரிகிறது.

சாதி:— இவர் துளுவ வேளாள குலத்துதித்தவரெனக் கூறுவர்.

வசித்த நாடுகள்:— முதலில் பாண்டிய நாடும், பின் சோழநாடும், அதன்பின் அந்நாட்டின் ஓர் பகுதியான மள்ளுவ நாடுமாம்.

காலம்:— இவர் ‡ ஒட்டக்கூத்தர், கம்பர் முதலியவர்கள் காலத்தவர். ஒட்டக்கூத்தர் விக்ரமசோழன் அரசெய்திய பின்னிலையிலும், அவன் மகன் குமார குலோத்துங்கன் காலமுழுதும், அவன் மகன் இராச இராசனது இளமைக் காலத்திலும் இருந்து விளங்கினவராகத்

---

* "வெண்பாவிற் புகழேந்தி பரணிக்கோர் சயங்கொண்டான் விருத்தமென்னும்
ஒண்பாவி லுயர் கம்பன் கோவையுலா வந்தாதிக் கொட்டக்கூத்தன்
கண்பாய கலம்பகத்திற் கிரட்டையர்கள் வசைபாடக் காளமேகம்
பண்பாகப் பகர்சந்தம் படிக்காசலா தொருவர் பகரொணாதே."

† "வாழ்க மலைநாடு வாழ்கவளஞ் சோணாடு
வாழ்க வழுதி வளநாடே—வாழ்கவே
முன்னீர்மை யோடு முதனீர்மை காத்தோம்பும்
நன்னீர் வயற்றொண்டை நாடு."

என்ற நளவெண்பா வாழ்த்துச் செய்யுளில் தொண்டை நாட்டைச் சேர சோழ பாண்டிய நாடுகளிற் சிறப்பித்துக் கூறுதலும் இதனை வற்புறுத்தும்.

‡ இவர் சோழதேசத்தைச் சார்ந்த மணவூர்ச் செங்குந்த மன்னன் சிவசங்கபூபதிக்கு வண்டார் குழலி யென்னும் பெயர் வாய்ந்த மனைவியிடம், அருந்தவப் பயனாய், அம்பலக்கூத்தன் இன்னருளால் குமாராய் அவதரித்தவர். ஆதலின், பெற்றோரால் இவர் அம்பலக்கூத்தன் என்று நாமகரணஞ் சூட்டப் பெற்றவர், என ஆராய்ச்சி வல்லோர் அறிந்து கூறுகின்றனர்.

தெரிகிறது. விக்ரமசோழன் கி. பி. 1118-முதல் 1132வரை அரசாண்டவனெனத் தெரிதலால் ஒட்டக்கூத்தர்காலத்தவராய இவரதுகாலமும் அதே காலமான பன்னிரண்டாம் நூற்றாண்டாகும்.

பதிவு:— இவர் தாம்பாடிய நளவெண்பாவில் முதற்கண் "சேசரிதங்கூர நிலவலயந் தாங்குநளன், மாசரிதங் கூற வருந்துணையாப்-பேசரிய, மாமகிழ்மா றன்புகழாம் வண்டமிழ்வே தம்விரித்த, மாமகிழ்மா றன்றாள் மலர்" என நம்மாழ்வார் விஷயமாகவும், காண்டங்கடோறும் முதற்கண் திருமால் விஷயமாகவும், வணக்கங்கூறி, நூலிடையில் நளனைக் கலி தொடரும்போது "நாராய ணாய நமவென்றவனடியிற் சேராரை வெந்துயரம் சேர்ந்தாற்போல்—பாராளும், கொற்றவனைப் பார்படர்ந்தை கோமானை வாய்மைநெறி கற்றவனைச் சேர்ந்தான் கலி" எனவும், கலி நீங்கும்போது, "மிக்கோ னுலகளந்த மெய்யடியே சார்வாகப், புக்கோ ரருவினைபோற் போயிற்றே—அக்காலம், கானகத்தே காதலியை நீத்துக் கரந்துறையும், மானகத்தேர்ப் பாகன் வடிவு" எனவும் எடுத்துக் கூறுதலால் வைணவர் எனவும்; "சேசரிதங் கூர..............—ஈசன், கரியானனத்தான் கருதுபுகழ் பூண்ட, கரியானனத்தான் கழல்" என விநாயகர் விஷயமாகவும், சுயம்வரகாண்டத்தின் தொடக்கத்தில் "கலைபா மயிலிருந்த பாகத்தார் ......காப்பு" எனவும், கலி தொடர் காண்டம், கலி நீங்கு காண்டங்களில் "செக்கர் நெடுவானில் திங்கள்.....வெள்ளி நெடுங்கிரியான் மெய்யன்பர் உள்ளத்தான் எங்கட் குளான்" "போதுவார் நீறணிந்து பொய்யாத ஐந்தெழுத்தை, ஓதுவாருள்ள மெனவுரைப்பார்—நீதியார், பெம்மா னமரர் பெருமா னொருமான்கை, அம்மானின் றூடு மரங்கு" எனவும், சிவபெருமானைச் சிறப்பித்துக் கூறுதலான் சைவர் எனவும் இவரைக் கூறுவர். மேற்கூறிய ஆதாரங்களால் இவரை அரியையும், அரனையும் ஒப்ப நோக்கும் உத்தம அத்வைதி எனக் கூறுதலே மிகப் பொருத்தமுடையதாம்.

இப்புலவர் செந்தமிழ் நாட்டிற்சென்று, ஆண்டுள்ள புலவரோடு அளவளாவிக் களிப்பதற் கெண்ணிச் "சந்தனப் பொதியச் செந்தமிழ் முனிவனும், சௌந்தர பாண்டிய னெனுந் தமிழ்நாடனும், சங்கப் பலகையுந் தழைத்தினி தோங்கும், மங்கலப் பாண்டி வளநாடு" சென்று அந்நாட்டின் தலைநகராகிய மதுரைமா நகரிற் செங்கோலோச்சிய கருணாகர பாண்டியனது சமுக வித்துவானாக அமர்ந்திருந்தனர். இக்காலத்து விக்ரம சோழன் தன்மகன் குமார குலோத்துங்

னுக்கும் பாண்டியன் மகளை மணஞ்செய்து வைக்குமாறு தனது சமஸ்தான வித்வான் ஒட்டக்கூத்தப் புலவரிடம் சொல்லியிருந்தபடி, அவர் பாண்டியன் மகளை மணம்பேசக் கருணாகர பாண்டியன் சமூகத்தில் வந்தபோது, பாண்டியன் "ஓ! கூத்தரே! நமது பெண்ணைச் சோழன் மணஞ் செய்யத்தக்கவனோ? அவனிடம் யாது மேன்மையுளது? கூறும் என, அவர் பாண்டியனே! சோழனது குதிரை முதலியவை உமக்குரிய புரவியாதியவற்றில் விசேடம் பெற்றவை என்றுகூறி, அவற்றை விளக்கும் பொருட்டு,

"கோரத்துக்கு ஒப்போ கனவட்டம் அம்மானே!
 கூறுவதும் காவிரிக்கு வையையோ அம்மானே,
ஆருக்கு வேம்புநிக ராகுமோ அம்மானே,
 ஆதித்த னுக்குநிகர் அம்புலியோ அம்மானே,
வீரர்க்குள் வீரனொரு மீனவனோ அம்மானே.
 வெற்றிப்பு லிக்கொடிக்கு மீனமோ அம்மானே
ஊருக்கு உறந்தைநிகர் கொற்கையோ அம்மானே
 ஒக்குமோ சோணாட்டுக்குப் பாண்டிநாடு அம்மானே"

என்று தம்மரசனைப் புகழ்ந்துபாட, அருகிலிருந்த பாண்டியனது சமஸ்தான வித்துவான் புகழேந்திப்புலவர் கூத்தரை நோக்கி,

"ஒருமுனிவன் நேரியிலோ உரைதெளித்தது அம்மானே,
 ஒப்பரிய திருவிளையாட்டு உறந்தையிலோ அம்மானே,
திருநெடுமா லவதாரஞ் சிறுபுலியோ அம்மானே,
 சிவன்முடியி லேறுவதுஞ் செங்கதிரோ அம்மானே,
கரையெதிரே டேறியது காவிரியோ அம்மானே,
 கடிப்பகைக்குத் தாதகியங் கண்ணியோ அம்மானே,
பரவை பணிந்ததுஞ் சோழன் பதந்தனையோ அம்மானே,
 பாண்டியனார் பராக்கிரமம் பகர்வெளிதோ அம்மானே"

என்று தமதரசனையும், நகரையும் வியந்து பாடிக் கூத்தரையும் அவர் கூற்றையும் கண்டித்தனர். பின்னர்ப் பாண்டியன் ஒருவாறு இசைந்து, குலோத்துங்கச் சோழனுக்குத் தன் அருமந்த குமாரத்தியை மணம் செய்வித்துச் சிலநாள் கழிந்தபின் புறப்பட்ட மணமக்களுடன் தன் குமாரத்திக்களித்த உயர்ந்த பொருட் சீதனத்தோடு புகழேந்திப் புலவரையும் சமயம் நேர்ந்துழிப் புத்தி புகட்டுவதற்காகக் கௌரவ சீதனமாகக் கொடுத்தனுப்பி வைத்தான். அங்ஙனம் புகழேந்தி மணமக்களுடன் சோழதேசம் போகவே பழைய கறுவுகொண்

இருந்த ஒட்டக்கூத்தர் அரசரிடம், சோழமன்னரையும், நாடு முதலிய வற்றையும் முன் பாண்டியன் அவைக்களத்துப் புகழேந்தி பழித்து இழித்துரைத்தமையை எடுத்துக் கூறிப் புகழேந்தியைச் சிறைச்சாலையில் அடைப்பித்தனர். பின்னர் ஒரு நாள் அரசன் பவனிவரும் சிறப்பைப் புகழேந்திப் புலவர் சிறைக்கூடத்திலிருந்து பார்க்க, அதைக் கண்ணுற்ற அரசன் தன் பக்கல் நின்ற கூத்தருக்குப் புகழேந்தியைச் சுட்டிக்காட்டி, 'ஓ வித்வானே! அதோ நிற்கும் புகழேந்தி புலமையில் மிகச் சிறந்தவரல்லவா?' எனக் கூத்தர் இவரைக்கண்டு 'ஓ வேந்தனே!

"மான்னிற்கு மோஇந்த வாளரி வேங்கைமுன் வற்றிச்செத்த
கான்னிற்கு மோஇவ் வெரியுந் தழல்முன் கனைகடலின்
மீன்னிற்கு மோஇந்த வெங்கட் சுறவமுன் வீசுபனி
தான்னிற்கு மோஇக் கதிரோ னுதயத்தில் தார்மன்னனே"

என்று தம்மைப் புகழ்ந்து பாடியதைப் புகழேந்தி கேட்டு வளவனை நோக்கி 'மகாராஜா! இப்பாட்டை யான் வெட்டிப்பாடவா, ஒட்டிப் பாடவா? என, அரசன் 'ஒட்டியே பாடும்' எனப் புகழேந்திப்புலவர்

"மான் அவன் நான் அந்த வாளரி வேங்கையும் வற்றிச்செத்த
கான் அவன் நான் அவ் வெரியுந் தழலும் கனைகடலின்
மீன் அவன் நான் அந்த வெங்கட் சுறவமும் வீசுபனி
தான் அவன் நான் அக் கதிரோ னுதயமுந் தார்மன்னனே"

என்று ஒட்டிப்பாடித் தம் சாமர்த்தியத்தை விளக்கிக் காட்டினர். கூத்தரிடம் மிக்க அபிமானங் கொண்டிருந்த அரசன் இவற்றையெல்லாம் உணர்ந்தும் புகழேந்தியைச் சிறையினின்றும் விடுவிக்க மனங் கொள்ளவில்லை. ஒட்டக்கூத்தரோ எனின், புகழேந்தி ஒருவர் மேலன்றி ராஜசபையில் சன்மானம் பெற வரும் வேறு அநேக புலவர் பேரிலும் பொறாமைகொண்டு, அவர்களிலும் அநேகரைப் பிடித்துச் சிறையில் போட்டு நிட்டூரம் பண்ணியும், வேறு பலரைச் சிரச்சேதம் செய்வித்தும் வந்தார். இக்கொடுஞ் செயலுக் கஞ்சிய புகழேந்தி இதுவரை கொல்லப்பட்டவர்போக இன்னும் பலரைக்கொல்லுவிக்கப் போகிறானே என்றெண்ணித் தம்முடன் சிறைவந் திருந்தவர்களுடைய உயிரைத் தப்புவிக்கக்கருதி, அங்கிருந்த குயவன், அம்பட்டன், கருமான், தட்டான், தச்சன், வேளாளன் ஆகிய அறுவரைத் தெரிந்து, அவர்களை நல்ல பண்டிதர்களாக்கி வைத்திருந்தார். நவராத்திரிப் பூசை சமீபித்தபோது வழக்கப்படி துர்க்கா தேவிக்குப் பலிகொடுக்க எண்ணிச் சிறையிலிருந்த புலவர்களை ஒட்டக்கூத்தர்

அழைப்பிக்கப் புகழேந்தி மேற்சொல்லிய அறுவரையும் ஒவ்வொருவர் பின் ஒருவராய் அனுப்பிவைத்தனர். முதல் முதல் ஒட்டக்கூத்தர் சமூகத்தில் குயவப்புலவன் செல்ல, அவனைக்கண்ட ஒட்டக்கூத்தர் கர்ச்சித்து,

"மோனை முத்தமிழ் மும்மதமும் பொழி
யானைமுன் வந்தெதிர்த்தவ னாரடா"

என்று வினவக் குயவன்.

"கூனையுங் குடமுங் குண்டு சட்டியும்
பானையும் வனையு மங்குசப் பையல்யான்"

என அங்குசப்பயல் என்றும், குசப்பயல் என்றும் இருபொருள்பட விடை கூறக் கேட்டுத் திகைத்த கூத்தர் தைரிய சித்தராகி, அடுத்து வந்த பொட்டைக் கண்ணனாகிய அம்பட்டனைப் பார்த்து,

"விண்பட்ட கொக்குவல் லூறுகண் டென்ன விலவிலக்கப்
புண்பட்ட நெஞ்சொடு மிங்குநின் றாய்பொட்டை யாய்புகல்வாய்"

என்று கேட்க, அம்பட்டன்

"கண்பொட்டை யாயினும் அம்பட்டன்நான் கவி வாணர்முன்னே
பண்பட்ட செந்தமிழ் நீயுந் திடுக்கிடப் பாடுவனே"

என்று பதிலளித்தான். ஒருவர்க் கொருவர் சமர்த்தராய் இருப்பதைக் கண்ட ஒட்டக்கூத்தர் மூன்றாவதாக வந்த கொல்லனை நோக்கிப் பாட்டினால் வினவாது, நீயாரடா வென வசன நடையில் கேட்க, அவன்

"செல்வன் புதல்வன் திருவேங் கடவன் செகத்குருவாங்
கொல்லன் கவியைக் குறைசொன்ன பேரைக் குறடுகொண்டு
பல்லைப் பிடுங்கிப் பருந்தாட்ட மாடிப் பலகவர்முன்னே
அல்லும் பகலு மடிப்பேன் கவியிருப் பாணிகொண்டே"

என்று படபடப்பாய் உத்தரம் சொல்லவே அதன் பின்னர் யாதொன்றும் பேசாமலிருந்துவிட்டுப் பின்னர் நாலாவதாக வந்த தச்சனைப் பார்த்து நீயார் என்ன, அவன்

"சொன்னசந் தக்கவி யாவருஞ் சொல்லுவர் சொற்சுவைசேர்
இன்னசந் தக்கவி யேதென்ற போதி லெதிர்த்தவரை
வன்னசந் தங்கெட வாயைக் கிழித்திந்த வாய்ச்சியிற்
கன்னசந் தங்களி னிற்கவி யாப்பைக் கடாவுவனே"

என்று பாட்டால் விடை பகர்ந்தான். அக்கணமே வந்த தட்டானையும் நோக்கி நீ யார் சொல்லுக என, அவன் மிக்க கர்வங்கொண்டு,

"திகிரிவட் டக்குடைச் செங்கோ லபயன் செழுஞ்சிலம்பிற்
பகுதியொட் டக்கூத்த பட்டனை காணப் பணிக்கவின்
மிகுதியொட் டத்தட்டி விட்டகை யோட்டி யுருக்கிக்குத்திப்
புகுதவொட் டத்தட்டி மேலனு காவண்ணம் போர்செய்வனே"

என்று கூறினான். இவ்வளவிற்குள் வாயற்று மௌனமான கூத்தர் கடைசியாக வந்த வேளாளனை நோக்கி நீயும் வித்வானா? பாடல் செய்வாயா என்று கேட்க, அவன்

"நோக்கண்டு மன்னர் குரைகடல் புக்கிலர் கோகனகப்
பூக்கண்டு கொட்டியும் பூவா தொழிந்தில பூதலமேழ்
காக்கின்ற மன்ன கவியொட்டக் கூத்தநின் கட்டுரையாம்
பாக்கண் டொளிப்பர் களோதமிழ் பாடிய பாவலரே"

என்று பாடியதுடன் கூத்தரைக் கண்டித்து, 'ஓ கூத்தா! உன் குற்றத்தை நீ உணராமல் கர்வித்திருக்கின்றாயே? நீ பாடிய அண்டத்துப் பரணியில் இவ்வண்டத்தையே நகரமாகவும், சக்ரவாளகிரியையே கோட்டையாகவும், அதற்குட்புறத்துள்ள கடல்களையே அகழாகவும், பூமியின் நடுவிலுள்ள மகாமேருவையே கோட்டைக் கொடிஸ்தம்பமாகவும் உருவகப்படுத்தி வருணித்திருக்கிறாயே! மதிலின் புறத்திலன்றோ அகழ் இருக்கவேண்டும்? அகத்தில் இருப்பதாகக் கூறியது குற்றமல்லவா? பெரும்புறக் கடலை அகழெனக்கூற மறந்தாய்போலும். கவிச்சக்ரவர்த்தியாகிய கம்பரும் தாம் பாடியருளிய இராமாயணத்தில் அயோத்திநகர் வருணனையில்

"நேமி மால்வரை மதிலாக நீள்புறப்
பாம மாகடல் கிடங்காகப் பன்மணி
வாம மாளிகை மலையாக மன்னர்க்குப்
பூமியு மயோத்திமா நகரம் போலுமே"

என்றசெய்யுளைப்பார்த்ததும், கேட்டதும் இல்லையா? என்று இகழ்ந்து பேசக் கூத்தர் அகங்காரம் தணிந்து, வாயடங்கி, யொடுங்கி, இனிப் புலவர்களைச் சிறைப்படுத்தி வைப்பதில் பயனில்லை; இவர்களை எல்லாம்ஏவிவிட்டு,இராசசபையில்என்னை இவ்வாறு அவமானம்பண்ணுவித்த புகழேந்தியை இன்னும் சிறையில் வைத்தாட்டுவேனென்று சொல்லிக் காவலிலிருந்த புலவர்கள் யாவரையும் விடுவித்துப் புகழேந்தியை மாத்திரம் அருஞ்சிறையில் வைத்திருந்தார். அரசன் தனது ஆசிரியப்புலவர் கருதியது தீங்காயினும், அதற்கும் மாறாய் நடவாது புலவர் இட்டது சட்டமென்றிருக்க இசைந்திருக்கிறான் என்பதின்

அதிருப்தி யடைந்த பட்டத்தரசி ஒருநாள் தன் சயனக்கிரகத்துக்குக் குலோத்துங்கன் வருவதுணர்ந்து, அவனை உட்புகவிடாமல் கதவிற்குத் தாழிட்டாள். இதனையறிந்து ஊடலைத் தீர்த்தற்கேற்றவர் தன் புலவர் கூத்தரேயாமெனக், இராசன் கூத்தரை அழைக்க, அவர் தேவியின் வாசலில் வந்து நின்று,

"நானே யினியுன்னை வேண்டுவ தென்சொல் நளினமலர்த்
தேனே கபாடந் திறந்திடு வாய்திற வாவிடிலோ
வானே றனைய இரவி குலாதிபன் வாசல்வந்தால்
தானே திறக்குநின் கைத்தல மாகிய தாமரையே"

என்றுபாட, அவள் 'ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத்தாழ்' என்று இருதாழிட்டுக் கதவை முன்னினும் உறுதியாகப் பூட்டிக் கொண்டாள். புகழேந்தியாரைச் சிறையில் வைத்திருப்பதே இராணியின் கோபத்திற்குக் காரணம் எனத்தெரிந்த இராசன் இராணியின் அபிமானப் புலவராகிய புகழேந்திவரின் தன் எண்ணம் பூர்த்தியாகும் எனக்கண்டு, புகழேந்தியைச் சிறைக்கூடத்தினின்றும் விடுதலை புரிந்து, அவரை அழைப்பிக்கப் புகழேந்தி வந்து,

"இழையொன் றிரண்டு வகிர்செய்த நுண்ணிடை யேந்தியபொற்
குழையொன் றிரண்டு விழியணங் கேகொண்ட கோபந்தணி
மழையொன் றிரண்டுகைம் மானா பரணனின் வாசல்வந்தால்
பிழையொன் றிரண்டு பொறாரோ குடியிற் பிறந்தவரே"

என்று பாடவும், சிசுவைக்கண்டு இரங்கும் தாய்போல அரசி தனது பிதாவின் சமஸ்தான வித்துவான்மேல் கொண்ட பிரியத்தாற் கதவைத் திறந்துவிட்டாள். புகழேந்திப் புலவர் தம் பெருமையை யுள்ளவாறுணர்ந்த குலோத்துங்கனால் சிறைமீட்கப்பட்டு அவ்வரசனால் கூத்தரைப் பார்க்கிலும் விசேஷ அன்புடன் நடத்தப்பட்டாரெனினும் ஒட்டக்கூத்தர் தம்மிடம் பொறாமைகொண்டிருத்தலையும், அவர் வழியே அரசன் செல்வதையும் கண்டு, வெறுப்புற்று, இவர் அந்நாட்டின் முரணைநகர்ச் சந்திரன் சுவர்க்கி யென்னும் சிற்றரசனிடம் சென்று, அவன் வேண்டுகோட்கிணங்கி நளவெண்பா வென்னும் இந்நூலை இயற்றி, அதனால் நன்கு மதிக்கப்பெற்று, வாழ்ந்து வந்தனர். இவற்றை யெல்லாம் கேள்வியுற்ற சோழன் மீண்டும் புகழேந்தியாரைத் தன் சமுகத்தில் வரவழைத்துச் சிறப்புடன் உபசரித்துத் தனது சபையில் நளன் கதையைப் பிரசங்கிக்குமாறு வேண்டிக்கொள்ள அவர் அதற்குடன்பட்டு அவையின்கண் பிரசங்கித்து வருகையில்

*"மல்லிகையே வெண்சங்கா வண்டே வான்கருப்பு
வில்லி கணைதெரிந்து மெய்காப்ப—முல்லைமலர்
மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே
புன்மாலை யந்திப் பொழுது"

என்ற பாடலைச் சொல்லும் பொழுது, ஒட்டக்கூத்தர் மல்லிகை அரும்பைச் சங்காகவும், வண்டைச் சங்கூதுவோனாகவும் கற்பித்தது அழகே. ஆனால் சங்க வாத்தியஞ் செய்பவர் அதனடியை யல்லவோ வாயில்வைத்து ஊதுவார்கள்? அவ்விதம் மலர்களினடிப் புறத்து வண்டுகள் ஊதுகின்றனவல்லவே? மேற்பக்கத்திலன்றோ மொய்த்து, ஆரவாரிக்கின்றன. ஆதலால், இவ்வருணனை குற்றமென்று மறுத்துரைத்தார். அதற்கு புகழேந்தியார் குடியனுக்கு வாயென்றும், மற்றதென்றும் தெரியுமா? என்று, இவ்விதம் விடையிறுத்து ஒட்டக் கூத்தர் நிகழ்த்தும் ஆக்ஷேபணைகளுக்கெல்லாம் உடனுக்கு உடன் சாதுரியமாகத் தக்க சமாதானம் கூறி, அவர் தம் வாயை அடக்கி வந்தனர். கம்பர் முதலிய புலவர்களும் புகழேந்தியின் கவித்திறத்தை யும், புத்தி சாதுர்யத்தையும் வியந்து கொண்டாடினார்கள். ஒட்டக்கூத் தர் பகை கருதிப் புறத்தில் அவமதித்தும், அகத்தில் அவர் கவித்திறத் தை வியந்தும் இருந்தார். ஒருநாள் கூத்தர் தம் மனைவியுடன் புகழேந்தி யின் கவியினினிமையைப் பாராட்டிக்கொண்டிருக்குங்கால் அவரைக் கொல்லக் கருதிக் கல்லுடன் மறைந்து நின்ற புகழேந்தி அதுகேட்டு அவரிடத்திருந்த பகைமைக்குணம் நீங்கி, அவர் முன்சென்று அள வளாவிச் சிநேகங்கொள்ள, அவரும் மனமொத்து நட்புப்பூண்டனர்.

இவற்றைக் கேட்டுச் சந்தோஷித்த சோழன் ஒருநாள் இவர் களைத் திருநெய்த்தானம் என்னும் தலத்திற்கு அழைத்துச்சென்று, அத்தலத்துச் சிவபெருமான் மீது 'நெய்த்தானத்தானைச் சேவித்தே' என்பதை மகுடமாகவைத்துச் சந்தவிருத்தமாக ஒரு கவி பாடுமாறு சொல்ல, ஒட்டக்கூத்தரும், புகழேந்தியும்

---

* "மல்லிகையே வெண்சங்கா வண்டே" என்னும் அடியின் கற்பனை "எல்லியம் போதிருஞ் சிறைவண்டெம் பெருமான்குணம்பாடி, மல்லிகை வெண்சங்கூது மதிளரங்க மென்பதுவே" எனப் பெரியாழ்வார் திருமொழி யிலும், (திருமொழி-8,8)' மல்லிகைப்போதின் வெண்சங்கம் வண்டே"என்த் திருவாதவூரடிகள் திருச்சிற்றம்பலக் கோவையிலும் வருதல் காண்க.

"விக்கா வுக்கா வித்தா விப்போய் விட்டார் நட்டார் கட்டேர் புக்கார்
இக்கா யத்தா சைப்பா டுற்றே யிற்றே டிப்போய் வைப்பீர் நிற்பீர்
அக்கா டப்பேய் தொக்கா டச்சூ ழப்பா டத்தீ வெப்பா டப்பூண்
டெக்கா டக்கா னத்தா டப்போம் நெய்த்தா னத்தா னைச்சே வித்தே"

"தற்கோ விப்பூ சற்பா சத்தே தட்டா மற்சா கைக்கே நிற்பீர்
முற்கோ லிக்கோ விப்பூ சித்தே முட்டா மற்சே வித்தே நிற்பீர்
வற்றா நெட்டோ டைப்பா ரைச்சேல் மைப்பூ கத்தே றித்தா விப்போய்
நெற்றூ ஞற்றூ லைப்பா இற்சேர் நெய்த்தா னத்தா னைச்சே வித்தே"

எனவும் முறையே * பாடினார்கள்.

திருக்குறுங்குடி யென்னுந் தலத்தெழுந்தருளி யிருக்கும் திருமாலைக் குறித்தும் வல்லோசையமைத்து இருவரும் கலித்துறை கூறவென அரசன் வேண்ட, இருவரும் முறையே:

"திக்கு ளெட்டுக்கயந் துக்கமுற்றுத் திடுக்கிட் டலற
மைக்கடற்குட் சரந்தைக்க விட்டோர்க் கிடமாமதுர
விக்கு முற்றிக் கணுச் சற்றுவிட்டுத் தெறித்திட்ட முத்தைக்
கொக்கு மொக்கிக் கக்கி விக்கு மச்சோலைக் குறுங்குடியே"

"எட்டெழுத்தைக் கருத்திற் குறித்திட்டு நித்தம்பரவும்
சிட்டர்கட்குத் திருப்பொற் பதத்தைச் சிறக்கத் தருமவ்
வட்ட நெட்டைப்பணி மெத்தை யத்தற் கிடம் வாரிசப்பொ
குட்டி னத்துக்குலம் தத்தி முத்தீனுங் குறுங்குடியே."

என்று பாடல்களைப் பாடினார்கள். ஏற்றத்தாழ்வின்றி ஒருபடித்தாய் விளங்கிய செய்யுட்களை அரசன் கேட்டுச் சொற்சுவை பொருட்சுவை கற்பனாலங்காரங்களைக் கண்டு, களித்து, இருவருக்கும் ஏற்ற வெகுமதியை ஈந்து கௌரவப்படுத்தினன். இவ்வாறே, இவர்கள் இரு புலவர்களும் அரசன் அவைக்களத்தும் சமயோசிதமான பாடல்களைப் பாடிச் சிறப்புப்பெற்று வந்தார்கள்.

ஒருநாள் சோழராஜன் தன்னிரு புலவர்களுடன் வீதியிற் கால்நடையாய் உலாவிச் செல்லுகையில், ஒரு வீட்டு முகப்பில், ஔவை

---

* "நூலார் கலைவல்ல செம்பியன் கேட்க நொடித்துமிக்க
கோலா கலனொட்டக் கூத்தனை யன்று தற் கோவியென்று
மேலார் கவிசொல்லி நெய்த்தானத் தேசென்று வென்றுகொண்ட
மாலார் களந்தைப் புகழேந்தி யுந்தொண்டை மண்டலமே"

என்ற செய்யுள் இவ்விபரத்தை வலியுறுத்தும்.

யார் வீற்றிருந்தார். அவர் சோழராஜனைக் கண்டதும் ஒருகாலையும், புகழேந்தியைக் கண்டதும் மற்றொருகாலையும் மடக்கி, ஒட்டக்கூத்தரைக் கண்டவுடனே முன் மடக்கிய இரு கால்களையும் பழையபடி நீட்டிக்கொண்டார். இதைக்கண்ட கூத்தர் அவமானமும், கோபமும் மிகுந்தவராய் 'அம்மையே! நீர் இவ்வாறு செய்த காரணம் யாது, கூறுமின்?' என அவர் சோழன் கிரீடாதிபதியாதலால் ஒரு காலையும், புகழேந்தி புலவர்பதியாதலால் மற்றொருகாலையும் மடக்கினேன்: நீயோ கல்வி நிறைவற்ற மூடனாதலால் மறுபடியும் இரண்டு கால்களையும் நீட்டினேன்; நீ இந்தப் புகழேந்தியைப் போன்று சிறந்த புலவனாயின், சோழனையும், சோணாட்டையும் புகழ்ந்து, மதி என்னும் பதம் மூன்றுமுறைவர ஒருபாட்டுக் கூறு என,

"வெள்ளத் தடங்காச் சினவாளை வேலிக் கமுகின் மீதேறித்
துள்ளி முகிலைக் கிழித்து மழைத்துளியோடிறங்குஞ் சோணாடா
கள்ளக் குறும்பர் குலமறுத்த கண்டா வண்டர் கோபாலா
பிள்ளை மதிகண்டப் பேதை பெரிய மதியு மிழந்தாளே"

என்று பாடினர். ஔவையார் கேட்டு, கை கொட்டிச் சிரித்து, ஓட்டா? ஒருமதி கெட்டாய். உன் திறமை நன்று நன்று! என்று இழித்துரைத்துப் பின், புகழேந்திப் புலவரைப் பார்த்து நான் வேண்டியபடி நீர் பாடுக என, இவரும் அதற்கிணங்கி,

"பங்கப் பழனத் துழுமுழவர் பலவின் கனியைப் பறித்தமென்று
சங்கிட் டெறியக் குரங்கிளநீர் தனைக்கொண் டெறியுந் தமிழ்நாடா
கொங்கர்க் கமரா பதியளித்த கோவே ராசகுல திலகா [லே"
வெங்கட் பிறைக்குங் கரும்பிறைக்கு மெலிந்தப் பிறைக்கும் விழிவே

என்று பாடினர். இதைக்கேட்டு ஔவையார் மிகவும் மகிழ்ந்து புகழேந்தியை விசேஷமாகக் கொண்டாடினர் என்பதாகவும் கூறுவர்.

புலவர் நன்றி பாராட்டல்:— இவர் தமக்குப் பலவரிசைகளும் கொடுத்து, ஆதரித்து, நளவெண்பாப் பாடும்படி செய்வித்த முரணை நகர்ச் சந்திரன் சுவர்க்கி என்னும் பிரபுவை:-

"மாமனுநூல் வாழ வருசந் திரன்சுவர்க்கி
தாமரையாள் வைகுந் தடந்தோளான்—காமருபூந்
தாரான் முரணைநகர் தாவென்று சாற்றலாம்
பாராளும் வேந்தன் பதி"

"மாமுத்த வெண்குடையான் மால்களிற்றான் வண்டிகைக்குத்
தாமத் தரிச்சந்தி ரன்சுவர்க்கி—நாமத்தார்
பாவேய்ந்த செந்தமிழா மென்னப் பரந்ததே
கோவேந்தர் செல்வக் குழாம்"

எனச் சுயம்வர காண்டம் 17, 57-ம் செய்யுள்களிலும்,

"தாருவெனப் பார்மேல் தருசந் திரன்சுவர்க்கி
மேருவரைத் தோளான் விரவார்போற்—கூரிருளிற்
செங்கா னகஞ்சிதையத் தேவியைவிட் டேகினான்
வெங்கா னகந்தனிலே வேந்து"

"சங்க நிதிபோல் தருசந் திரன்சுவர்க்கி
வெங்கலிவாய் நின்றுலகை மீட்டாற்போல்—மங்கையைவெம்
பாம்பின்வாய் நின்று பறித்தான் பகைகடிந்த
காம்பின்வாய் வில்வேடன் கண்டு"

எனக் கலி தொடர் காண்டம் 109, 128-ம் செய்யுள்களிலும்,

"வண்டார் வளவயல்சூழ் வள்ளுவநாட் டெங்கோமான்
தண்டார் புனைசந் திரன்சுவர்க்கி—கொண்டாடும்
பாவலன்பால் நின்ற பசிபோல நீங்கிற்றே
காவலன்பால் நின்ற கலி"

எனக் கலி நீங்குகாண்டத்துச் செய்யுளிலும் புகழ்ந்து, நன்றிபாராட்டியிருக்கின்றனர். புண்ணிய சரித்திரத்தினிடையில் ஒரு மனிதனைத் துதித்தல் தகுமோ? நர கவனம் நரகவன மன்றோ என்று ஆக்ஷேபிப்பாரும் முளர். புலவர்கள் தம்மைப் பாதுகாத்த பிரபுக்களைத் தாம் செய்யும் நூல்களில் நன்றியறிதலாக எடுத்தேத்துதல் இயற்கை என்பது கம்பர் இராமாயணத்தில் திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலையும், வில்லிபுத்தூரார் பாரதத்தில் வக்கபாகை வரபதியாட்கொண்டானையும், சிறப்பித்துக் கூறுதலாலும் விளங்கும்.

இவர் தேச பாஷாபிமானம்:—நள வெண்பாவில் தமயந்தி சுயம் வரத்துக்கு வந்த மன்னர்களில் தமிழ்நாட்டு மூவேந்தரையும் முதலில் சிறப்பித்துக் கூறியிருப்பது இவரது தேசாபிமானத்தையும், "வண்டமிழ் வாணர்ப்பிழைத்த வான்குடிபோல் தீத்தழல்மீ மண்டு கொடுஞ்சுரத்து" (கலிதொடர் 113.) எனத் தமிழ்ப் புலவர் ஆற்றலைத் தெரிவித்திருப்பது இவர் தம் பாஷாபிமானத்தையும் விளக்கும்.

இப்புலவரது பெருமையை இவர் தம்பெயரே நன்கு காட்டும். "கேட்டாலு மின்பங்கிடைக்குங் கண்டீர் கொண்ட கீர்த்தியோடு, பாட்டாலுயர்ந்த புகழேந்தி சொன்னபடி" எனப் படிக்காசுப்புலவர் கூறினர்.

நளவெண்பாக் கதைச்சுருக்கம்.

சுயம்வரகாண்டம்:—இப்பரதகண்டத்தில் நிஷததேசத்து மன்னன் வீரசேனன்புத்திரன் நளமகாராஜனும், விதர்ப்பதேசத்துவீமராசனது புத்திரி தமயந்தியும் ஒரு தேவலோகத்து அன்னப்பறவையாலும், வேறு சிலராலும் ஒருவர் ஒருவருடைய அழகு, குணம், செயல் முதலியவற்றை யுணர்ந்து பரஸ்பரம் அன்பு பூண்டிருந்தனர். விதர்ப்பநாட்டரசன் தனது மகள் தமயந்திக்குச் சுயம்வரம் ஏற்படுத்தியகாலத்து அதற்கு வந்த இந்திரன், அக்கினி, யமன், வருணன் ஆகிய தேவர்கள் நால்வரும் தங்களுக்காக நளனைத் தமயந்தியிடம் தூதனுப்பிப் பார்த்ததில் அவள் நளனையன்றிப் பிறரை வரிக்க இசையாதிருப்பதுணர்ந்து, தங்கள் விருப்பத்திற் கிணங்கித் தூது சென்ற நளனுக்குப் பலவரங்களையும் ஈந்து, பின் நளனது வடிவத்தையே இவர்களும் கொண்டு சென்று சுயம்வரமண்டபத் தமர்ந்தனர். பல மன்னர்களும் நிரம்பிய மண்டபத்தில் தமயந்தி தோழியாலும், பிற குறிப்பாலும் உண்மைநளன் இன்னனெனத்தெரிந்து, அவனுக்கே மாலைசூட்டி மணந்தனள். நிற்க, தமயந்தி சுயம்வரத்தைக் கருதி வந்துகொண்டிருந்த கலிபுருடன் வழியிற் சந்தித்த இந்திரன் முதலியோர் மூலமாகத் 'தமயந்தி தேவர்களையும் மதியாது நரனாகிய நளனையே வரித்துக்கொண்டனள்' என்பதைக் கேட்டு, உக்கிரம்கொண்டு, தான் அவ்விருவரையும் பிரித்து, அலைத்து, வருத்துவதாகச் சபதம்பண்ணிச் சென்றான். மணம் நிறைவேறிய பின் மாவிந்தநகர்க்குத் திரும்பிய நளனுக்குத் தமயந்தியிடம் ஓர் புத்திரனும், புத்திரியும் தோன்றினர்:—

கலிதொடர்காண்டம்:—கலிபுருடன் நளனிடம் 12-வருடமாகக் குற்றந்தேடியுங் காணாது, ஓர் நாள் நளன் சந்தியாவந்தனத்திற்குக் கால்கழுவுகையில் காலினோர்புறம் நீர்படாததாகிய குற்றத்தையே காரணமாகக்கொண்டு, நளனைப்பற்றி, அவனைப் புஷ்கரமன்னனுடன் சூதாடி, நாடு நகரம் இழந்து, மனைவிமக்களுடன் வனம்புகச்செய்து, அவ்விடம் மக்களை அந்தணன் மூலம் வீமராசனிடம் அனுப்பியபின் தமயந்தி முன்னிலையில் மாய அன்னப் பறவையாய்த் தோன்றித்

தன்னைப் பிடிக்கவிடுத்த ஆடையுடன் பறந்து, ஏமாற்றிப் பாழ்மண்டபத்தில் தரித்திரத்தால் இருவரும் ஓர் ஆடை உடுத்து நித்திரை செய்கின்ற நள்ளிருளில் தமயந்தியை விட்டுப்பிரிய நளனுக்கு எண்ணம் உண்டாக்கித் தமயந்தி உணராது பிரிய, ஆடையைக்கத்தரிக்கக் கருவியாக விளங்கிச் சபதப்படி தமயந்தியைப் பிரித்து வைத்தனன். விழித்தெழுந்த தமயந்தி கணவனைக் காணாது, வருந்தித் தேடிச் செல்லுகையில், தன்னைப் பாம்பினின்றுங் காத்துமோகித்த வேடனைக் கற்பால் தகித்து விட்டுச் சிற்றன்னையாகிய சேதிநாட்டரசிபாற் சென்று பின் குண்டினபுரி அடைந்தனள்:—

கலிநீங்குகாண்டம்:—தமயந்தியைப் பிரிந்த நளன் தான்சென்ற காட்டில் தீவாய்ப்பட்ட கார்க்கோடகனை மீட்டு, அது கடிக்கச் சுயரூபமாறி, இயற்கை வடிவம் அடையவேண்டியகாலத்து உதவும் இரண்டு ஆடையைப் பாம்பிடம்பெற்று, வாகுகனென்ற பெயருடன் ருதுபர்ணனிடம் தேர்ப்பாகனுயமர்ந்து, தமயந்தி 'இரண்டாம் சுயம்வரத்தை' விரும்பிச் சென்ற ருதுபர்ணனிடம் வழியில் 'அக்ஷஹிருதயம்' என்ற வித்தையைத் தான்கற்று, அவனுக்கு 'அஸ்வஹிருதயம்' என்ற வித்தையைக் கற்பித்த காலத்தில் கலியும் நீங்கினன். வீமன் உபாயப்படி வந்த ருதுபர்ணனது பாகனைத் தமயந்தி பலவாறு சோதித்து, நளனென்றே கண்டு, பிதாவுக்கறிவிக்க, அவர் விருப்பின்படி நளன் பாம்பளித்த ஆடையைப் போர்த்துக்கொள்ளச் சுயவடிவம் எய்தினன். கலியும் வேண்டும் வரமளித்து வாழ்த்தினன். பின், மனைவி மக்களுடன் மாவிந்தநகர் சென்று, புஷ்கரனைச் சூதில்வென்று, தனது நாட்டைப்பெற்று, நலம் பெற்று வாழ்ந்தனன் என்பதாம்.

நளன் தமயந்தி இவர்கள் பூர்வவரலாறு

அற்புதகிரி என்ற ஓர் மலைச்சாரலில் ஆகுகன் என்ற வேடனும், அவன் மனைவி ஆகுகி யென்பாளும், பக்கத்திலுள்ள கோயிலொன்றில் ஈஸ்வரனை முறையே உட்புறத்தொருவரும், வெளிப்புறத்தொருவருமாகப் பிரதிதினமும் பக்தியுடன் வந்தனை வழிபாடுகள் செய்து வாழ்ந்து வந்தார்கள். ஓர் நாள் சூரியாஸ்தமன காலத்தில், அவ்வழியே வந்து கோயிலைக் கண்டு நின்ற யோகீஸ்வரரொருவரை வெளிப்பக்கத்து நின்று கொண்டிருந்த ஆகுகி கண்டதும் நமஸ்கரித்துத் "தேவரீர் எங்குச் செல்கின்றவர்கள்; பொழுது அஸ்தமித்துவிட்டபடியால் இரவு இங்குத் தங்கிச் செல்லுக; எனது நாயகனும்

ஆலயத்துள் வீற்றிருக்கின்றனர்” என்று இன்மொழி கூறிஉபசாரணை செய்தும், யோகி பெண்களுடன் பேசுதல் தகாதென்று நினைத்தவராய், ஆகுகி கேட்டவற்றி லொன்றுக்கும் பதிலுரையாமல் மௌனமாய் நின்றார். இதற்குள் கோயிலுள்ளிருந்து வெளியே வந்த வேடன் சுவாமியைக் கண்டதும் பஞ்சாங்க அஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து, “தாங்கள் எங்குப் போக வேண்டியவர்கள்? தங்களுக்குத் தேவை யாவை?” என்று நல்வார்த்தை கூறியதின்பேரில் “அப்பா! நான் ஓர் யாத்திரீகன் (பரதேசி) எனக்கு வேண்டுவ தொன்றுமில்லை. இரவு தங்கிச் செல்லவேண்டும். படுத்தற்கு இடங்கொடுத்தாற் போதுமானது” என்று மறுமொழி கூறினார். இதைக்கேட்ட ஆகுகன் முனிவரைக் கோயிலுட் சயனித்துக்கொள்ளச்சொல்லித்தானும் தன் மனைவியும் வெளிப்புறத்திருப்பதாக நிச்சயித்திருப்பதை யறிந்த யோகி பெண்பிள்ளை இராக்காலத்து வெளியேதங்கியிருத்தல் சரியன்றென்ன வேடன் அங்ஙனமே ஆகுகியையும் அவ்வாலயத் துட்புறத்துள்ள தனது குடிசையிலேனும் புறத்து இருக்க வைத்துத் தான் வேடர்க்குரிய வில் அம்பு முதலியவை கொண்டு வெளி நின்று விழித்துக் காத்துக் கொண்டிருந்தான். வெளியில் நின்ற வேடனை நள்ளிருளில் ஓர் பெரும் புலி வந்து பக்ஷித்துவிட்டது. பொழுது விடிந்ததும், வேடனிறந்துபட்டிருக்கக் கண்ட முனிவர் தம்பொருட்டு வேடன் உயிர் இழக்கப் பெற்றனமே என்று அநுதாபப் படுகையில் ஆகுகி தன் கணவன் தக்க முனிச் சிரேஷ்டராகிய தங்களுக் குதவி செய்து, பிராணனை விட்டிருப்பதால் நற்கதியடைவார் என்று சமாதானங் கூறிச் சந்தோஷத்துடன் தானும் அக்கினிப் பிரவேசஞ் செய்து உயிர்விட யத்தனித்தாள். அப்பொழுது பரமேஸ்வரன் பிரத்தியக்ஷமாய்த் தோன்றி, “நீயும், உனது கணவனும் செய்த நல்வினையால் அடுத்த ஜன்மத்தில் நீ விதர்ப்ப தேசத்தரசன் புத்திரியாகத் தோன்றுவாய். உனதுகணவன் நிஷததேச ராஜகுமாரனகத் தோன்றுவன். இப்பிறப்பில் உங்கள் கூட்டுறவைப் பிரித்த இந்த யோகி மறுபிறப்பில் அன்னப்பறவையாக வந்து, தூது சென்று, உங்களிருவரையும்கூட்டி வைப்பான். அதன்மேல் உங்கட்கு முத்தியே. அதாவது வேறு ஜனனமில்லை” என்று அருளிய வண்ணமே அம்மூவரும் முறையே நளன், தமயந்தி, அன்னம் எனத் தோன்றினர் என்பதாம்.

நளவெண்பா.

நளனது வெண்பா என விரியும்; ஆறும் வேற்றுமைத்தொகை. நளனைப்பற்றிய வெண்பா என விரிந்தால், இரண்டாம் வேற்றுமை உருபும், பயனும் உடன்தொக்கதொகை. நளனது சரித்திர விஷயமான வெண்பாவாலான நூல் என்பது கருத்து. வெண்பா - தமிழ் மொழியில் நாற்பாவில்முதற்பா; இது இங்கே அப்பாவாலாகிய நூலுக்குக்கருவியாகு பெயர். நளன் என்ற பெயர் அவனது வரலாற்றை உணர்த்தி நின்றது. நளன்-வெண்பா-நளவெண்பா: நிலைமொழி உயர்திணைப் பெயரின் ஈறு கெட்டது. "நன்னூல் "பொதுப் பெயருயர்திணை" என்ற சூத்திரத்தில் 'சிலவிகாரமா முயர்திணை" என்பது விதி.

நளன்—இவன் கிருதயுகத்தில் பரதகண்டத்தில் மாவிந்த நகரத்தில் அரசு செலுத்தி வந்தவன்; சந்திரகுலத்து வீரசேனன் என்னும் அரசனுக்குப் புத்திரனாய்த் தோன்றியவன்; பெருமையிற் சிறந்த * சக்ரவர்த்தி; ||முதலெழு வள்ளல்களில் ஒருவன்; விதர்ப்பதேசத்துக் குண்டினபுரத்து அரசு செலுத்திய சூரியகுலத்து வீமன் என்பான் குமாரத்தியாகிய கற்பினிற் சிறந்த தமயந்தி என்பாளை மணஞ் செய்து கொண்டோன்.

இந்நூல் சுயம்வரகாண்டம், கலிதொடர் காண்டம், கலிநீங்கு காண்டம் என்ற மூன்று காண்டங்களாகப் பகுக்கப்பட்டு, ஏறக்குறைய 400 செய்யுட்களை உடையது. முதனூல், வழிநூல், சார்புநூல் என்ற மூத்திற நூல்களுள் இது வழிநூல் வகையைச் சார்ந்தது. ஆகையால் முதனூலுக்கும், இந்நூலுக்கும் சிற்சில இடங்களில் பேதங்கள் காணப்படும். இதன் முதனூல் வியாசமுனிவர் செய்துள்ள வடமொழி மஹாபாரதத்துள் ஆரணிய பருவத்துள் கூறப்பட்ட 'நளோபாக்கியான பருவம்', உபாக்கியானம்—கிளைக்

---

* "அரிச்சந்திரன், நளன், முசுகுந்தன், புருகுற்சன், புரூரவன், கார்த்தவீரியன்" என்றிவர் அறுவகைச் சக்ரவர்த்திகள்.

|| செம்பியன், காரி, விராடன், நிருதி, துந்துமாரி, சகரன், நளன், முதலெழுவள்ளல்கள்.

கதை. பாண்டவர் சரிதையிற் கூறும் ஓர் கிளைக்கதை யாகையால் இச்சரித்திரம் முதற் சரித்திரம் ஆகாது.

பாண்டவர்கள் வனவாசத்தில் வருந்திக் கொண்டிருக்குங்கால் அவரிடத்து வந்த வியாசரை நோக்கித் தருமபுத்திரர் "எங்களைப் போல் சூதாடிப் பார்முழுதும் தோற்றுக் காட்டில் வருந்திய அரசர்களுமுளரோ" என்று வினவ, அதற்கு அங்ஙனம் வருந்திய அரசரும் உளரென நளச்சரித்திரத்தை வியாசர் அவர்கட்குக் கூறினரென்பது ஈண்டு அறியத்தக்கது.

நளச்சரித்திரம் கூறும் நைடதம் என்னும் தமிழ் நூலும் ஒன்றுண்டு. அது பன்னூற்றாண்டுகட்கு முன்னர்ப் பாண்டி நாட்டின் ஓர் பகுதியில் அரசு செலுத்தி இருந்த அதிவீரராமபாண்டியன் என்னும் அரசர் பெருந்தகையால் வடமொழி நைஷதத்தினின்றும் மொழி பெயர்த்து, விருத்தப்பாக்களால் சொன்னயம், பொருணயங்களுடன் பாடப்பெற்றுளது

காப்பு.

1. நேசரிதங் கூர நிலவலயந் தாங்குநளன்
மாசரிதங் கூற வருந்துணையாப்—பேசரிய
மாமகிழ்மா றன்புகழாம் வண்டமிழ்வே தம்விரித்த
மாமகிழ்மா றன்றாள் மலர்.

(இதன்பொருள்.) நேசர்-தன்னிடத்து அன்புடையோர்களுக்கு, இதம் கூர - நன்மை மிகும்படி, நிலம் வலயம் - பூமண்டலத்தை, தாங்கும் நளன் - (தோளில்) தாங்கிக் காக்கின்ற நளமகா ராஜனது, மாசரிதம் - பெருமை பொருந்திய சரித்திரத்தை, கூற - செய்யுள் ரூபமாகச் சொல்லுதற்கு, பேச அரிய (அனந்த கல்யாணகுணம், செயல்களை யாவராலும்) சொல்ல முடியாத, மாமகிழ் - லட்சுமிதேவி சந்தோஷிக்கின்ற, மால்தன் புகழ் ஆம்-திருமாலினது கீர்த்தியாகிய, வண் தமிழ் வேதம் - வளப்பமிக்க தமிழ் வேதமாகிய திருவாய் மொழியை, விரித்த - (உலகினர்க்கு) வெளியிட்டருளிய, மாமகிழ் - பெருமைமிக்க மகிழம்பூமாலையை அணிந்த, மாறன் தாள் மலர் - நம்மாழ்வாருடைய திருவடித் தாமரை மலர்கள், துணை ஆ(க) வரும் - உதவி புரிவனவாக வரும்; (என்றவாறு.)

சரிதம் கூறத்தாள் மலர் துணையாவரும் என்க. நேசர் - நேசம் என்னும் பண்படியாகப் பிறந்த பலர்பாற் படர்க்கைப்பெயர். கூர-கூர் என்னும் மிகுதிப்பொருளைக் குறிக்கும் உரிச்சொல் அடியாகப் பிறந்த செயவெனெச்சம் காரியப்பொருட்டு. நிலவலயம் - இருபெயரொட்டுப்பண்புத் தொகை நிலைத்தொடர். நிலம் + வலயம் நிலைமொழியீற்று மகரம் (மவ்வீறு ஒற்றொழிந்து) என்னும் சூத்திரப்படி கெட்

டது. பூமியாகிய வட்டம் - வரும்-செய்யும் என்னும் முற்று; பலர் பால் ஒழிந்த மற்றை நான்கு பாலுக்கும் வருவது. துணையாக - எச்ச விற்றுக்(க) தொகுத்தல் விகாரம். பேசரிய - பேச + அரிய - பேசுதற்கு அரிய என எதிர்காகால வினையெச்சத்தொடர். அரிய-அருமை என்னும் பண்படியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம். 3 - ம் அடி மகிழ் - வினைத்தொகை. தாள் மலர் - உருவகம். மகிழ் - முதலாகு பெயராய் மாலையை உணர்த்தி நிற்றலான் இருமடி யாகுபெயர்.

நிலவலயம் தாங்குதலாவது-தோள் வலியைக் கொண்டு பகை வரை வென்று, குடிகளை அறநெறி வழுவாது காப்பாற்றுதலாம். நேசரிதங்கூர, மாசரிதங்கூற எனக்கொண்டு நேசர்கள் இன்பம் அடையும்படியாக மாசரிதத்தைக் கூறுவதற்கு எனவும் பொருள் கொள்ளலாம். இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்ற நான்கு வேதங்களின் சாரமாகத் திருவிருத்தம், திருவாசிரியம், திருவாய்மொழி, பெரிய திருவந்தாதி என்ற நான்கு பிரபந்தங்களையும் பெற்ற திருவாய்மொழி தமிழ்வேதம் எனப்பட்டது. தமிழ் மக்களும் வேதார்த்தங்களை உணர்ந்து, அஞ்ஞானம் ஒழிந்து, வீடெய்தும் ஞானத்தைப் பெறச்செய்தனராதலின், வேதம் விரித்த என்றார்.

நம்மாழ்வார் அழுதல், பால்குடித்தல் முதலிய லோக வியாபாரமின்றி, உலக நடைக்கும், வலிய வினைகளுக்கும் மாறாக இருந்ததினால் மாறன் எனப்பட்டார். இவர் குழந்தைகளைப் பிறந்தவுடன் தனது பரிசத்தால் அஞ்ஞானத்துக்குள்ளாக்கி, அழுதல், அரற்றுதல், முதலியன செய்யும்படி தூண்டுந் தன்மையதான சடம் என்னும் வாயுவை உங்காரத்தால் ஒறுத்து, ஓட்டியொழித்தவராகையால் சடகோபர் எனப்படுவர். பராங்குசன், திருநாவீறுடைய பிரான், வகுளப்பிரான், குருகைப்பிரான் முதலிய வேறு பெயர்களாலும் இவர் அழைக்கப்படுவர்.

இப்பாட்டில் தனிச்சொல் முதல் மற்ஒருரு பாடம்

......................—ஈசன்

கரியா னனத்தான் கருதுபுகழ் பூண்ட
கரியா னனத்தான் கழல்

(இ-ள்) ஈசன் சிவபெருமானும், கரியான்-விஷ்ணுவும், அ(ன்)னத்தான் - பிரமதேவனும், ஆகிய மூவரும், கருது - சிந்திக்கின்ற, புகழ்பூண்ட-கீர்த்தியணிந்துள்ள, கரி ஆனனத்தான்-யானைமுகத்தையுடைய விநாயகக் கடவுளது, கழல்-பாதம்......துணையாகவரும்; (எ-று.)

கரியான்-கருமை என்னும் பண்பினடியாகப் பிறந்த குறிப்பு வினையாலணையும் பெயர். அனத்தான-தொகுத்தல் விகாரம், அன்ன

வாகனத்தையுடைய பிரமன். கருது புகழ்-வினைத்தொகை. கரியானனம் வடமொழித்தொடர்; ஆனனம்-முகம், கரி-கரத்தை (துதிக்கையை) யுடையது; கருமை நிறமுடையது கரியென்பாரு முளர். கழல் வீரகண்டாமணி என்னும் ஓர் ஆபரணம். அதனை அணிந்துள்ள, பாதத்திற்கு ஆகுபெயர். மூவரும் என்னும் செவ்வெண்ணின் தொகையோடு முற்றும்மை விகாரத்தால் தொக்கது.

2. ஆதித் தனிக்கோலம் ஆனான் அடியவற்காச்
சோதித் திருத்தூணிற் றோன்றினான்—வேதத்தின்
முன்னின்றான் வேழ முதலே எனவழைப்ப
என்னென்றான் எங்கட் கிறை.

(இ-ள்) ஆதி-முதன்மையான, தனிக்கோலம் ஆனான்-ஒப்பற்ற வராக அவதாரம் எடுத்தவனும், அடியவற்கு ஆ (க)-தன்னடியானான பிரகலாதாழ்வானுக்காக, சோதி - ஒளிபொருந்திய, திருத்தூணில் தோன்றினான்-அழகிய தூணிடத்தில் அவதரித்தவனும், வேதத்தின் முன் - வேதங்களுக்கு முதலாகிய பிரணவத்தில், நின்றான் - பொருளாக நின்றவனும், வேழம்-கஜேந்திரன் என்னும் யானை, முதலே என ஆதிகாரணனே என்று, அழைப்ப - ஓலமிட்டு அழைக்க, என் என்றான்-என்னவென்று, வந்து துயர் தீர்த்தவனுமாகிய திருமால், எங்கட்கு இறை-எங்களுக்குத் தெய்வமாகும்.

எங்கட்கு என்று உளப்படுத்தியது, தம்முன்னோரையும் குலத்தாரையும் உட்கொண்டு. அடியவர்க்குறும் துயர்நீக்கி அவர் வேண்டியாங்கு உதவும் தன்மையினை யுடைய தலைவனைத் தாமும் தெய்வமாகக் கொண்டபடியால் தாம் விரும்பியதும் நிறைவேறும் என்பார் கோலமானான், தூணிற் தோன்றினான், வேழமுன்னின்றான் என்ற வரலாற்றைக் குறிப்பித்தார். பிரணவமந்திரத்தின் விரிவே வேதமாதலால் பிரணவம் வேதத்தின் முன் எனப்பட்டது; வேதத்தின் முன் ஆறும் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. ஆனான், தோன்றினான், நின்றான், என்றான் என்பன வினையாலணையும் பெயர்கள். அழைப்ப செயவெ னெச்சம் காரியப் பொருட்டு. முதல், இறை-ஆகுபெயர். என்-எவன் என்னும் வினவடியாகப் பிறந்த குறிப்புமுற்று. தூணின்-இன் ஐந்தாம் வேற்றுமை நீக்கப் பொருளது. ஆ-ஆக என்பதின் தொகுத்தல். ஆதி, கோலம், சோதி, வேதம் என்பன வடசொற்கள். சோதி - ஜோதி என்னும் வடசொல்லின் விகாரம்.

வராக அவதாரக்கதை:— ஒரு காலத்தில் இரணியாக்கதன் என்னும் அசுரன் பூமியைப் பாயாகச் சுருட்டிக் கொண்டு, கடலில் மூழ்கி, ஒளித்துக்கொள்ளத் தேவர் முதலியோர் வேண்டுகோட்படி

திருமால் வராகாவதார மெடுத்து, மண்ணிடந்து, சென்று, தன் வக்கிர தந்தக் கோட்டினால் குத்தி, அவ்வசுரனைக் கொன்று, பூமியைக் கோட்டிலேந்திக் கொணர்ந்து பழையபடி விரித்தருளின னென்பதாம்.

திருமால் தூணில் தோன்றிய கதை:—தேவர் முதலிய யாவராலும் கொல்லுதற்கரிய வரம்பெற்றவனும், இரணியாக்கதன் உடன்பிறந்தவனுமான இரணியன் திரிலோக சஞ்சாரியாய்த் தேவர் முதலியோருக்குத் தீங்குவிளைவித்துத் தன்னை கடவுளாகத் தன்னுமஞ் சொல்லி வணங்கும்படிசெய்து வர அவனுடையகுமாரனை பிரகலாதன் என்பவன் சிறுவயது தொட்டே திருமாலடியனுய்த் தந்தையின் கட்டளைப்படி அவன் பெயரைச் சொல்லிக் கல்வி கற்காமல் நாராயண மந்திரத்தை உச்சரித்துவர, அது கண்டு வெகுண்ட இரணியன் பிரகலாதனை எவ்விதத்திலும் தன் வசப்படுத்த முயன்றும் பயனில்லாமல் அவனைக் கொல்வதற்குப் பலவித உபாயந் தேடியும் முடியாமல் ஒருநாள் மாலைப்போதில் பிரகலாதனை அழைத்து நீ சொல்லும் நாராயணன் என்பவன் எங்கிருக்கின்றான் காண்பி என வினவ, அதற்கு அவன் பிள்ளை 'தூணிலும் உளன்; துரும்பிலும் உளன்; நின் சொல்லினுமுளன்' என்று விடையளிக்க, உடனே இரணியன் இங்குளனோ வென்று தனக்கு எதிரில் நின்ற தூணில் ஓங்கி அறைந்தனன். அதினின்றும் திருமால் மனிதவடிவமும், சிங்கரூபமுங் கலந்த நரசிம்ம மூர்த்தியாய்த் தோன்றி, இரணியனைத் தூக்கி மடிமீதிருத்தித் தனது நகமாகிய வாளால் அவனது மார்பைப் பிளந்து அழித்திட்டுப் பிரகலாதனுக்கு அருள் புரிந்தன னென்பதாம்.

வேழம் அழைத்த கதை:— ஓர் யானை முற்பிறப்பின் தொடர்ச்சியினால் உண்டாகிய விஷ்ணு பக்தியால் தினந்தோறும் ஆயிரம் தாமரை மலர் கொண்டு, திருமாலை அருச்சித்துவருகையில், ஒருநாள் வழக்கம் போல் தடாகத்திலிறங்கி, மலர் பறிக்குங்கால், அக்குளத்திலுள்ள முதலை ஒன்று அதன் காலைக் கௌவிக்கொள்ள அக் கஜேந்திர ஆழ்வான் ''ஆதிமூலமே'' என்று ஓலமிடத் திருமால் கருடவாகன மேற்கொண்டு, அங்கு எழுந்தருளித் தனது சக்ராயுதத்தைப் பிரயோகித்து, அம்முதலையைக் கொன்று இவ்யானையைக் காத்தருளினன் என்பதாம்.

3 கலாப மயிலிருந்த பாகத்தார் கங்கை
உலாவு சடைமே லுறையும் — நிலாவை
வழியவார்த் தாலன்ன மாநீற்றார் நாகம்
கழியவார்த் தார்நமக்கோர் காப்பு.

(இ-ள்) கலாபம் மயில்-தோகையையுடைய மயில்போன்ற சாயலுடைய உமாதேவியார், இருந்த-தங்கியிருக்கப்பெற்ற, பாகத்தார் - இடப் பாகத்தை யுடையவரும், கங்கை உலாவு-கங்காநதி ததும்பிக்

கொண்டிருக்கின்ற, சடைமேல்-தமது சடைமுடியில், உறையும்-இருக்கின்ற, நிலாவை-சந்திரனது ஒளியை, வழிய-(தமது மேனியில்) வழியும்படி, வார்த்தால் அன்ன-சொரிந்தாற் போன்ற, மாநீற்றார்-பெருமை பொருந்திய விபூதியைத் தரித்தவரும், நாகம்-பாம்புகளை, கழிய-மிகுதியாக, ஆர்த்தார்-ஆபரணமாகக் கட்டினவரும் ஆன சிவ பெருமான் நமக்கு ஓர்காப்பு-நமக்குச் சிறந்த ஒரு காவலாவர்; (எ-று)

சிவபெருமான் திருமேனி முழுதும் விபூதிமயமாய் இருத்தலின், 'நிலவை வழியவார்த்தாலன்னமா நீற்றார்' என்றார்; நிலா வெண்ணிறமானது. கலாபம்-மயிலிறகு, மயில், பெண்களுக்குச் சாயலால் உவமை. பாகத்தார், நீற்றார், ஆர்த்தார் இவற்றில் ஆர்விகுதி உயர்வுப் பன்மை. பாகத்தார் - அர்த்தநாரீச்சுரர். வார்த்தால் - ஆல் ஈற்று வினையெச்சம். அன்ன இடைச் சொல்லடியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம். நீற்றார்-நீறு + ஆர் நெடிற்றொடர்க் குற்றியலுகரம் தன்னொற்றிரட்டியது. (நன் - உயிர் சூ 38) கழிய-கழி என்னும் உரிச்சொல் அடியாகப் பிறந்த குறிப்பு வினையெச்சம். காப்பு - காக்கின்ற கடவுளுக்குத் தொழிலாகு பெயர். கலாபம், பாகம், வடசொல். கங்கா, சடா என்ற வடசொற்கள் கங்கை சடை என விகாரப்பட்டு வந்தன.

மயிலிருந்த பாகத்தார் என்றதன் விவரம்:—ஒருகாலத்துக் கைலாயத்தில் சிவபெருமானும், உமாதேவியும் ஓராசனத்து வீற்றிருக்குங்கால், பிருங்கியென்னும் முனிவர் சிவபெருமானை மாத்திரம் வலஞ்செய்ய, வெண்ணி, ஓர் வண்டுருபமாய் ஆசனத்தைத் துளைத்துச் சிவபெருமானை மாத்திரம் வலஞ்செய்து செல்வதைக் கண்ட பார்வதி தேவி பதியை நோக்கி, முனிவர் என்னைப் பிரதக்ஷிணம் செய்யாமைக்குக் காரணம் யாதென்று வினவச் சிவபெருமான் இம்மை மறுமைப் பயன்களைப் பெற விரும்புகிறவர்கள் உன்னையும், முத்திபெற விரும்புகிறவர்கள் என்னையும் வணங்குவார்; என்று சொல்ல, அது கேட்ட தேவி சிவபெருமானைப் பிரியாமலிருக்கும்படி தவஞ்செய்து வாம பாகத்தைப் பெற்றனள் என்பதாம்.

சிவன் கங்கை யணிந்த காரணம்:— அஸ்வமேதயாகத்தின் பொருட்டு அனுப்பிய குதிரையைத் தேடிப் பாதாள லோகத்தில் சென்று கபிலர் சாபத்தால் எரிக்கப்பட்டு நற்கதியிழந்த தனது மூதாதைகளான அறுபதினாயிரம் சகர புத்திரர்களையும் ஈடேற்றும் வண்ணம் பகீரதன் அருந்தவம் புரிந்து, கங்காநதியைத் தேவலோகத்திலிருந்து, கொண்டுவருகையில், அதிவேகமாக வருகின்ற கங்கையைப் பூமி தாங்கமுடியாதெனப் பகீரதன் சிவபெருமானைப் பிரார்த்தித்து, வேண்ட, அவன் கேட்டபடி, அப்பெருமான் அந்நதியைத் தன் முடியிலேற்றிச் சிறிது சிறிதாகப் பூமியின்கண் வரவிட்டனனென்பதாம்.

அவையடக்கம்.

[அதாவது நூலாசிரியன் தனது இனிய, பணிவான மொழிகளால் அவையோர் நா அடக்கப்படுவதாகக் கூறுவது. அன்றி, அவ்வினிய மொழிகளால் அவையோர் நா அடங்க ஆசிரியன் தன் நா அடங்குவதாகக் கூறுவது. அவை, நா என்பன இட ஆகுபெயராய் அவையோரையும், மொழியையும் உணர்த்தும். அடக்கம் - முன்னது அடக்கு-பகுதி, அம் செயப்படுபொருளுணர்த்தும் விகுதி. பின்னது அடங்கு-பகுதி, அம் வினைமுதற்பொருள் விகுதி. அடங்கு என்பது முதலில் அடக்கு என மெல்லொற்று வல்லொற்றாய்ப் பிறவினைப் பகுதியாயிற்று.]

---

4. வெந்தறுகண் வேழத்தை வேரிக் கமலத்தின்
தந்துவினாற் கட்டச் சமைவதொக்கும்—பைந்தொடையில்
தேன்பாடும் தார்நளன்றன் தெய்வத் திருக்கதையை
யான்பாட லுற்ற விது.

(இ-ள்) பைந்தொடையில்-பசுமையாகிய மலர்களில், தேன் பாடும்-வண்டுகள் இசை பாடுகின்ற, தார்நளன் தன் - மாலையையணிந்த நள மகாராசனது, தெய்வம் திருக்கதையை - தெய்வத்தன்மை பொருந்திய அழகிய சரித்திரத்தை, யான்பாடல் உற்ற இது - (அறியாதவனாகிய) நான்பாடத் தொடங்கியதாகிய இச்செய்கை, வெம்தறுகண் - கொடிய அஞ்சாமைத் தன்மையுடைய, வேழத்தை - யானையை, வேரிக்கமலத்தின் தந்துவினால் - வாசனை பொருந்திய தாமரைத்(தண்டினது) நூலினால், கட்ட - பிணிப்பதற்கு, சமைவது ஒக்கும் - முயல்வதை ஒத்திருக்கும்; (எ-று.)

எனவே இக்கதையைச் செய்ததற்கு அருமை கூறியவாறாம். உவமையால் உபமேயத்திற்குப் பொருள் தந்துரைக்கப்பட்டது. சமைவது - தொழிற்பெயர். தந்துவினால் - தந்து + இன் + ஆல், தந்து வடமொழியாதலால் "உயிர்வரின் உக்குறள் விட்டோடும்" என்ற விதியை ஏற்காது இ, ஈ ஐ வழி யவ்வும், ஏனையுயிர்வழி வவ்வும், என்ற (நன்-உயிர்-12) பொது விதியை ஏற்று வகர உடம்படுமெய் பெற்றது. பசுமை + தொடை - பைந்தொடை ஈறுபோதல் என்ற சூத்திரவிதிப்படி, ஈற்றுமைகெட்டு, அடி அகரம் ஐயாகி, இனையவும் என்பதனால் சகரஉகரம் கெட்டு, இனவெழுத்து மிகுந்தது. தொடை-தொடுக்கப்படுவது தொடு - பகுதி, ஐ செயப்படு பொருள் விகுதி. தறுகண் - ஒருசொல், அஞ்சாமை. நளன் தன் - தன் சாரியை, நளன் கதைக்குத் தெய்வத்தன்மையாவது கேட்போர்களைப் பரிசுத்தராக்குதலும், கலிபுருடன் சேராமலிருத்தலுமாம். இதனை "ஆதலால் இந்தப் புண்ணியன் சரிதம் ஆர்வுறக்கேட்டுள்ளோர் தமக்கும், தீதறப்

புகன்றோர் தமக்கு மெவ்வரமுஞ் சித்தியாம் கலிதொடாதென்றே'' என்ற நல்லாப்பிள்ளை பாரதச் செய்யுளாலும் உணர்க. கமலம், தந்து வடசொல், தெய்வம், கதை வடசொற்றிரிபு.

சிறப்புப்பாயிரம்.

[அதாவது நூலுக்குச் சிறப்பாகத்தனியே புறத்துக் கூறப்பட்டிருப்பது.] சிறப்புப்பாயிரத்து இலக்கணமாவது "ஆக்கியோன் பெயரே, வழியே, யெல்லை, நூற்பெயர், யாப்பே, நுதலியபொருளே, கேட்போர் பயனோடா யெண்பொருளும் வாய்ப்பக்காட்டல் பாயிரத்தியல்பே'' எனவும் ''காலங்களனே காரணமென்றிம் மூவகையேற்றி மொழிநருமுளரே'' எனவும் கூறியபடி, நூலைச் செய்தவனது பெயரும், நூல்வந்த வழியும், நூல்வழங்கும் நிலத்தின் எல்லையும், நூலின் பெயரும், தொகுத்தல் முதலிய நூல் யாப்பும், கேட்கத்தகும் அதிகாரிகளும், நூலின் பயனும், நூல் செய்த காலமும், நூலரங்கேறிய இடமும், நூல் செய்ததற்குக் காரணமும் ஆகிய பதினொன்றும், விளங்கும்படியாக உணர்த்தலாம்.]

5. பாரார் நிடதப் பதிநளன்சீர் வெண்பாவால்
பேரார் புகழேந்தி பேசினன்—தாரார்
செழியனையும் சென்னியையும் சேரத் திறைகோள்
மொழியின் சுவையே முதிர்ந்து.

(இ-ள்) பேர் ஆர் - கீர்த்திவாய்ந்த, புகழேந்தி - புகழேந்திப் புலவர், தார் ஆர் - மாலையை அணிந்த, செழியனையும் - பாண்டியனையும், சென்னியையும் சோழனையும், சேர - ஒருங்குசேர, திறைகொள் - கப்பம் வாங்குகின்ற, மொழியின் சுவையே-(தமது) சொல்லின் இனிமையே, முதிர்ந்து - முதிர்ச்சிபெற, பார் ஆர் - பூமியிற் சிறந்த, நிடத பதி-நிடததேசத்து அரசனை, நளன் - நளமகாராசனது, சீர்-சிறப்புப்பொருந்திய சரித்திரத்தை, வெண்பாவால் - வெண்பாவென்னும் முதற்பாவால், பேசினன் - பாடினார்; (எ-று)

புகழேந்தி சுவைமுதிர நளன்சீர் வெண்பாவாற் பேசினன் என இயையும். புகழேந்தியார் தம் இனிய சொற் சாதுரியத்தால் பாண்டியனையும், சோழனையும் தம் வசப்படுத்தி, அவர்களிடத்துப் பலவரிசைகளையும் பெற்று வாழ்ந்தனராதலின் செழியனையும், சென்னியையும் சேரத்திறைகொள் மொழியின் சுவையே என்றார். இதனால் சோழ பாண்டியர் இருவரும் இப் புலவரிடத்துக்கொண்ட நன்மதிப்பு வெளியாம். பரிசுகள் திறைப் பொருளாகச் சொல்லப்பட்டன. தாரார் என்பதில் பாண்டியனுக்கு வேப்பமாலையையும், சோழனுக்கு ஆத்தி மாலையையும் கொள்க. வெண்பாவிற் புகழேந்தி எனக்

சிறப்பித்து ஓதப்படுவராதலால் இவர் மொழியின் சுவையே முதிர்ந்து பேசினார் எனப்பட்டது.

ஆர் வினைத்தொகை. சீர் - கதைக்குப் பண்பாகு பெயர். பேர் - பெயர் என்பதன் மரூஉ. புழேந்தி - புகழையணிந்தவன் எனப் பொருள்படும். ஏந்து - பகுதி, இ-; கருத்தாப்பொருள் விகுதி. மொழியின் சுவை ஆறும் வேற்றுமைத் தொகை, இன் சாரியை, மொழி + இன்சுவை எனக்கொண்டு மொழியினது இனிமையாகிய சுவை எனப் பண்புத்தொகை யாக்குதலும் ஒன்று. முதிர-முதிர்ந்து எனத்திரிந்தது; இது எச்சத்திரிபு:— எச்சத்திரிபாவது ஒருவினையெச்சம் மற்றொரு வினையெச்சப் பொருளைத் தந்து நிற்றல். ஏகாரம் சிறப்புப் பொருளில் வந்தது. நிஷதபதி-வடசொல். நிடதம் என்னும் மலையின் பேர் அது இருக்கும் தேசத்தை உணர்த்தி நின்றது. நிடதமலை மேருமலையின் தெற்கே யுள்ள நிடதம், ஏமகூடம், மந்தாரம் என்னும் மூவகை மலைகளுள் ஒன்று.

சுயம்வரகாண்டம்.

தமயந்தியின் சுயம்வரமணத்தைக்கூறும் காண்டம் என்பது பொருள். காண்டம் நூலின்பெரும்பிரிவு. சுயம்வரம்-ஸ்வயம்வரம் என்ற வடசொல்லின் விகாரம். சுயம்வரமாவது அரசர் பலர் கூடிய ஒரு பெரிய சபையினிடத்து ஓர் அரசகன்னிகை சென்று, தான் விரும்பிய அரசனொருவனை நாயகனாக அடைதல். ஸ்வயம்-தான், வரம்-வரித்தல், இது சயமரம் என்றும் வழங்கும்.

நூல்.

[நாடிழந்த தருமபுத்திரர் வனத்தில் வருந்தியிருத்தல்.]

1. பாண்டவரின் முன்தோன்றல் பார்முழுதும் தோற்றொருநாள்
ஆண்டகையே தூதுவனாய்ச் சென்றவனி—வேண்ட
மறுத்தா னிருந்தானை மண்ணோடும்போய் மாளப்
பொறுத்தா னிருந்தான் புலர்ந்து.

(இ-ள்) பார்முழுதும்-தன்னுடைய நாடுமுழுதையும், தோற்று-(சூதாட்டத்தால்) தோற்றுவிட்டு, ஆண்தகையே-ஆண்மைக் குணமுடைய கண்ணபிரானே, தூதுவனாய்ச் சென்று-தூதனைப்போய், அவனிவேண்ட- (குருநாடு) பூமியைவேண்டிக்கேட்க, மறுத்தான்-மறுத்தவனான துரியோதனன், இரும்தானை (யொடும்) - பெரியசேனையோடும், மண்ணொடும் போய்மாள - பூமியோடும்போய் இறக்கும்படி,

பொறுத்தான் - பொறுத்தவனாகிய, பாண்டவரில் - பாண்டு புத்திரர்களில், முன்தோன்றல் - முதற்புத்திரனாகிய (தருமபுத்திரன்), ஒரு நாள் - ஒரு தினத்தில், புலர்ந்து - முகம்வாடி, இருந்தான் - வனத்திலிருந்தான் ; (எ-று.)

பொறுத்தவனாகிய தோன்றல் ஒருநாள் புலர்ந்து இருந்தான் என இயைக்க. இனி, முன்தோன்றல் மறுத்தான் இருந்தானை மண்ணொடும் போய்மாளப் பொறுத்தவனாகி ஒரு நாள் புலர்ந்து இருந்தான் எனவுமாம். இப்பொருளில் பொறுத்தான் என்ற வினைமுற்று வினையெச்சமாகி நின்றது. தோன்றல் - தோன்றுதல் தொழிலாகு பெயராய் அரசனை உணர்த்திற்று. ஆண்தகை - பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. ஒடு என்னும் மூன்றும் வேற்றுமை உருபைத் தானை என்பதோடும் கூட்டுக. புலர்ந்து-செய்து என்னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம். மாள-செயவெனெச்சம் காரியப்பொருளில் வந்தது. பாண்டவர்-பாண்டுபுத்திரர், பாண்டு-வெண்மை, தத்திதாந்தநாமம். ஒரு நாள்—ஒன்றாகியநாள் பண்புத்தொகை. புலர்ந்து - இதன்முன் 'முகம்' சொல்லெச்சம்.

[வருந்தி இருந்த தரும புத்திரனை அரசர்கள்
கண்டு அளவளாவுதல்.]

2. நாட்டின்கண் வாழ்வைத் துறந்துபோய் நான்மறையோர்
ஈட்டங்கள் சூழ இருந்தானைக்—காட்டில்
பெருந்தகையைக் கண்டார்கள் பேரெழிற்றோள் வேந்தர்
வருந்தகைய ரெல்லாரும் வந்து.

(இ-ள்) பேர் எழில்-மிக்க அழகுவாய்ந்த, தோள்வேந்தர்-புயத்தையுடைய அரசர்களில், வரும் தகையர் எல்லாரும்-வந்துகாணுதற்குரிய தன்மையுடைய யாவரும், நாட்டின்கண் - நாட்டினிடத்து, வாழ்வை-சுகித் திருத்தலை, துறந்து-விட்டு, காட்டில் போய்-(காமிய) வனத்தில் போய், நால்மறையோர் - நான்கு வேதங்களையும் முற்றுமுணர்ந்த முனிவர்களது, ஈட்டங்கள்-கூட்டங்கள், சூழ-தன்னைச் சூழ்ந்திருக்கும்படி, இருந்தானை - இருந்தவனாகிய, பெருந்தகையை-பெருமைக் குணத்தையுடைய தருமபுத்திரனை, வந்து—அடைந்து, கண்டார்கள்-கண்டு வினவினார்கள்; (எ-று.)

நாட்டின்கண்-இன்சாரியை. வாழ்வு-ஆகுபெயராய் வாழ்க்கைக்குரிய பொருளை உணர்த்திற்று. துறத்தலாவது - பற்றற விடுதல். துற-பகுதி. நாட்டின்கண் வாழ்வைத் துறந்து, காட்டில் போய்....—இருந்தானை எனக் கூட்டுக. மறை-சில ஜாதியார், பெண்பாலர் ஓதவும், ஓதுவிக்கவும் கூடாதென மறுக்கப் படுதலின் மறையெனப் பட்டது. இனி, இறைவனுடைய குணம், செயல்,

பெருமை முதலியவற்றையும், ஆழ்ந்த கருத்துக்களையும், தன்னுள் மறைத்துக் கொண்டிருப்பதால் மறையெனினுமாம். இது வேதத்திற்குக் காரணக்குறி; மறு-பகுதி, ஐ-விகுதி. ஈட்டம் தொழிற்பெயர், ஈட்டு - பகுதி அம் - செயப்படுபொருளுணர்த்தும் விகுதி. மறையோர் ஈட்டம் ஆறும் வேற்றுமைத் தொகை. பெருந்தகை - பெருமை என்னும் பண்பினடியாகப் பிறந்த அன்மொழித் தொகை. இருந்தானை பெருந்தகையை - ஒரு பொருள்மேல் வந்த பெயரடுக்கு. வருந்தகையர் - அறிவு, குணம் செல்வம் உடல் ஆசாரம் முதலிய வளர்ந்துவருங் குணமுடையவர் எனவும் கூறலாம். தோளுக்குளழிலாவது - திரண்டு வளர்ந்து வீரக்குணத்தோடு இலங்குதல்.

[வியாசமுனிவர் தருமபுத்திரரைச் சந்தித்தல்.]

3. கோற்றவேற் றானைக் குருநாடன் பாலணைந்தான்
எற்றுநீர் ஞாலத் திருணீங்க—முற்றும்
வழிமுறையே வந்த மறையெல்லாந் தந்தான்
மொழிமுறையே கோத்த முனி.

(இ-ள்) எற்றும் - மோதுகின்ற, நீர் - கடலாற் சூழப்பட்ட, ஞாலத்து. பூமியிலுள்ளாரது, இருள் நீங்க - அஞ்ஞான இருள் நீங்கும்படி, முற்றும்-முழுமையும், வழி-குரு பரம்பரையில் முறையே வந்த-முறையாகவே உபதேசிக்கப் பட்டு வந்த, மறையெல்லாம் - வேதங்களை யெல்லாம், தந்தான்-சீடர்களுக்கு உபதேசித்தான், மொழி-வேதப் பொருள்களை, முறையே கோத்த-முறையாகவே திருத்திக் கோவைப்படுத்திய, முனி-வியாசமுனிவன், கொற்றம்வேல்-வெற்றி பொருந்திய வேலாயுதத்தை யேந்திய, தானை-சேனைகளையுடைய, குருநாடன்பால் - குருநாட்டுக்கு அதிபதியான தருமபுத்திரனிடத்து, அணைந்தான்-வந்துசேர்ந்தான்; (எ-று.)

எற்றுநீர் - வினைத்தொகை, அன்மொழித்தொகையாய்க் கடலையுணர்த்திற்று. ஞாலம் - இடவாகுபெயர், அத்து-சாரியை நீங்க - செய வென்னும் வாய்பாட்டு வினையெச்சம். வேல் என்று கூறப்பட்டிருப்பினும், உபலக்ஷணத்தால் பிறபடைக் கருவிகளுக்குங் கொள்க. உபலக்ஷணமாவது "ஒருமொழியொழிதன் னினங்கொளற்குரித்தே" (நன்.-பொது. சூ. 7.) வழி முறையே வருதலாவது - இறைவனருளாற் பிரமன் பெற்று, அவன் வசிட்டனுக்கும், அவன் பாராசரனுக்கும், அவன் தனக்கும் (வியாசனுக்கும்) உபதேசிக்கப் பெற்றது. மறு + ஐ + மறை; வேதத்திற்குக் காரணக்குறி.

உலகிற் காலகதியால் ஒன்றாகக் கலந்திருந்த வேதங்களைச் சிக்கறுத்து, முறைப்படுத்தி, இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் என்ற நான்காகப் பகுத்தும், நூற்றைம் பத்தாறு அதிகாரணங்களை யுட்

கொண்ட 555 சூத்திரங்களையுடைய தென்று சொல்லப்படும் வேதாந்த சூத்திர மியற்றியும், புராணத்தைப் பதினெண் புராணங்களாக வகுத்தும், சூதமுனிவர் முதலாகிய பலமுனிவர்கட்குக் கற்பித்தும், விளங்கியவராதலின், வியாசமுனிவர் மறை யெல்லாந் தந்தான் மொழிமுறையே கோத்தமுனி யெனப்பட்டார். மறையெல்லாந் தந்தான் என்பதற்கு பலவகையாகக்கிடந்த வேதங்களைச் சில்வாழ்நாட் பல்பிணிச்சிற்றறிவினராய மானிடர்க்கு இருக்காதி நான்காக வகுத்துச் சுருக்கித் தந்தவர் எனக்கூறினும் பொருந்தும். குரு என்பவன் சந்திரவம்ஸத்துப் பேர்பெற்ற ஓர் அரசன். இவனால் அக்குலம் குருகுலம் என்றும், அந்நாடு குருநாடு குருக்ஷேத்திரம் என்றும், அழைக்கப்படும். இவன் குலத்திலுதித்த தருமபுத்திரர் குருநாடர் எனப்பட்டார். கொற்றம் - பண்புரிப்பகுபதம். கொன் - பகுதி, ற் எழுத்துப்பேறு, அம் விகுதி. பகுதியீற்று னகரம் றகரமானது விகாரம். பெருமைதரும் வெற்றி. தானை, குரு - வடசொல், முனி - வடசொற்றிரிபு. கடவுளையே தியானஞ் செய்பவன், திரிகால ஞானமுடையவன், ஜடத்தைக் கோபித்தவன் என்பன அதன் பொருள்.

[தருமர், வியாசர் வருகையால் மகிழ்ந்துபசரித்தல்.]

4. மறைமுதல்வ நீயிங்கே வந்தருளப் பெற்றேன்
பிறவிப் பெருந்துயர மெல்லாம்—அறவே
பிழைத்தேன்யா னென்றானப் பேராழி யானை
அழைத்தேவல் கொண்ட அரசு.

(இ-ள்) அ பேர் ஆழியானை - அந்தப்பெரிய (சுதரிசனம் என்னும்) சக்ராயுதத்தைத் தாங்கிய கண்ணபிரானை, அழைத்து - தன்னிடம் வரச்செய்து, ஏவல்கொண்ட அரசு-(துரியோதனனிடம் தூது போய் வருதலாகிய) ஏவற்றொழிலைச் செய்யப்பெற்ற அரசன், (அம்முனிவரைநோக்கி) மறைமுதல்வ - வேதங்களை வகுத்தமுதன்மையானவனே, நீ—நீ, இங்கே வந்தருளப்பெற்றேன் - இவ்விடத்தில் எழுந்தருளும் பாக்கியத்தை அடைந்தேன், (ஆதலால்) பிறவிப் பெருந்துயரம் எல்லாம்-பிறவியைப் பற்றிவரும் மூவகைத் துன்பங்களும், அற - நீங்க, நான்பிழைத்தேன் - நான் அவற்றினின்று நீங்கி உய்ந்தேன், என்றான்-என்று சொன்னான்; (எ-று.)

முதல்வ- அண்மைவிளி. பிறவித்துன்பங்கள் மூன்றாவன-ஆத்தியாத்துமிகம், ஆதிபௌதிகம், ஆதிதெய்விகம் என்பன; அதாவது- ஆத்தியாத்துமிகம் என்பது, சரீரத்தைப்பற்றி வருகின்ற தலைநோய் முதலியனவும், மனத்தைப்பற்றி வருகின்ற காமக்குரோத முதலியவையுமாம். ஆதிபௌதிகம் என்பது மனிதராலும், மிருகமுதலிய துஷ்டஜெந்துக்கள், பிசாசு முதலிய இவற்றாலும் ஏற்படுவது. ஆதிதெய்விகம் என்பது காற்று, மழை, இடி முதலியவற்றால் நேரிடுவதாம்.

உயர்ந்த வேதாந்தமாகிய முனிவரது சேர்க்கையால் வீட்டின்பத்திற் கேதுவான ஞானத்தைப் பெற்றமையால், பிறவியாகிய துன்பம் நீங்கினேன் எனக் கூறியதாகவும் கொள்ளலாம். அ, என்னும் சுட்டு உயர்வுபற்றி நின்றது. ஏவல்-ஆகுபெயர். ஏ-இரண்டனுள் முன்னது அசை, பின்னது தேற்றம். பிழைத்தேன்- தெளிவுபற்றி எதிர்காலம் இறந்தகாலமாகக் கூறப்பட்டது. ஆழி - பகைவர்களை அழிப்பது; வட்டவடிமாயிருப்பது; கருத்தாப்பொருள் விகுதி புணர்ந்துகெட்டது; முன்னது பகுதி, முதல் நீண்டது. பேராழியானை என்பதற்கு, பெரிய திருப்பாற் கடலின்கண் யோகநித்திரை புரிகின்றவன் எனினுமாம். அரசு-அஃறிணைச்சொல். அதனை உடையானுக்கு ஆகுபெயர்.

[வியாசர், தருமனை வாடியிருந்தமைக்குக் காரணம் என்னெனல்.]

5. மெய்த்திருவந் துற்றாலும் வெந்துயர்வந் துற்றாலும்
ஒத்திருக்கு முள்ளத் துரவோனே—சித்தம்
வருந்தியவா வென்னென்றான் மாமறையா லுள்ளம்
திருந்தியவா மெய்த்தவத்தோன் தேர்ந்து.

(இ-ள்) மாமறையால்-பெருமைபொருந்திய வேதத்தினால், உள்ளம் திருந்தி - மனம்செம்மையாகி, அவாவும்-யாவரும் விரும்பத்தக்க, மெய்த்தவத்தோன் - உண்மையான தவத்தையுடையவனான வியாச முனிவன், தேர்ந்து - தருமனது முகவாட்டத்தையுணர்ந்து, மெய்த்திரு - உண்மையாகிய செல்வம், வந்து உற்றாலும் - வந்து அடைந்தாலும், வெந்துயர்வந்து உற்றாலும் - கொடியதரித்திரமாகிய நோய் வந்து சேர்ந்தாலும், ஒத்து இருக்கும்-மாறுபடாமல் ஒரே தன்மையாகவே இருக்கின்ற, உள்ளத்து - மனத்தின்கண்,உரவோனே-வலிய அறிவுடையவனே, சித்தம் - மனம், வருந்திய ஆறு-வருந்தியவிதம், என்னென்றான் - என்ன என்று கேட்டருளினான்; (எ-று.)

இன்பதுன்பங்களைச் சமமாகவே பாவிக்கும் அறிவுடையவனாகிய நீ வருந்தக்காரணம் என்னவென்றான் என்பதாம். மெய்த்திரு-அறநெறியால்வந்த செல்வம். வெந்துயர்-துயரத்தை விளைவிக்கின்ற வறுமைத்துயர். இது காரணத்தைக் காரியமாகக்கூறிய உபசார வழக்கு. வெம்மை + துயர்-பண்புத்தொகை. உற்றாலும் - எதிர்கால வினையெச்சம், உறு என்ற பகுதி உற்று எனவிகாரமாயிற்று. உரம் வலிமையுமாம். உரவோன்-உரம் என்னும் பண்படியாகப் பிறந்தபெயர். ஆன் என்ற ஆண் பால்விகுதியின் ஆ-ஓவாயிற்று. திருந்தி-காரணப் பொருட்டாய் வந்த செயவெனெச்சம். திருந்தியவாம் - திருந்திய ஆம் எனப் பிரித்துத் திருந்தும்படி ஆகின்ற எனப் பொருள் கொள்ளுதலும் ஒன்று. இதில் திருந்திய என்பது

காரியப்பொருட்டாகிய செய்யிய என்னும் வாய்பாட்டு எதிர்கால வினையெச்சம். அவாவும் என்பது அவாம் என "செய்யுமெனச்ச வீற்றுயிர் மெய் சேறலும்" என்ற (நன்-வினை-சூ. 22) விதிப்படி வு என்னும் உயிர்மெய் கெட்டு நின்றது. சித்தம், தவம் வடசொற்றிரிபு.

[தருமபுத்திரன் வருத்தத்திற்குக் காரணங் கூறல்.]

6. அம்போற் கயிலைக்கே யாகத் தரவணிவார்
தம்போற் படைக்குத் தமியனு—எம்பியைமுன்
போக்கினே னென்றுரைத்தான் பூதலத்து மீதலத்தும்
வாக்கினே ரில்லாத மன்.

(இ-ள்) பூதலத்தும்- பூவுலகத்திலும், மீதலத்தும்-சுவர்க்கலோகத்திலும், வாக்கில் - சத்தியவசனத்தில், நேர் இல்லாத மன் - தனக்கு ஒப்புமையுடையார் இல்லாத தருமபுத்திரன், அம்பொன் - அழகிய வெள்ளியாலாகிய, கயிலைக்கு-கைலாசமலைக்கு, ஆகத்து-திருமேனியில் அரவு அணி வார்தம்-சர்ப்பத்தை ஆபரணமாக அணிந்துள்ள சிவபெருமானது, பொன்படைக்கு - அழகிய பாசுபதாஸ்திரத்தைப் பெறுதற்கு, எம்பியை-என் தம்பியாகிய அருச்சுனனை, தமியன் ஆ(க) -தனியனாக, முன்போக்கினேன் என்று-முன்னமே அனுப்பினேன் என்று, உரைத்தான்-அம்முனிவரிடம் சொல்லி வருத்தம் அடைந்தான்; (எ-று.)

அர்ச்சுனன் கயிலைக்குச்சென்று, பாசுபதாஸ்திரம் பெற்றபின்னர், இந்திரன் வேண்டுகோட்கிணங்கித் தேவலோகம் சென்று, நிவாதகவச காலகேயராதி யசுரர்களைக் கொன்றதும், சிலநாள் அங்கு வசித்திருந்ததும், ஆகிய இவற்றில் காலங்கழிந்ததை யுணராத தருமன் முனிவர்முன் இங்ஙனம் வருத்தமுற்றுக் கூறினன்.

பொன் என்பது-பொன், வெள்ளி, இரும்பு முதலியவற்றிற்குப் பொதுப்பெயராய் நிற்றலின், ஏற்ற பெற்றியாக ஈண்டு வெள்ளியெனப் பொருள் கொள்ளப்பட்டது. கயிலைக்கு என்பதைக் கயிலையினிடத்து எனப் பொருள்கொண்டு, உருபுமயக்கமாகக் கொள்ளினும் பொருந்தும். பொன் + கயிலை- "ணனவல்லினம் வரட்டறவும்" என்ற (நன்-மெய்-சூ-6.) விதியால் நிலைமொழியீற்று னகரம் வருமொழிமுதல் வல்லினம் வர றகரமாயிற்று. இது மூன்றும் வேற்றுமை உருபும், பயனும் உடன் தொக்க தொகை. அரவு + அணிவார், 'முற்றுமற்றொரோவழி' என்ற விதிப்படி முற்றியலுகரம் வருமொழி முதலில் உயிர்வரக்கெட்டது. படைக்கு-குவ்வுருபு பொருட்டுப் பொருளில் வந்தது. தமியன்-பண்படியாகப் பிறந்த குறிப்புப்பெயர். ஆ-ஆக என்பதன் விகாரம். எம்பி முறைப்பெயர் மரூஉமொழி. போய்நெடுங்காலமாகியும் இன்னும் வருகின்றிலன் என்பான், 'முன்

போக்கினேன்' என்றான். வாக்கில்-வாக்கினால் எனக்கொண்டு ஏதுப் பொருளாகினும் அமையும். நேர் என்னும் பண்பின்பகுதி, நேரா வாரைப் பண்பாகு பெயராய் உணர்த்தி நின்றது. கைலாஸம், அரவம் என்ற வடசொற்கள் திரிந்து நின்றன. ஏ—அசை

சிவபிரான் அரவணிந்தகதை:— ஒருகாலத்துச் சிவபெருமான் தாருகா வனத்து முனிவர்களின் மனநிலையைச் சோதிக்கவெண்ணி ஒரு விடசங்கம உருக்கொண்டு அம்முனிவர்கள் இல்லந்தோறும் நிர்வாணியாய்ப் பிக்ஷாடனம்செய்து முனிபத்தினிகளது கற்புநிலை யைக்கெடுக்க, அது தெரிந்த முனிவர்கள் கோபங்கொண்டு சிவபெரு மானைக்கொல்லுவதற்கு அபிசாரயாகமொன்று செய்து, அதில் புலி, யானை, மான், பாம்பு, முயலகன், வெண்டலை முதலியவற்றை உண் டாக்கி அனுப்பச் சிவபிரான் புலியையும், யானையையும் கொன்று 'தோலைப் போர்த்தும்,மானைக் கையிலேந்தியும், பாம்பை ஆபரணமாக அணிந்தும், முயலகனை மிதித்தும், வெண்டலையைக் கைக்கொண்டும் அவற்றைப்பயனிலவாகச் செய்தனனென்பதாம்.

[வியாசர் தருமனை நோக்கி வருந்தவேண்டாமெனல்]

7. காண்டா வனந்தீக் கடவுளுணக் கைக்கணையால்
நீண்ட முகிறடுத்து நின்றாற்கு—மீண்டமரர்
தாளிரண்டு நோவத் தனித்தனியே ஓடியநாள்
தோளிரண்டு மன்றோ துணை

(இ-ள்) காண்டாவனம்- (இந்திரனுக்குரிய) காண்டாவனத்தை, தீக்கடவுள் உண-அக்கினி தேவன் உண்ணும்படி, கைக் கணையால்-கையிற்றரித்துள்ள அம்பினால், நீண்டமுகில்-(அக்கினிதேவன் உண் ணாமல் தடை செய்ய வருஷித்த) பெரிய மேகங்களை, தடுத்து நின்றாற்கு-(பெய்யாது) தடைசெய்து நின்ற அருச்சுனனுக்கு, அமரர்-தேவர்கள், மீண்டு-புறங்கொடுத்துத்திரும்பி, தாள் இரண்டும் நோவ-தங்களடிகளிரண்டும் நோவும்படி, தனித்தனியே-வேறுவேறாக, ஓடியநாள்-(அவனுடைய) இரண்டு தோள்களும் அல்லவா, துணை-(அவனுக்கு) உதவியாய் நின்றபொருள்கள்; (எ-று.)

ஆதலால், இத்துணைவலிமைவாய்ந்த அர்ச்சுனனைக் குறித்து நீ எக்கவலையும் கொள்ளவேண்டாம் என்றவாறும்.

காண்டவன் வனம் - காண்டாவனம் என விகாரமாயிற்று. காண்டாவனம் காண்டவன் என்னும் அரக்கன் வசித்திருந்த இடம். தீ - ஓரெழுத்தொருமொழி, தீக்கடவுள்-பண்புத்தொகை, தீக்குக் கடவுள், தீயினது கடள் என வேற்றுமைத்தொகைப் படுத்தினுமாம். உண்ண என்பது உண என நின்றது இடைக்குறை. உண, நோவ, என்னும் செயவெனெச் சங்கள் காரியப் பொருளாதலால் எதிர்காலந்

குறித்து நின்றன. கைக்கணை, இதில் கை என்பதை, கைக்குடை, கையரிவாள் என்பவற்றிற் போலச் சிறுமையை உணர்த்துவதாகக் கொண்டு, சிறு கணை யெனப் பொருள்கூறினும் பொருந்தும். இப் பொருளால், யாவராலும் வெல்லுதற்கரிய தேவர்களையும் சிறிய கணையாலே வென்றானென அருச்சுனனுடைய பேராற்றல் வெளிப் படும். தனித்தனி ஓடுதலாவது-ஒருவர் சென்றவழியொருவர் செல் லாது நிலைகுலைந்து பிரிந்தோடுதல். அமரர்-தேவாமிர்தபானத்தால் மரணமில்லாதவர்கள். ஒகாரம்-வினாவோடு எதிர்மறை. முகில்+ தடுத்து 'லனமுன் றனவும்' என்ற சூத்திரவிதியால் நிலை மொழியீற் றுலகரத்தின் முன் தகரம்-றகரமாயும், "குறில் செறியாளலவல் வழி வந்த தகரந்திரிந்தபிற்கேடும்" என்ற மிகையால், வேற்றுமையினும், தனிக்குறிலைச்சேராத நிலைமொழியீற்று லகரம் கெட்டு, வந்தது.

காண்டவனத்தைத் தீயுண்டாக்கிக்கொடுத்தகதை:— கண்ண பிரானும், அர்ச்சுனனும் ஓரிடத்துத் தனித்திருக்குங்கால், யாகத்தின் கணிட்ட நெய்யை மிகுதியாகஉண்டதினா லுண்டாய குன்மவியாதி யால் வருந்திய அக்கினிதேவன் அந்தண னுருக்கொண்டுவந்து, எனக்கு உணவிடுக என்றிரந்து நிற்க, அவர்கள் தருகிறோம் எனலும் "யான் அக்கினிதேவன் இந்திரன் வனமாகிய காண்டாவனத்தையே எனக்கு உணவாக அளித்தாற்றான் அங்கிருக்கும் மூலிகை களால் என்னோய் நீங்கப்பெறும்" எனக் கேட்டான். அதுகேட்ட கண்ணபிரானுடைய கட்டளையால், அக்கினி கொடுத்த அம்புப் புட்டியையும், வில்லையும், தேரையும், வெள்ளைக் குதிரையும், அநுமக் கொடியையும், பெற்றுக்கொண்ட அர்ச்சுனன் கண்ணனோடு சென்று அவ்வனத்தை எரிக்கையில், தேவேந்திரன் சப்தமேகங்களையும் ஏவி, வருஷித்து, அக்கினியை அவிக்குமளவில், அருச்சுனன் சரக்கூடம் அமைத்து மேகங்களைத் தடுத்தனன். பின்பு தன்னுடன் பொருதற்கு வந்த இந்திரன் முதலிய தேவர்களைத் தனித்தனியே புறங்கொடுத் தோடும்படி அவருடன் போர் செய்து வனமுழுவதையும் அர்ச்சுனன் அக்கினிக்கு இரையாக்கினன் என்பதாம்.

[தருமன் முனிவரிடம் தான் நாடிழந்து காடுபுகக் காரணம் என்னெனல்]

8\. பேரரசு மெங்கள் பெருந்திருவுங் கைவிட்டுச்
சேர்வரிய வெங்கானஞ் சேர்தற்குக்— காரணந்தான்
யாதோவப் பாவென்றா னென்றுந்தன் வெண்குடைக்கீழ்த்
தீதோவப் பார்காத்த சேய்.

(இ-ள்) என்றும்-எக்காலத்தும், தன்வெண்குடைக்கீழ்-தனது வெண்கொற்றக் குடைநிழற்கீழ், தீது-தீமையான காரியங்கள், ஓவ-ஒழியும்படியாக, பார்காத்த-பூமியிலுள்ளவரைப் பாதுகாத்த, சேய்-

முருகக் கடவுளையொத்த தருமபுத்திரன், அப்பா-அப்பனே! எங்கள்-எங்களுடைய, பேர் அரசும் - பெருமைதங்கிய ஆளுந்தன்மையும், பெருந் திருவும்-பெரிய செல்வத்தையும், கைவிட்டு-இழந்துவிட்டு, சேர்வு அரிய- எவரும் செல்லுதற்கருமையான, வெங்கானம்-கொடியகாட்டை, சேர்தற்கு-யாங்கள் வந்து அடைந்ததற்கு, காரணம் யாதோ என்றான்-காரணம் எதுவோ என்று வினவினான்; (எ-று.)

தருமன் தனது ஆளுகையில் தன்மனதறிந்த தீங்கு ஒன்றுஞ் செய்திலனாதலின் இங்ஙனம்யாங்கள் அரசாட்சியையும் செல்வத்தையும் இழந்து, இந்தக் கொடிய காட்டில்வந்து வசிப்பதற்குரிய காரணம் என்னவென்று முனிவரிடத்து வினவினனென்க.

தீது - தீமை என்னும் பண்படியினின்று பிறந்த ஆகுபெயர். வெண் குடைக்கீழ்த் தீதோவப்பார்காத்தலாவது-ஏகசக்ராதி பத்யத்தால் உலகத்துமன்பதைகளுக்கு, தன்னாலும், தனது பரிசனத்தாலும், பகைவராலும், சோரராலும், மிருகாதிகளாலும், ஏற்படும் ஐவகைத் துன்பங்களும் உண்டாகாது அறநெறியோடு கோலோச்சுதல். சேய்-இளமை, ஈண்டு முருகக்கடவுளைக் குறித்தது. பலபராக்கிரமங்களிலும், அழகிய வடிவிலும், எளிதிற் பகையழித்தலிலும் தருமனுக்கு முருகக்கடவுள் உவமை.

ஓவ-காரியப் பொருட்டாகிய செயவெனெச்சம், ஓ-பகுதி-வ் சந்தி; அ-எதிர்கால வினையெச்ச விகுதி, பெருமை + அரசு-பேரரசு, பெருமையின், மைவிகுதி கெட்டு, வருமொழிமுதலுயிர்வர, பகுதியீற்று உகரம் கெட்டு, முதல் நீண்டது. அரசு - ஆகுபெயராய் ஆளுகையை உணர்த்தி நின்றது. ஐஸ்வரியங்கள் லட்சுமிகடாட்சத்தால் உண்டாகப் பெறுவனவாதலால், செல்வத்தைத் திரு என்றார். சேர்வு தொழிற்பெயர், சேர்-பகுதி, வு-விகுதி. காட்டிலகப்படும் ஆகாராதி கிடையாமைபற்றியும், துஷ்ட ஜெந்துக்கள் உளவாந்தன்மைபற்றியும் வெங்கானமென்றார். யாதோ-ஓகாரம் வினாவோடு இரக்கப்பொருளது. உம்மைகளிரண்டும், உயர்வு சிறப்போடு எண்ணுப்பொருளன. வியாசமுனிவரை அப்பா என்றது உபசாரம்.

[வியாசர் தருமபுத்திரனுக்கு விடைகூறித் தேற்றல்.]

9. கேடில் விழுச்செல்வங் கேடெய்து சூதாடல்
ஏடவிழ்தார் மன்னர்க் கியல்பேகாண்—வாடிக்
கலங்கலைநீ என்றுரைத்தான் காமருவு நாடற்
கிலங்குநூன் மார்ப னெடுத்து.

(இ-ள்.) இலங்கு - விளங்குகின்ற, நூல் மார்பன் - பூணூலைத்தரித்த மார்பையுடையவனான வியாசன், காமருவு-

சோலைகள் சூழப்பெற்றுள்ள, நாடற்கு-குருநாட்டையுடைய தரும புத்திரனுக்கு, கேடுஇல்-அழிவில்லாத, விழுச்செல்வம்-பெரியசெல்வம், கேடு எய்து-அழிதலை அடைதற்கு ஏதுவாகிய சூது ஆடல்-சூதாட்டத்தைச் செய்தல், ஏடு அவிழ்-பூவிதழ்கள் விரியப்பெற்ற, தார்-மாலையையணிந்த, மன்னர்க்கு-அரசர்களுக்கு, இயல்பே-தகுதியானதே, (ஆதலால்) நீ-நீ, வாடி-வருந்தி, கலங்கலை-மனக்கலக்கமடையாதே, என்று எடுத்து உரைத்தான்-என்று சொல்லித் தருமபுத்திரனைத் தேற்றினன்; (எ-று.)

சூதாடுதற்கிசைந்தே, தான் பெருஞ்செல்வம் இழந்து, காட்டினிடம் சென்றதற்கு ஏதுவாமென மனதிடை வைத்துக் கவன்ற தருமபுத்திரனை நோக்கி, வியாசர் சூதாடுதல் அரசர்க்குரிய ஆடல்களுள் ஒன்றே யாமெனக்கூறிக் கவற்சியை ஒழிக என்றனர் என்பதாம்.

இலங்குநூல்; தெய்வவொளி நூல்என்க. நூன்மார்பன்-2-ம் வேற்றுமை உருபும் பயனும் தொக்க தொகை. 'லளவேற்றுமையிற்றடவும்' என்ற சூத்திரத்து மெலிமேவினணவும் என்ற விதியால் நிலைமொழியீற்று லகரம், வருமொழி முதலில் மகரம்வர, னகரமாகத் திரிந்தது; கேடு+இல்-குற்றியலுகரம் உயிர்வரக் கெட்டது; இல்-இன்மையென்னும் பண்பினடியாகப்பிறந்த ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; இதில் பகுதியே எதிர்மறையை உணர்த்தும். விழுச் செல்வம் பண்புத்தொகை. விழுமம்-பகுதி கேடு. முதனிலைதிரிந்த தொழிற்பெயர்; கெடு-பகுதி. கேடில் விழுச்செல்வம் ஒருவற்குக் கல்வியேயாதலால், விழுச்செல்வம் என்பதற்குக் கல்வி எனப்பொருள் கொண்டு, கல்வியறிவு கெடுதற்கு ஏதுவாகிய எனச் சூதாட்டத்தின் இயற்கையைக் கூறியதாகக் கொண்டுரைப்பினும் பொருந்தும். அவிழ் தார் வினைத்தொகை. காண்-முன்னிலை அசை. கலங்கலை முன்னிலை ஏவலொருமை எதிர்மறைவினைமுற்று. கா-சோலை, ஓரெழுத்தொருமொழி. எடுத்துரைத்தலாவது-காரண காரியங்களோடுகவற்சியொழிய விரித்துச் சொல்லுதல். எடுத்து என்பது உரைத்தான் என்பதை விசேடித்தது.

[தருமபுத்திரன் முனிவரிடம் "என்போல் சூதாடி, நாடிழந்து வருந்தியவருளரோ" என்று வினவுதல்.]

10. கண்ணிழந்து மாயக் கவருடிக் காவலர்தாம்
மண்ணிழந்து போந்து வனநண்ணி—விண்ணிழந்த
மின்போலு நூன்மார்ப மேதினியில் வேறுண்டோ
என்போ லுழந்தா ரிடர்.

(இ-ள்.) விண் இழந்த-ஆகாயத்தினின்று நீங்கிவந்த, மின்போலும்-மின்னலைப்போற் பிரகாசிக்கின்ற, நூல்மார்ப - பூணூலைத் தரித்துள்ள மார்பையுடையவனே, கண் இழந்து-அறிவுகெட்டு, மாயக் கவறு ஆடி-வஞ்சகம் பொருந்திய சூதாட்டம் ஆடி, மண் இழந்து-நாட்டை இழந்து, வனம் போந்து நண்ணி-காட்டில்போய் வசித்து, என்போல்-என்னைப்போல், இடர் உழந்தார்-துன்பத்தினால் வருந்தமுற்றவரான, காவலர் - அரசர்கள், வேறு உண்டோ-வேறு இருக்கின்றார்களோ ? (எ-று)

மின்போன்றிலங்குகின்ற பூணூலை அணிந்த மார்பையுடையவனே! அறிவுகெட்டு,சூதாடி,நாடிழந்து, காடுசேர்ந்து என்னைப்போல வருந்திய அரசர்கள், வேறு எவர்களாயினு முளரோ? கூறியருள்வாயாக என்பதாம்.

விண்-ஆகுபெயராய் மேகத்தை உணர்த்திற்று. மேதினி-திருமாலாற் கொல்லப்பட்ட மது கைடவர் என்றும் அரசர்களுடைய மேதஸ் (நிணம்) படிந்தது; பூமிக்குக்காரணப் பெயர். வேறு-இருதிணையைம்பால் மூவிடங்கட்கும் பொதுவான குறிப்பு வினைப்பெயர், "வேறில்லையுண்டைம்பான் மூவிடத்தன" (வினை-சூ-20.) கண்ணிழந்து என்பதில் கண் என்பதை முதனிலைத் தொழிற்பெயராகக் கொண்டுபின் வருதலைச் சிந்தித்தல் எனவும் பொருள் கூறலாம். அறம் பொருளின் பங்கட்கு இடையீடாய்க் கருமங்கள் பலவற்றையும் சிதைத்தல்பற்றி மாயக்கவறென்றார். கவறு-சூதாடு கருவி. காவல் + அர்-காத்தலையுடையவர், கா + வலர், எனக்கொண்டு காத்தலில் வல்லவர் எனக்கூறலுமாம், தாம்-அசை. போந்து-இறந்த காலவினையெச்சம், புகுந்து என்பதின் விகாரம் என்பாருமுளர்.

[சூதாட்டத்தால் நாடிழந்த நளன்கதையை வியாசர் சொல்லத் தொடங்குதல்]

11. சேமவேன் மன்னனுக்குச் செப்புவான் செந்தனிக்கோல்
நாமவேற் காளை நளனென்பான்—யாமத்
தொலியாழி வைய மொருங்கிழப்பப் பண்டு
கலியால் விளைந்த கதை.

(இ-ள்.) தனிசெம்கோல்-ஒப்பற்ற செங்கோலையும், நாமம்-அச்சந்தாத்தக்க, வேல்காளை-வேலாயுதத்தையுடைய காளைபோன்றவனை, நளன் என்பான்-நளனென்று சிறப்பித்துச் சொல்லப்படும் அரசன், பண்டு-முற்காலத்தில், யாமத்து-நடுஇரவில், ஒலி-ஒலிக்கின்ற, ஆழிவையம் கடலாற்சூழப்பட்ட பூமியை, ஒருங்கு இழப்ப-ஒருமிக்க இழக்கும்படி, கலியால்-கலிபுருஷனால், விளைந்தகதை-உண்

டாகிய கதையை, சேமம் - (உலகத்துயிர்களுக்கு) காவலாகவுள்ள, வேல் - வேலாயுதத்தையுடைய மன்னனுக்கு-தர்மபுத்திரனுக்கு; செப்புவான்- (வியாசமுனி) சொல்லுவான்; (எ-று.)

பகைவர், கள்வர் முதலியோரால்குடிகளுக்குண்டாகுந் துன்பம் வாராது காத்தல்வேலாயுதங் கொண்டாதலால்சேமவேல்மன்னனென்றார். வேல்-இலைவடிவமான ஆயுதம்; உபலக்ஷணத்தால் வேறு ஆயுதங்களையுங் குறித்துநின்றது. ஏமம் என்பதில் அம்சாரியை. ஏம் அச்சமென்பது "பேஎமுருமெனவரூஉங்கிளவி, யாமுறைமூன்று மச்சப் பொருள்" என்பதிலுைலறிக. பகைவருக்குச்செருக்கு விளையுந்தோறும் அச்சம்செய்து, அதனை ஒழித்தலின் ஏமவேல் என்றார். செப்புவான்-ஆண்பாற் படர்க்கை எதிர்காலவினைமுற்று. செப்பு-திசைச்சொல். தனிச்செங்கோல் பொது நீக்கி உலகமாளுங் கோலெனினுமாம். காளை-நளனுக்கு உவமை; தோற்றமும் கம்பீரமும்பற்றி, ஆகுபெயர். வேல்+காளை. 'லளவேற்றுமையிற்றடவும்' என்றவிதிப்படி வருமொழி முதலில் வல்லினம் வர நிலைமொழியீற்று லகரம் றகரமாயிற்று. ஒலி-வினைத்தொகை. ஆழி ஆழமுடையது என்னும் காரணப் பெயர். இ-கருததாப்பொருள்விகுதி. என்பான்-செயப்பாட்டு வினை வினையாலணையும்பெயர். ஒருங்கிழத்தலாவது-சிறிதுமின்றியிழத்தல். பண்டு-காலங்குறிக்கும் இடைச்சொல். இழப்ப-செயவெனெச்சம்; காரியப்பொருளில்வந்தது. சகுனியால் சூதாடி, நாடிழந்த தருமனுக்குக் கலியால் நாடிழந்த நளன்கதை கூறியவாறும். *நளன் மக்களுட் சிறந்தோனாதலால் இவன் கதையையே வியாசர் கூறத்தொடங்கினார். அடுத்த கவிமுதல் நளனது கதையைக் கூறத்தொடங்கி, அவனது நாடுநகரவளப்பங்கள் சொல்லப்படுகின்றன.

[நிடதநாட்டுச்சிறப்பு]

12 காமர் கயல்புரளக் காவி முகைநெகிழத்
தாமரையின் செந்தேன் றளையவிழப்—பூமடந்தை
தன்னாட்டம் போலுந் தகைமைத்தே சாகரஞ்சூழ்
நன்னாட்டின் முன்னாட்டு நாடு.

(இ-ள்.) சாகரம்சூழ்-சமுத்திரம் சூழ்ந்த, நல் நாட்டில்-நன்மையாகிய பூமியில், முன்நாட்டு-முதன்மையாக எடுத்துக்கூறத்தக்க, நாடு நிடத நாடானது, காமர்-அழகிய. கயல்புரள-சேல்மீன்கள் புரளுத

* நகர்ந்துறந்து காதலியுடன் வருந்திய கோவலனுக்குத் தேறுதல் கூறிய கௌந்தியடிகளும் இந்நளன் கதையையே கூறியதாகச் சிலப்பதிகாரம் மதுரைக்கண்டம் ஊர்காண்கதையில் "வல்லாடாயத்து மண்ணரசிழந்து, மெல்லியறன்னுடன் வெங்கானடைந்தோன்" என்பதுமுதல் அத்தொடக்கத்தனவாகிய ஆறடிகளாற் கூறியிருத்தலுங் காண்க.

லாலும், காவிமுகை- நீலோற்பலமொட்டுக்கள், நெகிழ-மலர்தலாலும், தாமரையின் - தாமரைப்பூவினது, செம்தேன்தளை - நல்லதேனோடு கூடிய கட்டானது, அவிழ-விரிதலினாலும், பூமடந்தைதன் - பூமாதேவியினது, நாட்டம் - கண்களை, போலும் - ஒத்திருக்கும், தகைமைத்து - தகுதியைப் பொருந்தியது; (எ-று.)

தாமரைமலர், கயல்மீன், கருங்குவளை, இவைகள் முறையே அழகாலும், பிறழ்ச்சியாலும், உருவத்தாலும், கருமை நிறத்தாலும் கண்போல விளங்குவனவாதலால் நீர்வளப்பத்தால் இவற்றை மிகுதியாகவுடைய நிடதநாடு, பூமிதேவியினது நாட்டம்போல்வதாயிற்று. கண்ணிற் சிறந்த வுறுப்பில்லையாதலால் நாட்டம்போலு மென்றார். இதனால் நிலவளமும், அதற்கேதுவாகிய நீர்வளமுங் கூறியவாறும். காமர் உரிச் சொல். புரள, நெகிழ, அவிழ காரணப்பொருளில் வந்த செயவெ னெச்சங்கள். காவி - நீலநிறம், குணவாகுபெயர். முகை தொழிலாகுபெயர். தாமரையின் - இன் சாரியை. செம்மை + தேன்-மை விகுதிகெட்டு, மகரம் நகரமாயிற்று. 'பூவெனப்படுவது பொறிவாழ் பூவே, பூவிற்கருங்கலம் பொங்குதாமரை' என்பனவாதலால் பூமடந்தை என்பதில் பூ என்பது தலைமைபற்றித் தாமரைமலருக்காய் அதிற்பிறந்த இலக்குமியை உணர்த்தியதாகக் கொண்டு, பூமடந்தை இலக்குமிதேவியெனினுமாம். மடந்தை என்ற பெயர் இங்கே பருவப் பெயராகாமல் பெண் என்ற மாத்திரமாய் நின்றது. இப்பருவத்துக்கு வயதெல்லை பதின்மூன்றாண்டுமுதல் பத்தொன்பதாண்டுவரை. தன் - சாரியை. நாட்டம் தொழிலடியாகப்பிறந்த பெயர். நாடு - பகுதி, அம் கருவிப்பொருள்விகுதி. நாடு என்னும் பகுதி, நெடிற்றொடர்க் குற்றியலுகரமாதலால் "நெடிலோடுயிர்த்தொடர்க் குற்றுகரங்களுள் டற வொற்றிரட்டும்" என்ற விதிப்படி, டகரம் இரட்டித்து "உயிர் வரினுக்குறண்மெய்விட்டோடும்" என்ற விதிப்படி உகரம்கெட்டு முடிந்தது. போலும் - உவம உருபிடைச்சொல் தகைமைத்து - பண்படியாகப் பிறந்த ஒன்றன்பாற் குறிப்புவினைமுற்று. ஏ - அசை. நல் + நாடு - ளவேற்றுமையிற் றடவும் என்ற சூத்திரத்தில் "மெலிமேவினணவும்"என்ற விதிப்படி வருமொழி முதலில் மெல்லெழுத்து வர நிலைமொழியீற்று லகரம் னகரமாகி மேல் "னலமுன்றனவும் ணளமுன்டணவும் ஆகுந்தநக்காயுங்காலே" விதிப்படி னகரத்தின் முன் நகரம் னகரமாயிற்று. சூழ் - வினைத்தொகை.

கடலைச் சாகர மென்றதன் வரலாறு:— சூரிய குலத்துச் சகரமகாராசன் நூறாவது அஸ்வமேதயாகஞ் செய்தபொழுது பூமிப்பிரதக்ஷிணம் செய்துவர அனுப்பியகுதிரையைப் பொறாமைகொண்ட தேவேந்

திரன் மாயையால் ஒளித்துக் கொண்டு சென்று, பாதாள லோகத்தில் தவஞ் செய்து கொண்டிருந்த கபிலமுனிவர் பின்னே கட்டிவைக்க, அவ்வேள்விக் குதிரையை நாடிச்சென்ற சகரபுத்திரர் அறுபதினுயிரவரும் பூமிமுழுதும் தேடிக்காணமல் பாதாளலோகத்திற்குப் போகும் பொருட்டுப் பரதகண்டத்தின் கீழ்ப்பாகத்தில் தோண்டிச் சென்ற பெரும் பள்ளம் பின் பகீரதன் கொண்டுவந்த கங்கை முதலிய நதிகளின் நீரால் நிறைந்து, சாகரம் என்னும் பெயர் பெற்றுக் கடலோடு கூடித் தானும் கடலின்பாற்பட்டது. [சகரரால் தோண்டப் பட்டது சாகரம், தத்திதாந்தநாமம். "நூறுயோசனை யகலமுமாழமும் நுடங்கக் கூறுசெய்தன ரென்பதால்" "சகரர் தொட்டலாற் சாகர மெனப்பெயர் தழைப்ப, மகரவாரிதி சிறந்தது" என்பன கம்பராமாயணம்.]

[இது முதல் ஐந்து பாட்டால் நகரச் சிறப்புக் கூறுகிறர்.]

13. கோதை மடவார்தங் கோங்கை மிசைத்திமிர்ந்த
சீதக்களபச் செழுஞ்சேற்றல்—வீதிவாய்
மானக் கரிவழுக்கு மாவிந்தம் என்பதோர்
ஞானக் கலைவாழ் நகர்.

(இ-ள்.) (அத்தன்மைத்தாய நாட்டின்கண்) கோதை மடவார் தம்-மலர் மாலையணிந்த பெண்களுடைய, கொங்கைமிசை - முலைக ளிடத்து, திமிர்ந்த-பூசியிருக்கப்பெற்ற, சீதச்செழும் களபச் சேற் றல்-குளிர்ச்சி பொருந்திய செழுமையான கலவைச் சந்தனச் சேற் றல், வீதிவாய் - வீதிகளிடத்து, மானக்கரிவழுக்கும் - பெருமை பொருந்திய யானைகள் கால்வழுக்கி வீழும்படியான, மாவிந்தம் என்பது - மாவிந்தமென்று சிறப்பித்துச் சொல்லப்படுவதாகிய, ஞானக் கலைவாழ்-ஞானத்தைத் தருகின்ற, கல்வி நூல்கள் பயில் கின்ற, ஓர் நகர்-ஒரு நகரம் (உண்டு); எ-று.

அந்நகரத்து மங்கையர்கள் நீராடுதலால், அவர்கள் தனங்க ளிற் பூசியிருந்த கலவைச் சாந்து கரையப் பெற்று, நீருடன் கலந்து, வந்து, தெருக்களில் வண்டலிட்டிருப்பதால் யானைகள் கால் வழுக்கு மென அந்நகரத்துச் செல்வ வளத்தைக் கூறியவாறும். இது வீறுகோளணி. வீதியில் களபச்சேற்றின் மிகுதி, பெண்கள் தங்கள் நாயகரோடு கொண்ட ஊடலால் வழித்தெறிந்ததனு லுண்டாய தெனினும் பொருந்தும். மடவார்-மடமைக்குணமுடையவர். மடம் என்னும் பண்படியாகப் பிறந்த பெண்பாற் படர்க்கைப்பெயர். இது பெண்களுக் கியல்பாயுள்ள நாற்குணங்களுள் ஒன்று. மிசை- ஏழனுருபு. களபச்சேறு-பலவகை வாசனைத் திரவியம் சேர்த்துக் கூட்டப்பட்ட சாந்து. சேறு,-சேற்று என வேற்றுமையில் குற்றுகர

மிக்கது. மானக்கரி-இரண்டாம் வேற்றுமைத் தொகையிலைத்தொடர். மானம், வலியுமாம் கரி-கரத்தை யுடையது. சீதக்களபம்-வடமொழித் தொடர். ஞானக்கலை,-சரஸ்வதியெனக் கொண்டு சரஸ்வதிக்கு இருப்பிடமான நகர் எனவும் கூறலாம். வாழ்நகர்-வினைத்தொகை. ஞானக்கலை வாழ்நகர் என்றதனால் அந்நகரமாந்தரது கல்விச் சிறப்புக் கூறியவாறும். வீட்டிற்கு ஏதுவாகிய ஞானத்தைத் தருவது கல்வியேயாதலால் ஞானக்கலை யென்றார். ஞானம் - நித்யாநித்ய வஸ்துக்களைத் தெரிந்து உண்மைப் பொருளை உணரும் மெய்யறிவு. கோதை, ஞானம், கலை-வடசொற்றிரிபு. மடவார்தங்குலவு மெய்யிற் றிமிர்த்த எனவும், மடவார்தங்கோதின் மெய்யிற்றிமிர்த்த எனவும் பாடம்.

14. நின்று புயல்வானம் பொழிந்த நெடுந்தாரை
என்று மகில்கமழு மென்பரால்—தென்றல்
அலர்த்துங் கோடிமாடத் தாயிழையா ரைம்பால்
புலர்த்தும் புகைவான் புகுந்து.

(இ-ள்.) தென்றல்-தென்றற்காற்று, அலர்த்தும்-விரியச் செய்கின்ற, கொடி-கொடிச்சீலைகள் கட்டப்பட்டுள்ள, மாடத்து-உப்பரிகைகளில், ஆய்இழையார்-ஆய்ந்தெடுத்த ஆபரணங்களை அணிந்த பெண்கள், ஐம்பால்-தங்கள் கூந்தல்களை, புலர்த்தும்-உலர்த்துவதற்கு ஊட்டுகின்ற, புகை-அகிற்புகை, வான்புகுந்து-ஆகாயத்திற் புகுவதினால், புயல்-மேகம், வான் நின்று-ஆகாயத்தி லிருந்து, பொழிந்த (காலம் தவறாமல்) பெய்த, நெடும்தாரை-பெரிய மழைத் தாரைகள், என்றும்-பெய்யும் பொழுதெல்லாம், அகில் கமழும்-அகிலின் மணம் மணக்கும், என்பர்-என்று சொல்வர்; (எ-று.)

பெண்கள் ஈரமா யிருக்கும் தங்கள் கூந்தலை உலர்த்துவதற்கு ஊட்டப்படும் புகை மிகுதி ஆகாயத்திற் சென்று, மேகங்களோடு சேர்தலால், அப்புகைகளில் படிந்து வருகின்ற மழைத்தாரைகளில் இயற்கையில் அகில் வாசனை பொருந்தி யிருக்கிற தெனக் கூறுவர் என்பதாம். இச்செய்யுளால் மாளிகையி னுயர்ச்சியும், மாதர்களின் செல்வ மிகுதியும் வெளியாம். அரச மகளிர் தம் கூந்தலுக்கு அகிற் புகை யூட்டல் மரபு. வீறுகோளணியாம்

அகில்-முதலாகு பெயர். தென்றல்-தெற்குத் திசையிலிருந்து வருங்காற்று. அலர்த்தும்-பிறவினைப்பெயரெச்சம்; அலர் தன்வினைப் பகுதி, த்-சந்தி, து-பிறவினைவிகுதி. ஆய்-வினைத்தொகை. ஐம்பால் பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை, விரிந்தால் ஐந்தாகிய பாலையுடையது எனவிரியும். பால்-பகுப்பு. பெண்கள் கூந்தல், ஐந்து பகுப்பாய் முடிக்கப்படுவன வாதலால் ஐம்பால்

எனப் பெயர் பெறும்; ஐம்பாலாவன, உச்சியில் முடிக்கப்படும் முடி, வலத்திலாவது, இடத்திலாவது முடிக்கப்படும் கொண்டை, பின்னே செருகுதலாகிய சுருள், சுருட்டி முடிப்பதாகிய குழல், பின்னிமுடிப்பதாகிய பனிச்சை என்பன. புகுந்து - புகுவதால்; காரணப் பொருளில் வந்த செயவெனெச்சத்திரிபு.

15. வெஞ்சிலையே கோடுவன மென்குழலே சோருவன
அஞ்சிலம்பே வாய்விட் டரற்றுவன—கஞ்சங்
கலங்குவன மாளிகைமேற் காரிகையார் கண்ணே
விலங்குவன பொய்ந்நெறியை விட்டு.

(இ-ள்) கோடுவன-(அந்நகரத்தில்) வளைவன, வெம் சிலையே-கொடியவில்களே, சோருவன - தளர்ச்சியடைவன, மெல்குழலே-மென்மையான கூந்தல்களே, வாய்விட்டு அரற்றுவன - வாய்விட்டு அலறுவன, அம்சிலம்பே-(பாதத்தில் அணியும்) அழகிய சிலம்பு என்னும் ஆபரணங்களே, கலங்குவன - கலக்கத்தையடைவன, கஞ்சமே-தண்ணீரே, பொய்நெறியை விட்டு-பொய்மையான தீயவழியை விட்டு, விலங்குவன-விலகிப்போவன, மாளிகை மேல்-உப்பரிகையி லுள்ள, காரிகையார்-பெண்களுடைய, கண்ணே-கண்களே;—வேறில்லை (எ-று.)

எனவே அந்நகரத்து மாந்தர்களில் மாறுபடுங் குணமுடையவர்களும், செல்வ முதலியவை இல்லாமையால் தளர்ச்சி உறுகின்றவர்களும், பிறர் அடிகளின்மீது வீழ்ந்து தம் குறைகளை முறையிட்டுப் புலம்புகின்றவர்களும், பலவிதத் துக்கங்களால் மனக்கலக்கம் அடைகின்றவர்களும், சன்மார்க்கத்தி னின்று விலகுகின்றவர்களும் ஒருவரும் இல்லை என்பதாயிற்று.

சிலை முதலியவற்றை மணிதரிற் பிரித்தலால் ஏகாரங்கள் பிரிநிலை. கஞ்சம் என்ற சொல்லிலும் பிரிநிலை ஏகாரம் பிரித்துக் கூட்டப்பட்டது. மென்குழல்-பண்புத் தொகை, மென்மையாகிய குழல் எனவிரியும். காரிகை-அழகு; ஆர்-பலர்பால் விகுதி. அழகையுடைய பெண்களை உணர்த்திற்று (காரிகை யென்பது கலித்துறையென்னும் பாவினுக்குமொரு பெயர்) பெண்கள் கண்கள் பொய்ந்நெறியைவிட்டு விலகுதலாவது, தந்தம் நாயகரைக் காணுந்தோறும் உண்டாகும் நாணத்தாலும், மகிழ்ச்சியாலும்நேரே பாராத, பொய்ந்நெறியிற் செல்லாத கண்களை வளைத்துக் கீழ் நோக்கிச் செலுத்துதல். பொய்+நெறி - எண்மூ வெழுத்தீற் றெவ்வகை மொழிக்கும் என்ற (உயிர் புணரி-சூ-8.) சூத்திரத்தில் குறில் வழியத்தனியைந்நொது முன்மெலி மிகலுமாம், என்ற விதிப்படி பொய்ந்நெறி என நகரம் மிகுந்தது. விலங்குவன, விலகுவன என்பது எதுகை

நோக்கி விரிந்தது. சிலை முதலிய பால்பகா அஃறிணைப் பெயர்கள் கோடுவன முதலிய பலவின்பாற் படர்க்கை வினைமுடிபால் பாற் பொதுமை நீங்கின. கோடுவன முதலியவற்றை மனிதர்களை ஒழித்துச்சிலை முதலானவற்றிற் காட்டலால் ஒழித்துக் காட்டணியாம்.

16. தெரிவனநூ லென்றுந் தெரியா தனவும்
வரிவளையார் தங்கண் மருங்கே—ஒருபோழுதும்
இல்லா தனவு மிரவே இகழ்ந்தேவருங்
கல்லா தனவுங் கரவு

(இ-ள்.) என்றும்-எக்காலத்தும், தெரிவன-யாவராலும் அறியப் படுவன, நூல்-சாஸ்திரங்களே, தெரியாதனவும்-தெரியப்படாதவை களும், வரிவளையார் தங்கள்-ரேகைகளையுடைய வளையல்களை யணிந்த பெண்களுடைய, மருங்கே-இடைகளே, ஒருபொழுதும்-எப்பொழு தும், இல்லாதனவும்-இல்லாதவைகளும், இரவே-யாசகமே, எவரும்-எப்படிப்பட்டவரும், இகழ்ந்து-எளனஞ் செய்து, கல்லாதனவும்-கற்காதவைகளும், கரவு-வஞ்சக ஒழுக்கங்களே ஆகும்; (எ-று.)

எனவே அந்நகரத்திலுள்ள ஆடவர் அறிவு நூற்பயிற்சி மிகுதி யுடையாரென்பதும், பெண்கள், மார்பு தலை முதலிய உறுப்புக்கள் மேலிருத்தல் பற்றி இடையுடையாரென அநுமித்துணரத்தக்க நுண்ணிய இடையையுடைய உத்தம இலக்கணம் வாய்ந்தவர்கள் என்பதும், வாழ்க்கைக்குரிய பெருஞ் செல்வம் நிரம்பப் பெற்றவர்க ளென்பதும், வஞ்சகமில்லாத மெய்ந்நெறியிலொழுகும் ஒழுக்க முடையா ரென்பதும் பெறப்படும்.

நூலென்றது இவ்வுலக இன்பத்திற்கு ஏதுவாகிய நூல்க ளல்லாத வீட்டின்பத்திற்கு ஏதுவாகிய ஞானநூல்களை. பஞ்சினு லியன்றநூல் ஒரு மரத்தின் கோணலைத்தீர்த்துச் செப்பஞ்செய்வது போல உயர்ந்தோ ரியற்றிய கலைகளும் மனிதருள்ளத்தின் அறியாமை யாகிய கோட்டத்தை ஒழித்துச் சீர்ப்படுத்துதலால் நூல் எனப்பட் டது. ஆகையால் நூல் என்றது உவமையாகுபெயர். என்றும், எவரும்,-உம்மைகள் முற்றுப்பொருளன. வரிவளையார், இரண்டனுரு பும் பயனுந்தொக்கதொகை; வளை-வளைந்திருப்பது காரணச் சிறப் புப்பெயர். வரி சித்திரவேலைப்பாடு. இரவு, கரவு, தொழிற்பெயர் கள். ஏகாரங்கள் பிரிநிலை, நூல் கரவு என்ற இடங்களிலும் பிரிநிலை யேகாரம் கூட்டியுரைக்க. தெரிவன, தெரியாதன, இல்லாதன, கல்லா தன, என்ற செயப்பாட்டு வினைகளில் படுவிகுதி தொக்கு நின்றது.

17. மாமனுநூல் வாழ வருசந் திரன்சுவர்க்கி
தாமரையாள் வைகுந் தடந்தோளான்—காமருபூந்
தாரான் முரணைநகர் தானேன்று சாற்றலாம்
பாராளும் வேந்தன் பதி.

(இ-ள்.) பார்ஆளும்—பூமியை ஆளுகின்ற, வேந்தன்-நளமகாராசனது, பதி-மாவிந்தநகரம், தாமரையாள்-செந்தாமரை மலரிலுள்ள வீரலட்சுமி, வைகும்-தங்குகின்ற, தடம்தோளான்-பெருமை பொருந்திய தோளையுடையவனும், காமர்-அழகிய பூதாரான்-மலர்களாகிய மாலை அணிந்தவனுமாகிய, மாமனுநூல்-பெருமைதங்கிய மனுதர்மசாஸ்திரம், வாழ-வளரும்படி, வரு பிறந்த, சந்திரன் சுவர்க்கி-சந்திரன் சுவர்க்கி என்னும் அரசனால் செங்கோலோச்சி வரப்பட்ட முரணைநகர்தான் என்று-முரணை நகரமே என்று, சாற்றலாம்-சொல்லலாம்; (எ-று.)

நளமகாராசனது மாவிந்த நகரம் வள்ளுவநாட்டுச் சந்திரன் சுவர்க்கி முரணைநகரை ஒத்திருக்கும் என்றவாறும். இதனால் மாவிந்த நகரத்திலும் முரணைநகர்வளன் வனப்புவகையால் உயர்ந்ததெனக் கூறியபடியாம். இங்ஙனம் சந்திரன் சுவர்க்கியைப் பற்றியும், அவன் நாடுநகரங்களைப்பற்றியும் இவர் இந்நூலினிடையிடையே புகழ்ந்து பேசுதற்குக் காரணம் நூலாசிரியர் வரலாற்றில் கூறப்பட்டிருத்தல் காண்க. அரசர்தோளில் வீரலக்குமி வீற்றிருப்பதாகக் கூறுதல் கவிமரபு. "திருவுடை மன்னரைக்காணிற் திருமாலைக் கண்டேனே" எனப்பெரியார் பணித்தபடி மன்னர்கள் விஷ்ணு அம்ஸமாவராகலின் 'தாமரையாள் வைகுந் தடந்தோளான்' எனக் கூறினாரெனினும் பொருந்தும் 'தாமரை' எனப் பொதுவகையாற் கூறினாரேனும் இலக்குமி தேவிக்குரிய செந்தாமரையேகொள்க.

மநுநூல் - சூரியகுலத்தரசனாகிய மநுவென்பான் செய்த தர்ம சாஸ்திரம். அது வாழ்தலாவது - அந்நூல் கூறும் விதிவிலக்குகளை அறிந்து தன்னரசின்கீழ் உள்ள குடிகளை ஒழுகச்செய்தலால் அத்தருமம் உலகத்தில் கெடாது மேலும்மேலும் பரவுதல். சந்திரன்சுவர்க்கி-உலகத்தார்க்குச் சந்திரன் போலத் தண்ணளியால் மகிழ்வளித்துப் புகழ்நிலாவைப் பரப்புபவன். இனிச்சந்திரன் என்பவனுக்கு மகனாகிய சுவர்க்கியெனினுமாம். இதைச் சந்திரவாணன்' 'ஆதித்தன் கம்பன்' என்ற பெயர் வழக்கிலுங் காண்க. நூல் இருமடியாகுபெயர். வாழ-காரியப் பொருட்டாய செயவெனெச்சம். வரு - இறந்தகால வினைத்தொகை; இது வந்த என விரியும் தடந்தோள் - உரிச்சொற்றொடர். காமரு - காமர்-உ-சாரியை, காமர்-கண்டாரால் விரும்பப்படுந்தன்மை; இஃது உரிச்சொல். பூ + தார்-பூந்தார். "பூப்பெயர் முன்னினமென்மையுந் தோன்றும்" (நன்-உயிர்-சூ-50) என்ற விதிப்படி வருகிற வல்லினம் பொதுவிதியால் மிகாமல் இனமாகிய நகரமெல்லினம் தோன்றிற்று; மூன்றும் வேற்றுமை உருபும், பயனுந்தொக்கதொகை.

18 ஓடாத தானை நளனென் றுளனொருவன்
பீடாருஞ் செல்வப் பெடைவண்டோ—டோ
முருகுடைய மாதர் முகநனைக்குந் தண்டா
ரருகுடையான் வெண்குடையா னங்கு.

(இ-ள்) ஆங்கு- அந்நகரத்தில், பீடுஆரும் - பெருமை நிறைந்த, செல்வம் பெடை-சிறப்பமைந்த பெண்வண்டு, வண்டுஓடு ஊடா-ஆண் வண்டுகளோடு பிணங்கிக்கொண்டதனால், உடைய - அரும்புகள் கட்டவிழ(அதனால்,)முருகு-(ஒழுகுகின்ற)தேன், அருகுமாதர்முகம்-பக்கத்திலுள்ள பெண்கள் முகங்களை, நனைக்கும் - நனையப்பண்ணு கின்ற, தண்தார்உடையான்-குளிர்ந்த மாலையை மார்பில்உடையவனும், வெண்குடையான் - வெண்மையான குடையை யுடையவனும் ஆகிய, ஓடாததானை - (பகைவர் சேனைக்குப் பயந்து பின்னிட்டு) ஓடாத சேனை களையுடைய, நளன்என்று-நளமகாராஜனென்று சிறப்பித்துச் சொல் லப்படுகின்ற, ஒருவன்-ஒரு அரசன், உளன் - இருந்தான்; (எ-று)

ஆங்கு நளனென்றொருவன் உளன் எனமுடிக்க. முருகுடைய மாதர் முகநனைக்குந்தண்டார் என்ற குறிப்பால், தன்னைச் சேர்ந்தோர்க் கெப்போதும் இதம்செய்கின்ற தண்ணளியை உடையானென்பது புலப்படும். மாதர் என்றது அரசனது பட்டமகிஷிகளை அருகினின் றும் ஏவல் செய்யும் பரிசாரிகை மகளிரை எனினுமொக்கும். மாதர் என்னும் உரிச்சொல் ஆகுபெயராய்ப் பெண்களை உணர்த்திற்று. மாதர் - காதலென்னும் பொருளது; "மாதர்காதல்" என்பது தொல் காப்பியவிதி. மாதர்முலைநனைக்குமெனவும், மாந்தர்முகநனைக்குமென வும், பிரதிபேதமுண்டு. வெண்குடையான் என்ற குறிப்பால் கலி யிருள்கெட அரசுசெலுத்தும் புகழுடையான்என்பதும்; ஓடாததானை நளன் என்றதால், பகைவர்க்கு எஞ்ஞான்றும் தோற்காது வெற்றியே கொள்ளும் பேராற்றல் உடையவன் என்பதும் பெற்று நளனது கருணையும், வீரமும் வெளியாம்.

ஆங்கு என்னும் சுட்டு, மேற்செய்யுளிற் கூறிய பதியென்றதைக் குறித்து நின்றது. செய்யுளாதலின் சுட்டு முதல் நீண்டது. வண்டுக் குச்செல்வமாவதுபொன்ரேகைகளையும்,பொற்சிறகுகளையுமுடைமை. பெடை - பறவையின் பெண்பாற் பெயர். ஊடுதல்-கலவியில் நிகழும் பிணக்கம். ஊடுதல் அரும்புடைதலுக்கும், அரும்புடைதல் தேன் ஒழுகுதலுக்கும் காரணம். முருகு என்பதைத் தேன் எனப்பொருள் கொள்ளாது மாதர்க்கு விசேஷணமாக்கி இளமையுடைய மாதரென உரைத்தலுமொன்று. இப் பொருளுக்கு, பெடையூடுதலால் தன் கண்ணுள்ள தேனால் முகங்களை நனைக்குமென மாலையைக் கருத்தா வாகக் கொள்க. தண் + தார்-"னலமுன்றனவும் ணளமுன்டணவும் ஆகுந்தநக்களாயுங்காலே" என்றவிதிப்படி, ணகரத்தின் முன்வந்த தகரம் டகரமாயிற்று. ஊடா - காரணப்பொருளில் வந்தது, எச்சத் திரிபு. ஓடாத - எதிர்மறைப் பெயரெச்சம். தானை, முகம்-வடசொற் றிரிபு. வண்டு -மென்றொடர்க்குற்றியலுகரம், ஒடு என வருமொழி முதலில் உயிர்வரக்கெட்டு நின்ற மெய்யின்மேல் உயிர் ஏறிநின்றது. ஓடு - மூன்றனுருபு.

[நளனது செங்கோற் சிறப்பு.]

19. சீத மதிக்குடைக்கீழ்ச் செம்மை யறங்கிடப்பத்
தாதவிழ்பூந் தாரான் றனிக்காத்தான்—மாத
ரருகூட்டும் பைங்கிளியு மாடற் பருந்து
மொருகூட்டில் வாழ வுலகு.

(இ-ள்) தாது - மகரந்தப்பொடி, அவிழ் - சிந்துகின்ற, பூந்தாரான் - பூமாலை யணிந்த நளமகாராசன், சீதம்மதிக்குடைகீழ் - குளிர்ச்சி பொருந்திய சந்திரன் போன்ற தனது குடைநிழலின்கீழ், செம்மை அறம் - குற்றமில்லாத தருமங்கள், கிடப்ப - நிலைநிற்கவும், மாதர் - பெண்கள், அருகு ஊட்டும் - பக்கத்தில் வைத்து உணவுகளை ஊட்டி வளர்க்கின்ற, பைங்கிளியும் - பசுமையாகிய கிளிகளும், ஆடல்பருந்தும் - வலிமையை யுடைய பருந்தும், ஒரு கூட்டில் - ஓரே கூண்டில், வாழ - சேர்ந்து வசிக்கவும், உலகு - உலகத்தை, தனிக்காத்தான் - பிறருக்குப்பொதுவில்லாமல் ஆண்டான்; (எ-று.)

தாரான் கிடப்ப, வாழ, உலகுகாத்தான் எனக்கூட்டுக. அவன் குடையைச் சீதமதிக்குடையெனக் கூறுதலால், குடிகள் யாதொரு துன்பமு முறாது இன்புற்று வாழ்ந்தார்களென அவனது அரசாட்சி நலனும், விளக்கமும் கூறியவாறு. மதிக்குடை உவமைத்தொகை; மதி - மதுவை (அமிர்தம்) உடையது. மதி, குடைக்கு உவமை வட்டவடிவிலும், பகுத்தறிவில்லாத பறவைகளும் தம்முட் பகையின்றி அன்பும், அருளும் பொருந்திவாழ உலகுகாத்தான் என்ற குறிப்பால், வலியார் மெலியாரை வருத்துதலும் இன்றி, நட்போடு வாழ்ந்தன ரெனக் குறிப்பித்தவாறும். இதனால் அவனது ஆட்சியில் சாந்த குணமே தலைநின்றது என்பது புலனாகும். "ஒருதுறைப்புனல் சினப் புலியுமானு முடனே உண்ணவைத்த உரவோன் உலகில்வைத்தவருளும்" என்ற சயங்கொண்டார் வாக்கும் ஈண்டு ஒப்புநோக்கத்தக்கது.

ஊட்டும் உண் - பகுதி, டு - பிறவினைவிகுதி, பகுதிமுதல் நீண்டது விகாரம், ணகரம் - டகரமாதல்விகாரம், உம்-பெயரெச்சவிகுதி. வாழ, கிடப்ப-காரியப்பொருளில் வந்த செயவெனெச்சம். பைங்கிளி-பசுமை+கிளி, ஈற்றுமைகெட்டு, முதல் அகரம் ஐகாரமாகி, சகர உகரங்கெட்டு, ஙகர இனவெழுத்து மிக்கது. ஆடற்பருந்து வேற்றுமையில் வல்லினம்வர லகரம் றகர மாயிற்று. அவிழ்-வினைத்தொகை. தனிக்காத்தலாவது பலநாடுகளையும் வென்று, தீயவழியிற் புகப் பிறருக்கும் சிறிதுஞ் சுதந்தரமின்றி ஆளுதல். இதனால் இவன் சக்ரவர்த்தி யென்பது புலப்படும். செல்வமகளிர் கிளி பூவை முதலிய பறவைகளைப் பொழுது போக்கிற்காக வளர்த்தல் வழக்கம்.

[நளன் சோலை புகுதல்]

20 வாங்குவளைக் கையார் வதன மதிபூத்த
பூங்குவளைக் காட்டிடையே போயினான்—தேங்குவளைத்
தேனாடி வண்டு சிறகுலர்த்து நீர்நாடன்
பூநாடிச் சோலை புக.

(இ-ள்.) தேன்குவளை - வாசனையிருந்த குவளை மலர்களிலுள்ள, தேன் - தேன்களில், ஆடி - முழுகி, வண்டு - வண்டுகள், சிறகு உலர்த்தும் - இறகுகளை உலரச்செய்கின்ற, நீர்நாடன் - நீர்வளமிக்க நிடத நாட்டரசனாகிய நளன், பூநாடி - மலர்களை விரும்பி, சோலைபுக-சோலையில் போகிறதற்கு, வாங்கு - வளைந்த, வளைக்கையார் - வளைகளையணிந்த கைகளையுடைய பெண்களின், வதனமதி - முகமாகிய சந்திரனிடத்து, பூத்த-மலர்ந்த, பூங்குவளைக் காட்டிடையே- (கண்களாகிய) அழகிய நீலோற்பலக்காட்டின் நடுவில், போயினான்-சென்றான்;(எ-று.)

நாடன், பூநாடி காட்டிடையே சோலைக்குள் போயினான் என முடிக்க. வாங்குவளைக்கையார் என்பதை வளைவாங்குகையார் எனக் கொண்டு, நளனது அழகில் ஈடுபடலால் காமத்தாலுடல் மெலிதல் பற்றித் தாமே கையினின்றும் கழல்கின்ற வளையல்களையுடைய பெண்கள் எனினுமாம். வதனமதிபூத்த பூங்குவளையென்றது முகத்தின்கண்ணுள்ள கண்களை. இத்தொடர் உருவகம். மதிபூத்த, மதியானது பூத்த என முதல் வேற்றுமையாக்கினுமாம் பூங்குவளைக் காட்டிடையே போயினானென்றதன் கருத்து; பெண்கள், தனது கட்டழகை வியந்து பார்த்துக்கொண்டிருக்கப் போயினான் என்பதாம்.

குவளை முதலாகுபெயராய் மலரையுணர்த்திற்று. காடு-தொகுதி; தொகுதியைக் காடென்றல் மரபு. போயினான் - ஆண்பால் இறந்தகாலவினை முற்று போ, பகுதி, ய் இறந்தகால இடைநிலை. இன் சாரியை, ஆன் விகுதி. உலர்த்தும் - பிறவினைப்பெயரெச்சம். தேன் × குவளை-தேங்குவளை 'தேன்மொழி மெய்வரினியல்பும்' என்ற (நன்-மெய்-சூ-11.) சூத்திரத்து வலிவரின் ஈறுபோய் மெலிமிகலுமாமிரு வழி என்ற விதிப்படி ஙகர மெல்லெழுத்து மிகுந்து வந்தது.

[வசந்தகால வருகை.]

21 வென்றி மதவேடன் வில்லெடுப்ப வீதியெல்லாம்
தென்றன் மதுநீர் தெளித்துவர—நின்ற
தளவேனல் மீதலரும் தாழ்வரைசூழ் நாடற்
கிளவேனில் வந்த தெதிர்.

(இ-ள்.) நின்ற (முல்லைநிலத்தில்) வளர்ந்துநின்ற, தளவு-முல்லைக் கொடிகள், ஏனல்மீது - (குறிஞ்சி நிலத்திலுள்ள) தினைப்பயிரின்மேல்

படர்ந்து, அலரும் - மலர்கின்ற, தாழ்வரை - அடிவாரத்தோடுகூடிய மலைகள், சூழ்நாட்டிற்கு எதிர் - சூழ்ந்த நாட்டையுடைய நளனுக்கு, எதிரில், வென்றி-வெற்றியையுடைய, மதன்வேள்-மன்மதன், தன்வில் எடுப்ப-பொரத் தனது வில்லைக் கையிலெடுக்கவும், தென்றல் - தென்றற்காற்று, வீதிஎலாம்-அரசன் செல்லும் வீதிமுழுமையும், மதுநீர்-(மலர்களின்) தேனாகிய நீரை, தெளித்துவர - தெளித்துக்கொண்டு வரவும், இளவேனில் - இளவேனிற் காலமானது, வந்தது - வந்து சேர்ந்தது, (எ-று.)

நாடற்கு எதிர் இளவேனில் எடுப்ப, வர, வந்தது என இயைக்க. இனி, நளன் தமயந்தியின்மீது விருப்பங்கொண்டு வருந் தன் செய்தியைக் கூறுவாராதலால், அதற்கிணங்க மன்மதனுக்குப் போர்த்தொழிலில் ஊக்கமுங்களிப்பும் மிகுதியுமுண்டாகுதற்குரிய இளவேனிற்காலம் நளனை எதிர்கொண்டதாகக் கூறினார். இளவேனில்-சித்திரை வைகாசி மாதங்கள். ஆடவர்க்கும், பெண்டிர்க்கும் ஒருவர்க்கொருவர் வேட்கை (ஆசை)யை உண்டாக்குதலாலும், யாவராலும் விரும்பப்படுகின்ற கட்டழகை யுடைமையாலும், மன்மதனுக்கு வேள் எனப்பெயர். இது காமன் என்னும் வடசொல்லின் பொருள்கொண்டது. வேள் என்னும் பெயர் முருகக்கடவுளுக்கும் உடைமைப்பற்றி வேறுபடுத்த, மதவேள் என்றார். மதவேடன் வில்லெடுப்ப-வில்லென்ற ஆயுதவுரிமைபற்றி மதனாகியவேடன் எனப் பொருள் கொள்ளினுமாம். மன்மதனுக்கு வென்றியாவது-விரும்பின வரைத் தன்வசப்படுத்துதல்: வில் - கரும்புவில், புஷ்பவில்லும் இரும்பு வில்லும் கூறுவர். தென்றற்காற்று, பலசோலைகளிலும் படிந்து மலர்களிலுள்ள தேன்களை வாரிக்கொண்டு வந்து, இறைத் தலால் தென்றன்மதுநீர் தெளித்துவர என்றார். ஒரு பிரபுவருகை யில் மெய்காப்பார் விற்பிடித்து உடன் வருதலும், வாசனைநீர் வழி யில் தெளிக்கப்பெற்றிருத்தலும், இயல்பாதலால் இளவேனிலும் இங் ஙனம் வந்ததென்றார். இங்ஙனம் வந்ததெனவே அரசனை வெல்லக் கருதிச் செருக்குடன் வந்ததென்பது தொனிக்கும். வீதியெலாம் எலாம் என்னும் பன்மைப்பெயர் இடப்பன்மை குறித்து நின்றது; இடைக்குறை. முல்லைநிலத்துக்குரிய முல்லைக்கொடிகள் குறிஞ்சி நிலத்துக்குரிய தினைப்பயிர்கள்மீது படருமெனக்கூறியது திணைமயக் கம். (திணைமயக்கமாவது ஒரு நிலத்துக்குரியபொருள் மற்றொரு நிலத் திற்கலந்து கிடப்பதாகக் கூறுதல்) இதனால் நிடதநாட்டில் முல்லைக் கும், குறிஞ்சிக்குமுள்ள அணிமையும், இந்நாடு மலையரணிற் சிறந்த தென்பதும் விளங்கும்.

சூழ்-வினைத்தொகை. எடுப்ப, வர-செயவெனெச்சங்கள். வரை-யென்னும் கணுவின்பெயர் மூங்கிலுக்காய் மூங்கில் மலைக்காதலால் இரு மடியாகுபெயர். வேள் + தன்-வேடன் 'னலமுன்றனவும்'

என்ற சூத்திர விதிப்படி னகரத்தின்பின்வந்த தகரம் டகரமாகி 'குறில் செறியாலள' என்ற சூத்திரவிதிப்படி ளகரம் கெட்டது. வென்றி-தொழிற்பெயர். வெல்,-பகுதி, றி-விகுதி, ல்கரம் னகரமானது விகாரம். மதன் X வேள்-மத வேள் 'சிலவிகாரமா முயர்திணை' என்ற விதியால் னகரம்கெட்டது.

[நளன் பூஞ்சோலையடைதல்]

22. தேரிற் றுகளைத் திருந்திழையார் பூங்குழலின்
வேரிப் புனனனைப்ப வேயடைந்தான்—கார்வண்டு
தொக்கிருந்தா லித்துழலுந் தூங்கிருள்வெய் யோற்கோதுங்
புக்கிருந்தா லன்ன பொழில். [கிப்

(இ-ள்) கார்வண்டு-கருமையாகிய வண்டுகள், தொக்கு இருந்து-கூடியிருந்து, ஆலித்து-சந்தோஷித்து, உழலும்-உலாவித்திரிகின்ற, தூங்கு இருள்-மிகுந்தஇருள், வெய்யோற்கு ஓதுங்கி-சூரியனொளிக்குப் (பயந்து) மறைந்து, புக்கு இருந்தால் அன்ன-புகுந்திருப்பதையொத்த, பொழில்-சோலையை, தேரின்துகளை-தேர் செல்லுதலாலுண்டாகும் தூசிகளை, திருந்து இழையார் - திருத்தமான ஆபரணங்களையணிந்த பெண்களது, பூங்குழலின் - பூவையணிந்த கூந்தலினது, வேரிப்புனல்-தேனாகிய நீர், நனைப்ப - நனைக்கும்படி, அடைந்தான் - (நளமகாராஜன்) சேர்ந்தான்;

பெண்களினது குழலின் வேரிப்புனல் தேர் செல்லுதலாலெழுந்த துகளை நனைப்பப்பொழில் அடைந்தான் நளன் என்க.

நளன் என்னும் வினைமுதல் வருவித்துரைக்கப்பட்டது. சோலைகளில் மரங்கள் நெருங்கித் தழைத்திருத்தலால் சூரியனொளி உட்புகப்பெறுமல் குளிர்ந்து இருண்டிருத்தலால் சூரியனுக்குப் பயந்த இருள் குடியிருந்தாற்போல்வதாயிற்று. "வெயினுழைகல்லாக் குயினுழை பொதும்பர்" என்றபடி. உழலும் பொழில், புக்கிருந்தாலன்ன பொழில் எனக்கூட்டுக.

வண்டுகள் சோலையிலுள்ள தேனை மிகுதியாகவுண்டு செருக்கித் திரியுமாதலால், ஆலித்துழலும் என்றார். வெய்யோன் - வெம்மையென்னும் பண்படியாகப் பிறந்தபெயர்; செய்யுளில் விகுதி ஆ ஓவாயிற்று. அன்ன - குறிப்புப் பெயரெச்சம். நளனுடன் செல்லுகின்ற பரிசாரிகைப் பெண்கள் கூந்தலிற் சூடியுள்ள மாலையினின்றும் ஒழுகும்தேன் அவன் ஏறிச்செல்லும் தேர்ச்சக்கரத்தினின்றும் உண்டான புழுதியை நனைத்து அடக்குகின்றனஎனக்கூறினார். இதனால் பெண்கள் சூடியுள்ள மாலைகளினது தேன்மிகுதி விளங்கும். தேரின்-இன் ஏதுப்பொருளில் வந்த ஐந்தனுருபு. இழை-இரத்தினங்கள் இழைத்துச் செய்யப்பட்

டது: கணைப்பவே-ஏ அசை. கார் கருமையென்ற பண்பின் விகாரம், பெருமையுமாம். தொகு, புகு, என்ற பகுதிகள் தொக்கு, புக்கு என இரட்டித்து இறந்தகாலங்காட்டின.

[அந்த நளன் ஓர் அன்னப்பறவையைக் காணுதல்]

23 நீணிறத்தாற் சோலை நிறம்பெயர நீடியதன்
றாணிறத்தாற் பொய்கைத் தலஞ்சிவப்ப—மாணிறத்தான்
முன்னப்புட் டோன்று முளரித் தலைவைகு
மன்னப்புட் டோன்றிற்றே யாங்கு.

(இ-ள்) அப்புஉள் - ஜலத்தில், தோன்றும் - உண்டாகின்ற, முளரித்தலை - தாமரை மலரிடத்து, வைகும் - வாசஞ்செய்யும்படியான, அன்னப்புள் - அன்னப்பறவையானது; - நீள்நிறத்தால் - நெடுந்தூரம் விளங்குகின்ற தனது இறகின் வெண்ணிறத்தால், இருண்ட அந்தச் சோலையானது, நிறம்பெயர - நிறம் வேறுபடவும்; நீடியதன்தாள்நிறத்தால் - நீண்ட தன்னுடைய கால்களில் சிவந்த நிறத்தால், பொய்கை தலம் - தடாக இடம், சிவப்ப சிவக்கவும், ஆங்கு - அச்சோலையில், மாண்நிறத்தான்முன் - மாட்சிமை வாய்ந்த நிறத்தையுடைய அதாவது மார்பையுடைய நளராசனுக்கு முன்னே, தோன்றிற்று - காணப்பட்டது. (எ-று.)

அன்னப்புள் பெயர, சிவப்ப ஆங்குமுன்தோன்றிற்று என இயையும்.

உடல்முழுவதும் வெளுத்தும், காலும், மூக்குஞ் சிவந்தும் விளங்குகிற உத்தம இலக்கணம்வாய்ந்த அரச அன்னமாதலால் 'நீணிறத்தாற் சோலை நிறம்பெயர, நீடியதன் றாணிறத்தாற் பொய்கைத் தலஞ் சிவப்பத்' தோன்றிற்று என்றார். சோலைநிறம்பெயர்தலாவது தனது இருண்ட நிறம் கெட்டுப் பிரகாசமாகிய வெண்ணிறமாதல்.

பெயர, சிவப்ப-காரியப்பொருளில்வந்தசெயவெனெச்சம். மாண் நிறத்தான் - மாட்சிமைப்பட்ட மார்பையுடையவனெனலே பொருந்தும். முளரி-அதன் பூவிற்காதலின் முதலாகுபெயர். முள் அரைகளை யுடையது என்பது பொருள். (அரி-தண்டு,) அன்மொழித்தொகை. தலை-ஏழனுருபு. நீடிய-இறந்தகாலப்பெயரெச்சம், நீடு-பகுதி, இன்-இறந்தகால இடைநிலை, அ-பெயரெச்ச விகுதி, இடைநிலை னகரக் கேடு கடைக்குறை. முன்னப்புள், அன்னப்புள் என்ற அடிகள் திரிபுநயம். அன்னங்கள் தாமரை மலரைச் சயனமாகக் கொண்டிருத்தல் இயல்பு.

[அரசன் பரிசாரிகைப் பெண்ணிடத்து அன்னத்தைப்பிடித்துத் தரச்சொல்லுதல்]

24 பேதை மடவன்னந் தன்னைப் பிழையாமன்
மேதிக் குலமேறி மென்கரும்பைக்—கோதிக்
கடித்துத்தான் முத்துமிழுங் கங்கைநீர் நாடன்
பிடித்துத்தா வென்றான் பெயர்ந்து.

(இ-ள்.) மேதிக்குலம் - எருமைக்கூட்டம், ஏறி - வயல்களிற் சென்று, மென்கரும்பை-மென்மையான கருப்பங்கழிகளை, கடித்துக் கோதி-கடித்துத்தின்று, முத்துஉமிழும்-முத்துக்களைக் (கடைவாயி னின்றும்) கக்குகின்ற, கங்கைநீர் நாடன்-கங்கைநதிபாய்கின்ற விடத நாட்டரசன், பெயர்ந்து-அங்கேபோய், பேதை-பெண்ணே! மடம் அன்னம்தன்னை-இளமையான அன்னப்பறவையை, பிழையாமல்-தப் பாமல், பிடித்துத்தா என்றான்-பற்றிக்கொடு என்று கேட்டான். (எ-று.)

நீர்நாடன் பெயர்ந்து, சென்று பேதைஎன்னும் பெண்ணே! அன்னந்தன்னைப் பிடித்துத்தாவென்றான் எனக்கூட்டுக.

எருமைகள் கரும்புகளைக் கடித்துத்தின்னும்பொழுது, அக்கரும் புகளின் கணுக்களிலுள்ள முத்துக்கள் அவைகளின் கடைவாயிலொ தூங்கிக் கீழேவிழும் என்றார். இதனால் நாட்டின் வளப்பமிகுதி கூறிய வாறும். கரும்பு முத்துப்பிறப்பிடங்களில் ஒன்றாதலால் இங்ஙனம் கூறினார். இதனைத் "தந்திவராக மருப்பிப்பி பூகந்தழைகதலி, நந்து சலஞ்சல மீன்றலைகொக்கு நளினமின்னார், கந்தரஞ்சாலி கழைகன்ன லாவின்பற்கட் செவிகார், இந்துவுடும் புகரா முத்தமீனு மிருபதுமே" என்ற, இந்நூலாசிரியர் செய்துள்ள இரத்தினச்சுருக்கத்துச் செய்யு ளாலுணர்க.

பெயர்ந்து என்பதற்குப் பூக்கொய்யச்சென்ற எண்ணம் மாறி எனப் பொருள்கூறினும் பொருந்தும். பேதை என்றது உடன் சென் றிருந்த பரிசாரிகைப்பெண்களிலொருத்தியை; இது பெண்கள் குணம் நான்கனுளொன்றாகிய மடமைக்குணம். 'பேதமையென்பது மாதர்க் கணிகலம்' என்றதனாலு முணர்க; பண்பாகுபெயராய்ப் பண்பியை உணர்த்தி நின்றது; அண்மைவிளி, குலம்-கூட்டம், வடசொல். பிழையாமை-தப்பிஓடாமை. தா என்ற ஏவலொருமை வினை முற்று. அரசனாகிய மிக்கோன் இரப்புரையாய் நின்றமையால், மரபுவழுவ மைதி. தான்-அசை.

[பெண்கள் அரசன் கட்டளையால் அன்னத்தைப் பிடித்துக் கொணர்தல்.]

25. நாடிமட வன்னத்தை நல்ல மயிற்குழா
மோடி வளைக்கின்ற தொப்பவே—நீடியநற்
பைங்கூந்தல் வல்லியர்கள் பற்றிக் கொடுபோந்து
தங்கோவின் முன்வைத்தார் தாழ்ந்து.

(இ-ள்.) நல்லமயில்குழாம்-சிறந்த மயில்கூட்டம், மடம் அன்னத்தை நாடி-இளமையையுடைய அன்னப்பறவையைப் பிடிக்கவிரும்பி ஓடி-சுற்றி, வளைக்கின்றது ஒப்ப-வளைத்துக் கொள்வதைப் போல, நீடிய-நீண்ட, நல்பசுமைகூந்தல்வல்லியர்-நல்ல அழகிய கூந்தலையுடைய பூங்கொடிபோன்ற பெண்கள், பற்றிக்கொடுபோந்து-அன்னத்தை (வளைத்துப்) பிடித்துக் கொண்டுவந்து, தம்கோவின்முன்-தங்கள் அரசனாகிய நளனுக்கு எதிரில், தாழ்ந்துவைத்தார் வணங்கி வைத்தார்கள்; (எ-று.)

இப்பெண்கள் மயில்போல மெல்லிய சாயலுடையவர்களாகையால் இவர்கள் மடவன்னத்தையோடி வளைக்கின்றமைக்கு மயிற்குழாம் ஓடி வளைப்பதை உவமைகூறினார். *மாதர்களை மயிற்குழாம் போன்று என்றதற்கேற்ப, அவிழ்ந்துதொங்கிய கூந்தல், மயில்களின் கலாபம் போன்றிருந்தது என்பார் நீடியநற்பைங்கூந்தல் என்றார். இங்ஙனம் கூறியவாற்றாலே அன்னத்தைப் பிடிக்கவேண்டுமென்ற அவாவினால் கூந்தல் சோர்தல் முதலியவற்றையும் மதித்திலர் என்பதும் விளங்கும். பசுமையையுங் கருமையையும் வேறுபாடின்றிக்கூறும் மரபால் கருங்கூந்தலைப் பைங்கூந்தலென்றார். நெய்தோயப்பெற்று மயிர்ச்சாந்தணிந்து விளங்குதலின் 'பைங்கூந்தல்' என்பதற்கு வளப்பமிக்க கூந்தலெனினுமாம்.

வல்லியர்கள்-விகுதிமேல்விகுதி. வல்லி-உவமஆகுபெயர். வல்லி-பெண்களின் உறுப்புக்களில் இடைக்கும், அவர்களது மெல்லிய தன்மைக்கும் உவமை கூறப்படும். நாடி-அரசன் ஆணையைக்கருதியுமாம். செய்து என்னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம். கொடு-கொண்டு என்பது இடைக்குறை விகாரமாயிற்று. கோவின்-இன் சாரியை, கோ-தலைமையுணர்த்தும் ஓருசொல். முன்-இடமுன். வளைக்கின்றது-நிகழ்காலத் தொழிற்பெயர். நல்ல-நன்மையென்னும் பண்பினடியாகப்பிறந்த குறிப்புப்பெயரெச்சம். இச்செய்யுள் உவமையணி. [illegible]சை.

* இந்நளசரிதம்கூறும் தமிழ் நைடத நூலில் 'ஓதிமம், பாளியந்தோளினன் கையிற்பற்றினன்' எனநளனே அன்னத்தைப் பிடித்ததாகக் கூறியிருத்தல் ஈண்டு அறியத்தக்கது.

[அப்பொழுது அன்னங்கலங்குதல்.]

26. அன்னந் தனைப்பிடித்தங் காயிழையார் கொண்டுபோய்
மன்னன் றிருமுன்னர் வைத்தலுமே—யன்ன
மலங்கிற்றே தன்னுடைய வான்கிளையைத் தேடிக்
கலங்கிற்றே மன்னவனைக் கண்டு.

(இ-ள்.) அங்கு-அச்சோலையில், ஆய்இழையார்-ஆராய்ந்தெடுத்த ஆபரணங்களையணிந்தபெண்கள், அன்னம்தனைப்பிடித்து-அன்னப் பறவையைப் பிடித்துக்கொண்டுபோய்.—, மன்னன் திருமுன்னர்-நளராஜனது அழகிய சமுகத்தில், வைத்தலுமே-வைத்தவுடனே, அன்னம்-அந்த அன்னமானது, தன்னுடைய-தனது, வான்கிளையைத் தேடி-பெரியசுற்றத்தைத் தேடி, மலங்கிற்று-வருந்தியதாய், மன்னவனைக்கண்டு-அரசனைப் பார்த்து, கலங்கிற்று-கலக்கமடைந்தது; (எ-று.)

ஆயிழையார் அன்னந்தனைப்பிடித்து வைத்தலும் தேடி, மலங்கி, கண்டு கலங்கிற்று எனவினைமுடிவுசெய்க.

ஆயிழையார் என்பதற்கு ஆராய்ந்தெடுத்த ஆபரணங்களையுடையார் என்பதன்றி அழகிய ஆபரணங்களையுடையாரெனினும் பொருந்தும். ஆய் அழகு என்னும் பொருளில் வருதலை "மாயோன்முன்கையாய்தொடிகடுக்குங் கண்கூடிருக்கைத்திண்பிணித்திவவின், ஆய்தினையரிசியவையலன்ன" என்ற பொருநராற்றுப்படை 14-16- அடிகளிலும் "நீர்திரண்டன்ன கோதை பிறக்கிட்டாய்கோ லவிர்தொடி விளங்கவீசி" 'பேயுமணங்குமுருவுகொண்டாய் கோற்கூற்றம்' என்ற மதுரைக்காஞ்சி 562, 563, 662-அடிகளிலும் ஆய் என்பதற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் அழகிய எனப்பொருளுரைத்திருத்தலாலுணர்க.

யாவராலும் விரும்பத்தகுந்த ராசசமுகமாதலால், திருமுன் என்றார். திரு-கண்டாரால் விரும்பப்படும் தன்மை, பண்புப்பெயர். முன்னர்-அர்சாரியை. வைத்தலும்-இறந்தகாலவினையெச்சம், வை-பகுதி, உம்-வினையெச்சவிகுதி தகரம் எழுத்துப்பேறு, அல்சாரியை, முதலாவது (த்) சந்தி. இதனையடுத்த ஏகாரம் அசை. மற்றை இரண்டும் இரக்கப்பொருளன மலங்கிற்று-முற்று எச்சப்பொருளில்வந்தது. மலங்கிற்று, கலங்கிற்று என முற்றுப்பொருளாய்த் தனித்தனியுரைப்பினும் அமையும். உடைய-ஆறும்வேற்றுமைச்சொல் லுருபு. வான்கிளை உரிச்சொற்றொடர். கிளை உவம ஆகுபெயர், மரத்தின் கிளைபோலத் தன்னைச் சேர்ந்து இருக்கும் உறவினரைக் குறிக்கும். மன்னவன் - பெருமையுடையவன், அ-சாரியை, வ் உடம்படுமெய். பிடிபட்டபோது கலங்குதலாதி சாதித்தன்மைகளைச் சொல்லுதலால் இச்செய்யுள் தன்மைநவிற்சியணி.

[அரசன் கலங்கிய அன்னத்திற்குத் தேறுதல்மொழி கூறுதல்.]

27. அஞ்சன் மடவனமே யுன்ற னணிநடையும்
வஞ்சி யனையார் மணிநடையும்—விஞ்சியது
காணப் பிடித்ததுகா ணென்றான் களிவண்டு
மாணப் பிடித்ததார் மன்.

(இ-ள்.) களிவண்டு-(தேனுண்டு) களித்தலை யுடைய வண்டுகள், மாண-தாம்செழிப்புறும்படி, பிடித்த-பற்றியுள்ள, தார்மன்-மலர்மாலை யணிந்த நளமகாராஜன்:—, மடம் அன்னமே-இளமையான அன்னமே!. அஞ்சல்-பயப்படாதே, உன்தன் அணிநடையும்-உன்னுடைய அழகிய நடையும், வஞ்சி அனையார் மணிநடையும்-வஞ்சிக்கொடி போன்ற மெல்லிய பெண்களது அழகியநடையும் (ஆகிய இவ்விரண்டனுள், விஞ்சியது காண-மேலானது. இன்னதென்று பார்க்கும் பொருட்டே, பிடித்தது-(நான் உன்னைப்) பிடித்தது, என்றான்-என்று சொன்னான்; (எ-று.)

அன்னமே! உன்னையான் பிடித்தது கொல்வதற்காவது, கூட்டிலடைத்து வருத்துவதற்காவது அல்ல; உன்நடையின் அழகினையும், உன்நடைக்கு ஒப்பாகக்கூறப்படும் பெண்களது நடையினையும் ஒப்பிட்டுப்பார்ப்பதற்கே. ஆதலால் நீ அஞ்சற்க எனக்கலங்கிய அன்னத்திற்குத் தேறுதல் கூறினனென்க. 'களிவண்டு மாணப்பிடித்ததார்மன்' என்றமையால் பிறர்க்காதாரமாய் இதஞ்செய்வதேயன்றிப் பிறரை வருத்துதற்குணம் சிறிதுமிலன் என்பது தோன்றும். பிடித்தது என்பதற்கு மலர்களால் தொடுக்கப்பட்டது எனக்கூறுதலும் பொருந்தும். வண்டுக்குக்களி-கள்ளுண்டலால் உண்டானது, களிவண்டு வினைத்தொகை. மாண-மாண்பு என்னும் பண்படியாகப்பிறந்த செயவெனெச்சம், காரியப்பொருளில்வந்தது. மன்-பண்பாகு பெயர். அனம்-அன்னம் இடைக்குறை விகாரம். அஞ்சல்-எதிர்மறை ஏவல் வினைமுற்று, அஞ்சு-பகுதி, அல்-எதிர்மறைவிகுதி; இது ஐம்பால் மூவிடங்கட்கு வாராமையால் வியங்கோள் முற்று ஆகாது. தன்-சாரியை. மடநடையும் எனவும்பாடம். விஞ்சியது-வினையாலணையும்பெயர். பிடித்தது-இறந்தகாலத் தொழிற்பெயர். காண்-முன்னிலையசை; தோற்றத்தில் வந்ததெனினுமாம்.

[அரசன் சொல்லால் அன்னம் கலக்கம் ஒழிதல்.]

28. செய்ய கமலத் திருவை நிகரான
தையல் பிடித்த தனியன்னம் —வெய்ய
அடுமோற்ற மில்லா வரசன்சொற் கேட்டுத்
தடுமாற்றந் தீர்ந்ததே தான்.

(இ-ள்) செய்யகமலம்-செந்தாமரைமலரில் வாசஞ்செய்கின்ற, திருவைநிகரான-இலக்குமியை ஒத்த, தையல்-பெண்ணால், பிடித்த-பிடித்துக்கொண்டுவரப்பட்ட, தனி அன்னம்-ஒப்பற்ற அந்த அன்னப்பறவையானது,வெய்ய-கொடிய,அடுமாற்றம் இல்லாத-கொல்லும் பகைமைக்குணமற்ற, அரசன்சொல்-நளனதுபேச்சை, கேட்டு—, தடுமாற்றம்-மனக்கலக்கம், தீர்ந்தது-நீங்கப்பெற்றது; (எ-று.)

அரசன் முன்வைக்கப்பட்ட அன்னமானது அவனது இனிய ஆறுதல் மொழியால் கொலைப்பயம் நீங்கித்தெளிந்ததென்பதாம்.

செய்ய, வெய்ய-செம்மை, வெம்மையென்ற பண்படியாகப் பிறந்த குறிப்புப்பெயரெச்சங்கள். கமலம்- கம் ஜலத்தில், அலம்-பிரகாசிப்பது வடசொல், ஆகுபெயர். தையல்-அழகு, பண்பாகு பெயராய் அதனையுடையவளை யுணர்த்திற்று. தனி அன்னம்-பிரிக்கப்பட்ட அன்னம் எனினுமாம். அடுமாற்றம் - வினைத்தொகை. தடுமாற்றம்-தொழிற்பெயர்; தடுமாறு பகுதி, அம் - தொழிற்பெயர் விகுதி. இல்லா(த) ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம். அன்னம் தடுமாற்றம் தீர்ந்தது, சினைவினை முதலோடுஞ்சேர்ந்தது.

[அன்னம் நளனுக்குத் தமயந்தி தக்கவள் எனல்.]

29. திசைமுகந்த வெண்கவிகைத் தேர்வேந்தே யுன்ற
னிசைமுகந்த தோளுக் கிசைவாள்—வசையி
றமையந்தி யென்றோதுந் தையலாண் மென்றோ
ளமையந்தி யென்றோ ரணங்கு.

(இ-ள்.) திசைமுகந்த - எட்டுத்திக்கிலுள்ளாரையுந் தன்னுளடக்கிய, வெண்கவிகை-வெண்கொற்றக் குடையையும், தேர்-தேர்ச்சேனையையுமுடைய, வேந்தே - அரசனே !, இசைமுகந்த - கீர்த்தி நிரம்பப்பெற்ற, உன்தன்-உன்னுடைய, தோளுக்கு-தோள்களுக்கு, மென்தோள்-மென்மையானதோள், அமை அந்தி-மூங்கில்போலும் அழகுடையாள், என்று-என்றுசொல்லப்பட்ட, ஓர் அணங்கு-ஒரு தெய்வப்பெண்போன்ற, வசைஇல்- (அழகு, குணம், செயல் இவற்றால்) குற்றமில்லாத, தமையந்தி என்று—, ஓதும் - சொல்லப்பட்ட, தையலாள் - பெண்ணானவள், இசைவாள் - தகுதியாவாள்; (எ-று.)

வேந்தே! தோளுக்குத் தமயந்தியென்றோரணங்கு இசைவாள்என்க.

இதனாலே அவளுனக்குக்கிடைப்பாளாயின், உனது தோள் முதலிய உறுப்புக்களின் அழகுபயன்படுமென நளனுக்குத்தமயந்தி இன்றியமையாச் சிறப்பினள் எனக்கூறியவாறு. திசை-கிழக்கு, தென்கிழக்கு தெற்கு என வரும் எட்டுத்திசைகளும், இங்கு ஆகு

பெயராய்த் திசையிலுள்ளாரை யுணர்த்திற்று. நால்வகைச்சேனையுள் தலைமைபற்றித் தேர் என்றார், மற்றப் படைகளுக்கு உபலக்ஷணம். ஆளுகையைக்கவிகையென்றது உபசாரம். தோளுக்கு இசைமுகத்தலாவது போரில் வெற்றிபெறுதலும், கொடை முதலியவற்றிற்சிறத்தலும், முழந்தாள் அளவும் தாழ்ந்து திரண்டு, அழகும், வலிமையும் வாய்ந்து விளங்குதலும் ஆகிய இவற்றாலுண்டாகும் புகழைப் பெறுதல். தமயந்திக்கு வசையின்மையாவது நற்குண நற்செய்கை, அழகு முதலியவற்றில் குறைவுபடாமை. அந்தத்தையுடையவள் அந்தி, (அந்தம்-அழகு) இ-பெண்பால்விகுதி, பகுதியீற்று அம்-கடைக்குறை. மூங்கில் தோளுக்கு உவமை, திரண்டு வழுவழுப்பாயிருக்குந் தன்மைபற்றி.

திசை- திசாஎன்ற வடசொல் விகாரம். தமையந்தி - யகரத்தின்முன் நின்ற அகரத்திற்கு ஐகாரம் போலியாய்வந்தது. (போலியாவது ஒருசொல்லில் ஒரு எழுத்து உள்ளவிடத்து அவ்வெழுத்துக்கிடாக வேறொரு எழுத்து வந்து நின்றாலும் பொருள் வேறுபடாமல் ஒத்திருப்பது.) கவிகை-கவிந்திருப்பது, தொழிற்பெயர்.

[நளன் தமயந்தியிடத்து ஆசைகொள்ளுதல்.]

30. அன்ன மொழிந்த மொழிபுகா முன்புக்குக்
கன்னி மனக்கோயில் கைக்கொள்ளச்—சொன்னமயி
லார்மடந்தை யென்றா னநங்கன் சிலைவளைப்பப்
பார்மடந்தை கோமான் பதைத்து.

(இ-ள்.) பார்மடந்தைகோமான்-பூமியாகிய பெண்ணுக்கு அரசனாகியநளன், அன்னம்மொழிந்த-அன்னப்பறவை சொல்லிய, மொழி புகாமுன்-சொல்செவியில் நுழையாததற்குமுன்னமே, கன்னி-கன்னிப்பருவத்தினளாகியதமயந்தி, மனக்கோயில் - தன்மனமாகியகோயிலை, புக்கு - (உள்ளே) புகுந்து; கைகொள்ள - சுவாதீனம்செய்துகொண்டதனால், அநங்கன் - மன்மதன், சிலைவளைப்ப - கரும்புவில்லையெடுத்துவளைத்ததினால், பதைத்து-மனம் பதறி, சொன்னமயில் - நீ சொல்லியமயிலுக்கு ஒப்பானவள், ஆர்மடந்தை - யாருடையமகள், என்றான்-என்று (அன்னத்தை) வினவினான்; (எ-று.)

கோமான், மனக்கோயில் கன்னிகைக்கொள்ள, வளைப்ப, பதைத்து ஆர்மடந்தை என்றான் எனக்கூட்டுக.

அன்னம் தமயந்தியைப்பற்றிக்கூறிய இனிய வசனங்களால் தன்வசமிழந்து, காமபரவசனாய், அவளது வரலாற்றையறியவிரும்பி அம்மடந்தை எவ்வரசன் குமாரத்தியென வினவினனென்றவாறும். மொழி - மொழியப்படுவது எனும்பொருளது. செய்ப்படுபொருள்

விகுதி புணர்ந்துகெட்டது. முன்-காலமுன். கன்னி-விவாகமாகாத இளம்பெண், கைக்கொள்ளுதற்கு வினைமுதல். கைக்கொள்ள-ஒரு சொல்நீர்மைத்து; செயவெனெச்சம் காரணப்பொருளது இறந்த காலம். சிலைவளைத்தற்குக் கைக்கொள்ளுதலும், பதைத்தலுக்குச் சிலைவளைத்தலுங் காரணமாமென்க. வளைப்ப - செயவெனச்சம். சொன்ன-இப்பெயரெச்சத்தில் இறந்தகால இடைநிலையின் முதல் குறைந்து நின்றது. மயில் என்னும் பெயரைத்தழுவிற்று. மயில்-உவம ஆகுபெயர். ஆர் யாரென்பதன் மரூஉ: (மரூஉவாவது தொன்றுதொட்டு வருதலின்றி இடையில் எழுத்துக்கள் தோன்றியுந் திரிந்துங்கெட்டும் இலக்கணஞ் சிதைந்து தாமே மருவி வழங்குவது) மடந்தை-இங்கேபெண் என்றமாத்திரையாய் நின்றது. அநங்கன்-ந + அங்கன் உருவமில்லாதவன், வடசொல்; சிவபெருமான், சனகாதியர்க்கு யோகநிலையை உபதேசிக்கத் தான்நிஷ்டையிலிருக்குங்கால் பிரமனாதியோர் வேண்டுகோட்கிணங்கி, மலரம்புகொண்டு, விக்கினஞ்செய்தகாலத்தில் மன்மதன் சிவபிரானால் நெற்றிக்கண்ணால் எரிக்கப்பட்டு உருவமிழந்தான் என்ற செய்தி இப்பெயர்க்கண் அறியக்கிடந்தது.

சிலை - வில்என்னும்பொருளில்வந்த இச்சொல், கல் என்னும் பொருளில் வருமிடத்து வடசொல். கோமான்-கோ-பகுதி, மான்-பெயர் விகுதி, இச்சொல்கோன் என னகரச்சாரியைபெற்றும்வரும். தமயந்தியின் அழகு முதலியவற்றைப்பற்றிக் கூறுஞ் சொல்லைக் கேட்டறிதலாகிய காரணத்திற்குமுன்னே கன்னிமனக்கோயில் கைக்கொள்ளுதலும் மன்மதன் வில்வளைத்லுமாகிய காரியங்கள் பிறத்தலைச் சொல்லுதலால் மிகையுயர்வு நவிற்சியணியாம்.

[அன்னம் தமயந்தியின் வரலாற்றைக் கூறத்தொடங்குதல்]

31. எழுவடுதோள் மன்னா விலங்கிழையோர் தூண்டக்
கொழுநுதியிற் சாய்ந்த குவளை—யுழுநர்
மடைமிதிப்பத் தேன்பாயு மாடொலி நீர்நாடன்
கோடைவிதர்ப்பன் பெற்றதோர் கொம்பு.

(இ-ள்.) எழு அடு தோள் - தூணைவென்றதோளையுடைய, மன்னா-அரசனே, இலங்கு இழை - விளங்குன்ற ஆபரணங்களையணிந்த தமயந்தியாகிய அப்பெண்ணானவள், உழுநர் - உழவர், ஏர் தூண்ட-ஏரைச்செலுத்துதலால், கொழுநுதியில்-கொழு என்னுங் கருவியின் நுனியிடத்து, சாய்ந்த-சாய்ந்துவிழுந்த, குவளை-குவளைமலர்களினின்றும், மடைமிதிப்ப-(அவ்வுழவர் வரம்பின்றி பெருக்குமிகுதிபற்றி) நீர்மடைகளை மிதித்தலால் தேன்பாயும் - தேன் பாயப்பெற்ற, மாடு-பக்கங்களையுடைய, ஒலிநீர்நாடன் ஒலிக்கின்ற

நீர்வளப்பமிக்க விதர்ப்பநாட்டரசனாகிய, கொடைவிதர்ப்பன்-கொடுக்குங்குணமுடைய வீமராஜன், பெற்றது ஓர்கொம்பு-பெறப்பட்டவளாகிய ஒப்பற்ற பூங்கொம்புபோல்வாள்; (எ-று.)

மன்னா! இலங்கிழை நாடன்பெற்ற கொம்பு என்க. உழவர்கள் உழும் படைச்சாலில் சாய்கின்ற குவளைச்செடியின் பூக்களினின்றும் பெருக்கெடுத்துப்பாய்கின்றதேன் நீருடன் கலந்து மிகுதியும் வயலகத்துப் பெருகிக்கொள்வதால், வேண்டிய அளவு வடித்துக்கொள்வதற்கு வயல்களில் நீர் செல்லும் வழியாகிய மடைகளைக் காலால்மிதித்து உடைத்துவிடுவார்கள் என அந்நாட்டின் நிலவளப்பமிகுதி கூறியவாறும். குவளைமடைமிதிப்பத் தேன்பாயும் என்பதற்குக்குவளைப் பூக்களை மடைவாயினிடத்து மிதிப்பதினால் அவைகளினின்றும் தேன்பாய்கின்ற என உரைத்தலுமாம்.

நளக்கு உவமையாகும் தூணையும் வென்றுவிளங்குமென நளனது தோள்வனப்பைக்குறிக்க 'எழுவடுதோள்' என்றார். அடுதோள் - வினைத்தொகை; தூண்போன்ற தோளென்பாருமுளர். இலங்கிழை வினைத்தொகைப்புறந்துபிறந்த அன்மொழித்தொகை. ஏர்தூண்ட இரண்டாம்வேற்றுமைத்தொகை நிலைத்தொடர். நுதியிற்சாய்ந்த - ஏழாம்வேற்றுமைப் பொருளில்வந்த தொடர். உழுநர் என்ற வினைமுதலை மிதிப்ப-என்ற வினைக்கும் கூட்டுக. தூண்ட, மிதிப்ப - செயவெனச்சங்கள். ஓலிநீர் - வினைத்தொகை. கொம்பு என்றதற்கேற்ப, பெற்றது என்றார். கொடை - தொழிற்பெயர், கொடு-பகுதி, ஐ-விகுதி.

32. நாற்குணமு நாற்படையா வைம்புலனு நல்லமைச்சா
வார்க்குஞ் சிலம்பே வணிமுரசா — வேற்படையும்
வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீ
ழாளுமே பெண்மை யரசு.

(இ-ள்) (தமயந்தி) நால்குணமும்-நான்குகுணங்களும், நால்படை ஆ(க)-நான்குவகைச்சேனையாகவும், ஐம்புலனும்-ஐந்து பொறிகளும், நல் அமைச்சு ஆக-ஐந்து அறிவுடைய மந்திரியாகவும், ஆர்க்கும் சிலம்பே-(பாதத்தில் அணியப்பெற்று) ஒலிக்கின்ற சிலம்பு என்னும் ஆபரணங்களே, அணிமுரசு ஆக-அழகிய முரசவாத்தியங்களாகவும், வேல்படையும் வாளுமே-வேலாயுதமும், வாளாயுதமும்கண்ணாக-கண்களாகவும், வதனம் மதிகுடைகீழ்-முகசந்திரனாகியகுடையின் கீழே, பெண்மை அரசு - பெண்தன்மையாகிய ராச்சியத்தை, ஆளும்-ஆளுவாள்; (எ-று.)

நான்கு குணங்களே (தன்னைக்காக்கின்ற) சதுரங்கசேனைகளாகவும், பஞ்சேந்திரியங்களே தன்னிலையில் நிறுத்தும் அறிவிற்சிறந்த

பஞ்சாயத்து மந்திரிகளாகவும், காலிலணிந்திருக்கும் நூபுரங்களே பெருமை முதலியவற்றை வெளிப்படுத்தும் முரசவாத்தியங்களாகவும், எதிரிகளை வருத்தும் வேலாயுதமும், வாளாயுதமும் தனது கண்களாகவும் ஓர் அரசனைப் போல் முகமாகிய சந்திரவட்டக்குடையின்கீழ் பெண்தன்மையாகிய அரசு ஆளுகையைச்செய்யும் என்பதாம்.

நாற்குணங்களாவன — அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்பனவாம். இவற்றுள் அச்சமாவது அறத்திற்கும், உலகநடைக்கும் மாறானவற்றிற்குப் பயப்படுதலாம். பகைமைக்கோ, இருட்டிற்கோ, ஊழ்வினைத்துன்பத்திற்கோ பயப்படாது இருத்தல் வேண்டுமென்க.

நாணமாவது முதற்கூறிய அறம்முதலியவற்றிற்கு மாறானவைநிகழ்வுழி வெட்கப்படலாம்.

மடமாவது அறிந்தும் அறியாமையோடிருத்தலாம். புருஷன் முதலியோர் ராஜசகுணத்தோடு தவறுசெய்வது இயல்பு. ஆயின் அதனை உணர்ந்துழிக்கூறின் ராஜசத்தால் வரும் கேட்டிற்கு ஆளாக நேருமாதலால் சாத்வீகம்வர உபசரித்துச் சாத்வீகம்வந்துழிக்குற்றத்தைக்கூறித்திருத்தலாம். இதுவன்றிப் பெண்களுக்கு அறியாமை உண்டென்பது பொருந்தாது. அறிவுக்களஞ்சியம் சரஸ்வதி ஆதலால் என்க.

பயிர்ப்பாவது தன்புருஷன் உடல் அல்லது மற்றையோரது உடலை அறத்திற்குமாறுயவழிப்பயிலுமாறு நேர்வுழி மனமொழிமெய்கள் வருந்துதலாம். அறத்தோடு துன்பப்படுவோரைக் காப்பாற்றுழி உடலாலும் உதவிசெய்யவேண்டுமென்க.

நான்குபடைகள் தேர், கரி, பரி, காலாள் என்பவை. ஐம்புலன்-மெய், வாய், கண், மூக்கு, செவி, புலன் ஈண்டுப்பொறியினமேனின்றது - சிலம்பே என்னுமிடத்துள்ள பிரிநிலை ஏகாரத்தைக்குணம், புலன் என்பவற்றிற்கும் கூட்டுக. இச்செய்யுளால் தமயந்தி குணம், செயல், அழகு முதலியவற்றில் ஒப்புயர்வற்றவளாய், மனத்தைப் பொறிவழிப் போக்காது பெண்கள் நாயகமாய் விளங்கினாள் என்பது பெறப்படும். நாற்குணம், நாற்படை, ஐம்புலன்-தொகைக்குறிப்பு, வாளுமே என்ற இடத்துள்ள ஏகாரத்தைக் கண் என்பதனோடும், கண்ணா-என்பதிலுள்ள ஆகாரத்தை வேற்படையும் வாளும் என்பவற்றோடும் கூட்டிப் பொருள்கொள்க. கண்-பால்பகா அஃறிணைப் பெயர். ஆக என்னும் செயவெனெச்சங்கள் ஈறுகுறைந்தன. ஆளும்-செய்யும் என்னும் முற்று பெண்பாலுக்கு வந்தது. குணம், முரசம், வதனம்-வடசொற்றிரிபு. இச்செய்யுளுள் நாற்குணம் படையாகவும், ஐம்புலன்கள் அமைச்சாகவும், சிலம்பு முரசாகவும், கண்கள் வேலும் வாளாகவும், பெண்தன்மை அரசாகவும், உருவகஞ் செய்திருத்

தலால் சிறப்புருவகம். இதனை வடநூலார் சவிசேஷணரூபகம் என்பர். வதனத்தை மதியாக உருவகம் செய்து அதனையே பெயர்த்தும் குடையாக உருவகம் செய்தமையால் உருவக உருவகம்.

33. மோட்டிளங் கொங்கை முடியச் சுமந்தேற
மாட்டா திடையென்று வாய்விட்டு—நாட்டே
னலம்புவார் கோதை யடியிணையில் வீழ்ந்து
புலம்புமா நூபுரங்கள் பூண்டு.

(இ-ள்) இடை-இடையானது, மோடு இளங்கொங்கை-உயர்வாகிய இளமை பொருந்திய முலைகளை, சுமந்து ஏறமாட்டாது-தாங்கி நிற்கமாட்டாது, என்று-, நாள்தேன்-புதியதேன், அலம்பு-ததும்புகின்ற, வார்-நீண்ட, கோதை-மாலையை அணிந்த கூந்தலையுடைய தமயந்தியின், இணையடியில்-இரண்டு பாதங்களிலும், நூபுரங்கள்-சிலம்புகள், வீழ்ந்து பூண்டு-வீழப்பெற்றுவிடாமற் பற்றி, வாய்விட்டுப் புலம்பும்-வாய்விட்டு அலறும்; (எ-று.)

இடைசுமந்தேறமாட்டாதென்று நூபுரம் கோதை அடியில் வீழ்ந்து, பூண்டு, வாய்விட்டுப் புலம்பும் என்க.

பிறர் துயரங்கண்டிரங்கும் பெரியோர் போல நூபுரம், நுண்ணிய இடை கொங்கைகளைச் சுமந்து நிற்க ஆற்றாதென வருந்தி முறையிட்டதென்பதாம். இயற்கையாகப் பாதங்களில் அணியப் பெற்று ஒலிக்கும் சிலம்பின் ஒலியை இங்ஙனம் குறித்தார். இது தற்குறிப் பேற்றவணி. இதனால் இவளது பருவத்தழகும், இடையின் நுண்மையும் விளங்கும். சிலம்பு வாய்விட்டரற்றுதலாவது - சிலம்பினுளிட்டிருக்கும் பரல்மணிகளால் நடக்குந்தோறும் கலீர் கலீர் என்றொலி யுண்டாதல். மாலைகளை மிகுதியாக அணிந்திருத்தலால் அலம்புவார் கோதை என்றார். இதனால் மலர்களிலுள்ள தேன் மிகுதி விளங்கும். நாள்தேனாவது - அன்றலர்ந்த மலர்களிலுண்டாகுந்தேன். கோதை-மாலையுமாம். இதனை "கோதை முன்கைத் தோற்கட்டி குழல்தார் காற்றொழுங்கு சேரன்" என்ற நிகண்டாலும், 'கொங்கு விம்மு கோதையொடு கோதைதாழ' என்ற பின்னோர் வாக்காலும் அறிக. மோடு-மோட்டென, குற்றியலுகரம் தன்னொற்றிரட்டிற்று. அலம்பு, வார்-வினைத்தொகை; வார்கோதை-வினைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. புலம்பும்-செய்யும் என்னும் முற்று. ஆம்-அசை. மாட்டாது-ஒன்றன்படர்க்கை எதிர்மறை வினைமுற்று. இடை - ஆகுபெயர். கோதை, நூபுரம் - வடசொல். இதுவும் அடுத்ததும் இடையின் சிறப்பு.

34. என்று நுடங்கு மிடையென்ப வேழுலகு
நின்ற கவிகை நிழல்வேந்தே—யொன்றி
யறுகாற் சிறுபறவை யஞ்சிறகால் வீசுஞ்
சிறுகாற்றுக் காற்ருது தேய்ந்து.

(இ-ள்) ஏழ் உலகும் - எழுதீவுகளிலும், நின்ற - நிலைபெற்ற, கவிகை நிழல்வேந்தே-குடையின் நிழலையுடைய அரசனே, இடை-தமயந்தியின் இடையானது, அறுகால் சிறுபறவை-ஆறுகால்களையுடைய வண்டுகள், ஒன்றி-பொருந்தி, அம்சிறகால்-(தமது) அழகிய சிறகுகளால், வீசும்-வீசுகின்ற, சிறுகாற்றுக்கு - மெல்லியகாற்றுக்கு, ஆற்ருது - பொறுக்காது, தேய்ந்து - சுருங்கி, நுடங்கும் - அசைந்து கொண்டிருக்கும்; என்ப-என்று சொல்வார்கள். (எ-று.)

வேந்தே இடை காற்றுக்கு ஆற்ருது, தேய்ந்து நுடங்கும் என்க.

உலகு என்பது ஈண்டுத் தீவு என்னும் பொருளது. தீவு ஏழாவன நாவல், இரலி, குசை, கிரௌஞ்சம் கமுகு, தெங்கு, புட்கரம் இவற்றை "இவர்தரு நாவலோடே யிறலியே குசை கிரவுஞ்சம், புவிபுனை கமுகு தெங்கு புட்கரந்தீவேழின்பேர்" என்ற சூடாமணிநிகண்டாலுமறிக. ஏழுலகு நின்ற கவிகை நிற்றலாவது-அவை ஏழும் இவனது ஆளுகைக்குட்பட்டிருத்தல். இச்செய்யுளாலும் மிகச்சிறிய வண்டினது இறகின் காற்றிற்கும் ஆற்ருது நுடங்கும் என இடையினது மெல்லிய நுட்பத்தைக் கூறியவாரும். தமயந்தி கூந்தலிற்சூடியிருக்கும் மலர்மாலைகளில் தேனையுண்டதற்கு வண்டுகள் அவள்பக்கல் சென்றடையுமென்க. அறுகால் என்ற விசேஷணத்தால் சிறுபறவை வண்டையுணர்த்திநின்றது. பொன்வரிகளைப் பொருந்தப்பெற்றிருத்தலால் அஞ்சிறகென்றும், மெல்லிய இறகால் வந்த காற்ருதலால் சிறுகாற்று என்றும் கூறினர். அறுகால் என்பதை அன்மொழித்தொகையாகக்கொண்டு அறுகாற் சிறுபறவை என்பதை இருபெயரொட்டுப் பண்புத் தொகையெனினுமாம்.

ஏழுலகு பண்புத்தொகை. என்ப - பலர்பாற்படர்க்கை வினைமுற்று. பறவை - தொழிலடியாகப் பிறந்த பெயர். பற பகுதி, வ் - எழுத்துப்பேறு ஐ வினைமுதற் பொருள் விகுதி. அறுகாற்சிறு பறவை-இரண்டனுருபும், பயனும் தொக்கன.

35 செந்தேன் மொழியாள் செறியளக பந்தியின்கீழ்
இந்து முறியென் றியம்புவார்—வந்தென்றும்
பூவாளி வேந்தன் பொருவெஞ் சிலைசார்த்தி
ஏவாளி தீட்டு மிடம்.

(இ-ள்.) பூவாளிவேந்தன் - புஷ்ப பாணங்களையுடைய அரசன் (மன்மதன்), என்றும்வந்து - எப்பொழுதும் வந்து, பொருவெஞ்சிலை- போர்செய்தற் குரிய கொடியவில்லை, சார்த்தி - வைத்து, ஏ ஆளி - அம்புவரிசைகளை, தீட்டும் இடம் - தீட்டுகிற இடமானது, செம்தேன் மொழியாள் - செம்மையான தேன்போன்ற இனிய சொற்களையுடைய தமயந்தியினது, செறி - நெருங்கிய, அளகபந்தியின்கீழ் - முன்மயிர் வரிசையின்கீழ் (இருக்கிற), இந்துமுறி-சந்திரனது துண்டம், என்று இயம்புவார் - என்று சொல்லுவார்கள். (எ-று.)

வேந்தன் தீட்டுமிடம் இந்துமுறி என்றியம்புவார். தீட்டுமிடம்- தீட்டுதற்குரிய சாணைக்கல். இந்து முறியென்றது - இளம்பிறையைப் போன்ற நெற்றியை, உருவகம். சிலையென்றது தமயந்தியின் புருவத்தை. முறி - தொழிலடியாகப் பிறந்தபெயர், முறி-பகுதி, செயப்படுபொருள் விகுதி ஐ புணர்ந்துகெட்டது. இந்துமுறி - ஆறும்வேற்றுமைத் தொகை நிலைத்தொடர். இனி வேந்தன் தீட்டும் இடமாகிய நெற்றியை இந்துமுறி யென்றியம்புவார் எனவு மியைத்துப் பொருள் கூறலாம். செறி அளகம் - வினைத்தொகை.

மன்மதன் மலரம்புகளை யுடையவனாதலால் பூவாளி வேந்தன் என்றார். ஏவாளி - கூர்மையான அம்புகளெனிமாம். பந்தி, இந்து - வடசொல். இப் பாட்டால் நெற்றியின் சிறப்பன்றிச் 'செந்தேன் மொழியாள்' என்ற வகையால் சொல்லின் வனப்புங்கூறினார்.

[நளன், அன்னத்தைத் தமயந்தியோடு சம்பந்தம் யாதெனல்.]

36 அன்னமே நீயுரைத்த வன்னத்தை யென்னாவி
உன்னவே சோரு முனக்கவளோ—டென்னை
அடைவென்றான் மற்றந்த அன்னத்தை முன்னே
நடைவென்றா டன்பா னயந்து.

(இ-ள்.) அந்த அன்னத்தை - (தமயந்தியைப்பற்றிச் சொல்லிய) அவ் வன்னப்பறவையை, முன்னே - இளம்பருவத்திலேயே, நடை வென்றாள் தன்பால் - வெற்றிகொண்டவளாகிய தமயந்தியினிடத்தில், நயந்து - விருப்பமுற்று, அன்னமே!—, நீ உரைத்த அன்னத்தை - நீ இப்பொழுது என்னிடம் சொல்லிய அன்னம்போல்பவளாகிய தமயந்தியை, உன்ன - நினைக்க, என் ஆவிசோரும் - எனது உயிர் தளர்கின்றது, உனக்கு அவளோடு—, அடைவு என்னை என்றான் யாது சம்பந்தம் என்று வினவினான். (எ—று.)

தமயந்தியின் அழகு முதலியவற்றை அன்னத்தின் வாயிலாக உணர்ந்த நளன் அவள்மீது ஆசைமீதூரப் பெற்று, அவளைத் தனக்குக் கூட்டுவித்தற் குரிய இயைபு அன்னத்திற்குண்டோ எனத் தெரிய

எண்ணங்கொண்டு இவ்வாறு வினவினான் என்க. உன்னவே என்றதி லுள்ள ஏகாரம் இனி அவனை நேரிற் கண்டால் மிகுந்த காமமயக் கத்தைக் கொடுக்கும் என்பதை உணர்த்தி நின்றது.

அவளோடு - ஓடு என்ற மூன்றனுருபு ஏழாம்வேற்றுமைப் பொருளில் வந்தது. அடைவு - சேர்க்கை, தொழிற்பெயர்; அடை - பகுதி, வு-தொழிற் பெயர் விகுதி. நடை - தொழிற்பெயர், என்னை- எவன் என்பதன் மரூஉவாகிய வினாவினைக்குறிப்பு முற்று. முதலடி மூன்றுஞ்சீர்க்கண்ணுள்ள அன்னம் - உவம ஆகுபெயர். உன்ன - செயவெனெச்சம்

[அடைவு என்னையென்றதற்கு அன்னம் விடையளித்தல்.]

37 பூமனைவாய் வாழ்கின்ற புட்குலங்கள் யாமவடன்
மாமனைவாய் வாழு மயிற்குலங்கள்—காமன்
படைகற்பான் வந்தடைந்தான் பைந்தொடியாள் பாத
நடைகற்பான் வந்தடைந்தே(ம்) நாம்.

(இ-ள்.) பூமனைவாய் வாழ்கின்ற - தாமரைமலராகிய வீட்டில் வாசஞ்செய்கின்ற, புள்குலங்கள் - பறவைக் கூட்டங்களாகிய, யாம்- நாம், அவள்தன் - அத்தமயந்தியினுடைய, மாமனைவாய் வாழும் - பெரிய மாளிகையில் வாசஞ்செய்கின்ற, மயில்குலங்கள் - மயில்கள் கூட்டங்களாகவிருக்கிறோம், காமன் - மன்மதன், படைகற்பான் - (அவளுடைய கண்களிடத்தில்) படைத்தொழிலைக் கற்கும்பொருட்டு, வந்து அடைந்தான் - வந்துசேர்ந்தான், நாம் - நாங்கள், பைந்தொடி யாள் - பசியவளையல்களணிந்த தமயந்தியினுடைய, பாதம் - கால்களி டத்தில், நடைகற்பான் - நடையைக் கற்பதற்கு, வந்து - விருப்பத் துடனே கருதி, அடைந்தோம் - சேர்ந்தோம்; (எ-று.)

எனவே தமயந்திக்கு விளையாட்டுப் பொருளாய் உடனுறைதலே எங்கட்கும், அவட்குமுள்ள சம்பந்தம் என்றதாயிற்று.

பூமனை - பண்புத்தொகை. பூ - தலைமைபற்றி மலர்களிலுயர்ந்த தாமரைக்காயிற்று, பூ என்பதில் வினைமுதற் பொருள் விகுதி இ - புணர்ந்துகெட்டது. வாய் - ஏழனுருபு. யாம் என்றது தன் இனங் களை யுளப்படுத்தி நடையழகிற் சிறந்த அன்னமே "தமயந்தி யிடத்து நடை கற்பான் வந்தடைந்தோம்" என்றமையால் தமயந்தியின் நடை யழகு மிகுதி கூறியவாறும். நடைக்குக் கற்குமிடம் பாதம் என்றமை யால் படைக்குக் கற்குமிடம் தமயந்தியின் கண்என வருவித்துரைக்கப் பட்டது. ஆடவர் மனதைக் கவர்ந்து வருத்தும் தன்மையால் கண்கள் மன்மதனுக்குப் படைபயிற்று மிடமாகக் கூறப்பட்டன. இதனால் பருவத்தின் அழகு கூறியவாறு. கற்பான் - பானீற்று எதிர்கால வினை யெச்சம். படை—ஆகுபெயர், தொழிலை யுணர்த்திற்று. (படை—பகை

வரைப் படுக்கும் கருவி; படு-பகுதி, (படுத்தல்-அழித்தல்), ஐ-கருவிப் பொருள் விகுதி). அடைக்தோம்-தன்மைப் பன்மை.

38 இற்றது நெஞ்ச மெழுந்த திருங்காதல்
அற்றது மான மழிந்ததுநாண்—மற்றினியுன்
வாயுடைய தென்னுடைய வாழ்வென்றான் வெங்காமத்
தீயுடைய நெஞ்சுடையான் தேர்ந்து.

(இ-ள்) வெம்காமம் தீஉடைய - வெப்பம் பொருந்திய காமமாகிய தீயையுடைய, நெஞ்சு உடையான்-மனமுடைய நளன், தேர்ந்து-துணிந்து, நெஞ்சம் இற்றது - மனநிலையழிந்தது, இரும்காதல் எழுந்தது - பெருத்த ஆசை அதிகரித்தது, மானம் அற்றது - மானம் ஒழிந்தது, நாண் அழிந்தது - நாணம் கெட்டது, (ஆதலால்) இனி - இனிமேல், என்னுடைய வாழ்வு - எனது உயிர்வாழ்க்கை, உன்வாய் உடையது - உன்வாய்ச் சொல்லிலே நின்றது; என்றான் - என்று சொன்னான்; (எ-று.)

எனவே தமயந்தியைப் பெறுதல் உன்னாலன்றி, என் முயற்சியால் ஆவதொன்றில்லையென அவளையடைதலின் அருமை கூறியவாறும்.

உன்வாயுடையது என்னுடைய வாழ்வு என்றான் என்றதன் குறிப்பு நீபோய் உனது சொற்சாதுரியத்தால் அவளை எனக்கு உடம்படுத்தி வருவாயாயின் யான் உயிரோடிருப்பேன். இன்றேல் உயிர்நீங்கப்பெறுவேன். என்றதை வெளிப்படுத்தியது. வாய் உடையது என்ன என்றது, அன்னத்தின் சொற் சாதுரியத்தால் ஆகும் காரியத்தை. நெஞ்சம் இறுதல் - ஆடவர்க்குரிய அறிவு நிறை ஓர்ப்பு கடைப்பிடியாகிய குணங்கள் கெடுதல். இற்றது ஒன்றன்பாற் படர்க்கை இறந்தகால வினைமுற்று, இறு என்ற பகுதி இரட்டித்தது. மானம் - நற்குடியிற் பிறந்தவன் எஞ்ஞான்றுந் தன்னிலையி னின்று தாழாமையும், ஓரோவழித் தாழ்வு வந்தவிடத்து உயிர் வாழாமையும் ஆம். "மயிர் நீப்பின் வாழாக் கவரிமா வன்னா, ருயிர்நீப்பர் மானம் இழப்ப வரின்" என்ற ஆன்றோர் வாக்கு இங்கு அறியத்தக்கது. நாணுவது - மனம் கூசுதலுடைமை. காமம், தீப்போல் நினைத்தாரைச் சுட்டு வருத்துதலால் காமத்தீ என்றார். மற்று - இது வினைமாற்றுப் பொருளில் வந்தது. வாழ்வு - தொழிற்பெயர்.

39. வீமன் திருமகளாம் மெல்லியலை உன்னுடைய
வாம நெடும்புயத்தே வைகுவிப்பேன்—சேம
நெடுங்குடையாய் என்றுரைத்து நீங்கியதே அன்னம்
ஒடுங்கிடையாள் தன்பால் உயர்ந்து.

(இ-ள்) சேமம் - (உயிர்களுக்கு நிழலால்) காவலான, நெடும் குடையாய்-பெரிய குடையையுடைய அரசனே, வீமன் திருமகளாம்-

வீம ராசனது புத்திரியான லட்சுமியையொத்த தமயந்தியான, மெல்லியலை - மெல்லிய மேனியாளை, உன்னுடைய - வாமம்நெடும் புயத்து - அழகிய, பெரிய தோள்களிடத்து, வைகுவிப்பேன் - தங்கும் படிசெய்வேன், என்று உரைத்து-என்றிவ்வாறு சொல்லி, அன்னம்-அன்னமானது, ஒடுங்கு இடையாள் தன்பால் - சிறுத்த இடையை யுடையவளான தமயந்தியிடத்து, உயர்ந்து-உயரப்பறந்து, நீங்கியது-போயிற்று; (எ-று.)

பல அரசர்களும் விரும்புதற்கேதுவாகிய அழகுநலம் வாய்ந்த தமயந்திக்கு உனது அழகு முதலிய பெருமைகளையெடுத்துக் கூறி, உன்னை இடைவிடாது நினைக்கும் உள்ளத்தளாகச் செய்து, அவள் உன்னையே மணஞ்செய்துகொள்ளும்படி செய்து முடிப்பேன் என, அவள்மீது விருப்புற்று வருந்துகின்ற நளனைத் தேற்றியவாறும்.

மெல்லியல் என்பதை மென்மையென்னும் பண்படியாகப் பிறந்த அன்மொழித் தொகையாகக் கொண்டு தமயந்தியெனப் பொருளு ரைக்க. உலகத்துயிர்களை வெண்குடையால் தண்ணிழல்தந்து புரக் கும் தண்ணளியையும், மனத்தூய்மையையுமுடைய உனக்கு எண்ணியது எளிதிற் கைகூடும் என்பதை உணர்த்துதற்குச் 'சேம நெடுங்குடையாய்' என அரசனை அன்னம் விளித்தது. நெடும்பு யத்துவைகுவித்தல் என்றது, அறநெறியால் செய்துவைக்கும் மணத்தை. வைகுவிப்பேன் பிறவினைத்தன்மை யொருமை எதிர்கால வினைமுற்று, வைகு - பகுதி, வி-பிறவினை விகுதி. வீமன், புயம், சேமம்-வடசொல் விகாரம். பீமன் என்பது வீமன் எனத் திரிந்தது. பீமன் என்பதற்குப் பகைவரை அஞ்சச்செய்பவன் என்று பொருள்.

அன்னமாகிய பறவைக்கும், நளனாகிய மானுடனுக்கும் சம்பா ஷணை நடந்ததென்பது எவ்வாற்றால் ஒக்குமெனின்,—தேவலோ கத்து அன்னமெனக்கூறப்படுவதால் மனிதபாஷையறிந்து நளனுடன் பேசிற்றென்றாவது, அக்காலத்து மாந்தர்பலர் பறவையின்பாஷை உணர்ச்சி பெற்றிருந்தாராதலால் பேசிற்றென்றாவது கொள்ளப்பொ ருந்துமென்க.

பறவைமுதலியவற்றிற்கும் பாஷையுண்டென்பதைப் "பேய்பூதம் மந்திகிளிபூவை பேசுதலா லாகுமே தன்மைப்பொது" என்ற சூத்திரத் தானுமுணர்க. ஒடுங்குஇடை-வினைத் தொகைநிலைத்தொடர்.

[இதுமுதல் ஐந்துபாட்டு நளனது கைக்கிளை]

40. இவ்வளவிற் செல்லுங்கோல் இவ்வளவிற் காணுங்கோல்
இவ்வளவிற் காத லியம்புங்கோல் —இவ்வளவின்
மீளுங்கோ லென்றுரையா விம்மினான் மும்மதநின்
றாளுங்கோல் யானை யரசு.

(இ-ள்) மும்மதம் நின்று - மூன்று மதங்களும் பொருந்தி, ஆளும் - ஆட்சிசெய்யும்படியான, கொல்யானை அரசு - கொல்கின்ற யானையையுடைய நளமகாராசன், இவ்வளவில் செல்லும்கொல்-இது வரைசென்றிருக்குமோ, இவ்வளவில்காணும்கொல்-இவ்வளவுநேரத்திற் பார்த்திருக்குமோ, இவ்வளவில் காதல் இயம்பும்கொல் - இவ்வளவுகாலத்துள் (தனது) ஆசையைச் சொல்லியிருக்குமோ, இவ்வளவில்—, மீளும்கொல்- (அன்னம்) திரும்புமோ, என்று உரையா என்று சொல்லிக்கொண்டே, விம்மினான்-துக்கத்தினால் தேம்பிக் கொண்டிருந்தான்; (எ-று.)

காமமுற்றூர்க்கு ஓர்நாழிகை ஓர் ஊழிபோற் காணப்படுமாதலால் இவ்வளவிற்செல்லுங்கொல் என்று நினைத்ததற்குப்பிற்பட்ட சிறிதுகாலத்தைப் பெரிதாய் எண்ணி இவ்வளவிற் காணுங்கொல் என்றது முதலாக எடுத்துக்கூறி நளன் வருந்தினான் என்றவாறும்.

மும்மதங்களாவன கன்னமதம், கபோலமதம், கோசமதம் என்பன. வடநூலார் ஏழுமதமுங் கூறுவர். நால்வகைச் சேனைகளிலும் யானைச்சேனையே சிறத்தல்பற்றி யானையரசு என்று விசேடித்தார். யானையரசு-யானைபோன்ற அரசெனினுமாம். யானையே சிறந்தது என்பது 'தானை யானை குதிரை' யென்ற புறத்திணையியற் சூத்திரத்தால் அறியப்படும். மும்மதம் என்றவிடத்து உண்மை விகாரத்தால்தொக்கது. மும்மதத்தை யாளுதலாவது, அவற்றைத் தன்வசப்படுத்தி நிற்றல்.

கொல்யானை-வினைத்தொகை. அளவு காலத்திற்குப் பண்பாகு பெயர். கொல் என்னும் இடைச்சொற்கள் ஐயப்பொருளில் வந்தன. இதனைக் "கொல்லேயையமசைநிலைக் கூற்றே" என்ற (நன்-இடை-16.) சூத்திரத்தாலுணர்க. உரையா-செய்யா என்னும் வாய்பாட்டு உடன் பாட்டு இறந்தகாலத்தெரிநிலை வினையெச்சம். விம்முதல் பெருமூச்செறிதல்.

41. சேவல் குயிற்பெடைக்குப் பேசுஞ் சிறுகுரல்கேட்
டாவி யுருகி அழிந்திட்டான்—பூவி
னிடையன்னஞ் செங்கா லிளவன்னஞ் சொன்ன
நடையன்னந் தன்பா னயந்து.

---

* கைக்கிளை-ஒருபக்கத்தில் உண்டாவது. கை-சிறுமை, கிளை-உறவு எனப்பொருள் கூறுதலுமொன்று. இது தலைவியின் வேட்கைக்குறிப்புத் தன்மேல் நிகழ்வதன் முன் தலைவன் தன்காதல்மிகுதி கூறுதலால் கைக்கிளையாயிற்று. இது ஆண்பாற் கைக்கிளை.

(இ-ள்) (நளன்) பூவின் இடை அன்னம்-செந்தாமரைப்பூவில் எழுந்தருளியுள்ள அன்னம்போலும் திருமகளையொத்தவளும், செம்கால் இள அன்னம்சொன்ன - சிவந்த காலையுடைய இளமையாகிய அன்னத்தினுற் சொல்லப்பட்ட, நடை அன்னம் தன்பால்-நடையிற் சிறந்த அன்னம் போன்ற தமயந்தியினிடத்து, நயந்து - விருப்பங் கொண்டு, சேவல்-ஆண்குயில், பெடைகுயிலுக்கு-பெட்டையாகிய குயிலுக்கு, பேசும்- (கலவிக் குறிப்பைக் காட்டிப்) பேசுகின்ற, சிறு குரல் கேட்டு-மெல்லிய ஓசையைக்கேட்டு, ஆவி உருகி - உயிர் தளர்ந்து, அழிந்திட்டான் - அறிவிழந்தவனுனன்; (எ-று.)

ஒன்றோடொன்று குலாவிக்கூவும் குயிலின்ஞெலியைக் கேட்டுத் தமயந்தியிடம் காதல்கொண்ட நளனும் அவ்வாறு தமயந்தியை மணந்திருத்தற்கில்லையே என வருந்தினுனென்க.

குயில்-கேட்போர் மகிழும்படி பாடுகின்ற இனிய ஓசையுடைய ஓர் பறவை. மாரனுக்குக்காகளவாத்தியமான குயிலினது சிறுகுரல் காமோத் தீபகமாய்க் காமுகரைமிகவருத்தும். பிறருக்கு இனிமை யானவை யெல்லாம் காமுகர்க்கு வெறுப்பைத்தருகின்றனவாகவே தோன்றுமாதலால், இனியகுயிலோசையும் நளனுக்குத் துன்புறுத் துவதாயிருந்தது.

சேவல்-பறவையாண்பாற்பெயர், "சேவற்பெயர்க்கொடை சிறகொடு சிவணும், மாயிருந்தூவி மயிலலங்கடையே" என்பதனுல், ஆண்குயில் சேவலெனப்பட்டது. பெடைக்குயில்-இருபெயரொட்டுப் பண்புத்தொகை, குயிற்பெடையென மாற்றுக. ஆவியுருகுதலுக்கும், அழிதலுக்கும் நயத்தலும், கேட்டலும் காரணமாய் நின்றன. பூவின் இடை அன்னம், நடை அன்னம், இவற்றில் அன்னம் உவமையாகு பெயர். அழிந்திட்டான் - ஆண்பாற் படர்க்கை இறந்தகாலவினைமுற்று; அழி-பகுதி, இடு-பகுதிப்பொருள் விகுதி அல்லது துணைவினை. இடை - எழனுருபு.

42\. அன்ன முரைத்த குயிலுக் கலசுவான்
மென்மயிறன் ரேகை விரித்தாட—முன்னதனைக்
கண்டாற்று துள்ளங் கலங்கினுன் காமநோய்
கொண்டார்க்கிஃ தன்றே குணம்.

(இ-ள்) அன்னம் உரைத்த-அன்னத்தினுல் சொல்லப்பட்ட, குயிலுக்கு - குயில்போன்றவளாகிய தமயந்தியின்பொருட்டு, அலசுவான்-வருந்துகின்ற நளன், மென்மயில்-மிருதுத்தன்மைவாய்ந்த மயிலானது, தன்தோகைவிரித்துஆட-தனதுகலாபத்தைப்பரப்பி ஆடாநிற்க, அதனைமுன் கண்டு அங்ஙனம் விரித்தாடும் மயிலினைத் தனக்கு எதிரில்பார்த்து, ஆற்றுது-பொறுக்காது, உள்ளம் கலங்கினுன்-மனம்

கலங்குகின்றான், காமநோய் கொண்டார்க்கு - காமவியாதியுள்ளவர்களுக்கு, குணம்-தன்மை, இஃது அன்றோ-இப்படிக்கலங்குதலல்லவா? (கலங்குதலேயாம்); (எ-று.)

கண்டார்க்குச் சந்தோஷத்தை விளைக்கும் மயிலின் நர்த்தனம், நளன்விரகியாதலால் அவனுக்கு வருத்தத்தை யுண்டுபண்ணுவதாயிற்று.

குயில்-தமயந்திக்கு, இனியமொழிக்கு உவமை; இருமடியாகு பெயர். குயிலுக்கு நான்காம் வேற்றுமைக்குவ்வுருபு பொருட்டுப் பொருளது. அலசுதல் - மனம் ஒருநிலையில்லாது கலங்குதல். அலசுவான்-வினையாலணையும் பெயர். அதனை-ஒன்றன்பாற்பெயர், அன் சாரியை, ஐ-இரண்டாம் வேற்றுமை உருபு. உள்ளம் கலங்கினன் "உயர்திணைதொடர்ந்த பொருள் முதலாறு மதனொடுசார்த்தினத்திணை முடிபின" என்ற(நன்-பொது-சூ-26) விதிப்படி உயர்திணையொடு சேர்ந்த அஃறிணைச் சினைப்பெயர் அவ்வுயர்திணை முடிபையே பெற்றது; இது திணைவழுவமைதி. காமநோய் - இருபெயரொட்டுப் பண்புத்தொகை. அன்றோ-ஓகாரம் வினாப்பொருள். நளன்மயிலாடுதலைக்கண்டு வருந்தினன் என்ற சிறப்புப்பொருளைக் 'காமநோய் கொண்டார்க்கிஃதன்றோ குணம்' என்ற பொதுப்பொருளால் சாதித்தலால் இது வேற்றுப்பொருள் வைப்பணி.

43. வாரணியுங் கொங்கை மடவாள் நுடங்கிடைக்குப்
பெருவமை யாகப் பிறந்துடையீர்—வாரீர்
கொடியா ரெனச்செங்கை கூப்பினா னெஞ்சந்
துடியா நெடிதுயிராச் சோர்ந்து.

(இ-ள்.) (நளமகாராசன்) நெஞ்சம் துடியா - மனந்துடித்து, நெடிது உயிரா-பெருமூச்செறிந்து, சோர்ந்து-தளர்ந்து, கொடியார்-பூங்கொடியாரே, வார் அணியும் கொங்கை-கச்சையணிந்திருக்கின்ற தனங்களையுடைய, மடவாள்-தமயந்தியினது, நுடங்கு இடைக்கு-அசைகின்ற இடைக்கு, பேர் உவமை ஆக-பெருமைதங்கிய உவமைப் பொருளாகும்படி, பிறந்துடையீர் - அப்பேற்றைப் பெற்றிருக்கிறவர்களே, வாரீர்-வாருங்கள், என-என்று, செம்கைகூப்பினான்-சிவந்த கைகளைக் கூப்பிவணங்கினான். (எ-று.)

நளன் துடியா, உயிரா, சோர்ந்து கொடியார், உடையீர் வாரீர் எனக்கூப்பினான் எனக் கொண்டு கூட்டுக.

அசைந்துவிளங்கும் பூங்கொடிகள் தனது காதலியின் இடைபோல் தோன்றலால், மனமகிழ்ந்து காமமயக்கத்தால் அவற்றை வணங்கினான் என்பதாம். தலைவியது இடைபோன்றிருந்த உயர்வும்,

மகிழ்வும்பற்றி அஃறிணையான கொடிகளைக் கொடியாரென உயர் திணைப்படுத்திக் கூறினன்;

மடவாள்-மடமையென்னும் பண்படியாகப்பிறந்த பெண்பாற் பெயர், ஆள்-பெண்பால்விகுதி. நுடங்கு இடை-வினைத்தொகை. உவமை பொருளுக்கு ஆகுபெயர், உபமா என்ற வடசொல்லின் திரிபு, (உவமையாவது-ஒருபொருளோடு மற்றொரு பொருளுக்கு ஒப்புமையாக விளங்குவது). கொடி-இடைக்கு உவமை வடிவும், தன்மையும்பற்றியாம். பிறந்துடையீர்கள் முன்னிலைப்பன்மை விகுதி. வாரீர்-ஏவற்பன்மை எதிர்கால வினைமுற்று, இர் - ஏவற்பன்மை விகுதி. கொடியார் என்பதில் கொடுமையானவர் எனச்சிலேடைப்பொருள் படுதலும் காண்க. அரசர்க்குப் பாதமும், அகங்கையும் சிவந்திருத்தல் உத்தம இலக்கணமாதலால் அவ்விலக்கணம் அமைந்த நளனது கையைச் செங்கையென்றார். செங்கை என்ற விசேடணத்தால் அகங்கை என்பது பெறப்பட்டது; செம்மை பகுதி, மையீறுகெட்டது. கூப்பினன் - ஆண்பாற்படர்க்கை இறந்தகாலப் வினைமுற்று. ஒருபொருளை அடையவிரும்பி வருந்துகின்றவர் மனக்கலக்கமடைதலும், பெருமூச்சுவிடுதலும் இயல்பாதலால் 'நெஞ்சந்துடியா, நெடிதுயிரா' எனக்கூறினர்.

ஒரு பொருளை அடைய விருப்ப மிகுந்தவர் மனக்கலக்க மடைதலும், பெருமூச்சுவிடுதலும் இயல்பாதலால் 'நெஞ்சந்துடியா, நெடிதுயிரா' எனக்கூறினர். துடியா, உயிரா - செய்யாஎன்னும் வாய்பாட்டு உடன்பாட்டு இறந்தகாலத் தெரிநிலை வினையெச்சம். நெடிது-நெடுமையென்னும் பண்பினடியாகப் பிறந்த பெயர். நெஞ்சம்-இடவாகுபெயர்.

44. கொங்கையிள நீராற் குளிர்ந்தவிளஞ் சொற்கரும்பாற்
பொங்கு சுழியென்னும் பூந்தடத்தின் —மங்கைநறுங்
கோய்தாம வாசக் குழனிழற்கீ ழாற்றேனே
வெய்தாமக் காமவிடாய் வெப்பு.

(இ-ள்) மங்கை-தமயந்தியினது, கொங்கை இள நீரால்-கொங்கைகளாகிய இளநீராலும், குளிர்ந்த இளம் சொல் கரும்பால்-குளிர்ச்சி பொருந்திய மெல்லிய சொற்களாகிய கருப்பஞ்சாற்றினாலும், பொங்கு-[அழகு] மிகுகின்ற, சுழி என்னும் - அல்குற்சுழியென்று சொல்லப்படும், பூந்தடத்தில் - தாமரைத்தடாகத்தினும், நறுமை - நல்ல, கொய்தாமம் - [அப்பொழுது] பறித்தமாலைகளின், வாசக் குழல் நிழல்கீழ் - வாசனை பொருந்திய கூந்தலின் நிழலினும், வெய்து ஆம் - மிகக்கொடியதான, அ காமவிடாய், அந்தத் தமயந்தியாகிய பெண்மேல் வைத்த ஆசையாகிய நீங்காத நோயினின்றும் உண்டான, வெப்பு - உஷ்ணத்தை, ஆற்றேனே - ஆற்றிக்கொள்ளப் பெறேனே; (எ-று.)

இளநீர், கருப்பஞ்சாறு, நீர்த்தடாகம், சோலைநிழல் இவற்றை யடைந்தோர் தமது வெப்பத்தைத் தணித்துக் கொள்வதுபோல நளனும் தமயந்தியினது இளநீர் போன்ற கொங்கைகளையும், கரும்பு ரசம் போன்ற சொல்லையும், பெண்களுக்குள்ள சுழிகளிரண்டனுள் உந்திச்சுழியை விலக்கிப் பொங்குசுழியென்ன லோடிராமல் அல்குற் சுழி என்பார் பூந்தடம் என்று அழகிய தடாகத்தையும் உருவக மாக்கினர். தடாகம் போன்ற அல்குற் சுழியையும், சோலை போன்ற கூந்தல் நிழலையும் அடைந்து, அநுபவித்து எனது காம வெப்பத்தை நீக்கிக்கொள்ளமாட்டேனோ வெனத் தன்னுள் கூறிக் கொண்டதாம். தாகத்தைத் தணித்தல் இளநீர் முதலியவற்றின் இயல்பு. இளமையும் திரண்ட வடிவும் பற்றிக் கொங்கை, இள நீரென்றும், இனிய தன்மை பற்றிச் சொல் கரும்பென்றும், மனத்தையும் ஆழ்த்துந் தன்மைபற்றிச் சுழி பூந்தடமென்றும் உரு வகமாக்கப்பட்டன. நிழல் என்ற அளவில் சோலை என்பது தானே போதருமாதலின் குழலைச் சோலையென உருவகமாக்காது கூறினர்.

இளநீர்-இளமையென்னும் பண்படியாகப்பிறந்த அன்மொழித் தொகை; நீரையுடைய குரும்பையை உணர்த்திற்று. கரும்பு - ஆகு பெயர். சுழி - தொழிலாகுபெயர், சுழிந்திருப்பது. கொய்-வினைத் தொகை. காமவெப்பத்தின்கொடுமையைக் குறித்தற்கு வெய்தாம் என்று அடை கொடுத்தும், அ என்றுசுட்டியும் கூறினர். வெய்து- வெம்மை என்னும் பண்படியாகப் பிறந்த ஒன்றன்பாற் பெயர். ஆற்றேனோ-தன்மை ஒருமைப் பிறவினைமுற்று; ஓகாரம் இரக்கமும், அவாமிகுதியும் பற்றி நின்றது. இச்செய்யுள் உருவகவணி.

[தமயந்தி தனியே சென்று அன்னத்தை என்ன செய்தி எனல்]

45. மன்னன் விடுத்த வடிவிற் றிகழ்கின்ற
அன்னம்போய்க் கன்னி அருகணைய — நன்னுதலுந்
தன்னுடல் விட்டுத் தனியிடஞ்சேர்ந் தாங்கதனை
என்னுடல் சொல்லென்று ளீங்கு.

(இ-ள்.) மன்னன் விடுத்த - நளராசன் அனுப்பிய, வடிவில்- அழகினால், திகழ்கின்ற - விளங்குகின்ற, அன்னம் போய் - அன்னப் பறவை சென்று, கன்னி அருகு அணைய - தமயந்தியின் பக்கத்திற் சேர, நல்நுதலும் - நல்ல நெற்றியையுடைய தமயந்தியும், தன் ஆடல் விட்டு - தன் விளையாட்டைவிட்டு, தனி இடம் சேர்ந்து-ஒருவருமில் லாத தனித்த இடத்தை அடைந்து, ஆங்கு - அவ்விடத்தில், அதனை- அவ்வன்னப் பறவையை (நோக்கி), ஈங்கு - இவ்விடத்தே, (நீ) என் - என்னை, நாடல் - விரும்புதலை, சொல் என்றாள் - சொல்லென்று கேட் டாள்; [எ — று]

தோழியருடன் விளையாடிக் கொண்டிருந்த தமயந்தி தன்னி டத்து வந்த அன்னத்தின் எண்ணத்தைப் பலருமிருக்குமிடத்து

வினவியறிதல் தகாதென்று தனித்த இடஞ் சென்று வினவினள் என்பதாம்.

தமயந்தி தனது ஆடலை விட்டு அன்னத்தை விரும்பித் தனியிடஞ்சேர்ந்து, வினவுதற்கு அதனது அழகிய உருவமே காரணமென்பார் 'வடிவிற்றிகழ்கின்ற அன்னம்' என்று விசேடித்தார், நன்னுதல்-பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. ஆடல்-தொழிற்பெயர். அங்கு, இங்கு என்னும் சுட்டுப் பெயர்கள் ஆங்கு, ஈங்கு என முதல் நீண்டன. நாடல் - தொழிலாகு பெயர். விடுத்த, திகழ்கின்ற என்ற பெயரெச்ச அடுக்குக்கள் அன்னம் என்னும் பெயர் கொண்டு முடிந்தன.

[இதுவும், அடுத்த செய்யுளும் அன்னம் நளனை வர்ணித்தல்.]

46\. செம்மனத்தான் தண்ணளியான் செங்கோலான் மங்கையர்கள்
தம்மனத்தை வாங்குந் தடந்தோளான்—மெய்ம்மை
நளனென்பான் மேனிலத்து நானிலத்து மிக்கான்
உளனென்பான் வேந்த னுனக்கு.

(இ-ள்.) செம்மனத்தான் - செம்மையான மனமுடையவனும், தண் அளியான் - குளிர்ந்த கிருபை யுடையவனும், செங்கோலான் - செங்கோலுடையவனும், மங்கையர்கள் தம் மனத்தை - இளம்பெண்களுடைய மனத்தை, வாங்கும்—தன்வசப்படுத்தும், தடம் தோளான் - விசாலமான தோள்களுடையவனும், மேல் நிலத்தும் - மேலுலகத்திலுள்ளவர்களிலும், நால் நிலத்தும் - பூமியிலுள்ளவர்களிலும், மிக்கான் சிறந்தவனுமாகிய, மெய்ம்மை நளன் என்பான் - சத்தியத்தை யுடைய நளமகாராச னென்று சொல்லப்படுபவன், உனக்கு—, வேந்தன் - தலைவனாய், உளன் - இருக்கிறான்; [எ-று.]

செம்மையாவது - பாரபக்ஷமின்றி நடுவு நிலைமையினிற்றல். அளி - தொடர்பில்லார் மாட்டு நிகழுங்கிருபை. தண்ணளியனுதற்குச் செம்மனமும், செங்கோலனுதற்குத் தண்ணளியுங் காரணமாமென்க. செங்கோன்மையாவது - வேந்தனுற் செய்யப்படும் அரசு முறையினது தன்மை, அம்முறை ஒருபாற் கோணுது செம்மையான கோல் போறலின் செங்கோலெனப்பட்டது. செங்கோன்மையுடையவன் செங்கோலன். 'மங்கையர்கள் தம்மனத்தை வாங்குந் தடந்தோளான் வேந்தனுனக்கு உளன்' என்ற வகையால் தமயந்தி அவாவுறுதற்கேற்ற நளனது அழகின் மிகுதியும், உங்களிருவருக்கும் அழகொத்திருத்தலால் அன்பும் ஒத்து, இன்பஞ் சிறக்குமெனத் தமயந்தி

னனது இன்றியமையாச் சிறப்புங் கூறப்பட்டன. தடந்தோள்-உரிச்சொற்றொடர். நிலம் - இடவாகுபெயர். மேனிலம் - சுவர்க்கம், கானிலம்-பூமி, பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை, நான்காகிய நிலம் என விரியும். குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்ற நிலம் ஐந்தனுள் பாலை தனக்கோரிடமின்றி ஏனைய நான்கு நிலங்களினிடையிடையே அந்நிலங்கள் தத்தம் வளங் குன்றியக்கால் தோன்றப் பெறுவதாலும், நன்மக்கள் வசித்தற்குரிய நிலம் மற்றை நான்குமே யாதலாலும், ஜெந்துக்கள் வாழுதற்கேற்ற தன்மை பொருந்தாததான பாலையை ஒழித்துச் சிறப்பாக நிலம் நான்கே கொள்ளுதல் நூன்மரபு, "முல்லையுங் குறிஞ்சியு முறைமை யிற் றிரிந்து, நல்லியல் பழிந்து நடுங்குதுய ருறுத்தும், பாலையென்ப தோர் படிவங்கொள்ளும்", என்ற சிலப்பதிகார அடிகள் ஈண்டு நோக்கத்தக்கவை.

47. அறங்கிடந்த நெஞ்சு மருளொழுகு கண்ணும்
மறங்கிடந்த திண்டோள் வலியுந்—திறங்கிடந்த
செங்கண்மா லல்லனேற் றேர்வேந்த ரொப்பரோ
அங்கண்மா ஞாலத் தவற்கு.

[இ-ள்.] அறம்கிடந்த நெஞ்சும்-தருமம் நிறைந்த மனமும், அருள் ஒழுகு கண்ணும்-கருணை பெருகி வழிகின்ற கண்ணும், மறம்கிடந்த-வீரம் பொருந்திய, திண்தோள் வலியும்-உறுதியான புஜபலமும், [ஆகிய இவைகளில்] திறம்கிடந்த-எல்லா வல்லபமும் மிக்க, செம் கண்மால் அல்லனேல்-சிவந்த கண்களையுடைய விஷ்ணுவே யல்லாமல், அங்கண்மாஞாலத்து-அழகிய இடமகன்ற பெரிய பூமியில், தேர் வேந்தர்-ரதாதிபர்கள், அவற்கு-அந்த நளமகாராஜனுக்கு, ஒப்பரோ-ஒப்பாவார்களோ?; [ஆகார்] எ - று.

தர்மகுணம், தண்ணளி, புயவலி முதலிய சிறந்த குணங்களிற் காத்தற் கடவுளான தேவிற் சிறந்த திருமாலை அந்த நளனுக்கு ஒப் பாகக் கூறலாமே யன்றி, உலகத்துள்ள எவ்வரசரையும் ஒப்புமை கூறத் தகாதென்பதாம். நாவிஷ்ணு:பிருதிவீபதி:என்பதுமறிக.

மால்-பெருமைக்குணமுடையவன், லட்சுமியைத் தரித்தவனு மாம். ஏல்-எனில் என்பதன் மரூஉ. ஓகாரம்-எதிர்மறைப்பொருளது.

இதுவும், அடுத்த செய்யுளும் தமயந்தியின் வருத்த மிகுதி.

48. புள்ளின் மொழியினொடு பூவாளி தன்னுடைய
உள்ளங் கவர வொளியிழந்த—வெள்ளை
மதியிருந்த தாமென்ன வாய்த்திருந்தாள் வண்டின்
பொதியிருந்த மெல்லோதிப் போன்.

[இ-ள்.] வண்டின் பொதி-வண்டுக்கூட்டம், இருந்த-தங்கி யிருந்த, மெல் ஓதி-மென்மையாகிய கூந்தலையுடைய, பொன்-இலக் குமிபோன்ற தமயந்தி, புள்ளின் மொழியினொடு-அன்னத்தின் சொல்லுடனே, பூவாளி-[மன்மதனது] மலரம்பு, தன்னுடைய உள் ளம் கவர-தனது மனத்தைக் கொள்ளை கொள்ளுதலால், ஒளி இழந்த-பிரகாசமற்ற, வெள்ளைமதி-வெண்மையான சந்திரன், இருந்தது ஆம் என்ன-இருந்ததைப்போல, வாய்ந்து-[முகம்விளர்த்தலைப்] பெற்று, இருந்தாள்; [எ-று.]

தமயந்தி நளனது அழகின் திறத்தை உள்ளவாறு விரித்துக் கூறிய அன்னப்பறவையின் சொல்லைக்கேட்டு, நளன் மேல் ஆசை கொண்டு, தன் வசமிழந்து, செயலற்றிருந்தனளென்பதாம்.

புள் இன்மொழி யெனக்கொண்டு புள்ளினது இனிய மொழி யெனினுமாம். பூவாளி உள்ளங் கவருதலுக்கு முன் கவர்ந்தது புள் ளின் மொழியாதலால், மொழியினொடு. பூவாளி-இருபெயரொட்டுப் பண்புத்தொகை. பூவாளி மன்மதனுமாம். தன்னுடைய-உடைய; ஆறாம் வேற்றுமைச் சொல்லுருபு. கவர-செயவெனெச்சம் காரணப் பொருளில் வந்தது. வெள்ளை-பண்புப்பெயர். வண்டின்-இன், சாரியை. பொதி-முதனிலைத் தொழிலாகுபெயர். ஓதி-பொன்-இரண்டாம் வேற்றுமைத் தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை, ஓதி பெண்மயிர். [ஆண்மயிரின் பெயர்-குஞ்சி.] பொன்-உவமவாகுபெயர்.

49. மன்னன் மனத்தெழுந்த மையனோ யத்தனையும்
அன்ன முரைக்க வகமுருகி—முன்னம்
முயங்கினாள் போற்றன் முலைமுகத்தைப் பாரா
மயங்கினா ளென்செய்வாள் மற்று.

[இ-ள்.] மன்னன் மனத்து-நளராஜனது மனத்தில், எழுந்த-தமயந்தி (பொருட்டு) உண்டாகிய, மையல் நோய் அத்தனையும்-காம நோய் முழுவதையும், அன்னம் உரைக்க-அன்னமானது எடுத்துக் கூற [அதனால்] அகம்உருகி-மனங்கரைந்து, முன்னம்-[அன்னத் தால் நளனையறியும்] முன்னதாகவே, முயங்கினாள்போல்-அவனைத் தழுவிக்கொண்டவள்போல, தன்முலை முகத்தை-தனது தனங்களி னது உச்சியை, பாரா-பார்த்து, மயங்கினாள்-அறிவழிந்திருந்தாள், மற்று என் செய்வாள்-வேறு என்ன செய்வாள்; [எ-று.]

ஆசை மேலீட்டால் தழுவாத நளனைத் தழுவியதாக மயங்கித் தனது தனங்களின் மத்தியில் நீலரத்தினம் அழுத்தியதுபோன்ற முகக்குறியின் அழகையும், யௌவனத்தன்மையையும் பார்த்துத் தழுவியதாலாகும் நகக்குறி முதலியவை காணப்பெறுமையால் இதற்கு யாது காரணமென மயங்கினாள் என்பதாம். தழுவப் பெற்ற பெண்கள் நகக்குறி கண்டு மகிழ்தல் இயல்பு.

இதனை "முலை மீது கொழுநன்ற னகமேவு குறியை முன்செல்வ மில்லாதவர் பெற்ற பொருள் போற் கலைநீவி யாரேனு மில்லாவி டத்தே கண்ணுற்று நெஞ்சங்களிப்பீர்" என்ற கலிங்கத்துப் பரணிச் செய்யுளாலும் அறிக.

அத்தனையும் எஞ்சாமைப் பொருளது—உரைக்க-செயவெனெச்சம். பாரா-செய்யா என்னும் வாய்பாட்டு உடன்பாட்டு வினையெச்சம். மற்று-பிறிது என்னும் பொருளில் வந்தது.

[நளனைத் தனக்கு மணஞ்செய்து வைக்கும்படி தமயந்தி அன்னத்தை வேண்டுதல்.]

50. வாவி யுறையு மடவனமே என்னுடைய
ஆவி யுவந்தளித்தா யாதியாற்—காவினிடைத்
தேர்வேந்தற் கென்னிலைமை சென்றுரைத்தி யென்றுரைத்தாள்
பார்வேந்தன் பாவை பதைத்து.

[இ-ள்.] பார்வேந்தன் பாவை-பூமியை ஆளுகின்ற அரசனுடைய மகளான தமயந்தி, பதைத்து-[ஆசை-மிகுதியால்] மனம் பதறி, [பறவையைநோக்கி] மடஅனமே-இளமையான அன்னமே! காவின் இடை சென்று-நளன் இருக்குஞ் சோலையிற் போய், தேர் வேந்தற்கு-ரதாதிபதியான அந்நள மகாராசனுக்கு, என் நிலைமை-எனது அன்பு நிலைமையை, உரைத்தி-நீ சொல்வாய், [அங்ஙனம் சொல்லி அவனை எனக்கு மணமகனுக்குவாயானால்] என்னுடைய ஆவி உவந்து அளித்தாய் ஆதி-எனது உயிரை மகிழ்ந்து கொடுத்தவனாவாய், என்று உரைத்தாள்-என்று சொன்னாள்; [எ-று]

நான் நளனிடத்திற் கொண்டிருக்கும் ஆசை மிகுதியை அவனுக்கு எடுத்துக்கூறி, அவனை எனக்கு மணஞ்செய்து, வைத்திடாயாயின், எனது உயிர் வருந்தியொழியுமெனத் தனது ஆசை மிகுதியை வெளியிட்டாள். அரசன் அமைச்சர் முதலிய பலருடன் இருந்து ராசகாரியங்களிற் கவனஞ்செலுத்தி யிருக்குங்கால் எனது கருத்தை வெளியிடின் கனவு வேளையிற்சொல்வதுபோற் செவியில் நுழையாதாகையால் என்னை மனங்கொள்ளாது விடுதல் கூடும்; ஆகையால் அங்ஙனமின்றித் தனித்துச் சிங்கார வனத்தில் உல்லாசத்துடன் இருக்கும் சமயம் பார்த்து, என் குறையைக் கூறிக்காரியத்தைமுடிப்பாய் என்றற்குக் 'காவினிடைத் தேர்வேந்தற் கென்னிலைமை சென்றுரைத்தி' என்றுரைத்தாள்.

வாவி-வாபி என்ற வடசொல்லின் விகாரம். அளித்தாய்—முன்னிலை ஒருமை இறந்த கால வினையாலணையும் பெயர். ஆதி-முன்னிலை ஒருமை எதிர்கால வினைமுற்று, இ-முன்னிலை ஒருமை விகுதி, காலங்காட்டிற்று.

[அதற்கிணங்கி அன்னம் நளனிடம் செல்லல்]

51. மன்னன் புயநின் வனமுலைக்குக் கச்சாகும்
என்ன முயங்குவிப்பே னென்றன்னம்—பின்னும்
பொருந்தவன்பா லோதிமலர்ப் பூங்கணைகள் பாய
இருந்தவன்பாற் போன தெழுந்து.

[இ-ள்.] அன்னம்-அன்னமானது, [தமயந்தியை நோக்கி] மன்னன் புயம்-நளமகாராசனுடைய தோள்கள், நின் வனம் முலைக்கு-உன்னுடைய தொய்யிற் கோலம் அமைந்த தனங்களுக்கு, கச்சு ஆகும் என்ன-ரவிக்கை யாகுமென்று சொல்லும்படி, முயங்குவிப்பேன்-அணையும்படி செய்வேன் என்று சொல்லி, பின்னும்-மேலும், பொருந்த-[அவள் மனதில்] பதியும்படி, அன்பால் ஓதி-அன்பினால் சில வார்த்தைகளைச் சொல்லி, (பின்பு) மலர் பூ கணைகள்-[மன்மதனது] பூவாகிய அழகிய அம்புகள், பாய-பாயும்படி, இருந்தவன் பால்-[வருந்தி] இருந்தவனாகிய நளராசனிடத்தில், எழுந்துபோனது-[விடைபெற்றுக்கொண்டு] பறந்து போயிற்று; (எ-று.)

நளன் தனக்கு மணமகனாய்க் கிட்டுவானோ எனச்சந்தேகித்த தமயந்திக்கு அன்னம் தவறாது உன்னை அவனுக்கு மணஞ் செய்விப்பேன் எனக்கூறித் தன்னை அனுப்பிய நளனிடம் சென்றது என்பதாம்.

புயம் முலைக்குக் கச்சாகுதல் வேறுபடாது இரண்டும் பொருந்தி இருத்தல். தொய்யிலாவது மகளிர் மார்பிலும், தோளிலும் மன்மதன் வில் முதலியவற்றைச் சந்தனத்தால் எழுதப் பெறும் ஒரு வகைக் கோலம். பின்னும்—உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை. முயங்குவிப்பேன்—பிறவினைத்தன்மை ஒருமை வினைமுற்று. பால்—இடம்; ஏழாம் வேற்றுமை உருபு. நின் மலர்க்கைக்கு என்றும் பாடபேதமுண்டு.

[அன்னம் சென்றபின் வருந்தியிருந்த தமயந்தியின் நிலைமையைத் தோழிகள் தாய்க்கு உரைத்தலும் தாய் வீமராஜனுக்கு உரைத்தலும்.]

52. கோற்றவன்றன் றேவிக்குக் கோமகடன் றோழியர்கள்
உற்ற தறியா உளநடுங்கிப்—பொற்றொடிக்கு
வேறுபா டுண்டென்றார் வேந்தனுக்கு மற்றதனைக்
கூறினாள் பெற்ற கொடி.

[இ-ள்.] கோமகள் தன் தோழியர்கள்-இராச குமாரத்தியாகிய தமயந்தியினது தோழிமார்கள், உற்றது அறியா-தமயந்திக்கு நேரிட்ட [வருத்தமிகுதியை]த் தெரிந்து, உளம் நடுங்கி-மனம் பதறி, கொற்ற

வன் தன் தேவிக்கு-வெற்றியை யுடைய வீமராசனுடைய மனைவிக்கு, பொன் தொடிக்கு-பொன்னாலாகிய வளையல்களை அணிந்த தமயந்திக்கு, வேறுபாடு-[முன்னிலைமைக்கு] மாறுதல், உண்டு என்றார்-உண்டாயிருக்கிறதென்றுசொன்னார்கள்; அதனை-அச்செய்தியை, பெற்ற கொடி-தமயந்தியைப் பெற்றதாயானவள், வேந்தனுக்கு-அரசனுக்கு, கூறினாள்-சொன்னாள்; (எ-று.)

தமயந்தியின் இன்ப துன்பங்களைத் தமதாகக் கொள்ளும் உயிர்த்தோழியர்களாய் அவளைக் காப்பவர்களாதலால் தமயந்தியின் வேறுபாட்டுக்கு உள்ளம் நடுங்கி, உடனேநற்றாய்க்குத் தெரிவித்தார்கள்; அதனை அவள்வீமராசனுக்குத் தெரிவித்தாள் என்பதாம்.

கணவன்மேல் விருப்பங் கொண்டாளெனல் இடக்கரடக்கலாதலால், அதனை மறைத்து வேறுபாடு உண்டென்றார். அறியா-உடன்பாட்டு இறந்த கால வினை யெச்சம். உயிர்த்தோழியர்க்கு அறியக்கூடாதது ஒன்றில்லையாதலால் இதற்கு அறியாமல் என்று பொருள் கொள்ளல் சிறப்பின்று. உற்றது-ஒன்றன்பால் வினையாலணையும் பெயர். பொற்றொடி-மூன்றாம் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. வேறுபாடு-முதனிலை நீண்ட தொழிற் பெயர். மற்று-அசை. கொடி—உவமையாகு பெயர்.

[வீமன் தமயந்தியின் மாளிகை சேருதல்.]

53. கருங்குழலார் செங்கையினால் வெண்கவரிப் பைங்கால்
மருங்குலவ வார்முரச மார்ப்ப—நெருங்கு
புரிவளைக்கை நின்றேங்கப் போய்ப்புக்கான் பெற்ற
வரிவளைக்கை நல்லாள் மனை.

(இ-ள்.) கருங்குழலார்-கருமையாகிய கூந்தலையுடைய பெண்களது, செங்கையினால்-சிவந்த அங்கையால்வீசும், வெண்கவரிப்பைங்கால்-வெண் சாமரையினது குளிர்ந்த காற்று, மருங்கு உலவ-இருபக்கங்களிலும் வீசவும், வார்முரசம் வாரணிந்த முரச வாத்தியங்கள், ஆர்ப்ப-ஒலிக்கவும், நெருங்குபுரிவளை-நெருங்கிய முறுக்குகளையுடைய சங்குகள், நின்று ஏங்க-நிலைபெற்று ஒலிக்கவும் போய்,—பெற்ற-தான்பெற்ற, வரிவளைக்கை நல்லாள் மனை-கீற்றுப்பொருந்திய வளையல்களணிந்த கைகளையுடைய நற்குண நற்செய்கைகளையுடைய தமயந்தியினது மாளிகையில், புக்கான்-புகுந்தான்; (எ-று.)

முதலடியில் கருமை, செம்மை, வெண்மை, பசுமை என்ற ஒன்றுக்கொன்று முரணான நிறங்கள் வரும்படி தொடுத்தமையின் தொடைமுரண். வார் முரசமென்பதற்குப் பெரிய முரசமென்று வருவித்தும் பொருள் கொள்க.

[தமயந்தி தன்னிடம் வந்த தந்தையை வணங்கல்]

54. கோதை சுமந்த கொடிபோ லிடைநுடங்கத்
தாதை திருவடிமேற் றான்வீழ்ந்தாள்—மீதெல்லாங்
காந்தாரம் பாடிக் களிவண்டு நின்றரற்றும்
பூந்தார மெல்லோதிப் பொன்.

(இ-ள்.) *மீது எல்லாம்-மேலெல்லாம், களிவண்டு-மதுவுண்டு களிக்கின்ற வண்டுகள், காந்தாரம்பாடி-காந்தாரம் என்னும் பண்ணைப் பாடி நின்று, அரற்றும்-நீங்காமல் சப்திக்கின்ற, பூதார் அம் மெல் ஓதிப் பொன்-பூமாலையை அணிந்த அழகிய மென்மையாகிய கூந்தலையுடைய இலக்குமியை யொத்த தமயந்தி, கோதை சுமந்த கொடிபோல்-மலர் மாலையைச் சுமந்துள்ள பூங்கொடியைப்போல், இடைநுடங்க-இடை தளரும்படி, [வந்து] தாதைதிரு அடிமேல்-தந்தையினுடைய அழகிய பாதங்களில், தான் வீழ்ந்தாள்-தான் விழுந்து வணங்கினாள்; (எ-று.)*

கோதை-கூந்தலுமாம், அப்பொருளில் இது இல்பொருளுவமம். காந்தாரம்-ஓர் வகைப்பண், இது குறிஞ்சியாழ்த்திறம் எட்டில் ஒன்று. இதனை "பறைந்தனைவளங் காந்தாரம் படுமலை மருளயிர்ப்புச் செறிந்த பஞ்சுர மெய்பாற்றுச் செந்திறங் குறிஞ்சி யென்ப" என்ற சூடாமணி நிகண்டடிகளால் அறிக. பொன் உவமவாகு பெயர்.

[வீமன் தமயந்திக்குச் சுயம்வரம் நடத்த நினைத்தல்]

55. பேரழகு சோர்கின்ற தென்னப் பிறைநுதன்மேல்
நீரரும்பத் தன்பேதை நின்றாளைப்—பாராக்
குலவேந்தன் சிந்தித்தான் கோவேந்தர் தம்மை
மலர்வேய்ந்து கொள்ளு மணம்.

(இ-ள்.) *பேர் அழகு-மிகுந்த அழகு, சோர்கின்றது என்ன-வழிகின்றது என்று உவமை சொல்லும்படி, பிறைநுதல்மேல்-பிறைச் சந்திரன் போன்ற தனது நெற்றியில், நீர் அரும்ப-வேட்கை மிகுதியாலாகிய வேர்வைநீர் துளிக்க, நின்றாளை-நின்றவளான, தன் பேதையை-தனது குமாரத்தியின் நிலைமையை, பாரா-பார்த்து,—குலம் வேந்தன்-உயர்ந்த குலத்திற் பிறந்த வீமராசன், கோவேந்தர் தம்மை மலர் வேய்ந்து கொள்ளும் மணம்-மேன்மை பொருந்திய அரசர்களில் ஒருவனை மலர் மாலை அணிந்து, மணஞ்செய்து கொள்ளத்தக்க சுயம்வரத்தை, சிந்தித்தான்-தன் மகளுக்கு காட்ட வேண்டுமென்று நினைத்தான். (எ-று.)*

வேட்கை மிகுதியால் நெற்றியிலிருந்து ஒழுகும் வேர்வையை அழகு ஒழுகுவதாகக் குறித்தார். என்ன என்பதைப் போல என உவம உருபாக்கிப் பொருள் கொள்ளலும் பொருந்தும். பிறைநுதல்-உவமைத்தொகை; நெற்றிக்குப் பிறைச்சந்திரன் உவமம்-வளைந்த வடிவோடு அழகுள்ளதாய்ப் பார்ப்பார்க்கு மகிழ்ச்சி விளைத்து விளங்குதற்கு. பேதை நின்றாளை என்றவிடத்து ஐ உருபு பிரித்துக் கூட்டப்பட்டது. பேதை-இளமையுடையவள் அல்லது அறிந்தும் அறியாதவள் போல் ஒடுங்கியிருப்பவள். நின்றாள்-வினையாலணையும் பெயர். மலர்-மாலைக்குக் கருவியாகுபெயர். குலம்-வடசொல்.

[வீமன் தமயந்திக்குச் சுயம்வர நாளைக்குறித்து வெளியிடல்]

56. மங்கை சுயம்வரநா ளேழென்று வார்முரச
மெங்கு மறைகென் றியம்பினான்—பைங்கமுகின்
கூந்தன்மேற் கங்கைக் கொழுந்தோடு நன்னாடன்
வேந்தர்மேற் றூதோட விட்டு.

(இ-ள்.) பைங்கமுகின் கூந்தல்மேல்-பசுமையான பாக்கு மரங்களின் மடல்களின்மேல், கங்கைக் கொழுந்து ஓடும்-ஆகாச கங்கை நதியின் நீர்த்திவலைகள் வீசப்பெற்ற, நல்நாடன்-நல்ல விதர்ப்பநாட்டையுடையவனான வீமன், வேந்தர் மேல் தூது ஓடவிட்டு-(அயல்நாட்டு) அரசர்களிடத்துத் தூதர்களை விரைவாகச் செலுத்தி, மங்கை சுயம்வர நாள் ஏழ் என்று-தமயந்தியின் சுயம்வரத்திற்குக் குறிப்பிட்ட, தினம் (இற்றைக்கு) ஏழாவது நாளென்று, வார்முரசம் எங்கும் அறைக-வாரணிந்த முரசவாத்தியத்தை (இந்நாட்டில்) எவ்விடத்தும் அடித்துத்தெரிவிப்பீர்களாக, என்று இயம்பினான்-என்று (முரசமடித்தற்குரிய வள்ளுவர்களை நோக்கிச்) சொன்னான்; (எ-று.)

'மங்கை சுயம்வரநாள் ஏழென்று வேந்தர்மேல் தூதோடவிட்டு எனக் கூட்டியுரைத்துக்கொள்க. அயல்நாட்டரசர்களுக்குத் தூதர்கள் வாயிலாகத் தெரிவித்துத் தன்னாட்டுச் சனங்களுக்கு முரசு மூலமாகத் தெரிவித்தனனென்க. மங்கை-மங்கைப் பருவத்தை உடையவளை உணர்த்திற்று, மங்கைப்பருவம் பனிரண்டு முதல் பதின்மூன்றுவரை அறைகென்று-அறைகவென்று அகரம் தொகுத்தல். "பைங்கமுகின் கூந்தன் மேற் கங்கை கொழுந்தோடும்" என்று அந்நாட்டுக் கமுக மரங்கள் ஆகாய கங்கை வரை அளாவியிருக்கின்றனவென வருணித்து நிலவளத்தை விளக்கியவாறும். இப்பொழுதுள்ள விதர்ப்ப நாட்டெல்லையை ஆராயுமிடத்துக் கங்காநதி அந்நாட்டில் ஓடுகிறதில்லையெனத் தெரிதலால் பூலோக கங்கையென்று கொள்ள இடமின்று. அக்காலத்து அந்நாடு கங்காதீரம்வரைப் பரவியிருந்ததாகக் கொள்ளிற் பொருந்தும். இனிக் கங்கை யென்று உபசாரமாக உயர்ந்த தீர்த்தங்

களுக்குச் சொல்வது போல மற்ற நீர்ப்பெருக்கைக் கூறியதாகக் கொண்டு அந்நாட்டின் நிலவளத்தையும் விளக்கியதாகவும் கொள்ளலாம். தூது என்பது அமைச்சு, வேந்து என்பன போல் உயர் திணைப் பொருள் குறிக்கும் அஃறிணைச் சொல்.

அரசர்கள் சுயம்வரத்துக்குப் புறப்பட்டு வருதல்.

57. மாமுத்த வெண்குடையான் மால்களிற்றன் வண்டிரைக்குந்
தாமத் தரிச்சந் திரன்சுவர்க்கி—நாமத்தார்
பாவேய்ந்த செந்தமிழா மென்னப் பரந்ததே
கோவேந்தர் செல்வக் குழாம்.

[இ-ள்] மாமுத்த வெண்குடையான் - பெரிய முத்துக்களால் ஆக்கப்பட்ட வெண் கொற்றக் குடையை யுடையவனும், மால்களிற்றன்-பெரிய யானைப்படைகளை யுடையவனுமாகிய, வண்டு இரைக்கும் தாமத்து-வண்டுகள் ஒலிக்கும் மாலையையுடைய, அரி-இந்திரனை யொத்த, சந்திரன் சுவர்க்கி - சந்திரன் சுவர்க்கியினுடைய, நாமத்து ஆர்-பெயரைப் பொருந்திய, பாவேய்ந்த செந்தமிழ் ஆம் என்ன-பாடல்களை அழகாகச் செய்தமையப் பெற்ற செந்தமிழைப் போல, கோவேந்தர்-சிறந்த அரசர்களது, செல்வக் குழாம்-செல்வத்தையுடைய கூட்டம், பரந்தது-பரவிற்று; [எ-று.]

தமயந்தியின் சுயம்வரத்திற்கு வருகின்ற அரச கூட்டங்கள் சந்திரன் சுவர்க்கி விஷயமாகப் புலவர்கள் செய்த செய்யுள் விளங்கும் செந்தமிழ் மொழிபெருகி வந்தாற்போல வந்ததெனக் கூறினார்; இதனால் ஆசிரியரது நன்றியறிதற்குணமும் பாஷாபிமானமும் சிறந்து விளங்கும். பா—செய்யுளின் பொதுப் பெயராய் நின்றது. முத்தம் அம் சாரிகை. செந்தமிழாம்-ஆம் அசை. அரிச்சந்திரன் - அரியை ஒத்த சந்திரன்; இரண்டனுருபும் பயனும் உடன்தொக்கதொகை. அரிச்சந்திரன் சுவர்க்கி எனக்கொண்டு அரிச்சந்திரனைப்போன்ற சத்தியவானாகிய சுவர்க்கியெனவும் பொருளுரைப்பர். இச்செய்யுள் உவமையணி.

அரசர்கள் குண்டினபுரம் சேர்ந்திருத்தல்.

58. சேந்தடையும் வண்டுறைதார்ச் செய்யாள் வளர்மார்பன்
கந்தடையும் வேழக் கடைத்தலைவாய்—வந்தடைந்த
பூவேந்தர் தங்கள்கிளை போன்னகரி லீண்டிற்றே
கோவேந்தன் மாதைக் குறித்து.

[இ-ள்] செந்து-மகரந்தப் பொடிகளில், அடையும்-பொருந்துகின்ற, வண்டு உறைதார்-வண்டுகள் மேய்க்கின்ற மாலையை யணிந்த,

செய்யாள்-லெட்சுமி தேவி, வளர்மார்பன்-தங்குகின்ற மார்பை யுடைய வீமராசனது, கந்து அடையும் வேழம்-கட்டுத்தறியிற் பொருந்தியுள்ள யானைகளையுடைய, கடைத்தலைவாய்-தலைவாயிலில், கோவேந்தன் மாதைக் குறித்து-ராசராசனாகிய வீமராசனது புத்திரியாகிய தமயந்தியைக்கருதி, பூவேந்தர் தங்கள்கிளை-மண்ணரசர்களது கூட்டம், பொன்னகரில்-அழகிய குண்டினபுரத்தில், ஈண்டிற்று-எங்கும் விரவி நெருங்கினது; [எ-று.]

தமயந்தியின் சுயம்வரத்தைக் குறித்து வந்த அரசர்களுக்கு வீமராசனது அரமனை இடம்பெறாமையால் அவர்கள் நகரமுழுவதும் நெருங்கியிருந்தார்கள் என்பதாம். உறை, வளர் - வினைத்தொகை, கந்து-யானை கட்டுந்தூண், அரசன் விஷ்ணு அம்சமாதலால், 'செய்யாள் வளர்மார்பன்,' என்றார். தலைவாய்க்கடை என்பது கடைத்தலைவாய் என நின்றது; இது இலக்கணப் போலி. தார் என்ற விசேஷணம் மார்பிற்கு; செய்யாள்வளர் தார்மார்பன் என மாற்றுக. ஈண்டிற்று-ஒன்றன் படர்க்கை இறந்தகால வினைமுற்று.

59. புள்ளுறையுஞ் சோலைகளும் பூங்கமல வாவிகளும்
உள்ளும் புறமு மினிதுறைந்தார்—தெள்ளரிக்கண்
பூமகளைப் பொன்னைப் பொருவேல் விதர்ப்பன்றன்
கோமகளைத் தம்மனத்தே கொண்டு.

[இ-ள்] தெள்-தெளிவாய் விளங்குகின்ற, அரி-[உத்தம இலக்கணங்களாகிற] சிவந்த ரேகைகள் பொருந்திய, கண்-கண்களையுடைய, பூமகளை-செந்தாமரைப் பூவில் வாழ்கின்ற இலக்குமிக்குச் சமானமானவளும், பொன்னை-பொன்போல் அருமையானவளும், பொருவேல்-போர்க்குரிய வேலாயுதத்தையுடைய, விதர்ப்பன் தன் கோமகளை-விதர்ப்பதேசத்தரசனாகிய வீமனது சிறந்த மகளுமாகிய தமயந்தியை, தம் மனத்தே கொண்டு-தங்கள் தங்கள் மனத்திலே நினைத்து, [அவளைத் தாம்தாம் மணஞ்செய்ய வேண்டுமென்று விரும்பி என்றபடி] [பலதேசத்தரசர்களும் வந்து] புள் உறையும் சோலைகளும்-பறவைகள் வசிக்கின்ற சோலைகளிலும், பூங்கமல வாவிகளும்-அழகிய தாமரைத் தடாகங்களிலும், உள்ளும்புறமும்-முறையே உட்புறத்திலும் வெளிப்பாகத்திலும், இனிது உறைந்தார்-சுகமாக வசித்தார்கள்; [எ-று.]

சுயம்வரத்தின் பொருட்டு வந்த அரசர்கள் மிகப் பலராகையால் நகரமிடம் போதாமல், சோலைகளிலும், தடாகக்கரைகளிலும் வசித்தார்களென்பது கருத்து. சோலைகளின் உட்பக்கத்திலும் வாவிகளின் வெளிப்புறத்திலும் தங்கினார்களென முறைநிரனிறையாகக் கொள்க. தங்கியிருந்த இடங்களின் செழித்தவளத்தாலும்,

வீமராசன் செய்வித்த பலவசதிகளாலும் உடம்பும், தமயந்தியை மணஞ்செய்து கொள்வதிலுள்ள ஆசையால் மனமும் இனிமை யடையும்படி தங்கினார்களென்றற்கு 'உள்ளும் புறமுமினிதுறைந் தார்' என்றாரெனினுமாம், புள்ளுறைதலை வாவிகளுக்குங் கூட்டிக் கொள்க, பூமகளை, பொன்னை, கோமகளை-இவை ஒரு பொருள்மேல் வந்த பெயரடுக்குகள்.

அன்னத்தின் வரவை நளன் காணல்.

60. வழிமேல் விழிவைத்து வாணுதலா ளாம
மொழிமேற் செவிவைத்து மோகச்—சுழிமேற்றன்
நெஞ்சோட வைத்தயர்வான் கண்டா னெடுவானில்
மஞ்சோட வன்னம் வர.

[இ-ள்] வழிமேல்-அன்னம் சென்றவழியில், விழிவைத்து-தனது பார்வையை வைத்து, வாள்நுதலாள்-பிரகாசம் பொருந்திய நெற்றியையுடைய தமயந்தியினது, நாமமொழிமேல்-பெயராகிய சொல்லைக் கேட்பதில், செவிவைத்து-செவி சாய்த்து, மோகச் சுழிமேல்-காமமாகிய நீர்ச் சுழியில், தன் நெஞ்சு ஓட வைத்து-தனது மனதை ஓடும்படி வைத்து, அயர்வான்-வருந்துகின்றவனான நளன், நெடுவானில்-பெரிய ஆகாயத்தில், மஞ்சு ஓட-[தான் வருகின்ற வேகத்தில் சிறகுகளாலுண்டாகிய காற்றால்] மேகங்கள் கலைந்து விலகி ஓடும்படி, அன்னம் வரக் கண்டான்-அன்னப்பக்ஷி யானது பறந்து வருவதைப் பார்த்தான்; [எ—று.]

நளன்:—அன்னம் வந்தவுடன் தமயந்தியினது உடன்பாட்டுச் சொல்லைக் கேட்க வேண்டுமென்ற பேரவாவோடிருந்தவனாதலால் 'வழிமேல் விழி வைத்து வாணுதலாளாம மொழிமேற் செவி வைத்து' எனவும், காமமாகிய நீர்ச்சுழியில் தனதுமனது அகப் பட்டு மயங்குகின்றானாதலால் 'சுழிமேற்றன் னெஞ்சோட' எனவும் கூறினார். 'மஞ்சோட அன்னம் வர' என்றதனால் காரியசித்தியோடு வருகின்ற அன்னத்தினது அதிக விரைவு குறிக்கப்பட்டது. மஞ்சு என்பதற்குப் பொலிவு எனக் கொண்டு காரிய அநுகூலப் பொலி வுடன் அன்னம் வந்தது எனவும் கூறுவர்.

அயர்வான்-வினையாலணையும் பெயர். வர-நிகழ்கால வினை எச்சம்.

நளன் தமயந்தியின் காதலைக் கேட்டு மகிழ்தல்.

61. முகம்பார்த் தருளோக்கி முன்னிரந்து செல்வர்
அகம்பார்க்கு மற்றோரைப் போல—மிகுங்காதல்
கேளா விருந்திட்டா னன்னத்தைக் கேளாரை
வாளால் விருந்திட்ட மன்.

[இ-ள்] கேளாரை-பகைவர்களை, வாளால்-தனது வாளாயுதத்தினால், விருந்து இட்ட-கூளி பறவை முதலியவைகளுக்கு விருந்து செய்த, மன்-நளமகாராசன்:—செல்வர் முகம் பார்த்து-தனவந்தர்களுடைய முகத்தைப் பார்த்து, அருள்நோக்கி-அருளால் உண்டாகிய [அவர்களது] இனிய சொல்லை ஆராய்ந்து பார்த்து, முன் இரந்து-முன்னே யாசித்துச் சென்று, அகம் பார்க்கும்-அவர்கள் உள்ளக் கருத்தை அறிய எதிர்பார்த்து நிற்கின்ற, அற்றோரைப் போல-வறியோரைப்போல, மிகும் காதல்-தன்மேல் தமயந்திக்கு உண்டாகின்ற மிகுந்த ஆசையை, அன்னத்தை-அன்னப்பறவையினிடம், கேளா இருந்திட்டான்-கேட்டுக்கொண்டிருந்தான்; [எ-று.]

சேய்மைக்கண் தங்களைப் பார்த்தபோது அவர்கள் இனிய முகத்தினராதலைத் தெரிந்து அணுகிய அளவில் அருளோடு கூடிய இன்சொல்லை யறிந்து, இவற்றால் உட்கருத்தைத் தெரிந்து யாசிக்க உடன்படுகின்ற யாசகர்களைப் போல, அன்னத்தினுடைய இனியமுகத்தைப் பார்த்துத் தனக்கு இனிமையாகச் சொல்லத் தொடங்குகின்ற தேறுதல் வார்த்தைகளைத் தெரிந்து, அவைகளால் காரியசித்தியோடு வந்த அன்னத்தினது உட்கிடையை அறிந்து, தன் மேற் தமயந்திக்குண்டான காதலைப் பலமுறை கேட்டு மகிழ்ந்திருந்தனன்.

அற்றோர்-பொருள் ஒன்று மில்லாது இழந்தவர் [யாசகர்.] கேளா, உடன்பாட்டு வினையெச்சம். அன்னத்தை-உருபு மயக்கம். கேளார்-எதிர்மறை வினையாலணையும் பெயர். கேளா கேளாரை என்பன மூன்றுமடியில் முரண். விருந்துண்ணுதற்குப் பேய் முதலியவை வருவித்துரைக்கப் பட்டன. பகைவர்களை வாளாற் கொன்றான் என்பதை விருந்திட்டான் என வேறொரு வகையாற் சொன்னதனால் இது பரியாயமொழியணி. இது பிறிதினவிற்சியணி யெனவும் பரியாயமொழியணி எனவும்படும். "கருதியது கிளவாதப்பொருடோன்றப் பிறிதொன்று கிளப்பது பரியாயம்மே" என்ற தண்டியலங்காரச் சூத்திரத்தால் இதன் இலக்கணத்தை யறிக. இருந்திட்டான்-இறந்தகால வினைமுற்று, இடு-பகுதிப்பொருள் விகுதி.

62. அன்னக் குலத்தி னரசே யழிகின்ற
என்னுயிரை மீள வெனக்களித்தாய்—முன்னுரைத்த
தேமொழிக்குத் தீதிலவே யென்றான் திருந்தாரை
ஏமொழிக்கும் வேலா னெடுத்து.

[இ-ள்.] திருந்தாரை-பகைவர்களை, ஏம் ஒழிக்கும்-செருக்கின் களிப்பைக் கெடுக்கின்ற, வேலான்-வேலாயுதத்தை யேந்திய நளன்:—அன்னக் குலத்தின் அரசே-அன்னக் கூட்டங்கட்கு அரச

அன்னமே! அழிகின்ற-இறந்து படுதற்கிருந்த, என் உயிரை-எனது உயிரை, மீள-[அழியாது] திரும்ப, எனக்கு அளித்தாய்-எனக்குத் தந்து ரட்சித்தாய், முன் உரைத்த-[மாதர்களில்] முதன்மையாக நாட்டி உன்னால் சொல்லப்பட்ட, தேன்மொழிக்கு-தேன்போன்ற மொழியினையுடைய தமயந்திக்கு, தீது இலவே-தீமை இல்லையே, என்றான் எடுத்து-என்று விசேஷமாகக் கேட்டான்; [எ-று.]

'மற்றினியுன் வாயுடைய தென்னுடைய வாழ்வு' [சுயம்-38] என்று கூறிய நளன், தமயந்தியிடம் சென்று தன்மேற் காதல் கொள்ளும்படி செய்து மணஞ் செய்வதற்குடன்படுத்திவந்த அன்னத்தைநோக்கி, 'அழிகின்ற, என்னுயிரை மீள வெனக்களித்தாய்,' என்று மகிழ்ச்சியுடன் கூறினான்.

'முன்னுரைத்தது' என்பதற்கு முன்னே நீ சொன்னது எனினுமாம். தேமொழி-உவமைத் தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை, தேன்மொழி-வருமொழிமுதல் மெல்லினமான நிலைமொழியீறு கெட்டது, [நன்-மெய்-சூ, 11.] தீதில் என்றது அவள் க்ஷேமமா என்று கேட்டபடி. திருந்தார்-பகைவர்கள், தனது சொல்லுக்குக் கட்டுப்படாதவர்கள், எதிர் மறை வினையாலணையும் பெயர். ஏமம்-ஏம்என இடைகுறைந்துவந்தது.

ஏமம் என்பதற்குக் காவல்எனப் பொருள்கொண்டு பகைவர்களைப் பார் காத்தலினின்று விலக்குகின்றவன் எனவுமாம்.

அன்னம் தமயந்தியின் நிலைமையை நளனிடம் உரைத்தல்.

63. கோற்றவன்ற னேவலினாற் போயக் குலக்கொடிபா
லுற்றதுவு மாங்கவடா னுற்றதுவும்—முற்றும்
மொழிந்ததே யன்ன மொழிகேட் டரசற்
கழிந்ததே உள்ள அறிவு.

[இ-ள்] கொற்றவன் தன் ஏவலினால்-வெற்றியையுடைய நளராசனது கட்டளையினால், அக்குலக் கொடிபால்-உயர்ந்த குலத்திற் பிறந்த பூங்கொடிபோன்ற அந்தத் தமயந்தியினிடத்து, போய்உற்றதுவும்-தான்போய்ச் சேர்ந்ததையும், ஆங்கு-அவ்விடத்தில், அவள் உற்றதும்-[தனது சொல்லால் நளன்மேல்] தமயந்திகொண்ட ஆசை மிகுதியையும், முற்றும்-எல்லாவற்றையும், அன்னம் மொழிந்தது-அன்னம் சொல்லிற்று, மொழிகேட்டு- அவ்வார்த்தையைக் கேட்டதனால், அரசற்கு-நளனுக்கு, உள்ள அறிவு அழிந்தது-இருந்த அறிவும் [மோகமிகுதியால்] கெட்டது; [எ-று.]

அன்னம் தமயந்தியின் காதல் வார்த்தையைக் கூறியவுடன் நளன் ஆசைமிகுதியால் அறிவிழந்தனன் என்பதாம்.

கொடி-உவமஆகுபெயர், உற்றது-என்பதில் குற்றியலுகரம் உயிர்வரக்கெடாது, "இஈஐவழியவ்வும் ஏனையுயிர்வழிவவ்வும்" என்ற பொது விதிப்படி வகரஉடம்படுமெய் பெற்றுநின்றது. 'உயிர் வரினுக்குறண்மெய் விட்டோடும்' என்ற சூத்திரத்தில் 'கெடும்' என்னுது 'ஓடும்' என்றதினுல் இவ்விதியை அமைத்துக்கொள்வர். உற்றது-நளனது அழகு முதலியவற்றை அன்னம் வாயிலாகக் கேட்ட போது தமயந்தி அடைந்த துயரெனினுமாம். இறந்தகாலத் தொழிற்பெயர். தன்-சாரியை, தான்-ஏ-அசைகள்.

அதுகேட்டு நளன் வருந்தல்.

64. கேட்ட செவிவழியே கேளா துணர்வோட
ஓட்டை மனத்தோ டுயிர்தாங்கி—மீட்டுங்
குழியிற் படுகரிபோற் கோமான் கிடந்தான்
தழலிற் படுதளிர்போற் சாய்ந்து.

[இ-ள்.] கேட்ட-தமயந்தியின் நிலையைக்கேட்ட, செவிவழியே-காதின் வழியாகவே, உணர்வுகேளாது ஓட-அறிவு தன்னைக்கேளாமல் ஓடிப்போக, [அதனுல்] கோமான்-நளன், ஓட்டைமனத்தோடு உயிர்தாங்கி-ஓட்டையான மனத்துடனே பிராணனைத் தாங்கிக் கொண்டு, மீட்டும்-மறுபடியும், தழலில்-அக்கினியில், படுதளிர் போல்-விழுந்த தளிரைப்போல், சாய்ந்து-தனது ஆசனத்தில் விழுந்து, குழியில்படுகரிபோல்-படுகுழியில் விழுந்துகிடந்த யானையைப்போல், கிடந்தான்-செயலற்றுக்கிடந்தான்; [எ-று.]

தமயந்தியைப்பற்றிக் கேட்டவுடனே தனது அறிவு அவள் வசப்பட்டுச் செயலற்றுக்கிடந்தான் என்பது கருத்து.

ஓட்டைமனமாதற்கு உள்ளீடாகிய உணர்வு ஓடுதல் காரணம். ஓட-செயவெனெச்சம். மீட்டும் இறந்தது தழீஇய எச்சவும்மை. முதலடியில் கேட்ட கேளா, முரண்தொடை. குழி-யானையைப் படுப்பதற்கு வஞ்சகமாயமைத்திருக்கும் பள்ளம். படுகரி-வினைத் தொகை.

வீமன் அனுப்பிய தூதர்கள் நளனிடம்வந்து சுயம்வரச்செய்தி கூறல்.

65. கோதை சுயம்வரநாள் கொற்றவனுக் குற்றுரைப்ப
ஏதமிலாக் காட்சியர்வந் தெய்தினுர்—போதில்
பெடையோடு வண்டுறங்கும் பேரொலிநீர் நாடன்
அடையாத வாயி லகம்.

[இ-ள்.] கோதை-தமயந்தியினது, சுயம்வரநாள் - சுயவரத்துக்குக் குறித்தநாளை, கொற்றவனுக்கு-அரசனுக்கு, உற்று

உரைப்ப-போய்ச் சொல்லுவதற்கு, ஏதம் இலாக் காட்சியர்-குற்றமில்லாத அறிவுடையவர்களான தூதர்கள், போதில்-மலர்களில், பெடை ஒடு-பெண்வண்டுகளுடனே, வண்டு-ஆண்வண்டுகள், உறங்கும்-தூங்கிக்கொண்டிருக்கின்ற, பேர் ஒலி நீர் நாடன்-மிக்க ஓசையையுடைய நீர்வளப்பமுள்ள நிஷததேசத்தை யுடையவனான நளனுடைய, அடையாத-எப்பொழுதும் மூடப்படாத, வாயில் அகம்-அரண்மனைவாசலிடத்து, வந்து எய்தினர்-வந்துசேர்ந்தார்கள்; [எ-று.]

நளனது அரண்மனைவாசலை மூடாத வாயிலென விசேடித்ததால் நளன் பகைவரச்சம் சிறிதுமில்லாதவனென்பதும், யாசகர் வரவை அவர்களுக்குக் கொடுப்பதற்கெதிர்பார்த்திருப்பவனென்பதும், குறையிரந்துவருங் குடிகட்குக் காணுதற் கெளியனுமென்பதும் அறியப்படும்.

கோதை-மாலை; அதுபோன்ற மிருதுவாகிய பெண்ணுக்கு உவமையாகுபெயர். கோதை கூந்தலெனக்கொண்டால் சினையாகுபெயராம்.

தூதர்கள் சொல்லுதற்கேற்ற காலமுதலியவற்றை ஆராய்ந்தறியும் நுட்ப அறிவுடையராயிருத்தல் வேண்டுமென்பார் 'ஏதமிலாக் காட்சியர்,' என்றார். இலா-இன்மை என்னும் பண்பினடியாகப் பிறந்த ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம், ஆ-சாரியை, காட்சி-தொழிற்பெயர், காண்-பகுதி, சி-விகுதி, பெடை-பறவைப்பெண்பாற்பெயர். வீட்டினது முன்னிலம் என்று பொருள் படுகிற இல்வாய் என்பது'வாயில்' என முன்பின்னாக மாறியது; இலக்கணப்போலி, ஒலிநீர் வினைத்தொகை.

தூதர் செய்தி கூறியதும் நளன் குண்டினபுரம் புறப்படுதல்.

66. காவலன் தூதர் கடைக் காவலர்க்கறிவித்
தேவலிற்போ யீதென் றியம்புதலும்—மாவிற்
பொலிந்ததேர் பூட்டென்றான் பூவாளி பாய
மெலிந்ததோள் வேந்தன் விரைந்து.

[இ-ள்.] காவலன் தன் தூதர்-விதர்ப்பராசனுடைய தூதர்கள், கடைக் காவலர்க்கு-வாயில்காப்போர்க்கு, அறிவித்து [தாங்கள் வந்த செய்தியைத்] தெரிவித்து; ஏவலின் -[பின் நளராசனுடைய] கட்டளையின்படி, போய்-உள்ளே சென்று, இயம்புதலும்-சொல்லுதலும், பூவாளி- (மன்மதனது) மலரம்புகள், பாய்-பாய்தலினால், மெலிந்ததோள்-இளைத்த தோளுடைய நள மகராசன், விரைந்து-வேகமாக, மாவின் பொலிந்ததேர்-குதிரைகளினால் விளங்குகின்ற

தேரை, பூட்டு என்றான்-கட்டு என்று சாரதிக்குக் கட்டளை யிட்டான்; [எ-று]

வீமராசனது தூதர்கள் போய்ச் சுயவர விஷயத்தை நளனிடம் தெரிவித்தமாத்திரத்தில் நளன் குண்டினபுரிக்குச் செல்லுவதற்குத் தேரை விரைந்து சித்தம்பண்ணச் சாரதிக்குக் கட்டளையிட்டானென்பதாம்.

'பூவாளி பாய மெலிந்தது' என்றது தமயந்தியைப்பற்றி அன்னம் உரைத்த நாள்முதல் உண்டான ஆசைமிகுதியால் ஏற்பட்ட மெலிவை, மாவிற் பொலிந்த தேர் என்பதிலுள்ள இல்-உருப்பைத் தேர் என்பதோடு கூட்டித் தேரில் மாவைப்பூட்டு என்றான் என்றுரைப்பினும் பொருந்தும்.

பூட்டு ஏவலொருமைப் பிறவினை; பூண்-தன்வினைப்பகுதி. இது-ஈது வெனச் செய்யுளின்கண் சுட்டுநீண்டது.

நளன் தமயந்தி சுயவரத்துக்குக் குண்டினபுரம் புறப்படுதல்.

67. கெட்ட சிறுமருங்குற் கீழ்மகளிர் நீள்வரம்பி
லிட்ட பசுங்குவளை யேரடித்த—கட்டி
கரையத்தே னூறுங் கடனுடை னூர்க்கு
விரையத்தே ரூரென்றான் வேந்து.

[இ-ள்] வேந்து-அரசனாகிய நளன், கெட்ட சிறுமருங்குல் கீழ்மகளிர்- இளைத்த நுட்பமாகிய இடையையுடைய கடைசியரால், நீள் வரம்பில் இட்ட பசுங்குவளை- நீண்ட வயல்களின் வரம்பின்மேல் பிடுங்கிப்போட்ட (களைகளாகிய) பசுமையான குவளைப் புஷ்பங்களினின்றும், ஏரடித்தகட்டி- ஏர்களால் உழுது உண்டாகிய மண்கட்டிகள், கரைய-கரைந்து போகும்வண்ணம், தேன்ஊறும்- தேன்ஊற்றெடுத்துப் பெருகுகின்ற, கடல் நாடன் ஊர்க்கு-கடற்கரையை யடுத்துள்ள (விதர்ப) நாட்டையுடைய வீமனது நகரத்துக்கு, தேர்-ரதத்தை, விரைய- அதிசீக்கிரமாக, ஊர் என்றான்-செலுத்து என்று [சாரதியைநோக்கிச்] சொன்னான்; [எ-று.]

வயல்களில் களைகளாக முளைத்த குவளைப்புஷ்பங்களைப் பிடுங்கிக் கரையிலிட, அப்பூக்களினின்றும் வழிந்தோடிய தேன் வயல்களிற் பாய்ந்து, உழுததினால் உண்டாகிய மண்கட்டிகளைக் கரைத்துச் சமப்படுத்துமெனக்கூறி அந் நாட்டின் நிலவளத்தையும், நீர்வளத்தையும் வெளியிட்டவாறும். பசுமை-குவளை-பசுங்குவளை, பண்புப்பெயர் 'ஈறுபோதல்' என்ற சூத்திர விதிப்படி, மைவிகுதி கெட்டு இனமெல்லெழுத்து மிகுந்தது. குவளை முதலாகுபெயர்.

வேந்து, உயர்திணைப் பொருள் குறித்த அஃறிணைச் சொல். கடைசியர்- மருதநிலத்துப் பெண்கள். கீழ் என்பது பூமியைக் குறித்து அதைத் திருத்தும் மகளிரைக் கீழ்மகளிர் என்றார் என்ப.

[நளன் குண்டினபுரஞ் சேர்தல்.]

68. சடைச்செந்நெல் பொன்விளைக்குந் தன்னாடு பின்னாக்
கடற்றானை முன்னாகக் கண்டான்—அடற்கமைந்த
வில்லியரும் பொற்றாம வீமன் திருமகளாம்
நல்லுயிரும் வாழு நகர்.

[இ-ள்] சடைச்செம்நெல்-சடைபோல் நெருங்கிய செந்நெற் பயிர்கள், பொன்விளைக்கும்- பொன்போன்ற நெற்கதிர்களை விளைக்கின்ற, தன்நாடு-தனது நாடாகிய நிடததேசம், பின் ஆக [தனக்குப்] பின்புறத்ததாகக் கழியவும், கடல்தானை-கடல்போற் பரந்த தனது சேனை, முன்ஆக—தனக்கு முன்னே செல்லவும், அடற்கு - வீரத்திற்கு, அமைந்த - பொருந்திய, வில்லியரும்-வில்லையுடைய பல அரசர்களும், பொன்தாமம் - பொன்னாலாகிய மாலையை [அணிந்த], வீமன் திருமகள் ஆம் நல்உயிரும்- வீமராசனது அழகிய மகளாகிய இனிய தனது உயிர்போன்ற தமயந்தியும், வாழும்நகர்-வாழ்கின்ற குண்டின புரியை, கண்டான்- [நளன்] பார்த்தான்; [எ-று.]

நளன் தனது நால்வகைச் சேனையுடனே தனது நாட்டை விட்டுப் புறப்பட்டுச் சுயவரத்திற்காகப் பல தேசத்து அரசர்களும் வந்து தங்கியிருக்கின்ற குண்டினபுரி சேர்ந்தனன் என்பதாம்.

சடைசெந்நெல்-கதிர்த்திரட்சியை யுடைய நெல். பொன்- அதன் நிறமான தானியத்திற்கு உவமையாகுபெயர். பின்னா- ஆக என்ற எச்ச ஈறு தொக்கது. தானைக்குக் கடல் உவமை, மிக்க பரப்பிற்கும், ஆரவாரத்திற்கும், பார்ப்போர்க்கு அச்சம் தருவதற்கும், அணி அணியாக வருதற்கும் என்க. தமயந்தியைத் தனது ஆருயிராகக் கருதியிருக்கின்றமையால் அவள் அவனுக்கு நல்லுயிர் எனப்பட்டாள். 'நல்லியல்' எனவும் பாடம்; நல்ல லக்ஷணமுடையாள் என்பது பொருள். வில்லியர்-பலர்பாற் படர்க்கைப் பெயர். அடற்கமைந்த-போர்க்குரியவுமாம்.

இதுநிற்க நாரதமுனிவர் இந்திரனிடஞ் சேல்லுதல்.

69. நெற்றித் தனிக்கண்ணே ணெருப்பைக் குளிர்விக்குங்
கொற்றத் தனியாழ்க் குலமுனிவன்—உற்றடைந்தான்
தேனாடுந் தெய்வத் தருவுந் திருமணியும்
வானாடுங் காத்தான் மருங்கு.

[இ-ள்] நெற்றித் தனிக்கண் நெருப்பை-சிவபெருமானது நெற்றியிலுள்ள ஒப்பற்ற கண்ணினது நெருப்பை, குளிர்விக்கும்-தனது இசையால் குளிரச் செய்யும், கொற்றம்-மேன்மை பொருந்திய, தனியாழ்-ஒப்பில்லாத வீணையை உடைய, குல முனிவன்-மேன்மையுள்ள நாரதமுனிவன், தேன்நாடும்-வண்டுகள் விரும்பிச் செல்கின்ற, தெய்வத்தருவும்-தெய்வத்தன்மை வாய்ந்த கற்பக விருக்ஷங்களையும், திருமணியும்-அழகிய சிந்தாமணி யென்ற ரத்தினத்தையும்,வான்நாடும்-சுவர்க்க லோகத்தையும், காத்தான் மருங்கு, பாதுகாப்பவனாகிய இந்திரனிடம், உற்று அடைந்தான்-போய்ச் சேர்ந்தான்; [எ-று]

தாம் பாடும் சங்கீத இனிமையால் சிவபிரானது நெற்றிக் கண்ணின் உக்கிரத்தையுஞ் சாந்தப்படுத்தும் நாரத முனிவர் இந்திரன் சபை போய்ச்சேர்ந்தார் என்பதாம். அவரது யாழ் 'மகதி' யென்று பெயர் பெறும். கொற்றம்-மற்ற எல்லா வீணைகளிலும் சிறந்து நிற்றல். நாரதர் இசை நூல் வல்லவர் என்பது 'நாரதன் வீணை நயந்தெரி பாடலும்' என்ற சிலப்பதிகார அடியாலும், 'தேவவிருடி நாரதன் வீணை செய்த பஞ்சபாரதீயம் முதலாயுள்ள தொன்னூல்களும் இருந்தன' வென்று அடியார்க்கு நல்லார் உரைத்த உரையாலும், 'தலமுதலூழியிற் றானவர் தருக்கறப், புலமகளாளர் புரிநரப் பாயிரம், வலிபெறத் தொடுத்த வாக்கமை பேரியாழ்ச், செலவு முறையெல்லாஞ் செல்கையிற் றெரிந்து, மற்ற யாழுங் கற்று முறை பிறழான் நாரதகீதக் கேள்வி நுனித்து' என்ற உதயணக்காவியச் செய்யுளாலும் அறியப்படும். இன்னிசை நூல் முழுதுணர்ந்த யாழ் வல்லோனே என்றார் பின்னூலுடையாரும்.

நெருப்பை என்பதில் உயர்வு சிறப்பும்மை தொக்கதாகக் கொள்க. தருவுக்குத் தெய்வத்தன்மை-வேண்டுவார் வேண்டியவற்றை யெல்லாம் கொடுத்தல். சந்தானம், அரிசந்தனம், மந்தாரம், பாரிசாதம், கற்பகம் என்ற பஞ்சதருக்களும், சிந்தித்தவற்றை எல்லாந் தரத்தக்க சிந்தாமணி முதலிய நிதிகளும் இந்திரனுக்குரிய செல்வங்களாம். தேன்-நல்ல மணத்தையே நாடிச் செல்லும் ஒரு வகை வண்டு. இதனை "மங்கை நல்லவர் கண்ணும் மனமும்போல், எங்குமோடி யிடறுஞ் சுரும்புகாள், வண்டு காண் மகிழ் தேனினங்காண்மது உண்டுதேக்கிடு மொண்மிஞிறீட்டங்காள்" என்ற சிந்தாமணி குணமாலையாரிலம்பகத்துச் செய்யுளில் ஆசிரியர் நச்சினார்க்கினியரும் தேனினம் என்பதற்கு இப்பொருளே உரைத்திருத்தலானுணர்க.

சிவபிரானுக்கு நெற்றியிற் கண் உண்டான விபரம்:- ஓர் காலத்து, கைலாயத்தில் ஓர் சோலையில் சிவபிரானும் அம்மையாரும் வீற்

திருக்குங்கால் அம்மை விளையாட்டாகச் சிவபெருமானது இரு கண்களையும் மூட, அங்ஙனம் மூடப்பெற்ற ஓர் இமைப்பொழுது ஓர் ஊழிக்காலம் போல உலகம் அந்தகாரத்தால் மூடப்பெற்று வருந்த, அதுகண்ட சிவபெருமான் தன் நெற்றியில் ஓர் கண்ணைத் திறந்து அக்கண்ணினாலுலகத்துக்குற்ற துயரை நீக்கினார் என்பதாம்.

பூலோகத் தரசர்கள் எவரும் இப்பொழுது தேவலோகத்திற்கு வாராதது ஏனென்று இந்திரன் நாரதரை வினவுதல்.

70. வீரர் விறல்வேந்தர் விண்ணாடு சேர்கின்று
ராரு மிலராலென் றையுற்று—நாரதனார்
நன்முகமே நோக்கினா னாகஞ் சிறகரிந்த
மின்முகவேற் கையான் விரைந்து.

[இ-ள்] நாகம்-மலைகளின், சிறகு அரிந்த-சிறகுகளை வெட்டின, மின்முகவேல்-மின்னல்போல் விளங்குகின்ற முனையையுடைய வச்சிராயுதத்தை ஏந்திய, கையான்-கையை யுடையவனான இந்திரன், வீரர்-வீரர்களான, விறல் வேந்தர்-பெருமையையுடைய அரசர், ஆரும்—எவரும், விண்ணாடு சேர்கின்றார் இலர்-சுவர்க்க லோகத்திற்கு வருகின்றார்களில்லை, (இதற்குக் காரணம் யாதோ?) என்று ஐயுற்று-என்று சந்தேகப்பட்டு, [அச்சந்தேகத்தை நீக்கிக்கொள்ள] விரைந்து-விரைவாய், நாரதனார் நல்முகமே நோக்கினான்-நாரத முனிவருடைய தெளிவான முகத்தையே பார்த்தான்; [எ-று.]

பூலோகத்தில் அரசர்கள் போர் செய்து மனித உடம்பைவிட்டுத் திவ்யதேகம் பெற்று விருந்தாய் வாராமல் தன்னுடைய சுவர்க்க போகத்தைத் தானே அநுபவித்துக் கழிக்கும்படி இருத்தலால் வீரர்கள் தன் நாட்டிற்கு *விருந்தாக வாராதது என்ன காரணம் என்று சந்தேகங் கொண்டு பூலோகத்தினின்று வருகின்ற நாரத முனிவரை வாயினாற் கேளாது குறிப்பாக அவர் முகத்தை நோக்கினான் என்பதாம். [போர்முகத்தில் அஞ்சாது யுத்தஞ்செய்து

---

*"என்றுமுனி வரனுரைப்பக் கடல் புடைசூழ் நிலவலயத் திகல்வேல்மன்னர், துன்றுசமர் துறந்தனர்கொல் சுடர்க்கதிர்போழ்ந் தரமகளிர் துணை மென் கொங்கை, மன்றல்விழைந் திங்கெமக்கோர் நல்விருந்தாய் வரலொழிந்த வாறே தென்றான், குன்றினிருஞ் சிறையரிந்த சுடர்வயிரப் படைசுமந்த குவவுத்தோளான்". என்ற நைடதச் செய்யுள் கண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

உயிர்விடுகின்ற வீரர்கள் சூரிய மண்டில வழியாகச் சுவர்க்கமடைதல் இயல்பு.] தன் செல்வத்தைத் தானே அநுபவித்தல், கூடாதென்பது "இரத்தலி னின்னாது மன்ற நிரப்பிய, தாமே தமிய ருணல்" எனவும், "விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா, மருந்தெனி னும் வேண்டற்பாற் றன்று" எனவும், திருவள்ளுவர் கூறுமாற்றானும் உணரப்படும்.

தமது கருத்தை வெளிப்படையாலன்றி கண், கை முதலிய உறுப்புக்களின் செய்கையால் குறிப்பாக உணர்த்துதல் அரசர் இயல்பாதலானும், அவரது கருத்தைக் குறிப்பால் தெரிந்து அதற்கு இணங்க நடப்பது அரசரைச் சேர்ந்தொழுகுவாரது இயல்பாதலானும், இந்திரன் நாரதரது தெளிந்த முகத்தையே நோக்கினான் என்க.

விறல் வலிமையுமாம். ஆர்-யார் என்பதன் மருஉ. இலார்-இடைக்குறை. ஐயுற்று, ஐயமுற்று என்பதன் விகாரம். நாரதனார்-ஆர் உயர்வுப் பொருளது; நாரதன் என்ற சொல்லுக்குத் தத்துவ ஞானத்தை உபதேசிப்பவன் என்பதும், ஒற்றுமையைக் கெடுக்கின்றவன் என்பதும் பொருள். நாகம்-வடசொல், சலியாதது என்பது பொருள். இலக்கணையாய் வேல் என்பது வச்சிராயுதத்தைக் குறித்து நின்றது. ஏகாரம்-பிரிநிலை.

நாகம் சிறகரிந்த வரலாறு:—முற்காலத்தில் மலைகள் சிறகுகளையுடையனவாயிருந்து ஆகாயத்தில் பறந்து பல நகரங்களின் மீது விழுந்து அழித்துக் கொண்டிருந்ததினால் இந்திரன் அவற்றின் சிறகைத் தன் வச்சிராயுதத்தினால் வெட்டினான் என்பது புராணக் கதை.

அதற்கு நாரதர் தமயந்தியின் சுயம்வரச் செய்தி கூறல்

71\. வீமன் மடந்தை மணத்தின் விரைதொடுத்த
தாமம் புனைவான் சயம்வரத்து—மாமன்னர்
போயினா ரென்றான் புரந்தரற்குப் பொய்யாத
வாயினான் மாதவத்தோர் மன்.

[இ-ள்.] பொய்யாத வாயினான்-பொய்க்காத சொல்லை யுடையவரும், மாதவத்தோர் மன்-பெரிய தவமுடையவர்களுக்குத் தலைவருமான நாரதர், புரந்தரற்கு-இந்திரனுக்கு, வீமன் மடந்தை-வீமராஜன் புத்திரியாகிய தமயந்தியினது, மணத்தின்-கலியாணத்துக்குரிய, விரைதொடுத்த தாமம்-வாசனை மிகுந்த மாலையை, சயம்வரத்துப் புனைவான்-[அவளுடைய சயம் வரத்தில் தாங்கள் தாங்கள் [பெற] விரும்பி, மாமன்னர்-பெருமை பொருந்திய அர

சாகளெல்லாரும், போயினர் என்ருன்-அங்குச் சென்று அவ் வைபவத்தை எதிர்பார்த்து இருக்கின்றார்கள் என்று சொன்னார்; [எ-று.]

மேற்கூறியவாறு சந்தேகித்துக் குறிப்பாக வினவின இந்திரனுக்குத் தமயந்தியின் சுயம்வரச் செய்தியைத் தெரிவிக்கச் சென்ற நாரதர் அவன் குறிப்பை யுணர்ந்து அதற்கு விடையாகவே தாம் குறித்துவந்த செய்தியைப் பொருந்தக் கூறினார் என்பதாம்.

புனைவான்-வானீற்று வினையெச்சம், விகுதியே எதிர்காலங் காட்டும். சுயம்வரம் என்பது சயவரம் என விகாரப்பட்டது. புரந்தரன்-பகைவர் நகரத்தை யழிப்பவன் என்று பொருள்படும்.

"பொய்ம்மை மொழி புகன்றறியேம் புகலமன் மெண்ணுகினு, மெய்ம்மையல துரையாநா வேதநவில் பயிற்சியால்" என்று கூறிய படி சத்தியமான வேதத்தை எப்போதும் ஓதிப் பழகியதால் பொய் படாத நாவினையுடையார் என்பார் 'நாரதரைப் பொய்யாத நாவினன்' என்று விசேடித்தார். இனி, [அருள் கொண்டு கூறினாலும் வெகுண்டு கூறினாலும் அந்தந்தப் பலன்களைத் தந்தே விடுகின்ற நிறை மொழிகளை யுடைமையால்] தவறிப் போதலில்லாத வாக்குடையான் என்றுமாம். தவம்-தபஸ் என்ற வடசொல்லின் விகாரம். வாய்-ஆகுபெயராய்ச் சொல்லைக் குறித்து நின்றது.

நாரதர் தமயந்தியை வர்ணித்தல்.

72\. அழகு சுமந்திளைத்த வாகத்தாள் வண்டு
பழகு கருங்கூந்தற் பாவை—மழகளிற்று
வீமன் குலத்துக்கோர் மெய்த்தீப மற்றவளே
காமன் றிருவுக்கோர் காப்பு.

[இ-ள்] [அத் தமயந்தி] அழகு சுமந்து இளைத்த-தனது பேரழகைச் சுமப்பதினால் மெலிந்துபோன, ஆகத்தாள்-தேகத்தை யுடையவள், வண்டு பழகு-[தேனை விரும்பி.] வண்டுகள் நெருங்கிப் பயில்கின்ற, கரும் கூந்தல் பாவை-கரிய கூந்தலையுடைய பாவை போன்றவள். மழகளிறு-இளமையான யானைப்படையையுடைய, வீமன் குலத்துக்கு-வீமராசனது வம்ஸத்திற்கு, ஓர் மெய்த்தீபம்-ஒப்பற்ற மெய்ம்மையான தீபம் போன்றவள், அவளே-அத் தமயந்தியே, காமன் திருவுக்கு-மன்மதனது செல்வத்துக்கு, ஓர் காப்பு-சிறந்த காவலாவாள்; [என்று நாரதர் கூறினார்.]

அழகு சுமந்து என்றதனால் கட்டழகுடையாள் என்பது பெறப்பட்டது. வண்டு பழகுதலாவது கூந்தலிலுள்ள மலர்களின் தேனை விரும்பி வண்டுகள் மொய்க்கப் பெற்றிருத்தல். பாவை-

உவம ஆகுபெயர். மழகளிறு-உரிச்சொற்றொடர், இவளது அழகு, குணம், செயல் முதலியவற்றால் வீமராஜன் குலத்தை யாவரும் மதித்தலால் தமயந்தியைத் 'தீபம்' என்றும், இவளது பேரழகால் புருடர்கள் யாவரும் காமனது வசப்படுதலினால் 'காமன்றிருவுக் கோர் காப்பு' என்றும் கூறினர். கருங்கூந்தல்-பண்புத்தொகை.

இந்திரன் முதலிய தேவர்கள் தமயந்தியின் சுயம்வரத்திற்குப் புறப்படுதல்.

73. மால்வரையை வச்சிரத்தா லீர்ந்தானும் வானவருங்
கோல்வளைதன் மாலை குறித்தெழுந்தார்—சால்புடைய
விண்ணாடு நீங்கி விதர்ப்பன் றிருநகர்க்கு
மண்ணாடு நோக்கி மகிழ்ந்து.

[இ-ள்] [நாரதர் சொல்லியதைக் கேட்ட] மால்வரையை-பெரிய மலைகளை, வச்சிரத்தால்-வச்சிராயுதத்தினால், ஈர்ந்தானும்-சிறகரிந்த இந்திரனும், வானவரும்-அக்கினி, யமன், வருணன் ஆகிய தேவர்களும், கோல்வளைதன்-அழகிய வளையலணிந்த தமயந்தியினது, மாலை குறித்து-சுயம்வர மாலையைக் கருதி, சால்பு உடைய-[எல்லாச் செல்வமும்] நிறைதலை யுடைய, விண் நாடு நீங்கி - சுவர்க்கத்தினின்று நீங்கி, விதர்ப்பன் திரு நகர்க்கு - வீமராசனுடைய அழகிய குண்டினபுரத்திற்குச் செல்லும்பொருட்டு, மண் நாடு நோக்கி-மண்ணுலகத்தை நோக்கி, மகிழ்ந்து எழுந்தார்-விருப்பத்தோடு புறப்பட்டார்கள் ; [எ-று.]

தமயந்தியின் சுயம்வரத்தை நாரதர் வாயிலாகக் கேட்ட இந்திரன் முதலிய தேவர்கள் தமயந்தியை விரும்பிச் சுயம்வரத்திற்காகப் பூலோகம் நோக்கிப் புறப்பட்டார்கள் என்பதாம்.

கோல்வளை-வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையாய்த் தமயந்திக்காயிற்று. மாலை - சுயம்வர மாலை சால்பு-உரிச்சொல்.

சுயம்வரத்திற்கு வருகின்ற நளனைத் தேவர்கள் காணுதல்.

74. பைந்தெரியல் வேல்வேந்தன் பாவைபாற் போயினதன்
சிந்தை கெடுத்ததனைத் தேடுவான்—முந்தி
வருவான்போற் றேர்மேல் வருவானைக் கண்டார்
பெருவானிற் றேவர் பெரிது.

[இ-ள்] பைந்தெரியல் வேல்வேந்தன் பாவைபால் - பசிய மாலையணிந்த வேலாயுதத்தையுடைய வீமராசனது மகளாகிய பாவை போன்ற தமயந்தியிடத்து, போயின-சென்றதாகிய, சிந்தை கெடுத்து-மனதைக் காணமற் போக்கி, அதனைத் தேடுவான் - அம்

மனைதத் தேடும் பொருட்டு, முந்திவருவான்போல் - [எல்லா அர சர்க்கும்] முன்னமே வருபவனைப் போல, தேர் மேல் வருவானை-ரதத் தின்மீது வருகின்ற நளமகாராசனை, பெரு வானில் தேவர் - பெரிய சுவர்க்கலோகத்தினின்றும் வருகின்ற இந்திரன் முதலிய தேவர்கள், பெரிது கண்டார்-நன்றாகக் கண்டார்கள் ; [எ-று.]

பைந்தெரியல் - பசுமையாகிய தெரியல்; பண்புத் தொகை. பாவை-ஆகுபெயர். தேடுவான்-வான் எதிர்கால வினையெச்ச விகுதி.

இந்திரன் நளனைப் பார்த்து உன்னால் ஒரு காரியம் ஆகவேண்டு மெனல்.

75. காவற் குடைவேந்தைக் கண்ணுற்று விண்ணவர்கோ
னேவற் றொழிலுக் கிசையென்றான்—ஏவற்கு
மன்னவனு நேர்ந்தான் மனத்தினான் மற்றதனை
இன்னதென வோரா திசைந்து.

[இ-ள்] விண்ணவர்கோன்-தேவர்க்கரசனாகிய இந்திரன், காவல் குடை வேந்தை-[உலகத்திற்கு] பாதுகாவலாகிய குடையையுடைய நளமகாராசனை, கண்ணுற்று-பார்த்து, ஏவல் தொழிலுக்கு இசை என்றான், [நாங்கள்] ஏவுவதொரு காரியத்தைச் செய்வதற்கு உடன் படுவாய் என்று பொதுப்படக் கூறினான், மன்னனும் - நளமகாராச னும், அதனை இன்னது என மனத்தினால் ஓராது-அத்தொழிலை இன்னதென்று மனத்தினால் ஆராய்ந்து பாராது, ஏவற்கு இசைந்து-அவர்கள் ஏவும் தொழிலைச் செய்தற்கு உடன்பட்டு, நேர்ந்தான்-தான் அங்ஙனஞ் செய்வதாக உறுதி கூறினான் ; [எ-று.]

முன்னமே தமயந்தியிடத்தில் ஈடுபட்டிருந்த மனமானது, அவள் சுயம்வரத்தைக் கேட்ட மாத்திரத்தில் நளனைப்போகும்படி விரைவாகத் தூண்ட அங்ஙனம் வருகின்றவனாகிய நளனை இந்திரன் முதலியோர் தடுத்தனர் என்பு.

நளனுடைய செல்வச் சிறப்புக்களையும் அழகிய உருவத்தை யும், நற்குண நற்செயல்களையும் கேள்வியாலறிந்திருந்த தேவர்கள், அவனை நேரே கண்டவுடன் நளனைக்கண்ட தமயந்தி அவனையன்றி மற்றொருவனையும் விரும்பாளென்று கருதியவராய், இவனையே நமக் குத் தூதாக இசைவித்தால் இருவருக்கும் இருக்குங் காதல் நீங்கி இத்துணைச் சிறப்புப்பெற்ற அரசனைத் தூதாகக்கொண்ட தேவர் திறம் என்னவாமோவென வியந்து தமயந்தி தங்களை விரும்பக் கூடு மென்று ஆலோசித்து நளனைத் தூதாக அனுப்ப வேண்டுமென்று நிச்சயித்து, தேவர் தலைவனான இந்திரன் இவனிடம் முன்னமே காரியத்தை வெளியிட்டால் இசையானெனக் கருதித் தந்திரமாய் உடன்படுத்த வெண்ணி இவ்விதம் பொதுப்பட 'ஏவற்றொழிலுக்கு

இசை' என்றான். அது கேட்ட நளன், தான் குறிப்பறிந்தீயும் குணம்படைத்த வள்ளலாகையாலும், தேவர் தலைவனான பெரியான் ஒன்றுவேண்ட இசையாமல் மறுப்பது தகுதியன்றெனக் கொள்ளும் பெருந்தன்மை படைத்தவனாகையாலும், உடன்பட்டனன் என்க.

கண்ணுறுதல்-பார்த்தல், கண்ணுறு பகுதி. இன்னது-இடைச் சொல்லடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று. ஓராது-எதிர்மறை வினையெச்சம்.

இந்திரன் நளனை நோக்கி எங்கட்காகத் தமயந்தியிடம் தூது செல்ல வேண்டுமெனல்.

76. செங்கண் மதயானைத் தேர்வேந்தே தேமாலை
எங்களிலே சூட்ட வியல்வீமன்--மங்கைபாற்
றூதாக வென்றானத் தோகையைத்தன் னாகத்தாற்
கோதாக வென்றானக் கோ.

[இ-ள்] செம் கண் மதயானை-சிவந்த கண்களையுடைய மதயானை போன்ற, தேர்வேந்தே - ரதாதிபனே! தேமாலை - தேன் சொரிகின்ற சுயம்வரமாலையை, எங்களிலே சூட்ட-எங்களில் ஒருவனுக்கு அணியும்படி, இயல் வீமன் மங்கைபால்-சௌந்தரிய முடைய வீமராசன் புத்திரியாகிய தமயந்தியிடம், தூது ஆக-தூதாகச் செல்வாயாக, என்றான்- என்று [இந்திரன்] சொன்னான், [அதற்கு இசைந்தவனாய்], அ கோ-அந்த அரசனாகிய நளன், அ தோகையை-அத்தமயந்தியை, ஆகத்தால்-மனத்தால், கோது ஆக-கோதுபோல [அதாவது தனக்கு உபயோகமற்றவளாக எண்ணி], வென்றான்-[தன் மனது அவள் வசப்படாமல்] ஜயித்தான்; [எ-று].

நளன் சத்தியந் தவறாத் தகையனாதலால் தான் காதல் செய்திருந்த தமயந்திபால் இந்திரன் மனம் வைத்தது தெரிந்தவுடன், தான் அளித்த வாக்குக் கெடாதபடி, முன்புதான் கொண்டிருந்த காதலை ஒழித்தனனென்பதாம்.

யானைக்குக் கண் சிவத்தல் கோபத்தால். தேன்மாலை-தேமாலை, "தேன் மொழி மெய்வரின்" என்னும் சூத்திரவிதி, 'தூதாக' இதில் ஆக வியங்கோள் முற்று-ஆ-பகுதி, கு-சாரியை, க விகுதி. தோகை யென்னும் வாலின் பெயர், சினையாகு பெயராய் மயிலையும், பின் அது உவம வாகு பெயராய் மயில்போன்ற சாயலையும் உணர்த்திற்று, இருமடியாகுபெயர். கோது-சார மில்லாத பொருள். ஆகவே நளன் தமயந்தியைத் தனக்கு உபயோகமில்லாதவளாகக் கருதினனென்றறிக.

77. தேவர் பணிதலைமேற் செல்லுந் திரிந்தோருகான்
மேவுமிளங் கன்னிபான் மீண்டேகும்—பாவிற்
குழல்போல நின்றுழலுங் கொள்கைத்தே பூவின்
நிழல்போலுந் தண்குடையா னெஞ்சு.

[இ-ள்] பூவின்- பூமியிலுள்ளவர்க்கு, நிழல்-நிழலைச் செய்கின்ற, தண்குடையான்-குளிர்ந்த [வெண்கொற்றக்] குடையையுடையவனாகிய நளனது, நெஞ்சு-மனம், தேவர்பணி-தேவர்களது ஏவலை, தலைமேல்-தலைமேற்கொண்டு, செல்லும்-போகும், ஒருகால்-மற்றொருவேளை, திரிந்து-மாறி, மேவும் இளங்கன்னி பால்-தன்னால் விரும்பப்படுகின்ற இளமையான கன்னியாகிய தமயந்தியினிடம், மீண்டு ஏகும்-திரும்பிச் செல்லும், பாவில் - நூற்பாவினிடத்தில், குழல்போல - நெய்கின்ற குழல் என்னுங் கருவிபோல, நின்று உழலும்- அங்கங்கே நின்று திரிகின்ற, கொள்கைத்து-தன்மையையுடையது. [எ-று.]

தேவர்களால் தமயந்தியினிடத்துத் தூதாக அனுப்பப்பட்ட நளனது மனதானது பாவினுள்ளோடும் குழாய்போல் மாறி மாறி வருந்திற்றென்பதாம். குழல் வஸ்திரமாக்குவதற்குத் தறியிற் கட்டப்பட்டிருக்கும் பாவினுள் இருபக்கத்தும் செலுத்தப்படும் ஓர் கருவி. தலைமேல் என்றவிடத்து 'தாங்கி' என்னும் சொல் வருவித்துரைக்க. பூ ஜனங்களுக்கும், நெஞ்சு மனதிற்கும் இடவாகு பெயர். பணியைத் தலைமேற் கொள்ளுதலாவது, சிறிதும் மறுக்காமல் பெரும் பேருக ஏற்றுக்கொள்ளுதல். போலும்-அசை, ஏ-இரக்கப்பொருளது. கொள்கைத்து-ஒன்றன்பாற் குறிப்பு வினைமுற்று.

78. ஆவ துரைத்தா யதுவே தலைநின்றேன்
தேவர்கோ னேயத் திருநகரிற்—காவல்
கடக்குமா றென்னென்றான் காமநீ ராழி
அடக்குமா றுள்ளத் தவன்.

[இ-ள்] காமம் நீர் ஆழி-காமமாகிய நீர் நிறைந்த சமுத்திரத்தை, அடக்கும் ஆறு-பெருகாமல் அடக்குகின்ற வழியை யுணர்ந்த, உள்ளத்தவன்-மனமுடைய நளன், தேவர்கோனே-தேவர்களுக்கரசனாகிய இந்திரனே, ஆவது உரைத்தாய்-[உங்களுக்கு] ஆகவேண்டிய காரியத்தைச் சொன்னாய், அதுவே தலைநின்றேன் - அந்த ஏவலையே சிறப்பாகப் பெற்று நின்றேன், அத்திருநகரில்-அந்த அழகிய குண்டினபுரத்திலுள்ள, காவல்-காவலாளர்களை, கடக்கும் ஆறு-[அவர்கள் தெரிந்து கொள்ளாதபடி] கடக்கின்ற விதம், என் என்றான்-என்ன என்று கேட்டான்; [எ-று.]

தன்னையே தமயந்தி மணந்து கொள்வாள் என்று, உணர்ந்து, அவள் சுயம்வரத்திற்கு ஆசையுடன் போகின்ற நளன் இடைவழியில் தேவர்கள் தங்களுக்காகத் தூது செல்ல வேண்டுமென்று, கேட்டுக் கொள்ள, அதற்கிசைந்து, தான் தமயந்திமீது கொண்ட காதலை ஒழித்த மன உறுதியுடையவனாதலால், நளனைக் 'காம நீராழி அடக்குமா றுள்ளத்தவன்' என்றார்.

காமநீராழி-உருவகம். ஆவது - ஒன்றன்பாற் படர்க்கை எதிர்கால வினையாலணையும் பெயர்; தலை நின்றேன் - ஒரு சொல் நீர்மையது. காவல-காக்கின்றவர்களுக்கு ஆகுபெயர். உள்ளத்தவன் - வினையாலணையும் பெயர். அதுவே என்றதனால், தான் அவளிடத்து விருப்பங் கொண்டவனாக இருந்தும் அப்போது அவ்விருப்பத்தை வாய்மையைக் கருதி முற்றும் வெறுத்தான் என்பது தோன்றியது.

பிறர் காணாது மறைந்து செல்லும்படி நளனுக்கு இந்திரன் வரமளித்தல்.

79. வார்வெஞ் சிலையொழிய வச்சிரத்தான் மால்வரையைப்
போர்வெஞ் சிறகறுத்த பொற்றோளான்—யாருமுனைக்
காணார்போய் மற்றவளைக் காணென்றான் கார்வண்டின்
பாணாறுந் தாரானைப் பார்த்து.

[இ-ள்] வார்வெம் சிலை ஒழிய-நீண்ட கொடிய வில்லைக்கொண்டல்லாமல், வச்சிரத்தால்-வச்சிராயுதத்தைக் கொண்டு, மால் வரையை-பெரிய மலைகளை, போர்வெம்சிறகு அறுத்த-பொருது அழிகின்ற கொடிய இறகுகளை வெட்டித் தள்ளிய, பொன் தோளான்-அழகிய தோள்களையுடைய இந்திரன், கார்வண்டின்-கரியவண்டுகளின், பாண்நாறும்-பாடல்கள் தோன்றப்பெற்ற, தாரானை-மாலையையணிந்த நளனை பார்த்து, யாரும் உனைக் காணார்-[பிறர் எவரும் உன்னைக் காணமாட்டார், போய் அவளை காண்-[நீ] சென்று அந்தத் தமயந்தியைப் பார், என்றான்-என்று சொன்னான்; [எ-று.]

யாரும் அறியாது செல்லுதற்கு உபாயம் கேட்ட நளனுக்கு இந்திரன்-தம்முருத் தெரியாமல் எங்கனும் செல்ல நினைக்கின்றவர்களுக்கு அங்ஙனமே செய்யும் வன்மையுடைய 'மாலிகாஞ்சனம்' என்னும் மந்திரத்தை உபதேசித்து அனுப்பினான் என்க.

வச்சிராயுதம், சிறப்பாய் இந்திரனுக்கு உரியதாம் தன்மை தோன்ற, வார் வெஞ்சிலையொழிய வச்சிரத்தால் என்றார். வண்டின் பாணாறுந்தார்-வண்டுகள் மொய்த்து இசைபாடுதற்கேற்ற மாலை. நாறுதல்-தோன்றுதல். இந்திரன் மலைகளின் சிறகுகளை வெட்டிய காலத்து மைநாக பர்வதம் மட்டும் ஓடிக்கடலிடையே ஒளித்துக்

கொண்ட தென்னும் செய்திபற்றி 'வார் வெஞ்சிலையொழிய' என்ப தற்கு மைநாக பர்வதம் ஒன்று தவிர எனவும் பொருள் கொள்ள லாம். மற்று-அசை.

குண்டினபுரச் சிறப்பு.

80. இசைமுகந்த வாயு மியறெரிந்த நாவுந்
திசைமுகந்தா லன்ன தெருவும்—வசையிறந்த
பொன்னோடு போந்திருந்தாற் போன்றதே போர்விதர்ப்ப
நன்னாடர் கோமா னகர்.

[இ-ள்.] போர்-யுத்தஞ் செய்தலிற் சிறந்த, விதர்ப்ப நல் நாடார் கோமான்-விதர்ப்ப மென்னும் நல்ல நாட்டிலுள்ளவர்களுக்கு அரசனாகிய வீமராசனது, நகர்-குண்டினபுரி, இசைமுகந்த வாயும்-கீர்த்தியைக் கொண்டிருக்கின்ற வாயில்களாலும், இயல் தெரிந்த நாவும்- சிற்பநூலிற் கூறுமுறைப்படி அமைக்கப்பட்ட நடுவிடங்களாலும், திசை முகந்தால் அன்ன தெருவும்-எட்டுத் திசைகளையும் முகந்து கொண்டதைப்போன்ற பெரிய வீதிகளாலும், வசை இறந்த-குற்றம் நீங்கிய, பொன்னாடு-சுவர்க்கலோகம், போந்து இருந்தால் போன்றது-[அங்ஙனமே பெயர்ந்து பூமியில் வந்து] தங்கி யிருந்தது போல நளனுக்குத் தோன்றியது; [எ-று.]

கோட்டைக்கோபுர வாயில்களாலும், நகரத்தின் மத்திய பாகங்களாலும், பெரிய வீதிகளாலும் விதர்ப்பதேசமென்று கூறப்பட்ட குண்டிநபுரியானது தேவலோகத்தை ஒத்திருந்தது என்பது கருத்து.

இசை முகந்த வாயும் என்பதற்கு-சங்கீத சாஸ்திரங்கள் பயிலப்பெறுகின்ற கோபுரவாயில்களென்றும், இயல் தெரிந்த நாவும் என்பதற்கு இலக்கண நூல்கள் பயிலப்பெறுகின்ற நகர் மத்திய மண்டபப் பிரதேசங்களென்றும் பொருள் கொள்ளக் கிடக்கின்றது. இச்செய்யுள் உவமையை அங்கமாகப் பெற்று வந்த தற்குறிப்பேற்ற வணி. அன்ன-இடைச்சொல் அடியாகப்பிறந்த குறிப்புப் பெயரெச்சம். போந்து-இறந்தகால வினையெச்சம்;

அவ்வாறே சென்ற நளனும் தமயந்தியும் அந்தப்புரத்தில் ஒருவரை யொருவர் பார்த்தல்.

81. தேங்குவளை தன்னிலே செந்தா மரைமலரப்
பூங்குவளை தாமரைக்கே பூத்ததே—யாங்கு
மதுநோக்குந் தாரானும் வாணுதலுந் தம்மிற்
பொதுநோக் கெதிர்நோக்கும் போது.

[இ-ள்.] ஆங்கு-அந்தப்புரத்துக் கன்னிமாடத்தில், மதுநோக்கும் தாரானும்-வண்டுகள் [தேனை விரும்பி மொய்த்து] திரிகின்ற மாலையை அணிந்த நளனும், வாள்நுதலும்-பிரகாசந்தங்கிய நெற்றியையுடைய தமயந்தியும், தம்மில்-தங்களுக்குள், பொது நோக்கு-பொதுப்பார்வையாக, எதிர்நோக்கும்போது-எதிர்நோக்கின காலத்தில், தேங்குவளை தன்னில்- [தமயந்தியின் கண்களாகிய] மணமுள்ள குவளை மலர்களில், செந்தாமரை மலர - [நளனுடைய கண்களாகிய] செந்தாமரை மலர்கள் மலர, பூங்குவளை - [தமயந்தி கண்களாகிய] அழகிய அக்குவளைப் புஷ்பம், தாமரைக்குப் பூத்தது-[நளன் முகமாகிய] அத்தாமரை மலரிடையே மலர்ந்தது; [எ-று.]

தேங்குவளை, செந்தாமரை யென்றது, முறையே தமயந்தி நளன் இருவரது கண்களை, முதலில் நளன் தமயந்தியைப் பார்த்தனன். பின் தமயந்தி நளனைப் பார்த்தனள் என்பதாம். பொது நோக்கு-காமக்குறிப்பின்றிப்பார்க்கும் பார்வை. தேன்-குவளை-தேங்குவளை "தேன்மொழிமெய்வரின்" என்ற சூத்திரவிதி. பூ-குவளை-பூங்குவளை "பூப்பெயர் முன்னின மெய்மையுந் தோன்றும்" என்ற சூத்திரவிதி செந்தாமரை, இதிலுள்ள விசேஷணம் இனம் விலக்க வந்தது. தாமரைக்கு உருபு மயக்கம்-[நன். பெயரியல் 60.] வாணுதல், அன்மொழித்தொகை. ஏ-அசை.

82. நீண்ட கமலத்தை நீலக் கடைசென்று
தீண்டு மளவிற் றிறந்ததே—பூண்டதோர்
அற்பின்றாழ் கூந்தலாள் வேட்கை யகத்தடக்கிக்
கற்பின்றாழ் வீழ்த்த கதவு.

[இ-ள்.] தாழ்கூந்தலாள் - தொங்குகின்ற கூந்தலையுடைய தமயந்தியானவள், வேட்கை-விருப்பத்தை, அகத்து அடக்கி - தனது மனமாகிய வீட்டில் வெளிப்படாமல் வைத்து, கற்பின் தாழ்-கற்பாகிய தாழக் கோலை, வீழ்த்த கதவு - பூட்டப்பட்டிருந்த நிறையாகிய கதவானது, நீண்ட கமலத்தை-[நளன் கண்களாகிய]பெரிய தாமரை மலர்களை, நீலம் கடை-நீலோற்பல மலர் போன்ற தனது கடைக்கண் பார்வையானது, சென்று-போய், தீண்டும் அளவில் - பொருந்திய மாத்திரத்தில், பூண்டது ஓர் அன்பின் - முன்னே தான் கொண்டிருந்த ஒப்பற்ற அன்பினால், திறந்தது-திறந்து கொண்டது; [எ-று]

தமயந்தி நளனைப் பார்த்த மாத்திரத்தில் அன்பின் முதிர்ச்சியால் தன்னை மறந்து, தனது நாணம் ஒழிந்து நின்றாள் என்பதாம். ஏ-அசை.

நிறை மனத்தைப் புறத்தே செல்லாது நிறுத்தல். கமலம், நீலம் முறையே நளன் தமயந்தி கண்கள் உருவகம். கமலம்-நீரில்

தோன்றுவதென்று காரணப் பொருள்படும். நீலம்-பூவிற்குக் குணவாகுபெயர். அன்பு என்பது, அற்பு என எதுகை நோக்கி வலிந்து நின்றது. தாழ் கூந்தல்-வினைத்தொகை. வேட்கை தொழிற் பெயர், வேள்-பகுதி, கை-விகுதி, கற்பின் தாழ்-உருவகம்; இருபெயரொட்டுப் பண்புத் தொகை. இன்-சாரியை. கற்பாகிய தாழ்என விரிக்க. பூண்டது-முற்றெச்சம். வீழ்ந்த-பிறவினை இறந்த காலப்பெயரெச்சம், வீழ்-பகுதி, அ-பெயரெச்சவிகுதி.

83. உய்ஞ்சு கரையேற வோட்டுங்கொ லொண்டொடியாள்
நெஞ்சு தடவு நெடுங்கண்கள்—விஞ்சவே
நீண்டதோ வங்ஙனே யிங்ஙனே நீண்மலராள்
ஆண்டதோள் மன்னன் அழகு.

[இ-ள்] ஒண் தொடியாள் - ஒளி பொருந்திய வளையல்களை அணிந்த தமயந்தியினுடைய, நெஞ்சு தடவும் - நளனது மார்பைப் பரிசிக்கின்ற, நெடும் கண்கள்-பெரிய கண்கள், அங்ஙனே-அம்மாரிடத்து, விஞ்சவே-மிகுதியாக, நீண்டதோ-பரவினவோ, [அன்றேல்] நீள்மலராள் ஆண்டதோள்-பெரிய செந்தாமரை மலரிலுள்ள திருமகள் தனக்கு இடமாகக் கொண்ட தோள்களையுடைய, மன்னன் அழகு-நளமகாராஜனுடைய அழகாகிய கடலை, இங்ஙன்-இங்கே, உய்ஞ்சு-தப்பி, கரைஏற ஓட்டும்கொல்-கரையேற முடியுமோ. [எ-று.]

நளனது மார்பைத் தமயந்தி இமைகொட்டாது பார்க்கப் பார்க்க, அழகு விஞ்சி அவனுடைய அழகில் ஈடுபட்டுக் கிடந்தமையால் கவி இங்ஙனம் ஐயப்பொருள் தோன்றக் கூறினார்; நளனது கட்டழகை வியந்து கூறியவாறும்.

கண்கள் நீண்டதோ என்றது பன்மையில் ஒருமை வந்த பால் வழுவமைதி. உய்ந்து என்ற வினையெச்சத்தில் உய்ஞ்சு என நகரத்திற்கு ஞகரமும், தகரத்திற்குச் சகரமும் போலியாய் வந்தன. கொல், ஓ-ஐயப்பொருளன.

84. மன்னாகத் துள்ளழுந்தி வாரணிந்த மென்முலையும்
பொன்னாணும் புக்கொளிப்பப் புல்லுவனேன்—றன்னை
எடுத்தபே ரன்பை யிடையே புகுந்து
தடுத்ததே நாணுந் தறி.

[இ-ள்] வார் அணிந்த-கச்சால் இறுக்கப்பட்ட, மெல் முலையும்-மெல்லிய தனங்களும், பொன் நாணும்-பொன்னாலாகிய கயிறும், மன் ஆகத்துள் - நளனுடைய மார்பில், புக்கு - புகுந்து, அழுந்தி-

அழுத்தப்பட்டு, ஒளிப்ப - மறையும்படி, புல்லுவன் என்று - தழுவுவேன் என்று, உன்னு - நினைத்து, எடுத்தபோர் அன்பை - தான் கொண்ட பெரிய ஆசையாகிய [யானையை], நாண் ஆம் தறி - நாணமாகிய கட்டுமரம், இடைபோய் புகுந்து - இடையில் போய், தடுத்தது - தடை செய்து விட்டது ; [எ-று.]

ஆசை மிகுதியால் நளனைத் தழுவ நினைந்த தமயந்தி, நாண மிகுதியால் அது ஒழிந்து அங்ஙனமே நின்றனள் என்பதாம்.

நாணத்தைத் தறியாக உருவகஞ் செய்தமைக் கேற்ப அன்பை யானையாக உருவகஞ் செய்யாதது ஏகதேச உருவகம். வார் அணிந்த மென்முலை என்பதற்கு-கச்சை அழகு பெறச் செய்கிற தனங்கள் எனினுமாம். உம்மையிரண்டும் எண்ணுப் பொருளன. உன்னு - உடன்பாட்டு வினையெச்சம்.

அவ்வாறு பார்த்த தமயந்தி நளனை நீயார்? என்றல்.

85. காவல் கடந்தெங்கள் கன்னிமா டம்புகுந்தாய்
யாவனோ விஞ்சைக் கிறைவனோ—தேவனோ
உள்ளவா சொல்லென்றா ளூசற் குழைமீது
வெள்ளவா ணீர்சோர விட்டு.

[இ-ள்] ஊசல்குழைமீது - ஊஞ்சலாடுவது போலத் தொங்கி அசைகின்ற குழை என்னும் காதணிமீது உலாவுகின்ற, வாள்நீர் வெள்ளம் - வாளாயுதம் போன்ற கண்களின் நீரை வெள்ளம் போல, சோரவிட்டு - பெருக்கி, [தமயந்தி நளனை நோக்கி], காவல் கடந்து - [அந்தப்புரக் காவலர்களுடைய] காவலைத் தாண்டி, எங்கள் கன்னிமாடம் புகுந்தாய் - எங்களது கன்னியாமாடத்துள்ளே வந்தவனை நீ, விஞ்சைக்கு இறைவனோ - மாயவித்தைகட்குத் தலைவனான வித்தியாதரனோ?, தேவனோ - தேவர் உலகத்தவனோ?, யாவனோ - உள்ள ஆறுசொல் - உள்ளவாறே சொல், என்றாள் - என்று வினவினாள் ; [எ-று.]

இங்குக் கண்ணீர் சோரவிட்டமை ஆடவர் அடையப் பெறாத கன்னிமாடத்தில் திடீரென்று ஓர் புருஷனைக் கண்டதனால் என்னாகுமோ வென்று கொண்ட மிக்க பயத்தினாலென்க. அல்லது மிகுந்த சௌந்தரியமுடைய புருஷனைக் கண்டதனால் உண்டாகிய ஆனந்தத்தினாலென்றாவது, அன்றி இத்தன்மை வாய்ந்த இவன் தனக்கு நாயகனாவனோ எனக்கொண்ட கவலையாலுற்ற சோகத்தினாலென்றாவது ஆகியது எனவும் கொள்ளலாம். எங்கள் என்ற உளப்பாட்டுத் தன்மைப் பன்மை முற்று, தன் தோழிகளையுந் தன்னுடன் கூட்டிக் கூறியது. கன்னிமாடம் கலியாணமாகாத

இளம் பெண்கள் வசிக்கும் அந்தப்புரத்தில் ஓர் இடம். காவலாள ருக்கும் தெரியாது, காவலையுங்கடந்து வந்தமையால், விஞ்சைக்கு இறைவனோ, தேவனோ, என ஐயமுற்று வினவினாள். புகுந்தாய் யாவனோ என்றது, புணர்ச்சியால், புகுந்தாயாவனோவென யகரம் கெட்டது; இது ய ர ழ முன்னர், என்ற சூத்திரத்து மேல் என்ற மிகையால் அமையும். யாவனோ, ஓ-அசை, மற்றை இரண்டு ஓகாரங்களும் ஐயம். விஞ்சை-வித்யா என்ற வடசொல்லின் சிதைவு, தேவன்-வடசொல். வாள்-உவமையாகுபெயர்; ஆ-ஆறு என்பதன் விகாரம்-இனி வெள்ளமென்பதை நீர்ப்பெருக்கையுடைய கடலெனக் கண்ணுக்கு உவம ஆகு பெயராய்ப் பொருள் கொண்டு, வாள் பிரகாசம் என்றுரைப்பினுமாம்.

86. தீராத காமத் தழலைத்தன் செம்மையெனும்
நீரா லவித்துக் கொடுநின்று—வாராத
பொன்னாட ரேவலுடன் போந்தவா சொல்லித்தன்
நன்னாடுஞ் சொன்னா னளன்.

[இ-ள்] நளன்-நளமகாராஜன், தீராத காமத் தழல்-ஒழியாத காமாக்கினியை, தன் செம்மை எனும் நீரால்-தனது நடுநிலைமைக் குணமாகிய ஜலத்தால், அவித்துக்கொடு நின்று-அவித்து, வாராத-[பூலோகத்திற்கு] வருதற்கரிய, பொன்நாடர் ஏவலுடன்-தேவர்களுடைய கட்டளையினால், போந்த ஆ[று]-தான் வந்த விபரத்தை சொல்லி, தன் நல்நாடும்-தனது நல்ல நாட்டின் பெயரையும், சொன்னான்-சொல்லி நின்றான்; [எ-று.]

செம்மை-நடுவு நிலைமை தவறாத தன்மை. தான் தூதுக்கு இசைந்த காலத்தில் தமயந்தியைக் கோதாக நினைத்து வந்தவனாகை யால் இப்பொழுது இவளை விரும்பி நிற்றல் முறைமையன்றெனக் கொண்டு மனத்தை ஒருவழி நிறுத்துகின்றானாதலால் 'காமத்தழலைத் தன் செம்மையெனு நீராலவித்துக்கொடு நின்று' எனக் கூறினார். காமத்தைத் தழல் என்றமைக் கேற்பச் செம்மையை நீரென்று கூறினார்; நீர் அக்கினியை அழிக்கும் ஆற்றலுள்ளது.

வாராத என்பதிலுள்ள எதிர்மறை தேவர்களுடைய வரவின் அருமை குறித்து நின்றது. ஆ-ஆறு என்பதன் விகாரம். உடன் என்னும் மூன்றும் வேற்றுமைச் சொல்லுருபு அவ்வேற்றுமை ஆலுருபுப் பொருளில் வந்தது விசேஷணப் பொருளதுமாம்.

யாவனோ விஞ்சைக் கிறைவனோ எனக்கேட்ட தமயந்திக்கு நளன் தன்னை முதலில் இன்னானெனக் கூறினால் முன்னமே தன்னை மணக்க விரும்பியுள்ள தமயந்தி தன்மீது மிகுந்த அவாவுற்றுப் பின்

தான கூறப் போகும் விஷயத்தை மனதிற் கொள்ளா ளாகையா லும், தான் மேற்கொண்டு வந்த காரியத்தைப் பிரதானமாகக் கொள்ளாதவன் என்ற வசை தனக்கு ஏற்படுமாதலாலும், தனது பெயர் முதலியவற்றைக் கூறாது தான் வந்த காரியத்தை முதலிற் கூறிப்பின் தன் நாட்டை மாத்திரம் குறிப்பித்தனன்.

நளன், தமயந்தியை நோக்கி நீ இந்திரனுக்குச் சுயம்வர மாலை சூட்டுவாய் என்றல்.

87. என்னுரையை யாதென் றிகழா திமையவர்வாழ்
பொன்னுலகங் காக்கும் புரவலனை—மென்மாலை
சூட்டுவா யென்றான் றொடையிற்றேன் றும்பிக்கே
ஊட்டுவா னெல்லா முரைத்து.

[இ-ள்] தொடையில் தேன்-தன்னுடைய பூமாலையிலுள்ள தேனை, தும்பிக்கு ஊட்டுவான்-வண்டுகளுக்கு உண்பிப்பவனான நளன், எல்லாம் உரைத்து-[தான் இன்னானென்பதும், தான் வந்ததற்குக் காரணம் இதுவென்பதும் ஆகிய] எல்லாவற்றையுஞ் சொல்லி, என் உரையை யாது என்று இகழாது-என் வார்த்தையை என்ன பயன் என்று அலட்சியம் செய்யாது, இமையவர் வாழ் பொன் உலகம் காக்கும் புரவலனை-தேவர்கள் வசிக்கின்ற பொன்மயமான சுவர்க்கலோகத்தைப் பாதுகாக்கின்ற அரசனான இந்திரனுக்கு, மென்மாலை சூட்டுவாய்-மென்மையாகிய சுயம்வர மாலையை இடுவாய், என்றான்-என்று சொன்னான்; [எ-று.]

இந்திரன் தேவர் தலைவனாகலின் அவனைப்பற்றி முதலில் தூது பேசினான். பிறரையும் இங்ஙனம் முறையே பேசினானென்க. உரைத்து என்றான் என்றும், இகழாது சூட்டுவாய் என்றும் இயையும்.

தமயந்தி தனக்கே சுயம்வரமாலை சூட்டப்பெற்று இன்பத்தை அநுபவிக்கும் உரிமையும், தகுதியும் ஒருங்கே அமையப்பெற்றும், அங்ஙனம் விரும்பாது அவளை விரும்பி வந்த தேவர்பொருட்டுத் தூதுபோகின்ற நளமகாராசனது 'தனக்கெனவாழாப் பரோபகார குணத்தை' நன்கு வெளிப்படுத்துதற்கு, 'தொடையிற்றேன் தும்பிக்கே யூட்டுவான்' என்றார். இமையவர்-கண்ணிமைக்கப் பெறாத விசேடமுடையவர் புரவலனை-உருபு மயக்கம். ஏ-அசை.

தமயந்தி நளனை நோக்கி உன்னையே மணஞ்செய்வே னென்றல்.

88. இயமரநின் றார்ப்ப இனவளைநின் றேங்க
வயமருதோண் மன்னா வகுத்த—சுயம்வரந்தான்
நின்பொருட்டா லென்று நினைகென்றா ணீள்குடையான்
தன்பொருட்டா னைவா டளர்ந்து.

[இ-ள்] நீள் குடையான் தன் பொருட்டால்-பெரிய குடையை யுடைய நளமகாராசன் விஷயமாக, நைவாள்-வருந்துகின்றவளாகிய தமயந்தி, தளர்ந்து-[அவ்வார்த்தையைக் கேட்டதும்] தளர்ச்சி யடைந்து [நளனைநோக்கி] வயம்மருவுதோள் மன்னு-வெற்றிபொருந் திய தோள்களையுடைய அரசனே! இயம்மரம்நின்று ஆர்ப்ப-வாத் தியங்களும், ஊதுகருவிகளும் நிலைத்து சப்திக்கவும், இனம் வளை நின்று ஏங்க-சங்குகள் கூட்டமாக நிலைத்து ஒலிக்கவும், வகுத்த-ஏற்படுத்திய, சுயம்வரம்-இந்தச்சுயம் வரத்தை, நின்பொருட் டால் தான் என்று-உன்னை மணஞ்செய்தலி னிமித்தமாகவே [அமைத்ததுஎன்று] நினைக என்றாள்-நினைப்பாயாக என்று சொன் னாள்; [எ-று.]

ராஜகன்னிகைகளுக்கு உரியமுறைப்படி அமைந்த சுயம்வர மாயினும் அச்சுயம்வரத்தில் நான் உன்னையே மணப்பன் எனக் கூறினாள் என்பதாம். மரம் கருவியாகு பெயராய் மரத்தினலா கிய கொம்பு என்னும் ஊதுகருவிக்காயிற்று. இயமரம் என்பதை ஒரு சொல்லாகக்கொண்டு வாத்தியங்கள் எனப்பொதுவாகக் கூறி னும் பொருந்தும். மருவு என்பது மரு என விகாரப்பட்டது. நினைக என்றாள் என்பது நினைகென்றாள் எனத்தொக்கு நின்றது.

நளனை நோக்கி உனக்கேமாலை சூட்டுவேனெனக் கூறிய தமயந்தி நீ அவசியம் சுயம்வரத்திற்கு வரவேண்டு மெனல்.

89. போதரிக்கண் மாதராள் பொன்மாலை சூட்டத்தா
ஞதரித்தார் தம்மோ டவையகத்தே—சோதிச்
செழுந்தரள வெண்குடையாய் தேவர்களு நீயும்
எழுந்தருள்க என்றாள் எடுத்து.

[இ-ள்] போது-செந்தாமரை மலர்போன்ற, அரிக்கண்-செவ் வரி பரந்த கண்களையுடைய, மாதராள்-அழகியவளான தமயந்தி [நளனைப் பார்த்து], சோதிசெழுந்தரள வெண்குடையாய்-ஒளியை யுடைய செழுமையான முத்துக்களா லலங்கரித்த வெள்ளைக் குடையை யுடையவனே!, பொன்மாலை சூட்ட ஆதரித்தார் தம் மோடு-அழகிய சுயம்வரமாலை சூட்டப்பெற விரும்பினவர்களான அரசர்களுடனே, அவையகத்து-சுயம்வர சபையிடத்து, தேவர் களும் நீயும் எழுந்தருள்க-[நீ இங்கு குறித்த] தேவர்களுடன் நீயும் எழுந்தருள்வாயாக, என்றாள் எடுத்து - என்று எடுத்துச் சொன்னாள்; [எ-று.]

போது கருங்குவளை மலரெனினுமாம், அரி-ரேகை, மாதர்-கண்டாரால் விரும்பப்படுவதாகிய அழகு, ஆதரித்தார்-ஆதரம் என்னும் வடசொல்லின் அடியாகப் பிறந்த இறந்தகால வினையா

லணையும் பெயர், தாளம் வடசொல். எழுந்தருள்க, வியங்கோள் வினைமுற்று. இது ஐம்பான் மூவிடங்கட்கும் பொது வாதலால் தேவர்களும் நீயும் என்ற முடிபு கொண்டது.

இந்திரனுக்கு மாலை சூட்டவேண்டு மென்ற நளன் தான் சுயம்வரத்திற்கு வந்தால் இந்திரனுக்கு மாலை சூட்டாது தனக்கே மாலை சூட்டுவாள் என நிச்சயங் கொண்டவனாய், ஒருகால் வராது இருந்து விடுவனோ என்ற ஐயத்தால், 'நீயும் எழுந்தருள்க' எனத் தனியே எடுத்துக் கூறினான்.

நளன் மீண்டும் வந்து இந்திரனை வணங்குதல்.

90. வானவர்கோ னேவல் வழிச்சென்று வாணுதலைத்
தானணுகி மீண்டபடி சாற்றவே—தேன்முரலும்
வண்டார் நளன்போந்து வச்சிராயு தற்றொழுதான்
கண்டா ருவப்பக் கலந்து.

[இ-ள்] வானவர்கோன்-தேவர்களுக்கு அரசனாகிய இந்திரனுடைய, ஏவல்வழி-கட்டளையின்படியே, தான் சென்று-தான் [தூது] போய், வாள் நுதலை அணுகி-பிரகாசம் பொருந்திய நெற்றியை யுடையவளான தமயந்தியைச் சந்தித்து, மீண்டபடி-திரும்பிய விபரத்தை, சாற்ற-சொல்லுதற்கு, தேன் முரலும் வள்தார் நளன்-வண்டுகள் ஒலிக்கப்பெற்ற அழகி மாலையை அணிந்த நளமகாராஜன், போந்து-வந்து, கண்டார் உவப்ப-பார்த்தவர் சந்தோஷிக்கும்படி, கலந்து-[அத்தேவர்களுடன்] கலந்து, வச்சிராயுதன் தொழுதான்-வச்சிராயுதத்தை யுடையவனை இந்திரனை வணங்கினான். [எ-று.]

தங்கள் விருப்பத்தின்படி தூதுசென்று மீண்டதைக் குறித்துத் தேவர்கள் மகிழ்தலும், காரியசித்தி பெறுதற்றிறம் வாய்ந்த இவன் தமயந்தியை எவ்விதத்தினும் தங்களுக்கு மாலைசூட்டும்படி செய்திருப்பான் என்று அவன் வருகையைக்கண்டு அவர்கள் மகிழ்தலுந் தோன்றக் கண்டாருவப்பக்கலந்து என்று கூறினர். ஏவல்-தொழிற்பெயர். ஏவல்வழிச் செல்லல்-கட்டளைக் கிசைந்து ஒழுகுதல். வாணுதல்-அன்மொழித்தொகை. தேன்-தேன்வண்டு, வண்டார் பண்புத்தொகை. வஜ்ர ஆயுதன்-வஜ்ராயுதன், தீர்க்கசந்தி; வடமொழித் தொடர் [அஆமுன் அஆவர இரண்டுங் கெட ஓர் ஆகாரம் தோன்றும்.]

வச்சிராயுதற் றொழுதான்-இரண்டாம் வேற்றுமைத் தொகை 'இயல்பின் விகாரமும் விகாரத்தியல்பும்,' என்ற சூத்திர விதிப்படி இயல்பில் விகாரமாயிற்று. கண்டார்-வினையாலணையும் பெயர்

தானணுகி-தான் நணுகி எனவும் பிரிக்கலாம், நணுகுதல்-சேர்தல். ஏ-அசை.

தூதுசென்று மீண்ட நளன் விபரத்தைத் தேவர்கட்குக் கூறுதல்.

91. விண்ணவர்தம் ஏவலுடன் வீமன் திருமகள்பால்
நண்ணு புகழ்நளனு நன்குரைத்த—பெண்ணணங்கின்
வன்மொழியுந் தேவர் மனமகிழத் தானுரைத்த
மென்மொழியுஞ் சென்றுரைத்தான் மீண்டு.

[இ-ள்] விண்ணவர்தம் ஏவலுடன்-தேவர்களது கட்டளையினால், வீமன் திருமகள் பால்-வீமராசனது அழகிய மகளிடத்து, நண்ணு-[தூது] சென்ற, புகழ்நளனும்-கீர்த்தியையுடைய நளமகராசன், மீண்டு சென்று-திரும்பி வந்து, தேவர் மனமகிழத் தான் மொழிந்த மென்மொழியும்-அத்தேவர்களது மனம் சந்தோஷமடையத் தான் [அவளுடன்] கூறிய மென்மையாகிய வார்த்தையையும், நன்கு உரைத்த பெண் அணங்கின் வல்மொழியும் - [அதற்கு எதிராக] நன்றாகச் சொன்ன சிறந்த அப்பெண்ணினது கடுமையான வார்த்தையையும், உரைத்தான்-சொன்னான்; [எ-று.]

தேவர்களுடைய கட்டளையினால் தூது சென்ற நளன் தமயந்திபாற் சென்று மீண்டு வந்து, தான் அவளிடம் கூறியதையும், அவள் அதற்குரைத்த மறுமொழியையும் தேவர்களிடம் கூறினானென்பது இதன் கருத்து.

விண்-மேலுலகம்; அதிலுள்ளவர், விண்ணவர். ஏவலுடன் என்பதிலுள்ள உடன், உடனிகழ்ச்சிப் பொருளில் வந்த மூன்றாம் வேற்றுமைச் சொல்லுருபு, தேவர் கட்டளையினால் நளன் சென்றானதலின் இதனைக் கருவிப் பொருளில் வந்ததெனக் கோடலுமொன்று; அங்ஙனங் கொள்ளின் கருவிப் பொருள் தரும் ஆலுருபு உடனுருபாக மயங்கியதெனக் கொள்க. வீமன் மகள்-ஆறாம் வேற்றுமைத் தொகை. திருமகள்-உரிச்சொற்றொடர். வீமன் திருமகள்-பன்மொழித்தொடர். திருமகள்-அழகிய சிறப்புள்ள மகள், என்ற பொருள் தரும். பால்-ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு. நண்ணுபுகழ்-என்பதை வினைத்தொகையாகக் கொண்டு நண்ணு என்பதனைப் புகழுக் கடையாக்கினும் அமையும். புகழ் நளன் - இரண்டாம் வேற்றுமையுருபும், பயனுமுடன்றொக்க தொகை. நளனும்-என்பதிலுள்ள உம்மை இசை நிறைப் பொருளில் வந்தது. நன்கு - பண்புப் பெயர் உரைத்த பெயரெச்சம். பெண் அணங்கு - இருபெயரொட்டுப் பண்புத்தொகை; பெண்ணாகிய அணங்கு என விரியும்; அணங்கு-தெய்வம்; இது, தெய்வம்

போலச் சிறந்தவள் என்னும் பொருள்பட்டுத் தமயந்தியின் உயர்வை விளக்கி நின்றது. வன்மொழி, மென்மொழி என்பன பண்புத் தொகைகள். நளன் தமயந்தியைத் தேவர்க் குடன்படுத்த வேண்டி இனிய மொழிகளைக் கூறினமையின் அவன் மொழியை மென்மொழி யென்றும், அவள் மறுத்தற் பொருட்டுக் கடுஞ்சொற்களைக் கூறினமையின் அவள் மொழியை வன்மொழி யென்றும், அம்மொழிகளில் உண்மையிலே வன்மை மென்மை இல்லா திருந்தும் ஆசிரியர் கூறத் துணிந்தார். நளன் உரைத்தவை யனைத்தும் தேவர்க் கனுகூலமான வையே ஆதலின், 'தேவர் மனமகிழத் தானுரைத்த' என்றார். பின்னுள்ள உம்மைகளிரண்டும் எண்ணுப் பொருளன. உரைத்தான்-ஆண்பாற் படர்க்கை இறந்த கால வினைமுற்று. மீண்டு, சென்று என்பன - வினையெச்சங்கள்; இவை உரைத்தான் என்பதனோடு இயைந்து முடியும்.

நளனுக்குத் தேவர் வரங் கொடுத்தல்.

92. அங்கி யமுதநீ ரம்பூ வணியாடை
எங்குநீ வேண்டினைமற் றவ்விடத்தே—சங்கையறப்
பெற்றா யெனவருண னாகண்ட லன்றருமன்
மற்றோனு மீந்தார் வரம்.

[இ-ள்] வருணன், வருணனும், ஆகண்டலன்-இந்திரனும், தருமன்-யமனும். மற்றோனும் [இவரோடு கூடவந்த] மற்றொரு வனாகிய அக்கினியும், [உண்மையாகத் தூது சென்று வந்த நளன் மீது பிரியமுடையவர்களாய் அவனை நோக்கி] அங்கி-நெருப்பையும், அமுதம்-அன்னத்தையும், நீர்-ஜலத்தையும், அம்பூ-அழகிய பூமாலையையும், அணி-ஆபரணங்களையும், ஆடை-வஸ்திரங்களையும், நீ எங்கு வேண்டினை-நீ எவ்விடத்தில் விரும்புவாயோ, அவ்விடத்தே-அவ்விடத்திலேயே, சங்கை அற-சந்தேக மில்லாமல், பெற்றாய்-அடைவாய், என - என்று, வரம் ஈந்தார்-வரத்தைக் கொடுத்தார்கள்; [எ-று.]

நளன் தூதுசென்று வந்ததற்கு மகிழ்ந்து வருணன் முதலிய தேவர்கள், அவனுக்கு நெருப்பும், அன்னமும், நீரும், பூமாலையும், ஆடையாபரணங்கள் முதலியவைகளும் வேண்டிய விடத்திற் கிடைக்குமாறு வரங்கொடுத்தார்கள்.

இங்கு நெருப்பு முதலியவற்றைப் பெற வருணன் முதலிய தேவர்கள் வரம் கொடுத்தாரென்று பொதுப்படக் கூறியிருப்பினும் நைடதத்தில்,

" கருணையி னெய்திய காளையை நோக்கி
யருமக மேவ்வழி யாற்றினு மாங்க

னுருவோடு வந்தவி யுண்குவ மென்று
மருவரு நல்வரம் வாசவ னீந்தான் ''

என்று கூறப்பட்டிருத்தலால், இந்திரன், நளனுடைய யாகத்தில் உருவோடு வந்து அவிர்ப்பாகம் வாங்கி உண்பதாக வரங்கொடுத்தான் என்றும்,

'' மிடல்கெழு மேழக மேற்கோளு மேலோ
னுடைதிரை வேலையி னின்னமு தோப்ப
மடிதலில் வெங்கன லின்றியும் வாளா
வடிசி லடுந்தொழில் விஞ்சை யளித்தான் ''

என்று சொல்லப்பட் டிருத்தலால், அக்கினி, நெருப்பு இல்லாமல் உணவு சமைக்கும் தன்மையைக் கொடுத்தான் என்றும்,

'' அல்ல லுழந்தளு ரெய்தினு நெஞ்சி
னல்லற மெய்தவு நண்ணிய ஞாட்பில்
வெல்படை வேண்டுவ வெய்தவும் வென்றிக்
கோல்சின வெம்பக ரோ்தி கொடுத்தான் ''

என வருதலால், யமன், சத்துருக்களை வெல்லத் தக்க வலிமை பொருந்திய ஆயுதங்களைக் கொடுத்தான் என்றும்,

'' தார்புல ராது தயங்கவும் வேண்டி
ஞர்கலி வற்ற வமைக்கவு மல்லா
னீரறு பாலையி னெஞ்சி னினைப்பின்
வார்புன லெய்தவும் வருண னளித்தான் ''

என்றிருத்தலான், வருணன்; மாலைவாடா திருக்கவும், கடலைவற்றச் செய்யவும் நீரில்லாவிடத்தில் நீருண்டாகச்செய்யவும் வரங்கொடுத்தான் என்றும்,

'' ஆண்டகைக் கின்ன வளித்தரி வைக்கு
மாண்டகு கற்பை வருத்துவ மென்னுத்
தீண்டின ராவி சிதைந்திடு மாறும்
வேண்டுரு வெய்தவும் விண்ணவ ரீந்தார். ''

என்று கூறப்பட்டிருத்தலால், மேற்கூறிய எல்லாத் தேவர்களும் இவ்வாறு தனித்தனி வரங்கொடுத்ததுமன்றி, மேலும், நளனுக்கும் தமயந்திக்கும் வேண்டிய உருவம் பெறவும், தமயந்தியின் கற்பழிக்கத் துணிந்தவர் உயிர் விடவும் அருளினரென்றும் கொள்க. வருணன் பூ மாலை வாடாதிருக்க வரங்கொடுத்தானென்றதால் ஆடையாபரணங்களையும் பெற அருளின னென்பது பெறப்

படும். இன்னும் பாரதத்தில், இந்திரன் நளனுடைய யாகத்தில், தான் உருவத்துடன் வந்து அவிர்ப்பாகம் பெற்றுக் கொள்வதாக வும், கடைசியில் நளன் நற்பதவி யடையும்படியாகவும், அக்கினி, நளனுக்கு வேண்டிய விடத்தில் நெருப்பைப் பெறும்படி யாகவும், சோதிலோக பதவி கிடைக்கும்படி யாகவும், யமன் தருமத்தில் மனம் நிலைத்திருக்கும்படி யாகவும் வேண்டிய விடத்து அன்னரசம் பெறும்படியாகவும், வருணன் தண்ணீரையும் வாடாத பூ மாலை முதலியவைகளையும் விரும்பியபோது பெறும்படியாகவும் வரங் கொடுத்தாரென்பது கூறப்பட்டிருக்கிறது. இவற்றில் ஒன்றற் கொன்று சிறிது விகற்பப் படினும் 'வரம் கொடுத்தார்' என்றதில் எல்லா மடங்குமாதலின், உரையில் இவற்றை விரித்துரைத்தல் முறைமையாம். இவ் வெண்பாவில் இவற்றுள் சிலவற்றை மாத் திரம் தொகுத்துச் 'சுருங்கச் சொல்லல்' என்னும் அழகு பற்றிக் கூறினார்.

அங்கி, அமுதம், நீர், அம்பூ, அணி, ஆடை என்பவற்றுள் எண்ணும்மைகள் தொக்கன. வேண்டினை, பெற்றாய் என்பவற்றுள் உறுதியை விளக்கற் பொருட்டு எதிர்காலம் இறந்தகாலமாயிற்று. இது,

> "விரைவினு மிகவினுந் தெளிவினு மியல்பினும்
> பிறழவும் பெறுஉமுக் காலமு மேற்புழி"

என்னும், [நன். பொ. ௩௩. ௯.] விதிப்படி வந்த கால வழுவ மைதி. அம்பூ அணியாடை-பண்புத் தொகைகள், மற்று-அசை. மற்றோனும் என்பதிலுள்ள உம்மை எச்சப் பொருளது. மற்றை யோனும் என்பது மற்றோனும் என விகாரப்பட்டு வந்தது. "மற் றையதென்பது சுட்டியதற்கினம்" என்ற நன்னூல் இடையியல் கு௫-ஆம் சூத்திர விதிப்படி, முன்னே வருணன் முதலியவர் களைச் சுட்டிக் கூறினமையால், 'மற்றோன்' என்பது அவரோடு சேர்ந்த அக்கினியை உணர்த்திற்று. வரம்-தேவவீகை. ஈந்தார்- பலர்பாற் படர்க்கை இறந்தகால வினைமுற்று. ஈந்தார் வரம்-வரம் ஈந்தார் என மாற்றுக.

நளன் தேவரிடம் வரம் பெற்று, அவரோடு
தமயந்தி சுயம்வர ஸ்தானஞ் சேர்தல்.

93\. அங்கவர்கள் வேண்டும் வரம்கொடுக்கப் பெற்றவர்கள்
தங்களோடுந் தார்வேந்தன் சார்ந்தனன்மேல்—மங்கை
வயமருவு கின்ற மனக்கா வலர்க்குச்
சயமரந்தான் கண்டதோர் சார்பு.

[இ-ள்.] தார் வேந்தன் - மலர்மாலையை அணிந்த நள மகராஜன், அங்கு-அவ்விடத்தில், அவர்கள்-அத்தேவர்கள், வேண்டும்-விரும்பிய, வரம் - வரங்களை, கொடுக்கப் பெற்று - தரப் பெற்றுக் கொண்டு, மேல்-பின்னர், அவர்கள் தங்களொடும்-அத்தேவர்களுடனே, மங்கை-தமயந்தியின், வயம்-வசத்தில், மருவுகின்ற (விருப்பத்தால்) பொருந்துகின்ற, மனம்-உள்ளத்தையுடைய, காவலர்க்கு-அரசர்க்கு, சய மரம் கண்டது-சுயம் வரஸ்தானமாக ஏற்படுத்திக் காணப்பட்டதாகிய, ஓர் சார்பு-ஓரிடத்தை, சார்ந்தனன்-அடைந்தான். [எ-று.]

நளன் தேவரால் வரம் கொடுக்கப் பெற்று அவர்களுடனே, சுயம் வரத்துக்கென் றேற்பட்ட விடத்திற் சேர்ந்தான் என்பது இதன் கருத்து.

'தார்வேந்தன், சயமரந்தான் கண்டதோர் சார்பு சார்ந்தனன்' என இயைக்க, அங்கு, அவர்கள்-சேய்மைச் சுட்டுக்கள், வேண்டும்-பெயரெச்சம். வரங்கொடுக்க-இரண்டாம் வேற்றுமை யுருபு தொக்க தொகை பெற்று-வினையெச்சம், சார்ந்தனன் என்பதனோடு முடியும். பெற்றவர்கள் தங்கள் என்பதில் தம்-சாரியை; கள்-விகுதிமேல் விகுதி. மேல் - என்பதை மங்கையொடு கூட்டி மேலான மங்கையென உரைப்பினும் அமையும். வயம்-ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு மன்னரெல்லோரும் தமயந்தியை மணம்செய்ய விரும்பிவந்தமையின், 'மங்கை வய மருவுகின்ற மனக் காவலர்' என்றார் புலவர். சயமரம்-சுயம்வரம் என்பதன் திரிபு. கண்டது என்பது 'ஏற்படுத்தியது' என்னும் பொருள் தரும்; 'உரை செய்தான்' என்பதற்கு 'உரை கண்டான்' எனவும், 'நகர் செய்தான்' என்பதற்கு 'நகர் கண்டான்' எனவும் வழங்குதலான் இஃதுணரப்படும். தங்களொடும் என்பதிலுள்ள உம்மை அசை நிறைப்பொருளது, தான்-அசை. மன்னரை உத்தேசித்தே சுயம் வரம் ஏற்படுத்தப் பட்டதாதலின் 'காவலர்க்குச் சயமரந்தான் கண்ட சார்பு' என்றார் ஆசிரியர். சார்பு-தொழிற் பெயர்; அஃதாகு பெயராய்ச் சார்ந்திருக்கு மிடத்தை யுணர்த்திற்று. கண்டது - வினையாலணையும் பெயர்.

நளன் தூது வந்து சென்றபின் தமயந்தி சோர்வடைதல்.

94. தூதுவந்த காதலனைச் சொல்லிச் செலவிடுத்த
மாதுவந்து பின்போன வன்னெஞ்சால்—யாதும்
அயர்த்தா ளுயிர்த்தா ளணிவதன மெல்லாம்
வியர்த்தா ளுரைமறந்தாள் வீழ்ந்து.

[இ-ள்.] சொல்லி-(உரைக்க வேண்டியவைகளை)உரைத்து, தூதுவந்த-தன்னிடத்தே தேவர் பொருட்டுத் தூதுவனாகி வந்த,

காதலனை-தன் விருப்பத்திற் குரியவனாகிய நளனை, செல-செல்லும்படி, விடுத்த-அனுப்பிய, மாது-தமயந்தி, உவந்து-மகிழ்ந்து, பின்போன-அந்நளன்பின்னே சென்ற,வன்னெஞ்சால்-கடுமையான மனத்தினால், (அதாவது, அவனுடனே மனஞ்சென்றமையால்); யாதும்-(அவனைப்பற்றிய) எந்தக் காரியத்திலும், அயிர்த்தாள்-சந்தேகங் கொண்டாள், உயிர்த்தாள்-பெருமூச்சுவிட்டாள், அணி-அழகிய, வதனமெல்லாம்-முகமெல்லாம் வியர்த்தாள்-வியர்வை யடைந்தாள், வீழ்ந்து-(மண்மேற்) சாய்ந்து, உரைமறந்தாள்-வார்த்தை கூறுதலையும் மறந்தாள்; [எ-று.]

நளன் தன்னைப் பிரிந்து சென்றபின், தமயந்தி, அவன்மீதேற் பட்ட காதலால் வருந்தினாளென்பது இதன்கருத்து, மனம் அவனிடத்தே மிகுதியும் பற்றி நின்றமையால் அவன் செல்லுமிடமெல்லாம் செல்லுமாதலின் 'பின்போன நெஞ்சு' என்றும், அஃதங்ஙனம் சென்று துன்பத்தை உண்டாக்கினமையால் 'வன்னெஞ்சு' என்றும் அதனைக் கூறினார் ஆசிரியர். காதல்கொண்ட மடவார் தங்கள் காதலனுடைய செய்கைகளைப் பற்றிச் சிந்தித்துச் சிந்தித்துப் பல விதத்திலும் சந்தேகங்கொள்வது இயற்கையாதலின், இவளும், 'நம் காதலர் நம்மைப்போலவே விருப்பமுடையவராயிருப்பாரோ' 'நம்மை மணஞ்செய்வாரோ, செய்யமாட்டாரோ' என்று பல சந்தேகங்களைக் கொண்டாள். பெருமூச்சுவிடல், முகம்வியர்த்தல், மண்மேற்சாய்தல், உரைமறத்தல் முதலியன, ஆசை என்னும் மெய்ப்பாட்டானிகழ்வன. மெய்ப்பாடாவது, மனத்துள்ளே நிகழுந் தன்மை புறத்தே விளங்கத் தேகத்திலுண்டாம் செயல்கள். இந்த ஆசை என்னும் மெய்ப்பாடு, 'அவைதாம், வீரமச்ச மிழிப்பொடு வியப்பே, காமமவல முருத்திர நகையே'' என்று தண்டியலங்காரச் சுவையணிச் சூத்திரத்திற் கூறிய எண்வகைமெய்ப்பாடுகளுளொன்று.

சொல்லி-வினை யெச்சம். தூது ஒருவர் ஒரு காரியத்திற் கிணங்குமாறு அதற்குரிய வார்த்தைகளைப் பேசுந்தொழில்; அஃதாகு பெயராய் அதனை யுடையானை உணர்த்திற்று. காதல்-விருப்பம்; அதனையுடையவன் காதலன். விடுத்த-பெயரெச்சம் அணிவதனம் பண்புத்தொகை. மாது-எழுவாய்; இஃது அயிர்த்தாள், உயிர்த்தாள், வியர்த்தாள், மறந்தாள் என்னும் பல பயனிலைகளைக் கொண்டது. உவந்து-இதனை வந்து எனக்கொண்டு "அன்னத்தின் பின்னர் நளனிடத்துச் சென்று பின்'' அவனோடு வந்து நளன் வரும்போது எனக் கொள்ளுதலும் பொருந்தும்.

95. உள்ளம்போய் நாண்போ யுரைபோய் வரிநெடுங்கண்
வெள்ளம்போய் வேகின்ற மென்றளிர்போல்—பிள்ளைமீன்

புள்ளரிக்கு நாடன் திருமடந்தை பூவாளி
உள்ளரிக்கச் சோர்ந்தா ளுயிர்.

[இ-ள்] பிள்ளைமீன்-குட்டிகளாகிய சிறுமீன்களை, புள்-நீர்ப் பறவைகள், அரிக்கும்-வாயினாற்சேர்த்து வாரி விழுங்கும், (நீர்வளம் பொருந்திய) நாடன்-விதர்ப்பநாட்டுக்கதிபனாகிய வீமனுடைய, திரு-அழகினையுடைய, மடந்தை-மகளாகிய தமயந்தி, பூவாளி-மன்மதனுடைய புஷ்ப பாணங்கள், உள்-தன் மனத்தை, அரிக்க-அறுக்க, (அதனாலே) உள்ளம்போய்-அம்மனமும் போக, நாண்போய்-வெட்கமும்போக, உரைபோய்-வார்த்தைபோக, வரி-சிவந்த இரேகைகளையுடைய, நெடுங்கண்-நீண்டகண்களினின்றும், வெள்ளம்போய்-நீர்ப்பெருக்கும் வெளியேறிப் போக, வேகின்ற-நெருப்பிடைப் பட்டெரிகின்ற, மென்தளிர்போல்-மெல்லிய தளிரைப் போல, உயிர் சோர்ந்தாள்-ஆவி தளர்ந்து சோர்வை அடைந்தாள்; [எ-று.]

முன் நளன் பால் தன்மனஞ் சென்றதால் வருந்தியவள் பின்னர்த் தனிப்பட்ட வேட்கையுடையாரைச் சமயங்கண்டு வருத்தும் மன்மதன் ஏவிய பாணம் மனத்தை அறுக்க அதனால், உள்ளம் நாண் முதலியன போக ஆவிசோர்ந்தாளென்க. காதன் மிக்க தலைவன் தலைவியருள் தனித்தாரொருவரை மன்மதன் புஷ்ப பாணங்களால் வருத்துதல் இயல்பு. மலர்ப் பாணங்கள் ஐந்துவகைப்படும். அவற்றை இங்குப் 'பூவாளி' என்று ஒருமையாகக் கூறினார் ஆசிரியர்: இது சாதி யொருமையெனப்படும்; மன்மதனுக்கு மலர்ப் பாணங்க ளைந்தென்பதை, இந்நூலாசிரியரே செய்த இரத்தினச் சுருக்கத்தில் வரும்.

"ஆலைக் கரும்புசிலை யைங்கணைப்பூ நாண் சுரும்பு
மாலைக் கிளிபுரவி மாருதந்தேர்—வேலை
கடிமுரசங் கங்குல் களிறுகுயில் காளங்
கொடிமகரந் திங்கள் குடை"

என்னுஞ் செய்யுளா னுணர்க. அம்மலர்ப்பாணங்கள் ஐந்தாவன: தாமரை, மாம்பூ, அசோகு, முல்லை, நீலோற்பலம் என்பனவாம்; இவற்றை,

" குடைகவித்த நற்கஞ்சங் கோதறுசூ தப்பூ
கடியுமசோ கந்தளவு காவி—படையெடுத்து
வாங்காச் சமர்விளைக்கு மாரனுக்கெப் போதுமங்கை
நீங்காக் கணையா நினை "

என்னும் இரத்தினச் சுருக்கச் செய்யுளானுணர்க. இவற்றில் தாமரைமலர் வேட்கை யுடையார்க்குக் காதலர்மீது நினைப்பையுண்

டாக்கும்; மாம்பூ தேகத்திற் பசலையையுண்டாக்கும்; அசோகு உணர்வைநீக்கிவிடும்; முல்லை படுக்கையை யுண்டாக்கும்; நீலோற்பலம் சாக்காட்டைத் தரும். இக்குணங்களை,

"நினைக்கு மரவிந்த நீள்பசலை மாம்பூ
வனைத்துணர்வு நீக்கு மசோகு—வனத்திலுறு
முல்லை கிடைகாட்டு மாதே முழுநீலங்
கொல்லுமத னம்பின் குணம்"

என்னும் இரத்தினச் சுருக்க வெண்பாவாற் றெளிக. இங்குத் தமயந்திக்கு மனம்போனது அரவிந்தத்தின் செய்கையாலுண்டானது; 'உள்ளம்போய்' என்றதனானே அது நளன் பாற்சென்றதென்பது பெறப்படும்; இதுவே நினைத்தலாம். நாண் முதலியன போய்க் கண்ணீர் வெளிப்பட்டுச் சோர்வுண்டானது முல்லையின் செயலாலேற்பட்டது இவையெல்லா முண்டாக ஆவி சோர்ந்தாளெனவே, 'முல்லை கிடை காட்டும்' என்பதற் கேற்ப, படுக்கையிற் கிடந்தாளென்பது பெறப்படும். அரவிந்தம் முதலிய சில பாணங்கள் தங்கள் செய்கைகளைச் செய்யத் தொடங்கி மனத்தை வேதனைப் படுத்த அதனால் அவள் மனத்தை நளனிடத்தே செலுத்தி நாண் போய் உரை போய்க் கண்ணீர் வடித்து, வேகின்ற தளிர்போல் ஆவி சோர்ந்தாளெனக் கூட்டுக. புஷ்பபாணங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தொழிலைச் செய்வன வாயினும் முதலில் மனத்திற் புகுந்து அதனைக் கலக்கியே செய்வனவாதலின் 'பூவாளி உள்ளரிக்க மற்றவை நிகழ்ந்தன' என்றார்.

காரணப்பொருட்டாய் வந்த 'போக' என்னும் செயவெனெச்சம் போய் எனச் செய்தெனெச்சமாய்த் திரிந்து வந்தது. "சொல் திரியினும் பொருள்திரியா வினைக்குறை" என்பது விதி. உள்ளம் போய், நாண் போய், முதலியவற்றில் எண்ணும்மைகள் தொக்கன. நெடுங்கண் - பண்புத் தொகை. அரித்தல் - பல பொருள்களைச் சேர்த்து வாருதல், அறுத்தல்; புள்ளிற்குச் சேர்த்து வாருதலையும், உள்ளிற்கு அறுத்தலையுங்கொள்க. நீர்ப்பறவைகள் திரளாக நீரில் வீழ்ந்து மீன்களை ஒரு பக்கமாக ஒதுக்கி வாயினாற் சேர்த்து வாரியுண்ணுதல் அவற்றின் இயற்கை; இவை மீன்களை ஒதுக்கும்போது பெரும்பான்மையும் சிறு மீன்களே பயந்து ஒரு பக்கத்தில் திரளாக ஒதுங்கும்; இது பற்றியே 'பிள்ளைமீன் புள்ளரிக்கும்' என்றார். நீர்ப்பெருக்கின்றி மீன்களும் பறவைகளும் சேராவாதலின் 'பிள்ளை மீன் புள்ளரிக்கும்' என்றதனானே நீர் வளம் மிகுந்துள்ள தென்பது தானே போதரும்; ஆகவே விதர்ப்ப நாடு, நீர்வளம் மிகுந்த நாடென்பது பெறப்படும். 'உயிர்சோர்ந்தாள்' என்பது ஒரு சொல் நீர்மை பெற்றுமடந்தை என்ற எழுவாய்க்கும் பயனிலை ஆயிற்று, "உயர்

திணை தொடர்ந்த பொருள் முதலாறும், அதனொடு சார்த்தி னத் திணை முடிபின" என்ற நன்னூல் பொதுவியல் 26 நம். சூத்திர விதியால் உயிர் உயர்திணை பொருந்திற்று.

இதுவுமது.

96. பூவின்வாய் வாளி புகுந்த வழியேயென்
ஆவியார் போனலு மவ்வழியே—பாவியேன்
ஆசைபோ காதேன் றழிந்தா ளணியாழின்
ஓசைபோற் சொல்லா ளுயிர்த்து.

[இ-ள்.] அணி-அழகிய, யாழின்-வீணையினது, ஓசைபோல்-இசையை நிகர்த்த, சொல்லாள்-வார்த்தைகளை யுடைய தமயந்தி, பூவின்வாய்-மலர்களினுலே பொருந்திய, வாளி-அம்புகள், புகுந்த வழியே-பிரவேசித்துண்டான துவாரத்தின் வழியாக, என் ஆவியார் போனலும்-எனதுயிர் போய்விட்டாலும், அவ்வழியே-அந்த வழியாகவே, பாவியேன்-பாதகியாகிய என்னுடைய, ஆசை-[காதலர்மீதேற்பட்ட] விருப்பமானது, போகாது-செல்லமாட்டாது, என்று-என்றுசொல்லி, உயிர்த்து-பெருமூச்செறிந்து, அழிந்தாள்-வாடினுள்; [எ-று.]

முன்னே மன்மதபாணங்களால் உள்ளம், நாண் முதலியன போய் உயிர் சோர்ந்த தமயந்தி பின் அப்பாணங்கள் புகுந்த துவாரத்தின் வழியே என்னுயிர் போய்விட்டாலும் நளன் மீதுண்டாய ஆசை போகாது, நின்று ஜன்மங்கடோறும் தொடர்ந்து வருத்துமென்று மெலிந்தாள் என்பது இதன் கருத்து. அம்புகள் புகுந்த துவாரத்தின் வழியே யாவும் போகக்கூடியனவாயிருந்தும் ஆசை போகாதென்று கூறியதால் தமயந்திக்கு நளன்மீதேற்பட்ட காதலின் உறுதிப்பாட்டை விளக்கினுர். ஆசை போகாதது நன்மையாயிருக்க அதன்பொருட்டு அவள் ஏன் வாடினுளெனில், நளன் அவளை மணந்தால் மட்டும் அவளுக்கு அதுநன்மை பயக்குமேயன்றி மணக்காவிடில் துன்பத்தையே தருவதாதலின், அவன் அங்ஙனம் தன்னை மணம் புரிந்து தனக்கேற்பட்டுள்ள துன்பத்தை நீக்குவானே அல்லது நீக்கமாட்டானே என்னும் ஐயத்தால் வாடினுளென்க.

பூவின்வாய்-மூன்றும் வேற்றுமைத்தொகை. புகுந்த-பெயரெச்சம். ஆவி யென்பது ஆவியார்என உயர்திணைப் பலர்பால் விகுதி பெற்று வந்தது திணைவழுவமைதி; இஃது உயர்வில்வந்த திணை வழுவமைதி யெனப்படும். "உவப்பினுமுயர்வினுஞ் சிறப்பினுஞ் செறலினும், இழிப்பினும் பால்திணை யிழுக்கினுமியல்பே" என்பது நன்னூல் [பொதுவியல்-உஅ]ம் சூத்திரம்; மயிலார், குயிலார்,

இனியார் என்பன இதற்குதாரணங்களாம். என்று-வினையெச்சம் அழிதல் இங்கு வாடுதற் பொருளில் வந்தது. 'யாழின் ஓசை போற் சொல்லாள்' என்பது பண்புவமையணி சொல்லாள் - எழுவாய், அழிந்தாள்-பயனிலை.

இதனால் சூரியாஸ்தமனம் சொல்லப்
படுகின்றது.

97. வையம் பகலிழப்ப வான மொளியிழப்பப்
பொய்கையு நீள்கழியும் புள்ளிழப்பப்—பையவே
செவ்வாய வன்றி றுணையிழப்பச் சென்றடைந்தான்
வெவ்வாய் விரிகதிரோன் வெற்பு.

(இ-ள்) வையம்-பூமியானது, பகல்-பகலை, இழப்ப-இழக்கவும், வானம்-ஆகாயம், ஒளி-பிரகாசத்தை, இழப்ப-இழக்கவும், பொய்கையும்-தடாகங்களும், நீள்-நீண்ட, கழியும்-உப்பாறுகளும், புள்-நீர்ப்பறவைகளை, இழப்ப - இழக்கவும், செவ்வாய் - சிவந்தவாயை யுடைய, அன்றில்-அன்றிற்பறவைகள், துணை - துணைப்பறவையை, இழப்ப-இழக்கவும், (அதாவது ஆண் பறவை இரை தேடப் போகப் பெண் பிரிய, வெவ்வாய்-உஷ்ணமான வெயில், விரி-விரிந்த, கதிரோன் - கிரணங்களையுடையசூரியன், பைய - மெல்ல, வெற்பு-அஸ்தமனகிரியில், சென்று அடைந்தான்-போய்ச் சேர்ந்தான், [எ-று.]

சூரியன் அஸ்தமிக்கவே உலகத்திற் பகலும், வானத்தில் ஒளியும், பொய்கையிலும் கழியிலும் பறவைகளும், அன்றிற் பறவைகளின் ஆண் பறவையும் நீங்கி விடுமாதலின், 'வையம், வானம் முதலியன, பகல், ஒளி முதலிய வற்றை இழப்ப, விரிகதிரோன் வெற்படைந்தான்' என்றார். அன்றிற் பறவைகள் இணை பிரியாதவை யெனினும் மாலைப்பொழுதில் சற்றுவிலகி இரண்டென்னுந் தன்மையைக் காட்டித் திரிந்து இராக்காலம் வந்தவுடன் இணையிரண்டும் கழுத்தோடு கழுத்தைச் சேர்த்துப் பின்னிக்கொண்டு ஒன்றுபோலாகி உறங்குவனவாதலின், அதற்கேற்பவே அவை பிரிவது என்று பொருள் படுமாறு 'துணையிழப்ப' என்றார். இங்ஙனமின்றித் துணை யிழப்ப என்பதற்கு, 'கூடிமருவும்படியான சகாயங்களை இழக்க' என்று பொருள் கோடலுமொன்று, அன்றிலுக்குத் தூக்கத்திற்றான் பிரியாது தேகமொன்றாகக் கலக்குந் தன்மை அதிக மென்பது அறிஞர் அறிந்த உண்மை; எப்பொழுதும் இணைபிரியாத்தன்மையில் அன்றிலே சிறந்ததென்பதும் நூல்களால் உணரப்படும்; ஆதலின் 'கூடி மருவும்படியான சகாயங்களை யிழக்க' என்று பொருள்